# செந்தமிழ் வேளிர் எம்.ஜி.ஆர்.

## ஒரு வரலாற்று ஆய்வு

**புலவர் செ. இராசு** எம்.ஏ.,
இணைப் பேராசிரியர்
கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

**வெளியீடு**
**கொங்கு ஆய்வு மையம்**
5, என்.ஜி.ஓ. காலனி
ஈரோடு-9

**நூல் கிடைக்குமிடம்**
**மாருதி பதிப்பகம்**
173, பீட்டர்ஸ் ரோடு
இராயப்பேட்டை
சென்னை 600 014

முதல் பதிப்பு: டிசம்பர் 1985

உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ. 23-00

அச்சிட்டோர்:
ரெக்ஸ் பிரிண்டர்ஸ்,
மயிலாப்பூர்,
சென்னை 600 004.
போன்: 74827

மேலுறை, படங்கள்:
வடபழனி அச்சகம்
சென்னை.

ஓவியம் 'உகி'

இது
கொங்கு நாடு - சேரநாடு
ஆகியவை இடையே
நடைபெற்ற
மக்கள்
குடியேற்ற வரலாற்றைக்
கல்வெட்டு, செப்பேடு
பட்டயம், சுவடி
இலக்கியம், தனிப்பாடல்
வரலாற்று ஆவணங்கள்
கள ஆய்வு
ஆகிய சான்றுகளுடன்
விளக்கும்
ஒரு ஆய்வு நூல்

இவ்வரலாற்று ஆய்வுக்கு உறுதுணையாய்ச் செயல்பட்ட பெருந்தகையோர்:

- மாண்புமிகு சி. பொன்னையன் பி.காம்; பி.எல். அவர்கள், சட்ட அமைச்சர், தமிழ்நாடு அரசு, சென்னை.

- தொழிலதிபர் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் பி.எஸ்சி; எப்.ஐ.இ அவர்கள், தலைவர், சக்தி நிறுவனங்கள், கோவை.

- பழைய கோட்டைப் பட்டக்காரர், திருமிகு. நல்ல சேனாபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்கள், தலைவர், தமிழ்நாடு கொங்கு வேளாள சமூக நல மன்றம், பழையகோட்டை.



*அன்புக் காணிக்கை*

தமிழக முதல்வர்
மாண்புமிகு டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின்
அன்புத் தாயார்
அன்னை திருமதி சத்தியபாமா கோபாலன்
அவர்களின் பொன்னார் திருவடிக் கமலங்களில்
அன்புக் காணிக்கையாகப் படைக்கின்றோம்.



மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களின் தந்தை
திரு. எம். கோபாலன் அவர்கள்.

# முன்னுரை

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களின் அரசியல், பொதுப்பணி, மற்றும் கலையுலக வரலாற்றைப் பலர் நூல் வடிவிலும், கட்டுரை வடிவிலும் எழுதியுள்ளனர்.

அவர்களின் பூர்வீகக் குடும்பம், மரபு பற்றிய ஆய்வை இதுவரை வரலாற்று ஆய்வாளர்கள் விரிவாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

பழைய கோட்டைப் பட்டக்காரர் திரு.நல்ல சேனாபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்கள் கடந்த 25 ஆண்டுகளாக திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் மூதாதையர்கள் கொங்கு வேளிரே என்று வலியுறுத்தி வந்தார்கள். இது தொடர்பாக பல செய்திகளையும் சேகரித்து வந்தார்கள்.

தற்போது பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் எம்.ஜி.ஆர் அவர்களின் குடும்ப வரலாறு பற்றிய ஆய்வினை நிகழ்த்தி வருகிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் கோவை செழியன் அவர்கள் இம்முயற்சியைத் தொடங்கி 'அண்ணா' நாளிதழில் தொடர் கட்டுரையாக எழுதினார்கள்.

கோவைக் கிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், திருவாளர்கள் டி.எம்.காளியப்பா, எஸ்.ஏ.ஆர். சின்னு சாமிக் கவுண்டர், லேனா தமிழ்வாணன் போன்றோர் கேரள மன்னாடியார் குடும்பம் - கொங்கு நாட்டுத் தொடர்பு பற்றிய சிற்சில குறிப்புக்களைத் தம் நூல்களில் கூறியுள்ளனர்.

இவைகளையெல்லாம் நன்கு அறிந்த தமிழகச் சட்ட அமைச்சர் மாண்புமிகு சி. பொன்னையன் பி.காம்., பி.எல்., அவர்கள் இது குறித்து மேலும் விரிவாகவும், தொடர்ச்சி யாகவும் முறையான அறிவியல் அடிப்படையில் ஆராய்ச்சி நடைபெற வேண்டுமென்று விரும்பினார்கள்.

தமிழினத்தின் தொன்மை வரலாறு, இலக்கியம், அரசர்கள், வள்ளல்கள், புலவர்கள், கலை, நாகரிகம், பண்பாடு இவைகளைக் கல்வெட்டு, செப்பேடு, பட்டயம், வரலாற்று ஆவணங்கள், வெளி நாட்டினர் குறிப்புக்கள் முதலிய சான்றுகளின் அடிப்படையில் ஆதார பூர்வமாக ஆய்வு செய்ய வேண்டும்; வெளியீடுகளைக் கொண்டுவர வேண்டும் என்பதில் மாண்புமிகு சி. பொன்னையன் அவர்கள் பெரிதும் ஈடுபாடு உடையவர்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் கொங்கு வேளிர் கட்கும், சேர வேந்தர்கட்கும் இருந்த தொன்மையான தொடர்புகளை வரலாற்று அடிப்படையில் வெளிப்படுத்து கின்ற பெரு விழாவாகத் திருச்செங்கோட்டுக் கண்ணகிவிழா வினைச் சீரோடும் சிறப்போடும் பொறுப்பேற்று நடத்தி வரு கிறார்கள் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

இவை குறித்துக் கல்வெட்டு, வரலாறு, தொல்பொருள் ஆய்வாளர்களுடன் அடிக்கடி கலந்துரையாடுவார்கள்; ஆய் வாளர்களின் ஆய்வினை ஊக்குவிப்பதிலும் பெரிதும் ஈடுபாடு உடையவர்கள். அவர்கள் இல்லத்திற்கு வருகை புரியும் தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரிடம் தமிழக ஆய்வு எவ் வாறு நடத்தப்பட வேண்டும், எம்முறையில் அவைகளை வெளியிட வேண்டும் என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் மணிக்கணக்காக உரையாடுவார்கள். அவர்கள் இல்லம் எப்போதும் ஆய்வரங்கமாகவே திகழும்.

கொங்கு நாட்டு வரலாற்று ஆய்வில் ஆழமாகக் கருத் தைச் செலுத்திய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் 1977ஆம் ஆண்டின் இறுதியில், அகச்சான்றுகளுடன் அறிவியல் வரலாற்று ஆய்வினை அடிப்படையாகக் கொண்ட இப்பணியினை என்னிடம் ஒப்படைத்து அதற்கான ஊக்கு விப்பையும் ஈந்தார்கள்.

அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்றுக் கொண்டு எனது ஆய்வுப் பணியை மேற்கொண்டேன்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் விருப்பத்திற் கிணங்க கடந்த எட்டாண்டுகளாக ஆய்ந்து தொகுத்த அறி வியல் வரலாற்று அகச்சான்று ஆய்வுகள் இப்போது நூல் வடிவம் பெறுகின்றன.

ஆய்வின் பொருட்டுப் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள மன்னாடியார் மாளிகைகட்கு நேரில் சென்றபோது அவர்கள் அன்புடன் வரவேற்றுப் பலரும் பல்வேறு செய்திகளை ஆர்வத்துடன் கூறினர். பெரியவர்கள், பெண்கள், இளைஞர்கள் கூறிய செய்திகள் மேலும் மேலும் ஆய்வு செய்யும் ஆர்வத்தைத் தூண்டின. கிடைத்த பல செய்திகள் வியப்பில் ஆழ்த்தின.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கேரள மன்னாடியார் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை எங்கு, எப்போது பார்ப்பது என்று திட்டமிட்டுத் தக்க ஏற்பாடுகள் செய்து தருவார்கள். தக்கவர்கள் பலரைத் தம் இல்லத்துக்கு வரவழைத்துப் பேசி அவர்கள் கருத்தையும் என்னிடம் கூறுவார்கள். நூலில் காணும் பல கருத்துக்கள் அமைச்சர் அவர்கள் தொகுத்து அளித்தவையே.

ஆய்வுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு.பொன்னையன் அவர்கள் செய்து கொடுத்தார்கள். அவ்வப்போது செய்திகளைக் கேள்விப்பட்டு மகிழ்ந்து ஊக்கமூட்டுவார்கள். செய்திகளைச் சேகரிப்பதன் முறைகளையும் திருத்தங்களையும் கூறுவார்கள். சுருக்கமாகக் கூறினால், அமைச்சர் அவர்களும் ஒரு ஆய்வாளராகவே செயல்பட்டார்கள்.

இந்நூலின் கருத்துக்கள் தமிழக, கேரள வரலாற்று ஆய்வாளர்கள் சிலரிடம் காட்டப்பட்டது. அவர்கள் அனைவரும் நூலின் முடிவுகளைக் கூர்ந்து கவனித்து ஏற்றுப் பாராட்டினர்.

இந்நூலைப் படிப்போர் இது நடுநிலை பிறழாத ஒரு சமூகவியல் ஆய்வேடு என்று ஏற்றுக்கொள்வர் என்பதில் ஐயம் இல்லை.

பொறுப்புமிக்க இம்மாபெரும் வரலாற்றுப் பணியில் என்னை ஈடுபடுத்தி எனக்கு எல்லாவிதமான ஆய்வு வசதிகளை ஏற்படுத்தித் தந்த தமிழக சட்ட அமைச்சர் மாண்புமிகு சி.பொன்னையன் அவர்கட்கு என் மனம், மொழி மெய்களால் ஆன நன்றியை உரித்தாக்குகின்றேன்.

பழந்தமிழர்தம் தொன்மை வரலாறு, இலக்கியம், சமயம், கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை ஆய்ந்தறிவதில் பேரார்வம் கொண்டு விளங்குபவரும், வரலாற்று ஆய்வாளர்களை ஊக்குவித்து உதவிடும் ஈகைக்குணம் மிக்க தமிழ்ப் பற்றாளரும், அருட்பெருஞ்சோதி வள்ளலார் வழி நின்று தமிழ்ச் சமுதாயம் உய்யுமுகத்தான் ஆன்மீக நெறி பரப்பிவருபவருமாகிய தொழில் அதிபர் வள்ளல்பெருந்தகை பொள்ளாச்சி அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் பி.எஸ்சி., எப்.ஐ.இ. அவர்களும், அவர்கள்தம் மருமான் சக்தி சர்க்கரை ஆலைத் துணைத்தலைவர் திரு.எஸ்.வி. பால சுப்பிரமணியம் பி.காம்; ஏ.சி.ஏ; ஏ.சி.எஸ். அவர்களும் இந்த ஆய்வுப் பணிக்கு ஊக்கம் அளித்ததுடன், இவ்வாய்வு நூல்வடிவம் பெறுவதற்குத் தேவையான அனைத்துப் பொருளுதவியும் மனமுவந்து அளித்து உதவிய பெருஞ்சிறப்புக்குரியவர்கள். அத்தன்மையான நல்லுள்ளங்கட்கு என் உளங்கனிந்த நன்றி உணர்வுகளைக் காணிக்கையாக்குகின்றேன்.

இந்த ஆய்வுக்குப் பலர் பலவகையான உதவிகளைச் செய்திருக்கின்றனர். சிறப்பாக இவ்வரலாற்று ஆய்வுக்குத் தாம் கண்டறிந்த பல செய்திகளைக் கொடுத்து உதவியவர் பேராசிரியர் கு.அருணாசலக் கவுண்டர் அவர்கள். தம் 80ஆம் வயதிலும் சோர்வின்றிச் சுறுசுறுப்புடனும், இளமைத் துடிப்புடனும் தமிழ்ச் சமுதாய வரலாற்று ஆய்வில் ஈடுபட்டுவரும் முதுபெரும்புலவர் திரு.கு.அருணாசலக் கவுண்டர் அவர்கட்கு என் சிறப்பான நன்றி உரித்தாகுக.

என்னை முதன்முதலில் பேரூர் ஞான சிவாச்சாரியார் திருமடத்திற்கு அனுப்பி இந்த ஆய்வைத் தொடங்கி வைத்தவர்கள் கொங்கு வேளாள சமுதாயத் தலைவர் பழைய கோட்டைப் பட்டக்காரர் திரு. நல்லசேனாபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்கள். அவர்களின் மருதமலைச் சொற்பொழிவே (1962) இந்த ஆய்வுக்கு மையமாக அமைந்தது. அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

பல ஆண்டுகளாகக் கொங்கு வேளாளர் பற்றிய ஆய்வினை நடத்தி வருபவர் பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரி வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.பி. கந்தசாமி அவர்கள். கேரளப் பகுதிக்குச் செல்லும் போதெல்லாம் உடன் வந்து உதவிய அவர்கட்கு என் நன்றி உரித்தாகுக.

ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் ஒரு அருங்காட்சியகம் உள்ளது. கொங்கு நாடு பற்றிய அங்குள்ள ஆவணங்களைப் பார்வையிடவும், படம் எடுக்கவும் அனுமதி அளித்தவர்கள், கொங்கு நாட்டு வரலாற்று ஆய்வில் மிகவும் ஆர்வம் கொண்டுள்ள அப்பள்ளியின் நிருவாக இயக்குநரும் தாளாளரும் ஆகிய செல்வி எம்.முத்தையா அவர்கள். அவர்கட்கு என் நன்றி உரித்தாகுக.

கேரளத்தின் பல்வேறு மன்னாடியார் வீடுகட்கு எங்களை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்திச் செய்திகள் சேகரிக்கப் பெரிதும் உதவியவர் மாத்தூர் பாட்டத்தில் இல்லம் நாராயணன் குட்டி அவர்கள். இந்நூலில் எடுத்தாண்டுள்ள ஏடுகளின் மலையாளப் பகுதிகளை மொழிபெயர்த்தவர்; நூல் அச்சிடுங்கால் உடனிருந்து உதவியவர் தமிழக அரசின் தொல்பொருள் துறை ஆய்வாளர் திரு. அ. இராசேந்திரன் அவர்கள். தமிழக அரசின் சுவடி நூலகத்தின் ஆவணங்களைப் பார்வையிடவும் குறிப்புக்கள் எடுக்கவும், படம் எடுக்கவும் அனுமதி அளித்தவர்கள் அதன் காப்பாட்சியாளர் அவர்கள். இவர்கள் அனைவருக்கும் என் நன்றி. குடிவழி, சுணங்கியம்மன் பாடல் உதவிய பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டரவர்கள். அவர்கட்கு நன்றி.

இந்நூலை வெளியிட எனக்கு அன்புடன் அனுமதி வழங்கிய தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கட்கு என் பணிவான நன்றி உரியது.

இந்நூல் சிறந்த முறையில் உருவாக எல்லாவிதமான ஏற்பாடுகளையும் அவ்வப்போது விரைந்து மகிழ்வுடன் செய்துதவிய மாருதி பதிப்பகம் திரு.வி. பார்த்திபன், திரு.வி. ஸ்ரீதர் ஆகியோர்கட்கும், நன்முறையில் நூலை அச்சிட்டுதவிய மயிலாப்பூர் ரெக்ஸ் பிரிண்டர்ஸ் அவர்கட்கும், மேலட்டைப் படங்கள் புகைப்படங்கள் ஆகியவைகளை அச்சிட்ட வடபழனி அச்சகத்தாருக்கும் நன்றி.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி உதவிய சிலம்புச் செல்வர் மாண்புமிகு ம.பொ.சி. அவர்கட்கும், பழைய கோட்டைப் பட்டக்காரர் திரு.நல்லசேனாபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்கட்கும், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர்.இரா. நாகசாமி அவர்கட்கும் என் நன்றி உரியதாகுக.

தஞ்சாவூர், **செ. இராசு.**
*23 - 12 - 85.*

**ம. பொ. சிவஞானம்**
தலைவர்
தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009

# அணிந்துரை

புல்வர் செ. இராசு அவர்களை நான் நீண்ட காலமாக அறிவேன். தமிழர் வரலாறு குறித்து ஆராய்ச்சியிலே ஈடுபடுவதில் தனி ஆர்வமுடையவர். கல்வெட்டு ஆராய்ச்சியில் மிக்க திறனுடையவர். இத்தகு ஆராய்ச்சியையே தம்முடைய வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார்.

புலவர் செ. இராசு அவர்கள் தமிழ் நாட்டுக் கொங்கு வேளிர் பற்றிய ஆராய்ச்சியில் முழு மூச்சாக ஈடுபட்டு, அது குறித்துத் தகவல் தரக்கூடிய தகுதியுடையவர்களை நேரில் சந்தித்துப் பேசி, தேவைப்படும் பல நூல்களைப் படித்தறிந்து "செந்தமிழ் வேளிர் எம். ஜி. ஆர். ஒரு வரலாற்று ஆய்வு" என்னும் பெயருடைய இந்நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

''மன்றாடியார்'' என்னும் பெயரில் தமிழகத்தில் வாழ்ந்து வந்த வேளிர் குடியினரில் ஒருசாரார் கேரளத்தில் முன் எப்போதோ ஒரு சந்தர்ப்பத்தில் குடியேறினர். அவர்களே நாளடைவில் "மன்னாடியார்" என்றும் அழைக்கப் பட்டனர். சோழ மன்னன் மகள் ஒருத்தி சேர மன்னனை மணந்தாள். அவளுக்குத் தந்த சீதனச் சொத்துக்களிலே தமிழ் மன்றாடியார்களும் உண்டு என்பதற்குப் பட்டயங் களைக் காட்டி உறுதிப்படுத்துகிறார் ஆசிரியர் இராசு. அந்த மன்றாடியார் என்ற சொல்லே ''மன்னாடியார்'' என்று திரிந்ததை ஆசிரியர் தக்க சான்றுகளுடன் புலப்படுத்துகிறார். தமிழகத்தின் முன்னாள் அமைச்சர் நல்ல சேனாதிபதி சர்க்கரை மன்றாடியாரைத் தமிழர் அறிவர். அன்னாரும் மாண்புமிகு எம்.ஜி.ஆர். வேளிர் குலத்தைச் சேர்ந்த மன்றாடியார்தான் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். இந் நூலில் மாண்புமிகு எம்.ஜி.ஆர் சம்பந்தமான வாதத்திற்குப் பதிலளிப்பதில் ஆசிரியர் இராசு ஒருசில பக்கங்களையே செல வழித்துள்ளார். பெரும்பாலும் மாண்புமிகு எம்.ஜி.ஆரைத் தந்த கொங்குவேளிர் குலத்தைப் பற்றிய ஆராய்ச்சியாகவே

இந்நூலை இயற்றியுள்ளார். எப்படியோ ஒரு அரிய நூலை தமிழ் இலக்கியக் களஞ்சியம் அடைவதற்கு மாண்புமிகு எம்.ஜி.ஆர். பற்றி எழுந்த வாதம் பயன்பட்டது குறித்து மகிழ்ச்சியடையலாம்.

மாண்புமிகு எம்.ஜி.ஆரைத் தந்த கொங்கு வேளிர் பற்றிய எண்ணற்ற தகவல்களை ஆசிரியர் இராசு அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிறார். அந்த வள்ளலுக்கு என் வாழ்த்து உரித்தாகுக!

கொடை வள்ளல் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களைப்பற்றி எதிர்காலத்தில் இன்னும் எத்தனையோ இலக்கியங்கள் எழுதப்படும் என்பதில் ஐயமில்லை. தம்முடைய சாதனைகளால் மாண்புமிகு எம்.ஜி.ஆர். சரித்திர நாயகராகி விட்டார். அவரைப்பற்றி ஒரு காப்பியமே படைக்கலாம். அந்தக் கவிதை நடைக் காப்பியத்திற்கு முன்னோடியாக இந்த உரைநடை இலக்கியம் படைக்கப்பட்டுள்ளது எனலாம். நூலின் நாயகர் மாண்புமிகு எம்.ஜி.ஆருக்கும், நூலின் ஆசிரியர் புலவர் இராசு அவர்களுக்கும் என் இதயபூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகுக!

**ம. பொ. சிவஞானம்**

**நல்ல சேனாபதி சக்கரை மன்றாடியார்**
பட்டக்காரர்
பழைய கோட்டை
தலைவர், தமிழ்நாடு கொங்கு வேளாளர்
சமூக நல மன்றம்

## அணிந்துரை

கல்வெட்டு, வரலாறு, தொல்பொருள் ஆராய்ச்சியாளரும், பல ஆண்டுகளாக நமது கொங்கு நாடு, கொங்கு வேளாளர் பற்றிய ஆராய்ச்சிகள் பல நடத்தி வருபவருமான ஈரோடு புலவர் செ.இராசு எழுதிய செந்தமிழ் வேளிர் எம்.ஜி.ஆர்-ஒரு வரலாற்று ஆய்வு என்ற ஆராய்ச்சி நூலை முழுவதும் ஆழ்ந்து படித்தேன்.

கல்வெட்டு, செப்பேடு, இலக்கியம், தனிப்பாடல், ஓலைச்சுவடிகள், அரசாங்க ஆவணங்கள், வெளிநாட்டார் குறிப்புக்கள், ஆராய்ச்சிக் கட்டுரை, நூல்கள் இவற்றையெல்லாம் பல ஆண்டுகள் கடுமையாக உழைத்து அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களைத் தேடி எடுத்துத் தொகுத்ததுடன் கேரள மாநிலமெங்கும் சுற்றியும், குறிப்பாகப் பாலக்காடு மாவட்டத்தில் பலமுறை பயணம் மேற்கொண்டு நேரிலும் பல தகவல்களைச் சேகரித்துள்ளார்.

தான் எடுத்துக்கொண்ட கருத்துக்களுக்கு ஆதாரமாகப் பல புகைப்படங்களையும் நூலில் இணைத்துள்ளார்.

புலவர் இராசுவின் ஆராய்ச்சி ஆழமாகவும் நடுநிலை தவறாமலும், அகச்சான்றுகளின் அடிப்படையில் அறிவியல் பூர்வமானதாகவும் உள்ளது. அவர் நூலை உருவாக்கியுள்ள முறை என்னை மிகவும் கவருகிறது.

சில ஆண்டுகட்கு முன் அவர் இம்முயற்சியை மாண்புமிகு சட்ட அமைச்சர் சி.பொன்னையன் அவர்கள் அறிவுரைப்படி மேற்கொண்டபோது முதலில் என்னிடம்தான் வந்தார். புலவர் இராசுவை பேரூர் மேலவீதி ஞானசிவாச்சாரியார்

மடத்துக்கு நான்தான் அனுப்பிவைத்தேன். பின்னர் புலவர் இராசு இம்முயற்சியில் கடுமையாக உழைத்து வந்ததை நான் நன்கு அறிவேன்."

இராசு தன் முயற்சியில், தன் ஆராய்ச்சியில் நல்ல சிறப்பானதொரு முடிவைக் கண்டுள்ளார். தமிழக மக்களும், குறிப்பாகக் கொங்கு வேளாளர் சமுதாயமும் அவருக்கு நன்றியைச் செலுத்த வேண்டும்.

கடந்த 25 ஆண்டுகளாக நான் கூறிவந்த கருத்துக்களுக்குப் புலவர் இராசு வடிவம் கொடுத்துள்ளார்.

தமிழக முதல்வர் அவர்கள் இந்த ஆராய்ச்சி முடிவை மனப்பூர்வமாக மகிழ்ந்து ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. புலவர் இராசு மேலும் பல ஆராய்ச்சி நூல்களை வெளியிட வாழ்த்துகின்றேன்.

புலவர் இராசு அவர்களையும், அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து இந்த ஆராய்ச்சியை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு வேண்டிய பல்வேறு வசதிகளைச் செய்து இந்த அழகிய ஆராய்ச்சி நூலை வெளிக்கொண்டு வருவதில் மிகுதியும் அக்கறைகொண்டுள்ள தமிழக சட்ட அமைச்சர் மாண்புமிகு சி.பொன்னையன் அவர்களையும் பெரிதும் மனமாரப் பாராட்டி மகிழ்கின்றேன்.

**நல்ல சேனாபதி சக்கரை மன்றாடியார்**

டாக்டர் **இரா. நாகசாமி**
எம்.ஏ., பி.எச்.டி.,
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

31, தெற்குக் கரை வீதி,
மந்தைவெளி
சென்னை - 28.

# அணிந்துரை

பல்வேறு முகத்தானும் வரலாறு படைத்தவர் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள். இந் நூல், வரலாறு படைத்த அப்பெருமகனாரின் வரலாற்றை ஆய்கிறது.

திரை வானில் ஈடில்லாத் தாரகையாகத் திகழ்ந்த எம்.ஜி.ஆர் அவர்கள் அரசியல் வானிலும் தமக்கு நிகர் தாமே எனத் தமிழ் மக்களின் இதயத்தில் இடம் பெற்றுத் தமிழ்நாட்டின் தனிப்பெருந் தலைவராக வரலாறு படைத் துள்ளார்கள். நமது, காலஞ்சென்ற திருமதி இந்திராகாந்தி அம்மையாருடன் நட்பு பூண்டு இந்திய நாட்டின் அனைத்து மக்களின் அன்பையும் பெற்று தேசத் தலைவராக வரலாறு படைத்துள்ளார்கள்.

அண்மையில் ஏற்பட்ட நோயின் காரணமாக அமெரிக்க நாட்டில் சிகிச்சை பெற்று வரும்போதே தமிழ்த் திருநாட்டின் பொதுத் தேர்தலில் வெற்றி வாகைசூடி அனைத்துலக மக்களின் பாராட்டையும் பெற்று மற்றொரு வரலாறு படைத்துள்ளார். தமிழகம், தாய்த் திருநாடு, அனைத்துலகு எனப் படிப்படியாக தமது புகழ்விரித் துள்ள அவர்கள் மருத்துவத் துறையினர் அனைவரும் வியக்கும் வரலாற்றை ஏற்படுத்திக் காட்டியுள்ளார்கள். இவை அனைத்துமே இந்நாட்டு வரலாற்றில் என்றும்அழியாத இடம் பெறும் என்பதில் ஐயமில்லை. வரலாறு படைத்த பல தலைவர்களின் வரலாறுகள் எழுதப் பெற்றுள்ளன. அவை தனிப்பட்ட ஒருவருடைய வரலாறாகவே பெரும்பாலும் அமைந்துள்ளதைக் காண்கிறோம். ஆனால் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் வரலாற்றை ஆய முற்படும்போது, அது நம் நாட்டு மக்களின் வரலாறாக, குறிப்பாக உழுகுடி மக்களின் வரலாறாக விரிந்துள்ளதை இந்நூல் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

கொங்கு எனில் 'தேன்' என்பது பொருள். அந்நாட்டு மக்களின் தேனினும் இனிய இயற்கையான குணத்தால்

'கொங்கு நாடு' எனப் பெயர் பெற்றது எனினும் பொருந்தும். கொங்கு நாட்டு வேளாண்குடி மக்களில் பல கிளைக் குடிகள் உண்டு. அவற்றில் ''மன்றாடியார்'' என்ற பட்டம் பூண்ட வழியினரே பாலக்காட்டுப் பகுதிகளில் பல காலக் கட்டங்களில் குடியேறி இன்று மன்னாடியார் என்று அழைக்கப்படுகின் றனர். மன்றாடியார் குடி போல பிற குடிமக்களும் கொங்கு நாட்டில் இருந்து பாலக்காடு பகுதிகளில் குடியேறியுள்ளனர். இது வரலாற்று உண்மை. பண்டைய இலக்கியங்கள், கல் வெட்டுக்கள், ஆவணங்கள், நினைவுச் சின்னங்கள், மரபு வழிச் செய்திகள், பழக்க வழக்கங்கள் என அனைத்து ஆய்வு நெறிகளையும் ஒருங்கிணைத்து ஒவ்வொரு குடியின ரையும் பற்றித் தெளிவாகப் புலவர் இராசு ஆய்ந்துள்ளார். இன்று பாலக்காட்டுப் பகுதியில் நல்லேபள்ளியில் வாழும் அங்கராத்து மன்னாடியார், சோண்டத்து மன்னாடியார் போன்றோர், கொங்கு நாட்டுக் காங்கேயம் பகுதியிலிருந்து குடியேறிய கொங்கு வேளாளரே என ஐயம் திரிபற நிரூபித் துள்ளார். குடியேறியதற்குக் காரணமாக அமைந்தவை பல. அவற்றையும் ஆய்ந்துள்ளார். பல பழக்க வழக்கங்களில் மக்களிடையே மாற்றம் ஏற்படலாம். ஆனால் எங்கு இடம் பெயர்ந்தாலும், எவ்வளவு காலமே ஆயினும் மூன்று வழக் கங்களை மக்கள் (இயன்ற அளவு) கை விடுவதில்லை. குல தெய்வ வழிபாடு, திருமணச் சடங்குகள், அனைத்துக்கும் மேலாக ஈமச் சடங்குகள் எனும் இம்மூன்று அடிப்படை வழக் கங்களையும் பாலக்காட்டுப் பகுதி மன்னாடியார் குடியினர் கொங்கு நாட்டு வேளாண்குடி மரபையே பின்பற்றுவது இங்கு தெளிவாக்கப் பட்டுள்ளது.

கள்ளிக்கோட்டை 'சாமூரின்' மன்னர்களின் முன்னோர் கொங்கு நாட்டுப் பூந்துறைப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்பதை கேரளோத்பத்தி போன்ற பல வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மெக்கென்சி ஆவணங்களில் ஒன்று மலை யாளத்து ராசாக்களுக்குப் பட்டம் கட்டும் உரிமை கொங்கு நாட்டு புரவி பாளையம் மன்றாடியார்களுக்கு உரியதா யிருந்தது என்று கூறுகிறது. ஆதலின் அரச குடும்பங்கள் கொங்கு வேளாளர் குடித் தொடர்புடையவை என்பதிலும் ஐயமில்லை.

இந்நூலில் 'மேனோன்' அல்லது 'மேனன்' என்ற சொல் ஆராய்ச்சியும் தொகுக்கப்பட்டுள்ளது. 'மேலவன்' என்ற சொல் 'மேனன்' ஆயிருக்கக்கூடும் எனப் பலருடைய கருத்துக்

களையும் புலவர் இராசு கொடுக்கிறார். 'மேலவன்' எனில் 'பெரியோன்' 'அறிஞன்' என்பது பொருள். மேனன் என்ற சொல் வேறொரு தமிழ்ச் சொல்லில் இருந்து வந்திருக்கலாம் என்பது என் கருத்து. 'மேனன்' என்பது அரசரால் உயர் அதிகாரியாகப் பணி புரிந்தவர்கட்கு அளிக்கப் பெற்ற 'பட்டம்' என்று அறிகிறோம். தமிழ் நாட்டில் தொன்று தொட்டு இவ்வாறு பட்டம் அளிக்கும் மரபு உண்டு. அவற்றில் 'மாராயன்', 'அரையன்' என்ற பட்டங்களே மிகச் சிறப் பாக அளிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களில் இவ்வாறு பட்டம் பெற்றவர்களைக் காண்கிறோம். 'அரையன்' என்பது போன்று 'மன்னன்' என்று பட்டம் அளிக் கப்பட்டு 'மன்னோன்' 'மேனோன்' என ஆகியிருக்கக்கூடும். ஆதலின் 'மேனன்' என்ற சொல் ''மன்னன்'' என்ற சொல்லின் திரிபு எனத் தோன்றுகிறது.

நல்லேபள்ளியில் வாழும் ''அங்கராத்து மன்னாடியார்'' குடும்பம் 1748ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஆவணத்தில் ''அங்கவேணாட்'' என்று குறிப்பிட்டுள்ளதை புலவர் இராசு எடுத்துக்காட்டி, கொங்கு நாட்டு வேளாண்குடிகளில் 'வேணா டுடையார்' குடும்பங்கள் குடித்தலைமை ஏற்றதையும் குறித்து, அவர்கள் வழியினரே 'அங்க வேணாட்' என்னும் அங்கராத்து மன்னாடியார்கள் எனக் கூறியுள்ளார். அவர்கள் வாழும் பகுதிகளில் உள்ள கோயில்கள் தமிழ்நாட்டு அமைப் பில், தமிழ் நாட்டுப் பெயரில் அமைந்துள்ளன. அங்கு நடை பெறும் கூத்துக்களில் தமிழ்நாட்டு கம்பராமாயணப் பாடல்கள் இடம் பெறுவதையும் சுட்டிக் காட்டுகிறார். இறுதியில், கொங்கு நாட்டுப் பெரிய குலத்துவேணாடுடை யாருக்கும் நல்லேபள்ளி அங்கராத்து மன்னாடியாருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை ஒரு பட்டியல் மூலம் தெளி வாக்கி, எம்.ஜி.ஆர். அவர்கள் ''கொங்கு நாட்டுக் குடும் பத்தில் தோன்றிய தமிழரே'' என்று நிறுவியுள்ளார்.

1981 - ஆம் ஆண்டு அமெரிக்காவில் பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு நான் சென்றிருந்தபோது பல அமெரிக்கப் பேராசிரியர்கள் என்னை நேர்முகமாக வந்து பாராட்டினார்கள். அது எனக்கு வியப் பாக இருந்தது. எதற்காக என்னைப் பாராட்டுகின்றீர்கள்? என்று கேட்டபோது மெக்கென்சி ஏட்டுச்சுவடிகளின் மூலத்தை நான்கு தொகுதிகளாக நீங்கள் வெளியிட்டிருப்பது வரலாற்றுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது என்றார்கள்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி அச்சில்வராத நூல்களை வெளியிடத் தமிழக அரசு ஒரு திட்டம் மேற்கொண்டது. அத்திட்டத்தில், மெக்கென்சி ஏடுகளைப் 'பாளையப்பட்டுக்களின் வம்சாவளி' என்ற தலைப்புகளில் வெளியிட்டு இருந்தோம். முன்னர் இவ்வேடுகளின் சுருக்கத்தை ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளனர். ஆனால் முழு வடிவில் அவை வெளி வரும்போதுதான் வரலாற்றுச் செய்திகளை அதில் இருந்து தொகுத்தெடுத்து ஆய்வு செய்ய முடியும் என்ற காரணத்தால் முழுச் சுவடிகளையும் வெளியிட்டு இருந்தோம். அது அமெரிக்கப் பேராசிரியர்கள் குறிப்பிட்ட படி எந்த அளவுக்கு சிறப்பாக வரலாற்றுக்கு உதவுகிறது என்பதை இந்நூலில் இருந்து அறியலாம். இந்நூலில் கொங்கு நாட்டு வேளாண்குடி மக்களின் குடி பெயர்ந்த பல அரிய செய்திகள், மெக்கென்சி சுவடிகளின் வாயிலாகவே நிறுவப் படுகிறது.

வரலாற்றுச் சான்றுகளோடும், அசைக்க முடியாத ஆவணக் குறிப்புக்களோடும், விருப்பு வெறுப்புக்கு இடமின்றி நெறி பிறழாது எழுதப்பட்டுள்ள இந்நூல் பாராட்டுதற்குரியது. வரலாற்று வல்லுநர்களின் ஏற்பைப் பெறக்கூடியது. கொங்கு நாட்டு மக்கள், குறிப்பாக வேளாண் குடிமக்கள் பிற பகுதிகளில் குடியேறி அப்பகுதியிலும் தங்கள் மரபைக்காத்து வந்துள்ளதைச் சுவையாக இந்நூல் எடுத்துரைக்கிறது. இந்நூல் வாயிலாக நமது அன்புக்குகந்த எம்.ஜி.ஆர் அவர்களின் குடி வரலாறு என்பது 'மக்களுடைய வரலாறே' எனத் தெளிவுறக் காட்டி மற்றொரு வரலாறு படைத்துள்ளார்கள். 'வரலாறு படைக்கும் வள்ளலை'ப் பற்றிய இந்நூலை இயற்றிய திரு.இராசு மேலும் இது போன்று பல நூல்களை இயற்ற வாழ்த்துகிறேன்.

**இரா. நாகசாமி**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கொங்கு நாடு - ஒரு தனி நாடு ... | 1 |
| 2. | கொங்கு நாட்டில் சேரர் ... | 5 |
| 3. | கொங்கு நாடு - சேர நாடு இடையே தொடர்பு ... | 9 |
| 4. | சேரநாட்டில் கொங்கு வேளாளர் குடியேற்றம் ... | 15 |
| 5. | மன்னாடியார் - தமிழ்ப் பெயர் ... | 28 |
| 6. | கேரள மன்னாடியார் குடும்பமும் கொங்கு நாட்டுத் தொடர்பும் ... | 34 |
| 7. | வேளாளர் - மன்னாடியார் பழக்க வழக்கங்களில் ஒற்றுமைகள் ... | 51 |
| 8. | வேளாளர் குடியேறிய இடங்கள் ... | 57 |
| 9. | மன்றாடியாரோடு குடியேறிய பிறமக்கள் ... | 64 |
| 10. | மன்னாடியார் குடும்பத் தனித் தகுதிகள் ... | 78 |
| 11. | வெள்ளாள அப்பன் நாடு ... | 80 |
| 12. | மேனன் பட்டப் பெயர் ... | 87 |
| 13. | அங்கராத்து மன்னாடியாரும் வேணாடு உடையாரும் ... | 90 |
| 14. | முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் குடிவழி ... | 115 |
| 15. | சமூகப் பெரியவர்கள் கருத்து ... | 116 |
| 16. | மன்னாடியார் குடும்பப் பெரு பெருமக்கள் ... | 122 |
| 17. | முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ... | 124 |
| 18. | அடிக்குறிப்புக்கள் ... | 134 |
| 19. | ஆய்வுக்குத் துணை செய்த நூல்கள் ... | 148 |
| 20. | பெரியவர் எம்.ஜி. சக்கரபாணி அவர்கள் கருத்து ... | 153 |
| 21. | கொங்கு வேளாளர் தொன்மையும் சிறப்பும் ... | 157 |

# கொங்கு நாடு – ஒரு தனி நாடு

நம் செந்தமிழ் நாடு, சேர சோழ பாண்டிய நாடுகளைப் போலவே தொண்டை நாடு, கொங்கு நாடு என்ற இரண்டு தனிப் பிரிவுகளையும் பழங்காலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தது.

கொங்கு நாடு தனக்கென்று எப்பொழுதும் தனியான எல்லைகள், வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கம் ஆகியவைகளைக் கொண்டது. இதனைப் பழங்கால இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன. நீலகிரி, கோவை, பெரியார், சேலம், தருமபுரி மாவட்டங்களின் சில பகுதிகளும், மதுரை மாவட்டம் பழனிப் பகுதியும், திருச்சி மாவட்டக் கரூர், குளித்தலைப் பகுதிகளுமே கொங்கு நாடாகும்.

'வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - கிடக்கும்
களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாடு
குளித்தண் டலையளவு கொங்கு'

என்பது தனிப்பாடல். கொங்கு நாட்டு எல்லை கூறும் எல்லாப் பாடல்களுமே வெள்ளியங்கிரி மலையை மேற்கு எல்லையாகக் கூறுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கே சேர நாடு என்பதே இதன் கருத்தாகும்.

அதனால்தான் தொண்டை நாடு, கொங்கு நாடு ஆகியவைகளைச் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்ற கருத்து முன்பே இருந்தது. தண்டியலங்காரம் என்னும் நூலின் மிகப் பழமையான மேற்கோள் பாடல் ஒன்று,

'வியன் தமிழ்நாடு ஐந்து'

என்று கூறுகிறது[1]. சைவ சமய நூல்களில் மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகின்ற திருமந்திரம்,

'தமிழ் மண்டிலம் ஐந்து'

என்று தமிழ்நாட்டின் ஐந்து பிரிவுகளைச் சுட்டிக் காட்டுகிறது[2]. எனவே கொங்கு நாடு தனிப்பிரிவு என்பது இவற்றால் புலப்படுகிறது. வரலாற்று ஆசிரியர்கள் பலரும் இக் கருத்தை ஏற்றுக் கொள்கின்றனர்.

சங்க இலக்கியத்தில் பல இடங்களில் 'கொங்குநாடு' தனி நாடாகவே குறிக்கப்படுகிறது.[3] இந்நாட்டு மக்கள் 'கொங்கர்' என்று சங்க இலக்கியத்தில் அழைக்கப்படுகின்றனர்.[4] சங்கப் பாடல்களில் கொங்கின் குறுநில மன்னர்கள்[5] பலர் தனியாகக் குறிக்கப் பெறுவதுடன் கொங்கு நாட்டின் கால்நடைச் செல்வம்[6], ஆழ்கிணறு,[7] தண்ணீர்ப் பற்றாக் குறை,[8] கொங்கரின் உழைப்பு,[9] அவர்தம் போர்த்திறன்[10] ஆகியவை பல்வேறு இடங்களில் பரக்கப் பேசப்படுகின்றன. மேலும் கொங்கு நாட்டு மணிகள், வண்ணக் கற்கள், வேலைப் பாடு மிக்க நல்ல அணிகலன்கள் புகழ்ந்து பாராட்டப் பெறு கின்றன.[11]

சேரன் செங்குட்டுவன், தனக்குச் சமமான அரசனாகக் கொங்கு நாட்டு இளங்கோசரைத் தமிழ்நாட்டு மூவேந்தருக்கு ஒப்ப மதித்துப் போற்றியிருக்கின்றான். நூற்றுவர்கன்னர், இலங்கைக் கயவாகு, மாளுவ வேந்தர், பெருங்கிள்ளி ஆகி யோர் போலக் கொங்கு நாட்டு மன்னனையும் நட்பாகக் கொண்டிருக்கிறான். இதனைச் சிலப்பதிகாரத்தின் மூலம் அறிகின்றோம்.[12]

பேரூரை 'மேற்குக் கொங்கு' என்று பாண்டியர் பழஞ் செப்பேடும் இலக்கியங்களும்[13] கூறுவது கொங்கு நாடு தனி நாடு என்பதாலேயாகும். கொங்கு நாட்டிலிருந்து சமய அடியார்கள் சேரநாடு நோக்கிச் சென்றதை,

> 'கொங்குநாடு கடந்துபோய்க் குலவுமலைநாட்டு
> எல்லையுற'

> 'மலைநாடு கடந்தருளி .... திருமுருகன் பூண்டிவழிச்
> செல்கின்றார்'

என்று பெரிய புராணம் குறிப்பிடும்.[14] சிலப்பதிகாரத்திலும் கொங்கின் மேற்குப் பகுதி அரசர் குறிக்கப் பெறுகின்றார்.[15]

நூற்றாண்டுகள்தோறும் கல்வெட்டுக்களும் செப்பேடு களும் கொங்கு நாடு தனி நாடெனக் கூறுகின்றன. சிலர் தொண்டை நாட்டைச் சோழ நாட்டுடனும், கொங்கு நாட் டைச் சேர நாட்டுடனும் அடக்குவர். அது பொருந்தாது என்பது மேற்கண்ட சான்றுகளால் விளங்கும்.

'கொங்கு நாட்டு வரலாறு' எழுதிய கோவைக் கிழார் தன் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> 'சோழர்கள், ஒயிசளர், விசய நகரத்தார்,
> மைசூர் மன்னர்கள் ஆகிய வம்சத்தாரிடம்

கொங்குநாடு சென்றது. இக்காலங்களிலெல்லாம் வெவ்வேறு இராச்சியங்களுடன் கொங்கு நாடு இணைக்கப்பட்ட போதிலும் தனது தனிப்பட்ட வாழ்க்கையை இந்நாடு இழக்கவில்லை. இந்நாட்டின் அமைப்பு மாத்திரம் அன்றி இந்நாட்டுக் குடிகளின் பழக்க வழக்கங்களும் பண்டைக்காலம் தொட்டு ஒரே விதமாக இருந்து வந்தன. சமூக வழக்கங்களிலும் இவர்களுடைய வழக்கங்கள் ஏனைய நாட்டார்களிடமிருந்து சிறிது வேறுபட்டேயிருக்கும். இவ்விதக் காரணங்களினால் கொங்கு நாட்டைத் தனிநாடு என்று நிச்சயிக்கக்கூடும்.

சேரநாடு என்னும் கேரளத்தில் வழங்கிவரும் பழக்க வழக்கங்களைக் கொங்கு நாட்டாரின் பழக்க வழக்கங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எக்காலத்திலும் இவ்விரு நாடுகளும் ஒன்றாக இருந்திருக்க முடியாது என்று சொல்ல வேண்டும். கொங்கு நாடு சேரநாட்டின் ஒரு பகுதியாக இருந்திருந்தால் சேர நாட்டு வழக்கம் கொஞ்சமேனும் கொங்கு நாட்டில் பரவியிருக்கும். இவையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் ஆதிகாலம் முதல் இவ்விரு நாடுகளும் தனித்தனியே இருந்திருக்க வேண்டுமென்றும் கொங்குநாடு ஒரு தனி நாடாகவே இயற்கையில் அமைந்து வந்ததென்றும் திண்ணமாகக் கூறலாம்'.[16]

வராக மிகிரர் தன் நூலில் கொங்கு நாடு தனி நாடு என்று குறிக்கின்றார்.[17] அசோகன் (கி.மு. 278 - 232) கல்வெட்டிலும் தனி அரசராகக் குறிக்கப்பெறும் சதிய புத்திரர் கொங்கு நாட்டு மன்னன் அதியமானே என்பது ஜம்பைக் கல்வெட்டால் உறுதிப்படுகிறது.[18]

'கொங்கு நாடு' என்னும் வரலாற்று நூலில் புலவர் குழந்தை அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்:

'..தொன்றுதொட்டே கொங்குநாடு சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தராட்சிக்கு உட்படாது தனியாட்சி நாடாகவே இருந்து வந்தது. வேளிர் என்னும் சிறப்புப்

பெயருடைய வேளாண்குடிச் செல்வராகிய கொங்கு நாட்டுத் தனி அரசர்கள் தமக்குள் பகையின்றி ஆண்டு வந்தனர். அவர்கள் முடியுடை மூவேந்தரிடத்தும் அன்பொடு நண்பும் அமைவும் உடையவராக இருந்து வந்னர். முடியுடை மூவேந்தர்க்கும் மைத்துணரும் மாமனாருமாகிய அவர்கள் பின்னர் எவ்வாறு இருந்திருப்பர். கேரளோற்பத்தி, கேரள மான்மியம் போன்ற நூல்களும், திருவாங்கூர்ச் சரித்திர ஆசிரியர் சங்குண்ணி மேனன் அவர்களும், டாக்டர் எஸ்.கிருஷ்ண சாமி அய்யங்கார் அவர்களும் கொங்கு தனியாட்சி நாடு என்பதைத் தக்க எடுத்துக் காட்டுக்கள் காட்டி நிறுவியுள்ளனர். சேர நாட்டு மக்கள் பழக்க வழக்கங்களையும், கொங்கு நாட்டு மக்கள் பழக்க வழக்கங்களையும் பார்த்தால் எக்காலத்திலும் இவ்விரு நாடும் ஒன்றாக இருந்திருக்க முடியாது எனலாம்...'[19]

கொங்கு வேளாளர்களில் ஆந்தை, சாத்தந்தை, பூச்சந்தை முதலிய கூட்டங்களுக்குப் புணர்ச்சி விதி தொல்காப்பியத்தில் உள்ளது. 2000 ஆண்டுகட்கு முற்பட்ட அறச்சலூர்க் கல்வெட்டில் மணியன், வண்ணக்கன் கூட்டப் பெயர்கள் பயின்று வருகின்றன. முட்டத்தில் கிடைத்த பொன் ஏரும், கொடுமணல் அகழாய்வில் கிடைத்த இரும்புக் கலப்பை போன்றவைகளும் வேளாளரின் தொன்மையைக் காட்டும் சான்றுகளாக அமைகின்றன. கொங்கு நாட்டில் கிடைக்கும் வேலைப்பாடு மிக்க வண்ணக் கல்மணிகள் தொன்மையான ஆற்றங்கரையில் வாழ்ந்த வேளாளர்களின் நாகரிகச் சிறப்பை விளக்கும். வேளாளரின் பல கூட்டப் பெயர்கள் சங்க இலக்கியத்தோடு தொடர்புடையவை.

# கொங்கு நாட்டில் சேரர்

பழனி, தென்காசி, கோழிக்கோடு இவற்றின் இடைப்பட்ட பகுதி சேரநாடு. சங்க காலத்தில் சேர அரசர்களில் ஒரு பிரிவினரான 'பொறையன்' மரபினர் சிலர் கொங்கு நாட்டுக் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர்.[20] கருவூர் அருகேயுள்ள புகழூர் ஆர்நாட்டார் மலையில் சங்க காலச் சேர அரசர் மூவரின் பெயர்கள் பொறிக்கப்பட்ட மிகப் பழமையான கல்வெட்டுக்களைக் காணுகின்றோம். அவர்கள் செல்வக்கடுங்கோ வாழியாதன், பெருஞ்சேரலாதன், இளஞ்சேரலாதன் ஆவர்.[21]

பல்யானைச் செல்கெழு குட்டுவன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், சேரன் செங்குட்டுவன், பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை என்னும் சங்க காலச் சேர மன்னர்கள் ஐவரும் கொங்கு நாட்டை வென்றதாகப் பதிற்றுப்பத்துக் கூறுகிறது.[22]

கொங்கு நாட்டு மன்னர் அதியமான் மரபினர் சேரர் குடியைச் சார்ந்தவர்கள். பனம்பூ மாலையை அவர்கள் சூடியமையாலும்,[23] 'வஞ்சியர் குலபதி எழினி' என்று தொன்மையான கல்வெட்டில் அதியமான் மரபினர் புகழப்படுவதாலும்[24] இது உறுதிப்படுகிறது. இருப்பினும் பெருஞ்சேரல் இரும்பொறை அதியமானின் தகடூரை வென்றார்.[25] இப்பெருஞ்சேரலே கருவூரைக் கொங்குச் சேரர் தலைநகராக்கினார்.[26] வஞ்சி என்ற சேரர் கோநகரப் பெயர், கொங்கு நாட்டில் பல ஊர்களுக்கு இடப்பட்டிருந்தன.

சங்க காலத்துக்குப் பின்னரும் சேரர்கள் அவ்வப்போது கொங்கு நாட்டின் பல பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தியுள்ளனர். பிற்காலச் சேரர்கள் கல்வெட்டுக்களை வெள்ளலூர், பொன்னிவாடி, ஈரோடு, கொடுமுடி, பொள்ளாச்சி, பழனி, பேரூர், நீலம்பேரூர், பிரமியம் ஆகிய கொங்கு நாட்டு ஊர்களில் காணுகின்றோம்.[27]

கோயமுத்தூருக்கு அருகில் வடமேற்கில் நொய்யல் கரையில் உள்ள முட்டம் என்ற பழம்பெரும் ஊருக்கு இரவிவர்மன், அமரபுயங்கன் என்ற சேர அரசர்கள் பெயரால் இரவிவர்மச் சதுர்வேதமங்கலம், அமரபுயங்க நல்லூர் என்ற பெயர்கள் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகின்றன.[28]

கோயமுத்தூருக்கு 'வீரகேரள நல்லூர்' என்ற பெயர் ஒரு காலத்தில் இருந்துள்ளது.[29] அமராவதி ஆற்றங்கரையிலும் பல ஊர்களுக்கும், கோயில்கட்கும் சேரர் தொடர்பான பல பெயர்கள் உள்ளன.[30] பிற்காலச் சேரர் காலத்தில்கூடக் கருவூரில் ஒரு சேரர் மாளிகை இருந்தது. அதற்குச் 'சித்திரக் கூடம்' என்று அனுமன்பள்ளிச் சேரர் செப்பேடு கூறுகிறது. 'சேரம்பாடி' என்பது நீலகிரியில் ஒரு ஊருக்குப் பெயர். 'சேர அரையன்' மலை கொங்கு நாட்டில் இருப்பதும், 'சேர வேளாளர்' என்ற பிரிவு இருப்பதும், கொங்கு வேளாளர்களில் 'சேரன் கூட்டம்' இருப்பதும் கவனிக்கத் தக்கது. இன்னும் கொங்கு வேளாளர்களில் பனையன் கூட்டம், ஆதன் கூட்டம், அந்துவன் கூட்டம், வில்லியர் கூட்டம் என்று வரும் பெயர்களும் சேர மன்னரோடு தொடர்புடைய பெயர்கள்தாம்.[31]

சோழன் பூர்வபட்டயம் என்னும் பண்டைய வரலாற்று நூல் கொங்கு நாட்டில் சேரர் செய்த ஆலயத் திருப்பணிகள் பற்றிக் கூறுகின்றது.[32] ஆனைமலைப் பகுதிக்கு 'வீரகேரள வளநாடு' என்று பெயர்.[33]

பல்வேறு தமிழ்நாட்டுத் தமிழ்க் கல்வெட்டுக்களில் சேர நாட்டுப் பகுதி 'மலைமண்டலம்' என்றும், கேரளப்பகுதி மக்கள் 'மலையாளர்' என்றும் குறிக்கப் பெறுகின்றனர். சேலம் சுகவனேசுவரர் கோயில் கல்வெட்டில் 'மலைமண்டலத்து மலையாளர்' என்ற தொடரைக் காணுகின்றோம்.[34]

கோவை மாவட்டம் கடத்தூர்ச் சிவாலயத்தில் காணப்படும் இரண்டு கல்வெட்டுக்கள் இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றன.[35] கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:

| கல்வெட்டு–1 | | கல்வெட்டு–2 | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீவீர நாரா | 1. | ஸ்வஸ்திஸ்ரீ வீ |
| 2. | யண தேவ | 2. | ர சோழதேவ |
| 3. | ற்கு யாண்டு | 3. | ற்கு யாண்டு |
| 4. | மூன்றாவது ஆ | 4. | பத்தொன்ப |
| 5. | ளுடையார் திரு | 5. | தாவது பெரு |
| 6. | மருதுடையா | 6. | மாளடியாரில் |
| 7. | ற்கு வெண்கா | 7. | மலையாளப்ப |
| 8. | ள நாட்டு | 8. | டையில் கா |
| 9. | க் காச்சு | 9. | ட்டுப் பெற்றவ |
| 10. | வன் குறிச்சியில் | 10. | ளுவர் தாந் திரு |
| 11. | மலையாளன் கரு | 11. | த்தனான திருநீ |
| 12. | ப்புக் கோடந் கு | 12. | ல கண்டப் பல் |
| 13. | மரன் கண்டே | 13. | லவரையனேன் |
| 14. | நந் இட்டதூண் | 14. | இத்தூண் செய்வி |
| 15. | ஒன்று- | 15. | த்தேன்- |

சுமார் 800 ஆண்டுகட்கு முற்பட்ட இக்கல்வெட்டுக்கள் மூலம் தமிழகத்தினுள் குறிப்பாகக் கொங்கு நாட்டு எல்லைக் குள் சேர, சோழர் ஆட்சி செய்த இடைக்காலத்தில் அவர் களின் கீழ்ச் சேர நாட்டு மக்கள் நிலையாகத் தங்கி வாணிகம் செய்தனர்; ஆலயத் திருப்பணி செய்தனர்; படை வீரராகவும் இருந்தனர் என்பது தெளிவாகிறது.

இதையெல்லாம் உட்கொண்டே பிற்காலத்தில் பல புலவர்கள் சேரர்கட்குரியது கொங்கு நாடு என்றும், சேர னுக்குக் கொங்கன் என்ற தம்பி இருந்தான்; அவனுக்குரியது கொங்கு நாடு என்றும் எழுதினர். நிகண்டு ஆசிரியர்களும் சேரன், கொங்கன் என்று ஒரே பொருளில் எழுதிவிட்டனர்.[36]

அருணகிரிநாதரும் கொங்கு நாட்டுப் பழனி பற்றிய தன் திருப்புகழ்ப் பாடலில்,

'சேரர் கொங்கு வைகாவூர் நல்நாடு'

என்று பாடினார்.[37]

பேரூர்ப் புராணம் பாடிய தொண்டை நாட்டுக் கச்சி யப்ப முனிவரும்,

'கோதை நனி ஆண்டதொரு
கொங்குவள நாடு'

என்று பாடினார்[38]. இதைப் பார்த்து அவிநாசி, கரூர், பவானி, திருச்செங்கோட்டுப் புராண ஆசிரியர்களும் இவ் வாறே சேரன் ஆண்ட கொங்கு எனப் பாடத் தொடங்கினர். சேர மன்னரான குலசேகர ஆழ்வாரும் தன்னைக் 'கொங்கர் கோன்' என்று அழைத்துக் கொண்டார். கொங்கு நாட்டுக் கொல்லிமலை சேரருக்குரியதாகக் கூறப்பட்டது. இதனால் சேரன் 'கொல்லி காவலன்' என்று கூறப்பட்டான்.[39] இவை யெல்லாம் அவ்வப்போது ஏற்பட்ட வெற்றியின் விளைவே. சேரர்கள் மேற்கு திசைக்கு உரியவர்கள் என்ற கருத்தில் 'குடவர்கோ' 'குடதிசை ஆளும் கொற்ற வேந்தன்' 'முடி யுடை மூவேந்தருள்ளும் குடதிசை ஆளும் கொற்றம் குன்றா ஆர மார்பிற் சேரகுலம்' என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.[40]

சேரர் சில காலம் வென்று ஆட்சி புரிந்த நாடே கொங்கு நாடு. அதனால் சேர நாடும் கொங்கு நாடும் ஒன்றாக ஒரே நாடாக ஆகிவிடாது. சேரர்கள் சேர நாட்டைத் தங்கள் அக நாடு என்றும், கொங்கு நாட்டைப் புறநாடு என்றும் கருதினர். சிலப்பதிகாரத்தில்,

'நம் அகநாடு அடைந்த இப்பத்தினிக் கடவுள்'

என்னும் வேண்மாள் கூற்று இதனை வலியுறுத்தும்.[41]

ஆய்வாளர் டி.எம். காளியப்பா அவர்கள் படி எடுத்து வைத்துள்ள 'மாந்தரஞ்சேரல்' பதிகத்தில் சேரமன்னன் தன் மகனுக்குக் கொங்கு நாட்டில் பெண் எடுத்து அங்கு ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்தான் என்றும், அவன் காங்கேய நாடு சூழ்ந்த கொங்கு நாட்டின் மையத்தில் பல நகர்கள் அமைத்து 'நாட்டராயன்' கோயிலைக் கட்டினான் என்றும் கூறப்படுகிறது:

'உதியனது மரபில் பதியெனவே வந்தமர்ந்து
ஆய்ந்துணர்வு கொளுபுனித மாந்தரஞ் சேரல்மன்னன்
சேரலமா நகர்என்னும் திகழ்வஞ்சி மாநகரும்
காகமெனும் நற்பதியும் கனதாரா புரநகரும்
விளங்கில்எனும் பதியதுவும் மிகுமூல னூர்அதுவும்
பாரதனில் பலதலைமைப் பண்புடைய நகர்போக்கி...
வேண்டியசீர் வேளிர்களும் விறல்கெழுநற் புகழ்பாட
------------ ----------நலமிகுசீர் நற்குடியில்
தன்சேய்மாந் தரஞ்சேரல் தனக்குமகட் கொடைநேர்ந்து
சேரலமா நகரதனில் திகழ்காகப் பதிஅதனில்
பாரளவும் கீர்த்திபுனை பகர்திருச்செங் கோடதனில்
மன்னுபல பதிகளுக்கும் மகன்தனைநல் அரசாக்கி....'

என்பது அப்பதிகத்தின் ஒரு பகுதியாகும்.

மாந்தரன் நினைவாக மாந்தை என்ற ஊரும், மாந்தீசுவரர் கோயிலும் கொங்கு நாட்டில் காங்கேயம் அருகே உள்ளன.

# கொங்கு நாடு – சேர நாடு இடையே தொடர்பு

பன்னெடும் காலம் தொட்டுத் தனித்தனி நாடுகளாகப் பண்பாடு பழக்க வழக்கங்களுடன் கொங்கு நாடும், சேர நாடும் இருந்தன. அவை தங்களுக்குள் ஏற்பட்ட போர்கள் மற்றும் வணிகம் போன்ற பல்வேறு காரணங்களால் குடியேற்றங்கள் ஏற்பட்டன. அக்குடியேற்றத்திற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அவையாவன:

1. சேர - சோழ நாட்டுப் படையெடுப்பு
2. வணிகப் போக்குவரத்து
3. சமயத் தல யாத்திரைகள்
4. பஞ்சத்தின் காரணம்
5. பகைவர் படையெடுப்பு
6. நிருவாக அமைப்பு
7. திருமண உறவு

## 1. சேர – சோழ நாட்டுப் படையெடுப்பு

சங்க காலத்தில் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்கும், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி என்ற சோழ மன்னனுக்கும் கொங்கு நாட்டுத் திருப்போர்ப்புறத்தில் போர் நடந்தது. அப்போரில் இருவருமே உயிர் நீத்தனர் என்று புறநானூறு கூறுகிறது.[42]

கணைக்காலிரும்பொறை என்ற சங்க காலச் சேர மன்னனுக்கும், கோச்செங்கட் சோழனுக்கும் நடைபெற்ற கழுமலப் போரும் கொங்கு நாட்டில் நடந்தது. அப்போரில் சேரன் தோற்றான்.[43]

பகைவரைக்கண்டு இளமையிலேயே மறைந்து வாழ்ந்த சோழ இளவரசன் கரிகாலன், கொங்கு நாட்டில் வாழ்ந்தான். சோழ நாட்டுக்கு அரசன் ஆனபின் சேர நாட்டைக் கரிகாலன் வென்றான். இப்படையெடுப்பு கொங்கு நாட்டின் வழியாகவே நடைபெற்றது.[44]

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கொங்கு நாட்டை வென்று பின் சேரநாடு சென்று வஞ்சிமா நகரைக் கைப்பற்றினான்.[45]

சேரன் செங்குட்டுவன் சோழரோடு கொங்கு நாட்டுச் செங்களம் என்ற ஊரில் போர் செய்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அப்போரில் சோழருடன் பாண்டியரும் இணைந்து சேரனுடன் போரிட்டனர்.[46]

மேலே கண்ட போர்கள் அனைத்தும் சங்க காலத்தில் நடைபெற்றவை. கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தஞ்சையில் விசயாலயனால் பிற்காலச் சோழப் பேரரசு தோற்றுவிக்கப்பட்ட பின்னரும் பல சோழர்கள் கொங்கு நாடு வழியாகவும் பலமுறை சேரநாட்டின் மீது படையெடுத்துச் சென்றிருக்கின்றனர்.

கொங்கு நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் இடையில் பாலக் காட்டுக் கணவாய் வழியாகச் சென்ற பாதை 'இராசகேசரிப் பெருவழி' என்று சோழன் பெயரால் அழைக்கப்பட்டது.[47] அப்பாதையைக் கண்டராதித்த சோழன் புதுப்பித்தான். இதைக் குறிக்கும் கல்வெட்டு சுண்டக்காமுத்தூர் அருகில் பச்சப்பாழியில் உள்ளது. 'வஞ்சி வழி' என்ற தொடரும் கொங்கு நாட்டுக் கல்வெட்டில் காணப்படுகிறது.[48]

கொங்கு நாட்டில் கிடைத்த இரண்டு சோழர் கல்வெட்டுக்களில் வீரசோழன் கல்வெட்டில்,

> 'சேரனை வெந்கண்ட சோழன்பெருவழி'

என்றும்,[49] குலோத்துங்க சோழன் கல்வெட்டில்,

> 'சேரமான் சக்கரவர்த்தியை நடை கொண்ட
> நாட்டுக் குடியானவன்'

என்ற குறிப்பையும் காணுகின்றோம்.[50] இராசேந்திர சோழன் கொங்கு நாட்டின் வழியாகவே சேர நாடு சென்றான் என்பதைக் கொங்கு நாட்டு நொய்யல் ஆற்றங்கரையில் உள்ள துக்காச்சி நடுகல் கல்வெட்டால் அறிகின்றோம்.[51] இராசேந்திர சோழன் மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் கல்வெட்டு கொடுமுடியில் கிடைத்துள்ளது.[52] இராசகேசரி இராசேந்திரன் என்ற பெயரில் முதல் குலோத்துங்க சோழனின் தொடக்ககாலக் கல்வெட்டு ஆப்பக்கூடல் அருகே வேம்பத்தியில் கிடைத்துள்ளது. அக்கல்வெட்டு இப்போது ஈரோடு கலைமகள் கலைக்கூடத்தில் உள்ளது.[53]

சேரர் - சோழர் படையெடுப்புக்கள், போர்கள் பல பன்னெடுங்காலமாகக் கொங்கு நாட்டின் வழியாகவே நடைபெற்றன. அப்போர்களில் பல கொங்கு மண்ணிலும் நடைபெற்றிருக்கின்றன என்பதை அறிகின்றோம்.[54] எனவே

கொங்கு நாடும் சேர நாடும் தொடர்பு கொண்டது இயல்பே யாகும். ஒரு நாட்டுப் படை பிற நாட்டில் நெடுநாள் நிலையாகத் தங்கும்போதும், பின்னர் நாடு திரும்பும்போதும் மக்கள் கலப்பும், குடிப்பெயர்வுகளும் ஏற்படுவது உண்டு என்று குடியேற்ற வரலாறுகள் கூறுகின்றன.

## 2. வணிகப் போக்குவரத்து

சங்க காலத்தில் மேற்குக் கடற்கரையில் வந்து இறங்கிய உரோமானிய வணிகர்கள் கொங்கு நாட்டு அமராவதி, நொய்யல் கரைகளில் அமைந்திருந்த பெருவழிகள்வழியாகவே கரூர், உறையூர் வழியாகக் கிழக்குக் கடற்கரை வரை சென்றனர்; திரும்பியும் வந்தனர்.[55]

இந்தியாவில் கிடைக்கும் உரோமானிய நாணயங்களில் பெரும்பகுதி கொங்கு நாட்டிலேயே கிடைத்துள்ளன. உரோமானியர் உயர்ரகப் பானை ஓடுகளும் அவர்களின் சுடுமண் பொம்மைகளும் கொங்கு நாட்டில் பல இடங்களில் கிடைக்கின்றன.[56]

இடைக்காலத்தும் பிற்காலத்தும் சோழ நாடாகிய கிழக்குக்கடற்கரை வணிகர்கள் கொங்கு நாட்டின் வழியாகவே சேர நாடு சென்றனர். மலைபடு பொருள்களைப் பெற்றுக் கொண்டு கொங்கு நாட்டு வழியாகத் திரும்பினர். இதற்குப் பல்வேறு இலக்கிய, வரலாற்றுச் சான்றுகள் ஆதாரங்களாக உள்ளன.

தரகன் என்னும் வணிகர்கள் கேரள - தமிழகம் இடையே வணிகம் செய்தவர்கள் என்பதை 'கொச்சி மாநிலக் கையேடு' என்னும் நூல், 'The Tarakans (literally, brokers) appear to have Tamil Sudras who settled on this side of the Palghat Gap with a view to act as trade medium between the Malayalam and Tamil countries' என்று கூறுகிறது. கொங்கம்படை வரலாற்றிலும் சேரநாடு கொங்குநாடு இடையிலான வணிகப் போக்குவரத்துக் கூறப்படுகிறது.

கொங்கு நாட்டில் உள்ள பலஊர்க் கோயில்களில் செவி வழிச் செய்தியாக ஒரு நிகழ்ச்சி கூறப்படுவதுண்டு. சேர நாட்டிலிருந்து மிளகுப் பொதிகள்கொண்டு வருவோர் கோயில் அருகில் தங்கியாகவும், கோயிலுக்கு மிளகு கேட்டபோது கொடுக்க விரும்பாத வணிகர்கள் 'மூட்டையில் பயிறு' என்று சொல்ல அவை அவ்வாறே பயிறாக மாறிற்றுஎன்றும், பின்னர் சுவாமியை வணங்க அவை மிளகு மூட்டைகள் ஆயின என்றும்

பலஊர்க் கோயில்களோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். இது சேர நாட்டு மிளகு கொங்கு நாட்டுக்கும், கொங்கு நாட்டின் வழியாகக் கிழக்கு நாடுகளுக்கும் சென்றது என்ற உண்மையைக் காட்டுகின்றது.[57] தாவளம் என்ற வணிகர் குடியிருப்புக்கள் இப்பகுதியில் மிகுதியாகக் காணலாம்.

### 3. சமயத் தல யாத்திரைகள்

சோழ நாட்டிலிருந்து சுந்தரமூர்த்தி நாயனார் மூன்று முறை பல அடியார்கள் புடைசூழக் கொங்கு நாடு வழியாகவே சேர நாடு சென்றார்; திரும்பினார். சேரமான் பெருமாள் நாயனாரும் கொங்கு நாட்டின் வழியாகவே சோழ நாடு சென்றார். இதைப் பெரியபுராணம் வாயிலாக நாம் அறிகின்றோம். பேரூரை மேற்குக் கொங்கு என்று சுந்தரர் குறிப்பிடுவார்.[58]

வைணவரான குலசேகர ஆழ்வாரும் கொங்கு நாட்டின் வழியாகப் பயணம் மேற்கொண்டுள்ளார். கொங்குநாட்டின் பல கோயில்கட்குச் சேர அரசர்களும் அரசியல் அலுவலர்களும் அடியார்களும் ஆலயத் திருப்பணி செய்துள்ளனர்.[59]

சமண சமயமும் கேரளத்துப் பாலக்காட்டையும் வைநாட்டையும் கொங்கு நாட்டுடன் இணைத்து வைத்துள்ளது. பாலக்காட்டில் இருக்கும் சமணக் கோயில் கொங்கு நாட்டு சமணப்பள்ளிபோல இருப்பதும், பாலக்காட்டுச் சமணர்கள் தமிழ் பேசுவதும் காணலாம்.[60]

### 4. பஞ்சத்தின் காரணம்

வரலாற்றுக் காலங்களில் ஏற்பட்ட பல பஞ்சங்களால் அருகருகேயுள்ள கொங்கு நாடு - சேரநாடு ஆகிய இரு நாடுகட்கும் இடையில் மக்கள் குடி பெயர்ந்துள்ளனர்.

### 5. பகைவர் படையெடுப்பு

விசயநகர மன்னர்கள், ஒய்சளர்கள், ஐதர், திப்பு காலத்தில் ஏற்பட்ட பல்வேறு கலவரங்களால் மக்கள் பாதுகாப்பான இடம் நாடி ஓடும்போது கொங்கு வேளாளர் குல மக்கள் பலர் இடம் பெயர்ந்து சென்று வாழ்தல் இயல்பே. இக்குடிப் பெயர்வு கொங்கு - சேர நாட்டின் இடையிலும் ஏற்பட்

டுள்ளன. தனிப்பாடல் ஒன்றில் கொங்கு நாட்டு மக்கள் இக் காரணத்தால் மலைநாடு சென்றது கூறப்படுகிறது:

கதிர்இரவி இலகுபுகழ் கொங்குதே சந்தனில்
கள்ளர்வடுகர் தொழுவர்
கனபவிசு கூடியே அனுதினம் கொள்ளையும்
கலகம்இப் படிநடத்தியே
கன்றுகா லித்திரள்கள் தாவிபறி சேலைபறி
கனகொள்ளை தான்குடுத்துக்
கஷ்டப் படுந்துயரம் போறாமல் சனமெலாம்
கனமலைகள் தான்நடந்தார்

என்பது அப்பாடல் பகுதியாகும்.[61]

## 6. நிருவாக அமைப்பு

சேரர் கொங்கு நாட்டுப் பகுதிகளை வென்று நிருவாகம் செய்யும் போதும், சோழர் கொங்கு, சேர நாடுகளை வென்று நிருவாகம் செய்யும் போதும் பல அரசு அலுவலர்கள் நிருவா கக் காரியங்களுக்காகச் சேர, கொங்கு நாடுகளுக்கு இடையே அடிக்கடி செல்லும்போதும், தங்கும்போதும் இரு நாட்டு மக்களிடையேயும் குடிப்பெயர்வுகள் ஏற்பட்டுள்ளன. இதைச் சேலம், கடத்தூர், ஈரோட்டுக் கல்வெட்டுக்கள் சுட்டிக்காட்டு கின்றன.[62]

## 7. திருமண உறவு

கொங்கு நாட்டுக் குறுநில மன்னர்களும், வேளாளர்களும் மூவேந்தர்கட்குப் பெண் கொடுக்கும் உரிமை உடையவர் கள். சேர அரசன் மனைவி வேண்மாள் (வேள்+மகள்=வேளா ளருடைய மகள்) என்று காணுகின்றோம். கொங்கு நாட்டுப் பெருமக்களுக்குச் சேரன் வஞ்சியில் தங்கத் தனி மாளிகை இருந்தது. அது 'வேள் ஆவிக்கோ மாளிகை' எனப்பட்டது.[63] கொங்கு வேளாளப் பெருமக்களின் வமிசாவளியிலும் இச் செய்தி விரிவாகக் கூறப்படுகிறது.

இவ்விதம் சேர நாடு - கொங்கு நாட்டுக்கிடையே மக்கள் குடிபெயரப் பல காரணங்கள் அமைந்துள்ளன. இவைகள் ஒன்றாலும் பலவற்றாலும், பலமுறை, பல இடங்களில் குடிப் பெயர்வுகள் இரு நாடுகளிலும் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு குடிபெயர்ந்துள்ள மக்கள் பல்வேறு வகை யான இனத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். அவர்களுள் கொங்கு வேளாளர்களும் உள்ளனர். சேர நாடும் - கொங்கு நாடும்

தனித்தனியான பண்பாடு பழக்க வழக்கம் உள்ள நாடு என்று ஏற்கனவே கண்டோம். கேரளப்பகுதியில் வாழும் குறிப்பிட்ட ஒருசில மக்களின் பழக்க வழக்கம், பண்பாடு சேர நாட்டிலிருந்து மாறுபட்டுக் கொங்கு நாட்டுடன், குறிப்பாகக் கொங்கு நாட்டு வேளாளர்களுடன் நெருங்கிய தொடர்பு உள்ளதைப் பின்னர்ப் பல்வேறு இடங்களில் நாம் காணலாம்.

## சேர நாட்டில் கொங்கு வேளாளர் குடியேற்றம்

கேரள மாநிலத்தில் பாலக்காடு மாவட்டத்தில் கொங்கு நாட்டை ஒட்டியுள்ள சித்தூர், கொல்லங்கோடு, பாலக்காடு, ஆலத்தூர் ஆகிய நான்கு வட்டங்களில் கொங்கு வேளாளர்கள் முன்பு குடியேறி வாழ்ந்தனர். இக்குடியேற்றம் எப்படி ஏன் நடைபெற்றது என்பதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

### சீதனமாகச் சென்ற கொங்கு வேளாளர்

இலக்கியங்களிலும், பட்டயங்களிலும் பொதுவாக ஒரு காரணம் இதற்குக் கூறப்படுகிறது. சோழ மன்னன் மகளைச் சேர மன்னன் மணம் புரிந்து கொள்ளுகின்றான். சேர மன்னனை மணந்து சேரநாடு வரும் சோழ இளவரசி தன் தந்தையிடம் தனக்குச் சீதனம் கேட்கின்றாள். சோழ மன்னன் பல பொருட்களைத் தன் மகளுடன் அனுப்புகின்றான். சோழ மன்னன் தனக்கு உட்பட்டிருந்த 48000 கொங்கு வேளாளர்களில் (நற்குடி நாற்பத்தெண்ணாயிரம்) 8000 பேரைச் சேர மன்னனை மணந்த தன் மகளுக்குச் சீதனமாக அளிக்கின்றான். அக்கொங்கு வேளாளர்கள் சேர நாட்டுப் பகுதியில் குடியேறினர். அவ்வேளாளர்கள் ''கொங்கு வேளாளர்கள்'' என்று பெயர் பெற்றவர்கள். சேரர்கட்குரிய பல்வேறு பெயர்களில் ''கொங்கன்'' என்பதும் ஒன்றாகிவிடுகிறது. இதனைத் தமிழ் நிகண்டுகள் கூறுகின்றன.

' பூழியன் உதியன் கொங்கன் பொறையன்
வானவன் குட்டுவன் வான வரம்பன்
வில்லவன் குடநாடன் வஞ்சி வேந்தன்
கொல்லிச் சிலம்பன் கோதை கேரளன்
போந்தின் கண்ணிக்கோன் பொருநைந் துறைவன்
சேரலன் மலையமான் கோச்சேரன் பெயரே'

என்று சேந்தன் திவாகரம் கூறுகிறது. இதனைப் பிங்கல நிகண்டும் கூறுவதைக் காணுகின்றோம்.[64]

### சேரநாட்டதிபதி கொங்கு வேளாளர்

கொடுவாய் சின்னத்தம்பி நாவலர் என்பார் 'அலகுமலைக் குறவஞ்சி' என்ற இலக்கியம் ஒன்றைப் பாடியுள்ளார்.

கொங்கு வேளாளரில் ஓதாளன் கூட்டத்தைச் சேர்ந்த பொங்கலூர் நாட்டுப் பெரிய பெருமாளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட நூல் அலகுமலைக் குறவஞ்சி. திருப்பூர் க. பழனிச்சாமிப் புலவரால் தமிழக அரசின் உதவியுடன் அந்நூல் அச்சிடப்பெற்றுள்ளது.

அந்நூலில் சோழ நாட்டு அரசனுக்குட்பட்ட கொங்கு வேளாளர்கள் சேர நாட்டில் குடியேறியமைக்கு மேற்சொன்ன காரணமே கூறப்பட்டுள்ளது:

''திக்கெலாம் மதிக்கும் சேரமான் பெருமாள்
குருத்தணி சோழன் குறைவிலா தீன்ற
உருத்திர மணியின் உடனக மகிழ்ந்து
மணம்புரிந் துலகில் வாழ்ந்திடும் நாளில்
குணமுடன் மகட்குக் குருத்தணி சோழன்
சீதன வரிசை சிலபொரு ளுதவும்
போதினில் மகளும் பொருந்தியுள் மகிழ்ந்து
தந்தைதன் னுடனே சாற்றிய வசனம்
நந்தலில் லாத நாற்பத்தெண் ணாயிரம்
நற்குலத் தாரில் நாலிரு ஆயிரம்
நிற்கிரி கடனே நீடூழிக் காலம்
மதியுடன் எங்கள் மன்சபைச் சுமுகராய்
இதமுடன் இருக்க ஈகுவீர் என்னக்
கூறவும் மகிழ்ந்து குருத்தணி சோழன்
சேரமா னுடனே செப்புவர் சிறப்பாய்
மகளுரை தவறா வாய்மையால் யானும்
வகையுடன் வேளாண் மரபுளோர் அனுப்பில்
உங்களோ டொப்ப உயர்ச்சியாய்ப் பார்க்கில்
அங்குயான் அனுப்ப அகம்சம் மதிப்பேன்
என்றவர் சொல்லவே சேர மானும்
நன்றவர் நமது நாடதி பதியாய்
வரிசைமெய்ப் புகழுடன் வழங்குவேன் எனவும்
சரிசரி எனவே தரணிபா லகரில்
கண்ணன் ஆங்கூர்க் காணிமுத் தையனை
மன்னவர் சபையில் வரவழைத் தேதான்
எண்ணா யிரங்கோத் திரத்துளோர்க் கரசன்
நண்ணாகக் கொங்கு நாடதை விளக்கம்
செய்துதான் இருப்பீர் சென்மென அனுப்ப
உய்யவே சேரன் உலகுக்கு வந்தார்''

என்பன அலகுமலைக் குறவஞ்சியில் காணும் வரிகளாகும்.[65]

சேர நாட்டில் குடியேறிய கொங்கு வேளாளர்களை 'நாட்டு அதிபதிகள்' ஆக்குவேன் என்று சேரன் சொன்ன தற்கேற்பச் சேர நாட்டில் மேற்கண்ட நான்கு வட்டங்களில் வாழும் கொங்கு வேளாண் பெருமக்கள் முன்பு சிற்றரசர் போல் வாழ்ந்தனர்.

**கொங்குப் பாளையக்காரர் பட்டயங்களில்**

சுமார் 190 ஆண்டுகட்கு முன் கொங்கு நாடும் பால காட்டுப் பகுதிகளும் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆளுகைக் குட்பட்டிருந்தபொழுது கொங்கு வேளாளர் குலத் தலைவர் கள் பலரும் நில அளவை - வரலாற்று அறிஞர் மெக்கென்சி அவர்களிடம் தங்கள் வரலாற்றை எழுதித் தந்தனர். அவை அனைத்தும் சென்னையில் தமிழக அரசின் கீழ்த்திசைச் சுவடி கள் நூல் நிலையத்தில் பாதுகாப்பாக இன்றும் உள்ளன. அவை மேலே சொன்ன வரலாற்றுச் செய்திகளை அப்படியே உரைநடை வடிவில் கூறுவதைப் பார்க்கின்றோம்.

**அ) சங்கரண்டாம்பாளையம் வேணாடுடையார் வமிசாவளி**

பெரிய கூட்டம் எனப்படும் வேளாளர் குடித் தலைவர் கள் சங்கரண்டாம்பாளையம் வேணாடுடையார் மரபினர். அவர்களின் வரலாறு கூறும் வமிசாவளி வேளாளர்குடியேற்றம் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது:

> '...சகாப்தம் 1100க்கு மேல் ரிஷபகிரிச் சோளன் மகளை சேரமான் பெருமாள் பாணிக் கிரகணம் பண்ணிக் கொண்டபடியினாலே சோள ராசாவின் மகள் தனக்குச் சீதனம் தன் தோப்பனாரைக் கேட்டது யென்னவென்றால் யெனக்கு சிறிது வேளாளற் குடி வேணு மென்று கேள்க்க நாற்பத்தியெண்ணாயிரம் குடியில் யெண்ணாயிரம் குடி சீதனம் குடுத்த படியினாலே சேரமான் பெருமாள் கொங்கு மண்டலத்துக்குக் கொங்கு வேளாளரென்று பேறும் குடுத்து....'[66]

**ஆ) சமத்தூர் வானவராயர் வமிசாவளி**

பொள்ளாச்சியை அடுத்த சமத்தூர் வானவராயர்கள் கொங்கு வேளாளரில் பவள கூட்டத்தின் தலைவர்கள். அவர் கள் வமிசாவளியும் மேலே கண்ட அதே செய்தியைப் பின்வரு மாறு கூறுகிறது:

> '...வேளாளறென்று பேற் பிரசுத்திப்பட்ட நற்குடி னாற்பத்தியெண்ணாயிரம் பசும்குடி

பன்னீராயிரம் ஆக அறவதுனாயிற கோத்திரக் காரற்களில் பிற்க்காலம், ரிஷபகிறிச் சோள ராஜா மகளை மொரை சரிந்த சேறறாசா பாணிக் கிரகணம் பண்ணிக் கொண்டபடியி னாலே அந்த சமயத்தில் நற்குடி னாற்பத்தி யெண்ணாயிரம் குடியில் யெண்ணாயிரம் குடி சீதனம் கொடுத்தபடியினாலே அப்போ வறப் பட்ட வேளாளறுக்கு தென்திசை னோக்கி வந்த படியினாலே தென்திசை வேளாள ரென்று பேற் வறப்பட்டது.

சேற தேசத்துக்கு வறப்பட்ட வேளாள றுக்கு சேறனுக்கு கொங்கனென்றும் பேற் யிறுக்குற படியினாலே கொங்கு வேளாள ரென்றும்....'[67]

## (இ) ஊத்துக்குளி காலிங்கராயர் கைபீது

பொள்ளாச்சி ஊத்துக்குளி காலிங்கராயர் கொங்கு வேளாளர்களில் சாத்தந்தை கூட்டத் தலைவர்கள். அவர்கள் வரலாறு கூறும் கைபீது எனப்படும் பழங் குறிப்பில் கீழ்வரும் தொடர்கள் காணப்படுகின்றன:

'பூர்வத்தில் சோழ தேசத்தில் தொ ண்டை மண்டலத்து வேளாளரென்று பேர் பிரசித்திப்பட்ட நற்குடி நாற்பத்தெண்ணா யிரம் பசுங்குடி பன்னீராயிரம் ஆக அறுபதி னாயிரம் கோத்திரக்காரர்களில் பிற்காலம் ரிஷபகிரிச் சோளராசா மகளை மொரை சரிந்த சேரராசா பாணிக் கிரகணம் பண்ணிக் கொண் டபடியினாலே சோழராசாவின் மகள் தனக்குச் சீதனம் தன் தகப்பனாரைக் கேட்டுக்கொண்ட படியினாலே அப்போ வரப்பட்ட வேளாள ருக்கு தென்திசை நோக்கிவந்த படியினாலே தென்திசை வேளாளர் என்று பேர் வரப் பட்டது.

சேர தேசத்துக்கு வரப்பட்ட வேளாள ருக்கு சேரனுக்கு கொங்கரென்றும் பேர் இருக் கிறபடியினாலே கொங்கு வேளார் என் றும்..'[68]

## (ஈ) பழைய கோட்டைப் பட்டக்காரர் வமிசாவளி

கொங்கு வேளாளர்களில் பயிரன் கூட்டத் தலைவராகிய பழையகோட்டைப் பட்டக்காரர் வமிசாவளியும் கொங்கு வேளாளர் குடியேற்றம் பற்றிக் கூறுகிறது. ஆனால் காரணம் மட்டும் இந்த ஆவணத்தில் மாற்றிக் கூறப்படுகிறது.

'சோளராசா தொடீரத்தனத்தில் ஆதொண்டச் செக்கிறவற்த்தி நாளையில் தன்னுடைய தேசத்திலே யிறுக்கப்பட்ட வேளாள சாதியில் கலியாணம் பண்ண வேணுமென்ங்குரதாக யெத்தினம் பண்ணுயிடத்தில் சம்மதிச்சு றாசாவே வரச்சொல்லி சகல சன்னாகதொடேனேயும் றாசா வந்த இடத்தில் பெண் நாயை அலங்கறிச்சு பந்தக்காலில் பிடிச்சுக் கட்டிப் போட்டு 48000 கோத்திரத்து வேளாளற் சோள ராசாவுக்கும் விரோதமாயி பிறப்பட்டு சேற தேசாதிபதியிடத்தில் வந்து சேர்ந்தார்கள்.

சேறனுக்குக் கொங்கனென்றும் பேற் வரப்பட்டு யிறுக்குரபடியினாலே கொங்கு வேளாளரெண்ணு பேற் வரப்பட்டு.....'[69]

## (உ) காங்கேயம் பல்லவராயக் கவுண்டர் வமிசாவளி

காங்கயம் கொங்கு நாட்டில் ஒரு பழம்பெரும் ஊர். அப்பழம்பெரும் பகுதி இன்றைய காங்கேயத்தின் தென் கிழக்கில் அகிலாண்டபுரம் என்ற பெயருடன் விளங்குகிறது. அவ்வூருக்குரிய தலைவர்கள் கொங்கு வேளாளர்களில் செங் கண்ணர் குலத்துத் தலைவரான பல்லவராயக் கவுண்டர் ஆவார். அவர்கள் வமிசாவளியில் கீழ்வரும் செய்தி காணப் படுகிறது:

'...பூர்வத்தில் சோழ தேசத்தில் தொண்ட மண்டலத்து வேளாளர் என்று பேற்ப்பட்ட னற்குடி 48000 பசுங்குடி 12000 ஆக 60000 கோத்திறக்காறகள் நற்குடி 48000 கோத்திரத்தில் 8000 கோத்திரக்காரர் சோளராசா சேரராசா கேட்டுக்கொண்டபடியினாலே 8000 கோத்திரக்காரரையும் சேர ராசாவுக்குக் கொடுத்தார். அப்போ தொண்ட மண்டலத் திலேயிருந்து தென்திசை நோக்கி வரப்பட்ட வேளாளருக்கு தென்திசை வேளாளர் என்று பேர் வரப்பட்டவர்களாயி சேர தேசத்தில்

வந்து யிருந்த இடத்தில் இருக்கப்பட்ட காணி
களிலே இந்த வேளாளருக்கு பாதி பிரிச்சு
யெடம் பண்ணிக் குடுத்தார்கள்...'[70]

### (ஊ) காடையூர் காங்கேய மன்றாடியார் வமிசாவளி

பொருளந்தை குலத் தலைவர்களான காடையூர் காங்கேய மன்றாடியார் வமிசாவளியிலும் மேலே கண்ட செய்தி அப்படியே கூறப்படுகிறது...[71]

இந்த ஆறு பட்டயங்களும் ஒருமுகமாகக் கூறும் செய்தியைக் கொண்டு வேளிர்குலப் பெருமக்கள் பலர்பழங்காலத்தில் சேர நாட்டுப் பகுதியில் குடியேறினர் என்று நாம் பொதுவாகக் கருதலாம். வேள், வேளிர், வேளாளர் ஆகியவை அவர்களுக்குள்ள பெயர்களாகும்.

### பாலக்காடும் பட்டாம்பியும் கொங்கர் காணியும்

சரவணய்யா என்பார் இயற்றிய 'மேழிவிளக்கம்' என்னும் நூல் ஏட்டுச் சுவடியிலிருந்து பெரும்புலவர் அமரர் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களால் பெயர்த்தெழுதிப் பதிப்பிக்கப் பெற்றது.

அந்நூலில் வேளாளர் வாழும் காணி உரிமையான இடங்களைத் தொகுத்துக் கூறும் இடத்தில்,

' நல்ல மலையாள நாடுகொச்சி - கொல்லம்
கோழிக் கோடு கொடுவாய் பாலக்காடு'

ஆகிய பல இடங்களில் கொங்கு வேளாளர் பரவி வாழ்ந்தார்கள் என்று கூறப்படுகிறது...[72]

அந்நூலின் இறுதிப் பகுதியில் வேளாளர்கட்குக் காணியாகக் கொடுக்கப்பட்ட பல்வேறு பகுதிகளைக் கூறுமிடத்தில்,

' பட்டாம்பி என்னும் பரவைநதி யார்பிறந்த
எட்டாறு சூழுலகம் ஈந்தனர்காண்'

என்ற தொடர் காணப்படுகிறது...[73] பட்டாம்பி என்பது கேரள மாநிலத்தில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள ஊர். அப்பெயரில் ஒரு ஆறும் உண்டு. பத்து ஆறுகள் சேர்ந்து வரும் ஆறுக்குப் பட்டாம்பி எனப் பெயராயிற்று என்பர். பத்து ஆறுகள்: வாளையாறு, கோரையாறு, மணலியாறு எனப்படும் சித்தூராறு, மலம்புழையாறு, கரும்புழையாறு, திருப்பாலூர்ஆறு, முடப்பாலூர் ஆறு, சிற்றிலப்பள்ளியாறு, கல்பாத்தியாறு, வரட்டாறு என்பன...[74] இவற்றில் வாளையாறு உட்பட 8 ஆறுகள் சூழ்ந்த பகுதியில் வேளாளர் குடியேறினர் என்று சரவணய்யா மேழிவிளக்கத்தில் கூறுகின்றார்.

இவை எட்டும் இன்றும் கொங்கு வேளிர் குடி வழியினர் வாழும் பகுதிகளாகக் கேரளத்தில் உள்ளன.

### குடமலையும் குழாயன் கூட்டமும்

கொங்கு வேளாளர்களில் குழாயன் கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சேர நாட்டு மேற்கு மலையாகிய 'குடமலை' காணியாகக் கூறப்படுகிறது.

' வளமிகு நாகமலை சென்னிமலை வெள்ளிமலை
வானிலகு ஆனைமலைசேர்
மாசிலா அலகுமலை பன்றிமலை பொன்றூதிமலை
செம்பொன்விளை குடமலை'

என்பது அவர்கள் காணிப்பாடலாகும்...[75] குடமலை, குட நாடு சேரருக்கு உரியது. இதனால் அவர்கள் குடவர்கோ எனப்பட்டனர்.

### கொங்கின் மேற்கு எல்லை வாளையாறு

இன்றைய கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வாளையாறு கொங்கு நாட்டின் மேற்கு எல்லையாகும் என்று சில சான்றுகள் கூறுகின்றன. கொங்கு வேளிர் மிகுதியாக வாளையாற்றுப் பகுதியில் குடியேறி நிலையாக வாழ்ந்ததே இவ்வாறு கூறுவதற்குக் காரணமாகும்.

கொங்கு நாட்டின் பெரும் பரம்பரைப் புலவர்கள் வாழ்ந்த பேரூர் புதுப்பை. புதுப்பைப் புலவர்கள் தொகுத்து வைத்திருந்த ஏடுகளின் ஒரு சில பகுதிகள் கொடுமணல் தம்பிராட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவர் வசமிருந்து ஈரோடு கலைமகள் மீனாட்சிசுந்தரம் தொல்பொருள் ஆய்வு மையத்தில் அப்பள்ளி நிருவாகி செல்வி எம். முத்தையா அவர்கள் பெற்று வைத்துள்ளார்கள். அச்சுவடிகளில் 'நாடுகளின் விபரம்' எனப்படும் பண்டைய சுவடி மிக இன்றியமையாதது. அதில் கொங்கு நாட்டின் மேற்கு எல்லை வாளையாறு என்று கூறப்படுகிறது.

### கொங்கு வாளையாறு

பழங்காலத்தில் சேர, சோழ, பாண்டியர்களைக் களப்பிரர்கள் கைது செய்து சிறையில் வைத்திருந்தபோது கொங்கு வேளாளர்களில் மூலன் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் களப்பிரரை வென்று மூவேந்தரை விடுதலை செய்தான் என்றும், அதனால் மூவேந்தரின் நண்பராகிய தொண்டை மண்டலத்துத் தொண்டைமான் தன் பெயரை அந்தக்கொங்கு

வேளாள இளைஞனுக்குப் பட்டமாகக் கொடுத்தான் என்றும், அரசர்களால் வேளாளரில் மூலர்குல இளைஞனுக்கு அளிக்கப் பட்ட நன்கொடையான இடங்களில் கேரள மாநில வாளை யாறு சூழ்ந்த பகுதிகளும் அடங்கும் என்று மூலனூர்த் தொண்டைமான் வம்சப் பாடல்கள் கூறுகின்றன.[76] இந்த ஏட்டுச் சுவடிகளும் ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தின் தொல்பொருள் கலைக்கூடத்தில் உள்ளன. அப்பாடல்:

'காராளர் குலதிலக ராசபர மேசுரன்
காளத்தி மலைக்காவலன்
காவேரி வாசகன் வாழரச மணவாளன்
களத்தூரின் பூசகுலனே
பாராளர் மூவர்சபை அச்சுதன் தன்னினால்
பார்வேந்தர் முடிகள்சூட்ட
பனிரண்டு பட்டமுள அன்றுகத் தொண்டைமான்
பலவரிசை பாரில்நல்கி
வாராளர் வருகடல்தொண்டைமண்டலம்கொங்கு
வாளையாறு ரிசப்கிரியும்
வையாறு வடகிழக்கு துகள்செய்யாறு தெற்கு
வடதிசைத் திருவேங்கடம்
சீராளர் நல்லவன் செம்பமுனை மெச்சியே
சேருமா மதுக்கரைக்குத்
தென்திசைத் தொண்டைமான் அண்டாடும்புரக்க
செயபன்றி யுள்ளளவுமே'

என்பதாகும்.

**பாலக்காட்டு வேளாளர் தனஞ்செயன்**

சுமார் 1000 ஆண்டுகட்கு முன்பே பாலக்காட்டுப் பகுதியில் கொங்கு வேளாளர்கள் குடியேறி வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரமாகக் கொங்குச் சோழர் கல்வெட்டுக்களும் சில கிடைத்துள்ளன.

கோவை மாவட்டம் கடத்தூர்ச் சிவன் கோயிலில் பின் வரும் கல்வெட்டொன்று காணப்படுகிறது:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு இருபத்திரண்டாவது ஆளுடையார் திரு மருதுடையார்க்கு
2. கரைவழி நாட்டுக் கடற்றூரான இராஜராஜ நல்லூரில் நின்ற ஆயிரவற்கு படை ஊரும் வெள்ளப்ப நாட்டு பாலைக்காட்டுச் சேரியில்

3. வெள்ளாளன் குமரங் குமரநாந தனஞ்சியப் பல்ல வரையநேன் திருவெம்பாவை திருந்தாள் கூட்டத் துக்கு நான் செய்த தருமமாவது அ

4. றையழிவுக்கு நான் ஒடுக்கின அச்சு ஆறும் அச் சொன்றுக்கு பூவழி இரு தூணிய் ஆண்டொன்றுக்கு நெல்லென் கலத்துக்கு அழிவும்..."[11]

பாலக்காட்டைக் கிழக்கிந்தியக் கம்பெனியார் நாள்வரை பாலக்காட்டுச் சேரி என்றே அழைத்து வந்தனர். பாலக் காட்டில் கிழக்கிந்தியக் கம்பெனியார் நாளில் தமிழே அலுவல் மொழியாக, ஆட்சி மொழியாக இருந்தது. பாலக்காடு அருகே உள்ள வடசேரி மன்னாடியார் மாளிகையில் கிடைத்த கிழக்கிந்தியக் கம்பெனியாரின் முத்திரை ஓலையில் ஆங்கிலத் துடன் தமிழ், தெலுங்கு, உருது மொழி எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. தொன்மையான அவ்வேடுகளில் மலையாள எழுத்துக்கள் பொறிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பாலக்காட்டுச்சேரியில் கொடை கொடுத்த வேளாளர், 'தனஞ்செயன்' கூட்டத்தைச் சேர்ந்தவர். இக்கல்வெட்டின் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டாகும் ஆண்டாகும். நல்லே பள்ளி சோண்டத் மன்னாடியார் மாளிகை மேலாளர் பெயர் தனஞ்செயன் என்பதாகும்.

**சேரமண்டலத்தில் கங்கை குலப் பெருங்குடியர்**

வரகு தின்னாப் பெருங்குடியர் எனப்படும் கொங்கு வேளாளர்களுக்குக் கொண்டி செட்டி பட்டி என்னும் ஊரில் அருள்மிகு காளியம்மன் கோயில் உள்ளது. அக்கோயிலுக்கு ஊஞ்சல் பாட்டு என்ற இலக்கியம் ஒன்று உள்ளது. அவ் வூஞ்சல் பாட்டில் காவிரி பாயும் சோழவள நாட்டிலிருக்கும் திருவாரூர் என்னும் ஊரிலிருந்து சேர சோழருடன் சேரநாட் டுக்குக் கங்கை குல வேளாளர்கள் குடியேறினார்கள் என்ற குறிப்புக் காணப்படுகின்றது:

'காவிரிநதி யால்சூழ்ந்த சோழ நாட்டில்
கனமிகுந்த திருவாரூர்ப் பதியை விட்டு
தங்கமெனும் சேரசோழ னுடனே கூடி
சேர மண் டலத்தில்வந்து தோன்ற பேர்க்கு
கங்கைகுலப் பெருங்குடியார்....'

என்ற பாடல் பகுதியில் மேற்கூறிய கருத்து விளக்கப் படுகிறது.[18]

**சேரர் படைத்தலைவர் கொங்கர்**

கொங்கு வேளாளர்களில் பவள கூட்டத்தார் திறன் மிக்க வர்கள். இவர்களின் முன்னோர் ஒருவர் அரசனுக்காகப் பாண்டியனுடன் போரிட்டு வெற்றி பெற்றார். அதனால் மகிழ்ந்த சேர மன்னர் பவள கூட்டத் தலைவருக்கு வானவராயர்' என்ற பட்டத்தை அளித்தார். அவர்களே பொள்ளாச்சி சமத்தூர் பாளையக்காரர் வானவராயர் மரபினர் ஆவர்.[79]

**பாளையக்காரர் வழியினர்**

கி.பி. 1802-ஆம் ஆண்டு சர். தாமஸ் மன்றோவின் குறிப்பு ஒன்றில் பாலக்காட்டுப் பகுதியில் உள்ள மன்னாடி யார்கள் (பாளையக்காரர்கள்) விசய நகர அரசர் காலத்தி லிருந்த பாளையக்காரர்களின் வழியினர் என்று தங்களைக் கூறிக் கொள்வதாகக் கூறுகின்றார். விசயநகர அரசர்கள் காலத்தில் கொங்கு நாட்டில் பாளையக்காரர்களே அதிகாரம் செலுத்தி வந்தனர் என்பது வரலாறு கூறும் உண்மையாகும். தர்ஸ்டன் தன் நூலில் இதனைக் குறிக்கின்றார்:

"Sir Thomas Munro in the memorandum written by him in 1892 the Poligars of the ceded District when dealing with the cases of a number of Poligars who were direct descendants of men who had been chiefs under the kings of Vijaya Nagara".[80]

**சோழ நாட்டினர்**

பாலக்காடு மன்னாடியார்கள் சோழநாட்டினர் என்றும், அவர்கள் நாயர்களைப் போல் மருமக்கள் தாயத்தைப் பின் பற்றுவதில்லை எனவும், கிழக்கு கடற்கரையிலிருந்து வந்த அவர்கள் வேளாளர்கள் ஆகையால் வேளாண்மைத் தொழில் புரிந்த நாயர்களுடன் தொடர்பு கொண்டனர் என்றும் அந் நூல் கூறுகிறது:

"Mannadiar of Palghat originally from the Chola country... The Nayars follow the Marumakka tayam system of inheritance, with the sole exception of some of the Mannadiars in Palghat Taluk. These latter seem to have come in to the country from the east coast at a later date than the great body of Nayars and only some of them having mixed with the Nayars, have adopted the distinctive Nayar system inheritance...... The chief occupation of the Nayars is agriculture".[81]

**நல்லேபள்ளியில் 32 வேளாளர்**

கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் நல்லேபள்ளியில் சுணங்கி அம்மன் ஆலய விழாவின்போது அழகிய தமிழ்ப் பாடல் ஒன்று பாடப்படுகிறது. அப்பாடல்,

'வெங்கரிகள் ஒருகோடி விருதுமணித் தேர்கோடி
வேகமாம் பரிகள்கோடி
விண்ணதிர மண்ணதிர ஆரவா ரம்செய்யும்
வீரர்ஒரு கோடிகோடி
கங்குல்போல் வருகின்ற பூதகணம் ஒருகோடி
காசினிஎ லாம்புரக்கவே
கனகடலை ஆகிலும் பொரிகடலை ஆகிலும்
காட்சியாய்ப் பூமிதனிலே
மங்கையர்கள் ஒருகோடி தாலங்கள் கொண்டுவர
மத்தளத் தொனிகள் அதிர
மன்னாடி யாருடன் லோகபடை சூழவே
வந்தடி பணிந்துபோற்ற
கங்கைசூழ் மதுரைசேர் கொச்சிரா சேந்திரன்
சீர்பெற்ற பிள்ளிநகரில்
செயசெய சுணங்கிஅருள் தாயே உனக்கடிமை
சீர்பாதம் என்னஆளுவாய்
பங்குனித் திருநாள் நடக்கின்ற கட்டமும்
பதினாலு நாள்வரைக்கும்
பாவலர்கள் மாடத்தில் கம்பர்கதை பாடவும்
பாவைகள் பிடித்தாடவும்
சங்கீத வாத்தியம் மேளதா ளங்களோடு
சகலபரி பாலசெனமும்
சந்தோஷ மாகவே நல்லியப் பிள்ளிதனில்
லோகதாமரை நூற்றைம்பதும்
கங்கைகுல தீரராம் முப்பத்திரண்டு வேளாளர்
கைக்கோளர் பத்துக்குடியும்
கனமான செட்டிமார் அறுபதுநான்கு தாவளமும்
ஈழவப் பணிக்கன்மாரும்
இங்கிதம தாகவே சோண்டத்தில் வளர்கின்ற
கிட்டாச்ச மன்னாடிதான்
இன்பமுரு கேசனே கடுகமன் னாடிதன்
கிருஷ்ணமன் னாடிமயிலே!'

என்பதாகும்.

இப்பாடலில் கம்பர்கதை படிப்பதும், கங்கை குல தீரர் 32 வேளாளர் என்ற தொடரும் தமிழ்நாட்டுத் தொடர் பையும் நினைவுறுத்துகிறது. நல்லேபள்ளி தற்போது-பிள்ளி நகர் என்று கூறப்படுகிறது.

**அங்காரத்து மன்னாடியார் கொங்கு நாட்டுப் படைத் தலைவர்**

கொங்கு நாட்டு வரலாற்றை முதன்முதலில் ஆய்ந்து எழுதியவர் சி.எம்.இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள். அவர் சுமார் 50 ஆண்டுகட்கு முன்னரே அதை எழுதினார். அவர் சித்தூரில் ஆண்டுதோறும் மாசி மாதம் அமாவாசை அன்று நடத்தப்பெறும் கொங்கம்படை விழாப்பற்றியும் விரி வாக எழுதியுள்ளார்.

கொல்லம் ஆண்டு 71இல் அதாவது சுமார் 1000 ஆண்டு கட்கு முன் கொங்கு நாட்டினர் மலையாள நாட்டின் மீது படையெடுத்ததாகவும் அங்குள்ள பெரிய தரைவாட்டுக் குடும் பங்கள் எதிர்த்ததாகவும் அவர்களால் எதிர்க்க முடியாமல் போகவே சித்தூர் அம்மன் எதிர்த்துப் பகைவர்களைஅழித்துக் கேரள மக்களைக் காப்பாற்றியதாகவும் உள்ள வரலாறு பற்றி அவர் எழுதியுள்ளார். அவர் இறுதியில் இவ்வாறு முடிக் கின்றார்.[82]

> ‘கொங்கப்படைப் போர் நிகழ்ந்த காலத்தில் கொங்கு நாட்டரசன் போரில் இறக்க அவ னோடு சென்ற சில தமிழ்ப் போர்த் தலைவர் கள் சித்தூரிலேயே தங்கி விட்டதாகக் கர்ண பரம்பரைக் கதையுண்டு. அவர்கள் தங்கள் தமிழ்மொழியை மறந்துவிட்டு மலையாள மொழியை ஏற்றுக்கொண்டு அந்நாட்டு மக் களாகவே ஆகிவிட்டார்கள். இதற்குச் சான் றாகக் கொங்கு நாட்டுப் பட்டப் பெயர்களில் மன்றாடியார் என்ற சொல் மலையாள எல்லைப் புறத்திலும் சில குடும்பங்களிலும் வழங்குவதாகக் காட்டுவார்கள். (அங்க ராத்து, வடசேரிக் குடும்பங்கள்),’

எனவே கோவைக்கிழார் கருத்துப்படி வடசேரி, அங்காரத்து மன்னாடியார்கள் கொங்குப் படைத்தலைவர்களே! கொங்கு நாட்டிலிருந்து கேரளா சென்று குடியேறியவர்களே என்பதாகும்.

**கொங்கப்படை**

சித்தூர்ப் பகவதி கோயிலில் மாசி மாதம் சிவராத்திரி தினத்தன்று கொங்கு நாட்டார் படையெடுப்பை விளக்கும் மேற்கண்ட கொங்கப்படை என்ற வீரத் திருவிழா மிகச் சிறப்புடன் நடைபெறுகின்றது. அதில் சித்தூர் சம்பத் மன்னாடியார் மிக இன்றியமையாத சிறப்பான இடத்தைப் பெறுகின்றார். அந்நூலைப்பற்றி எழுதிய விளக்கவுரையில் சம்பத் மன்னாடியார் வேளாள இனம் என்றே கூறப்படுகிறது. அவர்களின் பூர்வீகம் காங்கேயம் பகுதி என்றும் கூறப்படுகிறது. 'கொங்கப்படை மூலமுறி' என்ற பழைய ஓலைச் சுவடி சித்தூரில் உள்ளது.[83]

அந்நூலில் கொங்கு வேளாளர்கள் சோழ மன்னன் ஒருவனால் சேர நாட்டுக்கு அனுப்பப் பெற்றனர் என்று கூறப்படுகின்றது.

காங்கேயம்
கரூர்
காடையூர்
சங்குப்பாளையம்
பழையகோட்டை

முதலிய 12 இடங்களில் வாழ்ந்த வேளாளர்களை இராசாதிராசன் என்ற சோழ மன்னன் சேர நாட்டிற்கு அனுப்பினான் என்ற குறிப்புக் காணப்படுகின்றது. பாலக்காட்டுக் கணவாயே சேர நாட்டுக்கும் கொங்கு நாட்டுக்கும் இடையில் உள்ள வழி என்றும் கூறப்படுகிறது.

சேலம், இராமபட்டணம், பெரகுபாளையம் போன்ற கொங்கு நாட்டு ஊர்களையும் கொங்கு மக்கள் தலைநகரங்கள் என்று கொங்கப்படை கூறுகிறது.. தமிழர்களையே கொங்கப்படை 'கொங்கன்மார்' என்று கூறுகிறது. கொங்கு பகுதியிலிருந்து வேளாளர் குல மக்கள் குடியேறினார்கள் என்ற உண்மையை அது காட்டுகிறது.

ஓரிடத்தில் ''நாடு நகரமெல்லாம் நடமாடும் கொங்கரசன்'' என்று கொங்கப்படையில் வரும் தொடரால் கேரளப் பகுதியில் எவ்வளவு தூரம் கொங்கு வேளாள மக்கள் ஊடுருவினர் என்பதனை அறிகின்றோம்.

இங்குக் கூறப்பெற்ற ஊர்களில் கரூர் மட்டும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தது. இருப்பினும் அதுவும் கொங்குப் பகுதியே. ஏனைய அனைத்து ஊர்களும் பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்களாகும். இதில் சங்குப்பாளையம் என்பது சங்கரண்டாம்பாளையத்தைக் குறிக்கும்.

## மன்னாடியார் – தமிழ்ப் பெயர்

கொங்கு நாட்டில் கொங்கு வேளாளர்களில் பல குலத் தலைவர்களை,

| | |
|---|---|
| வேணாடுடைய மன்றாடியார் | - பெரிய கூட்டம் |
| சர்க்கரை மன்றாடியார் | - பயிரன் கூட்டம் |
| காங்கேய மன்றாடியார் | - பொருள்தந்த கூட்டம் |
| வாரணவாசி மன்றாடியார் | - பொருள்தந்த கூட்டம் |
| பல்லவ மன்றாடியார் | - செங்கண்ண கூட்டம் |
| வாணவராய மன்றாடியார் | - பவள கூட்டம் |
| உலகுடைய மன்றாடியார் | - சாத்தந்தைக் கூட்டம் |
| சரவண மன்றாடியார் | - சாத்தந்தைக் கூட்டம் |
| கண்ணப்ப மன்றாடியார் | - எண்ணைக் கூட்டம் |
| கவறை மன்றாடியார் | - மூலன் கூட்டம் |
| வாலை மன்றாடியார் | - பொன்ன கூட்டம் |
| தேவ மன்றாடியார் | - குழாயன் கூட்டம் |
| எழுநூற்றுவன் மன்றாடியார் | - கண்ணந்தைக் கூட்டம் |

எனப் பல்வேறு 'மன்றாடியார்' பட்டம் கொடுத்து அழைப்பர். இத்தகு பழஞ்சிறப்பு மிக்க மன்றாடியார் பட்டப் பெயர்கள், கொங்கு நாட்டில் மிகச் சிறப்புடன் கல்வெட்டு, செப்பேடு, தனிப்பாடல், இலக்கியங்களில் காணப்படுகின்றன. கேரளப் பகுதி, பாலக்காடு மாவட்டத்து வேளாளர் தலைவர்கள் பலரும் 'மன்னாடியார்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறார்கள். மன்றாடியார் - மன்னாடியார் ஆகிய இரண்டு பெயர்களும் ஒன்றா அல்லது வேறுவேறு பெயர்களா என்ற ஐயம் வரலாம்.

மன்றாடியார் என்ற பட்டம்தான் மன்னாடியார் என்று பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் காலப் போக்கில் திரிந்தது. முதலில் இப்பட்டம் ஏற்பட்ட காரணத்தைக் காண்போம்.

மன்றாடி அல்லது மன்றாடியார் என்ற பட்டம் மூன்று நிலைகளில் இவர்களுக்கு வந்துள்ளது.

### அ. நீதிபதிகள் – மன்றாடியார்

பொதுச்சபையில் வழக்கினை எடுத்துப் பேசுவோருக்கும் வழக்குத் தீர்ப்பவருக்கும் மன்றாடி என்ற பெயர் வழங்கியது.

''பழைய மன்றாடி போலும் இவன்''

என்று சமய இலக்கியமான பெரியபுராணம் - தடுத்தாட் கொண்ட புராணத்தில் வழக்காடும் சுந்தரமூர்த்தி நாயனார் மன்றாடி என அழைக்கப் பெறுவதைக் காணுகின்றோம்.[84] நீதிமன்றத்தை ''மன்று'' என்றும் அதற்களிக்கும் தொகையை ''மன்றுபாடு'' என்றும் கல்வெட்டுக்கள் கூறும்.

கொங்கு நாட்டு மன்றாடியார் மரபினர் பலரும் நீதி செலுத்தும் நீதிபதிகளாகத் திகழ்ந்தனர். இதனை,

''...... கொங்கில் உள
திரி எட்டு நாட்டினுக்கும்
தீராத சச்சரவு சாதிமத வாதுகள்
தினம் தீர்த்து வைக்கும் இறைவன்''

என்ற பழையகோட்டைச் சர்க்கரை மன்றாடியார் அழைக்கப் படுவதை நாட்டுப்பாடல் பகுதியால் அறியலாம்.[85] நீதி செலுத்தியமையால் இவர்கள் மன்றாடியார் என்ற பட்டம் பெற்றனர்.

### ஆ. கால்நடையின் காவலர் - மன்றாடியார்

கால்நடைகளைக் காக்கும் தலைவர்கட்கும் 'மன்றாடி' என்ற பட்டத்தைப் பல கல்வெட்டுக்களிலும் இலக்கியங் களிலும் காணுகின்றோம்.

''விட்டபசு முட்டாமல் மேய்த்தடக்கிப் பாசத்தால்
கட்டிவிடும் மன்றாடி''[86]

''இவ்வூர்ச் சுரபியுள் இருக்கும் மன்றாடிகள்
காலிகளைச் (கால்நடைகளைச்) சாவாமல்
கெடாமல் மேய்த்து''[87]

என்ற தொடர்களால் மன்றாடிகள் கால்நடைகளைப் புரப் போர் என்ற பொருள் வருவதைப் பார்க்கின்றோம்.

கொங்கு நாடு, சங்க காலம் முதற்கொண்டு கால்நடைச் செல்வம் மிகுதியும் உடையது. இதனை ''ஆகெழு கொங்கு' ''கொங்கர் படுமணி ஆயம்'' ''கொங்கர் ஆபரந்தன்ன'' போன்ற சங்க இலக்கியத் தொடர்களால் காணுகின்றோம்.[88] எனவே கால்நடையின் காவலர் என்ற பொருளிலும் மன்றாடி யார் என்ற பட்டத்தை இவர்கள் பெற்றிருக்கலாம்.

### இ. அரசர் அளித்த பட்டம் – மன்றாடியார்

உயர் அரசியல் அலுவல் தலைவர்கட்கு அரசர்கள் மன் றாடி என்ற பட்டப் பெயரைப் பழங்காலத்தில் அளித்தனர்.

இதனைத் தமிழ்ப் பேரகராதி, மன்றாடியார் என்பதைப் பட்டப் பெயர் என்று கூறும்.[89]

> ''மதுரை கொண்ட கோப்பரகேசரிபன்மர்க்கு
> யாண்டு பதினஞ்சாவது கச்சிப்பேட்டு பெரிய
> திருக்கற்றளி மகாதேவர்க்குச் சண்ட
> பராக்கிரம மன்றாடியேன் எழுத்து''

> ''மங்கைமணி சாத்தந்தை
> உலகில்மன் றாடிக்கு
> வரிசைப்பட் டம்தரித்து''[90]

என்பன போன்ற கல்வெட்டு, மற்றும் இலக்கியச் சான்றுகள் அளித்த பட்டம் மன்றாடி என்பதற்குச் சான்றாக உள்ளன. அரசன்கொங்குநாட்டு மன்றாடியார்கள்என்ன காரணங்களால் மேற்கண்ட மன்றாடியார் என்ற பட்டம் பெற்றார்களோ அதே காரணங்கள் பாலக்காட்டு மன்னாடியர்கட்கும் பொருந்தும். ஏனெனில் கொங்கு நாட்டு மன்றாடியார் நிலையிலேயே கேரளத்தில் வாழும் மன்னாடியார்களும் வழக்குகள் தீர்த்து, வேளாண்மை செய்து, அரசரால் பட்டம் பெற்றுச் சிறப்புடன் இருந்தனர்.

**மன்றாடியார் – மன்னாடியார்**

தமிழில் 'ற' என்ற எழுத்து, எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் தன் இன எழுத்தான 'ன' என்று மாறும் என்பது மொழியியலார் கண்ட உண்மையாகும்.

| | | |
|---|---|---|
| ஒன்று | - | ஒன்னு |
| குன்று | - | குன்னு |
| கன்று | - | கன்னு |
| தின்று | - | தின்னு |
| நன்றி | - | நன்னி |
| மென்று | - | மென்னு |
| என்றைக்கு | - | என்னைக்கு |
| அன்றைக்கு | - | அன்னைக்கு |
| இன்றைக்கு | - | இன்னைக்கு |

இதுபோலவே,

மன்றாடியார் - மன்னாடியார்

என மாறும் தன்மையினைக் காணலாம். எனவே மன்னாடியார் எனக் கேரளத்தில் பெயர் பெற்றிருந்தாலும் அவர்கள் பெயரும் மன்றாடியார் என்பதன் திரிபே என்பதை நாம் தெளிவாக உணரலாம்.

**கொங்கு நாட்டுப் பட்டயங்களில் மன்னாடியார்**

கொங்கு நாட்டில் கிடைத்த பற்பல செப்பேடுகளிலும் ஓலைப் பட்டயங்களிலும் கொங்கு நாட்டு வேளாளத் தலைவர்களான மன்றாடியார் பெயர்களே மன்னாடியார் எனத் தமிழில் எழுதப்பட்டுள்ளன. இதற்குப் பல சான்றுகளைக் காணலாம்.

அ. கொங்கு வேளாளரில் பொருளந்தை குலந்தாரின் பட்டயத்தில்,

''ருத்தி
ரோத்காரி வருசம் ஆனி மாதம் 5 தேதி
குருவார நாள் கொங்கு வெள்ளாள காங்கய
மன்னாடியார் பாண்டியன்
ங்கையில் விருது கொண்ட லோக காங்கயன்
மன்னாடிக் கவுண்டன் ஆண்டி மன்னாடியார்''

என்ற தொடர்களைக் காணுகின்றோம்.

ஆ. சென்னிமலைப் பிடாரியூர்ப் பட்டயத்தில்,

''யிதுக்குச் சாஷ்சி காங்கய
ம் மன்னாடியார்''

என்ற தொடர் எழுதப்பெற்றுள்ளது.

இ. பேராசிரியர் கு.அருணாசலக் கவுண்டர் அவர்கள் தொகுத்து வெளியிட்டுள்ள 'பழைய கோட்டைப் பட்டக்காரர் நாட்டுப் பாடலும், பூர்வ பட்டயமும்' என்ற நூலிலும்

''காடையூர்
களுவன் காங்கய மண்ணாடியார்''

என்ற தொடர்களைக் காணுகின்றோம்.[91]

ஈ. தமிழ்நாடு அரசுத் தொகுத்து வெளியிட்டுள்ள ''பாளையப்பட்டுக்களின் வம்சாவளி'' என்ற நூலின் நான்காம் தொகுதி பக்கம் 61இல் பழையகோட்டைப் பட்டக்காரர் பெயர் கி.பி.1800 வாக்கில் மெக்கென்சி பெருமகனாரால்

''நல்ல தம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட
மண்ணாடியார்''

எனவே எழுதப்பட்டுள்ளது. அது அப்படியே அந்நூலில் அச்சேற்றப்பட்டுள்ளது.

உ. தமிழக அரசின் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தார் வெளியீடாகக் கோவைக் கிழார் சி.எம்.இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் பதிப்பித்துள்ள ''சோழன் பூர்வபட்டயத்தில்'' பெரும்பாலான இடங்களில் 'மன்றாடியார்' என்ற

பெயர் 'மண்ணாடியார்' என்றே எழுதப்பட்டுள்ளது. கோவைக் கிழார் அவர்கள் அதற்கு ''மண்ணாடி - மன்றாடி என்ற சொல்லின் மருவு என்பர்; மன்றாடி - நிலத் தலைவன் என்றும் கூறலாம்'' என்று குறிப்பு எழுதியுள்ளார்.[92]

தமிழ் நாட்டில் மன்றாடியார் என்ற பெயர்கள் பல்வேறு இடங்களில் மன்னாடியார் அல்லது மண்ணாடியார் என்று எழுதப் பெற்றது என்பதை மேற்கண்ட சான்றுகள் தெளி வாக்குகின்றன. அதுபோலவே கேரளப் பகுதியில் வாழும் வேளாளத் தலைவர்களுக்கும் மன்றாடியார் என வழங்கிய பெயர்கள் காலப்போக்கில் ''மன்னாடியார்'' அல்லது ''மண் ணாடியார்'' என மாறியது. இரண்டும் ஒரே பெயரே என் பதை மேலே கண்ட சான்றுகள் காட்டுகின்றன.

**மலைநாட்டுத் தலைவர்**

சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட பேரகராதி யில் மன்னாடி என்ற பெயரை மன்றாடி என்ற பெயரின் மரூஉ என்றே கூறி அச்சொல்லுக்கு ''மலைநாட்டுக் கிராமத் தலைவன்'' (Headman of a hill village) என்றும் ''பழனிப் பிரதேசத்திலுள்ள ஒரு மலைச்சாதி (The Kunnuva caste cf the Palani hills) என்றும் கூறியுள்ளது.[93] மலைநாடு என்பது மலைமண்டலமான கேரள நாடே. பழனி, கொடைக்கானல் பகுதி மன்னாடியார்கள் குன்னுவர்கள் (குன்றவர்கள்) என்று பெயர் பெறுவர். அவர்கள் நடத்தும் சமூக இதழுக்குக் 'குன்னுவன் குரல்' என்று பெயர்.[94] கேரள மன்னாடியார் களும், கொடைக்கானல் குன்னுவ மன்னாடியார்களும் ஒரே சமூக அமைப்பைக் கொண்டுள்ளனர்.

**மன்னாடிச்சி**

கொங்கு வேளாளர்கள் 'கவுண்டர்' என்ற பட்டப் பெயர் தரித்தவுடன் கவுண்டரின் மனைவி 'கவுண்டச்சி' என்று பெயர் பெற்றனர். பெரியார் மாவட்டம் ஈரோடு வட்டத் தில் கவுண்டச்சிபாளையம் என்ற ஊர் ஒன்று உண்டு. காங் கயம் அகிலாண்டபுரம் கல்வெட்டில் ''பகவதிக் கவுண்டச்சி'' என்று கொங்கு வேளாளர் குடும்பத்துப் பெண்களுக்குப் பெயர் வருவதைப் பார்க்கின்றோம்.

கவுண்டர் வீட்டுப் பெண்கள் கவுண்டச்சி ஆவதைப் போலக் கேரள நாட்டுக் கொங்கு வேளாளர் குடும்பமான மன்னாடியார் குடும்பப் பெண்கள் 'மன்னாடிச்சி' என்று பெயர் பெற்றிருந்தனர். இன்னும் பாலக்காட்டை அடுத்த புதுசேரியில் உள்ள வடசேரி மன்னாடியார் இல்லத்திலும்,

பாலக்காடு சித்தூரில் உள்ள சம்பத் மன்னாடியார் இல்லத்திலும் பெண்கள் மன்னாடிச்சி அல்லது மன்னாடிச்சியார் என்று அழைக்கப்படுகின்றனர்.

புதுசேரியில் பாருக்குட்டி மன்னாடிச்சி (வயது 73) அவர்களையும், சித்தூரில் சரசுவதி மன்னாடிச்சி (வயது 70) அவர்களையும் நேரில் சந்தித்து விபரங்கள் கேட்டறிந்தோம்.

**மன்னாடி அப்பன் – மன்னாட்டப்பன்**

திரு. வில்லியம் லோகன் அவர்கள் தன் 'மலபார் கையேடு' என்னும் நூலில் கீழ்வருமாறு கூறுகின்றார்:

> "From Dravidian Mannadi (immigrant land owners in Palghat) and Dravidian *appan* (father)
>
> A caste of Vellalars or cultivating Sudras residing in certain Hobalis of the Palghat Taluk, who are said to have come from Kangeyam in the Coimbatore province, and who are now so intermixed with the Nayars as not to be distinguished from them except when a addresses them and gives them this appellation instead of Nayar. In Kangeyam they are called Mannadi."

கொங்கு நாட்டில் காங்கேயம் பகுதியிலிருந்து பாலக்காட்டுப் பகுதியில் குடியேறி வாழும் நிலக்கிழார்களான வேளாளர்களே மன்னாடியார் எனப்பட்டனர் என்று லோகன் கூறுவதைக் காணலாம்.

எனவே பாலக்காடு மாவட்டம் நல்லேபள்ளியில் உள்ள அங்கராத்து மன்னாடியார், சோண்டத் மன்னாடியார் போன்றோரும் அம்மாவட்டத்தில் வாழும் பிற மன்னாடியார்களும் மன்றாடியார் பட்டம் பெற்ற கொங்கு வேளாளத் தலைவர்களே என்பதும், கொங்கு நாட்டிலிருந்து பாலக்காட்டுப் பகுதிக்குக் குடியேறியவர்களே என்பதும், மன்னாடியார் என்ற அவர்கள் பட்டப் பெயர் தமிழ்ப் பெயரே என்பதும் பெறப்படும்.

# கேரள மன்னாடியார் குடும்பமும் கொங்கு நாட்டுத் தொடர்பும்

## நாங்கள் வேளாளர்கள்

கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தில் பாலக்காடு, சித்தூர், ஆலத்தூர், கொல்லங்கோடு ஆகிய வட்டங்களில் உள்ள பல்வேறு மன்னாடியார்கள் எனப்படும் பெருமக்கள் மாளிகைகளுக்கு நேரில் சென்று பல விபரங்கள் சேகரிக்கப் பட்டன. அவர்களோடு உரையாடிய உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்கள் அனைவருடனும் புகைப்படங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

தேங்குறிச்சி புளியங்களத்து மன்னாடியார்
பள்ளஞ்சாத்தனூர் கண்டங்கண்டத்து மன்னாடியார்
வேங்கோடி கேனாத் மன்னாடியார்
புதிய இளையாத் மன்னாடியார்
வடசேரி இட்டுச்சாத்தர மன்னாடியார்
நல்லேபிள்ளே சோண்டத் மன்னாடியார்
மாத்தூர் பாட்டத்தில் மன்னாடியார்
களப்பட்டி எறவமன்னாட்டில் மன்னாடியார்
மாத்தூர் சேங்கத்து மன்னாடியார்
சித்தூர் சம்பத் மன்னாடியார்
நல்லேபிள்ளே அங்கராத்து மன்னாடியார்
குழல்மன்னம் குமரன்சடையத் மன்னாடியார்
புளியங்களத்து இளையாத் மன்னாடியார்
பல்லசேனா நாஞ்சாத் மன்னாடியார்
புதுக்கோடு நானாத் மன்னாடியார்
வித்தனச்சேரி பூக்கோட்டு மன்னாடியார்

போன்ற பற்பல மன்னாடியார்கள் இல்லங்களில் வாழும் பெரியவர்கள், ஆடவர், பெண்டிர், இளையோர் அனைவரும் ஒருமித்துக் கூறும் ஒரே செய்தி,

''நாங்கள் வெள்ளாங் கோத்திரம்''
''நாங்கள் வெள்ளாங் கூறு''
''நாங்கள் வேளாள கவுண்டர்கள்''
''நாங்கள் வேளாளர்கள்''
''நாங்கள் வெள்ளாள கோத்திரம்''
''நாங்கள் கொங்கு நாட்டு வேளாளர்கள்''

என்பதே! இது நம்மை வியப்பில் ஆழ்த்தும்.

இன்று அவர்கள் மலையாள மொழி பேசி, மலையாள நாட்டு வழக்கத்தைப் பின்பற்றலாம். ஆனால் அவர்கள் அனைவரும் கொங்கு நாட்டுப் பகுதி மீது கொண்டுள்ள பாசமும், கொங்கு நாடு என்றாலே அடையும் மகிழ்ச்சியும் கொங்கு நாட்டு வேளாளர்களைக் கண்டால் வரவேற்கும் பாங்கும் பூர்வீகத் தொடர்பை நமக்கு நன்கு வெளிப்படுத்து கிறது.

**எங்கள் நாடு கொங்கு நாடு**

அடுத்து அவர்கள் ஏகோபித்துக் கூறுவது இவைதாம்,

''நாங்கள் அனைவரும் காங்கேயம், சங்கரண்டாம் பாளையம், கரூர், பழையகோட்டை, காடையூர் ஆகிய இடங்களிலிருந்து இங்கு வணிகத்தின் பொருட்டும், வேளாண்மையின் பொருட்டும் வந்த வர்கள்''

''நாங்கள் கீழ் நாட்டிலிருந்து கேரளத்துக்கு வந்தவர்கள்''

''எங்கள் ராஜ்யம் காங்கேயம் ராஜ்யம்''

''எங்கள் பூர்வீகத் தலம் கொங்கு நாடு''

''நாங்கள் கிழக்கேயிருந்து வந்தவர்கள்''

''எங்களுக்கும் பழைய கோட்டைக்கும் தொடர்பு உண்டு''

''இந்த நூற்றாண்டின் தொடக்கம்வரை எங்களுக்கும் கீழ் நாட்டுக்கும் (கொங்கு) தொடர்பு இருந்தது''

''நாங்கள் பழையகோட்டைக்குச் சமமானவர்கள்''

என்கிறார்கள். ஏன்? எப்படி மலையாளப் பகுதிக்கு வந்தார்கள்? அதனையும் அவர்களே கூறுகின்றனர்.

**ஏன் குடியேறினோம் ?**

**கால்நடைகள் ஓட்டி வந்தோம்:** ''வேளாளர்களுக்குக் கால்நடை மிக இன்றியமையாதவை என்பது தெரியும். நாங்கள் முன்பு இருந்த கொங்கு நாட்டுப் பகுதியில் பஞ்சம் ஏற் பட்டது. அதனால் கால்நடைகளை ஓட்டிக்கொண்டு மேய்ச்சல் நிலம் தேடி மேற்குத் திசையிலுள்ள மலைப்பகுதி யாகிய இந்தப் பகுதிக்கு வந்தோம்'' என்று சிலர் கூறு கின்றனர்.

**விளைநிலம் வாங்கி வந்தோம்:** இன்னும் சிலர் இத னையே வேறு வடிவில் கூறுகின்றனர். ''எங்கள் முன்னோர்

கள் காளைகளின் மீது மிகுதியான பணத்தைப் பொதியாகப் போட்டுக் கொண்டு இப்பகுதிக்கு வந்து அந்தப் பணத்தைக் கொண்டு இங்குக் குறைந்த விலையில் மிகுதியான பூமியை விலைக்கு வாங்கினர். இப்பகுதிகள் முன்பு ஒரே காடாக இருந்தது. காட்டை அழித்து, மரங்களை வெட்டி நாடாக, வயலாக நாங்கள் மாற்றினோம்'' என்று கூறுகின்றனர்.

**புதிய நிலம் தேடிவந்தோம் :** வேறுசிலர் ''நாங்கள் கொங்கு நாட்டில் ஜமீன்தார்களாக இருந்தோம். ஜமீன் சொத்து, நிலங்கள் பிரிக்கப்படக்கூடாது என்பதற்கேற்ப மூத்த மகனே சொத்து முழுவதையும் அனுபவித்து வந்தார். அதனால் சில கொங்கு வேளாள ஜமீன்தாருடைய இளைய மக்களான நாங்கள் இப்பகுதியில் குடியேறி நிலம் வாங்கி உழுது பயிரிட்டு வேளாண்மை செய்யத் தொடங்கினோம்'' என்று கூறுகிறார்கள்.

**பகைவரால் வந்தோம் :** ''வடக்கேயிருந்து ஒரு பெரிய படையெடுப்பு வந்தது. அந்தப் படையெடுப்பில் தப்பிப் பிழைப்பதற்காகக் கிழக்கேயும் மேற்கேயும் கொங்கு மக்கள் ஓடினர். மேற்கே வந்த மக்கள்தாம் எங்கள் முன்னோர்கள்'' என்று சிலர் கூறுகிறார்கள்.

**பஞ்சத்தால் வந்தோம் :** இன்னும் சில மன்னாடியார்கள் குடும்பத்தினர் கொங்கு நாட்டில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தின் காரணமாக மேற்குத் திசையில் புறப்பட்டு நீர்வளம் நிறைந்திருந்த இக்கேரளப் பகுதிக்கு வந்தோம் என்று கூறுகின்றனர்.

செவி வழிச் செய்தியாகக் கேள்விப்பட்டுக்கூறும் மேற்கண்ட பல்வேறு வரலாற்றுச் செய்தியில் சிறு மாற்றங்கள் இருந்தாலும் கொங்கு நாட்டுப் பகுதியிலிருந்து நாங்கள் குடியேறினோம் என்று அனைவரும் ஒரே குரலில் கூறுகின்றனர். அதில் மாற்றம் இல்லை. மேலே குறிப்பிட்ட எல்லாக் காரணங்களாலும் அவ்வப்போது பல கொங்கு வேளாளர் குடும்பங்கள் கேரளத்துக்குக் குடி பெயர்ந்திருக்கலாம்.

**கொங்கம்படை வரலாற்றில்**

பாலக்காடு மாவட்டம் சித்தூரில் பண்டைய கொங்கு நாட்டு மக்களின் மலையாளப் படையெடுப்பைப் பற்றி ஆண்டுதோறும் ஒரு பெரிய விழா எடுக்கின்றனர். சித்தூரில் மாசிமாதம் சிவராத்திரியன்று அந்த விழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. முன்பும் இதுபற்றிக் கூறப்பட்டது. அதில் சித்தூர்ப் பகுதியில் வேளாளர்கள் குடியேற்றம் பற்றி

யும் விளக்கமாகக் கூறப்படுகிறது. பின்கண்ட ஊர்களிலிருந்து கொங்கு வேளாளர்கள் சித்தூர்ப் பகுதிக்குக் கூட்டங் கூட்டமாக வந்ததாகக் கூறப்படுகிறது.

காங்கேயம்

கரூர்

காடையூர்

சங்குப்பாளையம்

பழையகோட்டை

இதில் நான்காவதாகக் கூறப்பெறும் சங்குப்பாளையம்என்பது சங்கரண்டாம்பாளையம் என்பதன் மரூஉ ஆகும். இங்குக் கூறப்பட்ட சங்கரண்டாம்பாளையத்தில் கொங்குவேளாளரில் பெரிய குலத்துத் தலைவரான வேணாடுடைய மன்றாடியாரும், காங்கேயத்தில் கொங்கு வேளாளரில் செங்கண்ண குலத்துத் தலைவர் பல்லவ மன்றாடியாரும், காடையூரில் கொங்கு வேளாளரில் பொருளந்தை குலத்துத் தலைவர் காடையூர் இம்முடிக் காங்கேய மன்றாடியாரும், பழைய கோட்டையில் கொங்கு வேளாளரில் பயிரன் குலத்துத் தலைவரான சர்க்கரை மன்றாடியாரும் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றனர் என்பது நாம் யாவரும் அறிந்ததாகும். இவை அனைத்தும் கொங்கு நாட்டில் உள்ள பழம்பெரும் ஊர்கள். வேளாளத் தலைவர்கள் குறுநிலத் தலைவர்களாகப் பரம்பரை பரம்பரையாக வாழும் ஊர்கள்.

### பாலக்காட்டு மன்னாடியார் பேரூர்த் தொடர்பு

கோவை மாவட்டத்து நொய்யல் கரையில் உள்ள பேரூர், மேலைச் சிதம்பரம் என்று போற்றக்கூடிய கொங்கு நாட்டுப் பெரிய சைவத்தலம். தேவார வைப்புத்தலமும் ஆகும். அங்குள்ள பட்டீச்சுரப் பெருமாள் கோயில் கொங்கு நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில். விழா நாட்களில் அக்கோயில்உள்ள ''படுஞ்ஞாயிறு நடை'' எனக் கூறப்படும் மேற்கு வாயில் திருவீதியைத் திறக்கும் உரிமை பாலக்காடு மாவட்டம் புதுசேரியைச் சேர்ந்த வடசேரி மன்னாடியாருக்கு உரிமையாக இன்றும் இருந்து வருகிறது.

அச்சிறப்புமிகு பேரூர்க் கோயிலின் மார்கழித் திருவாதிரை, பங்குனி உத்தர விழாவில் மேலே கூறப்பட்ட பாலக்காடு வடசேரி மன்னாடியாருக்கு பரம்பரை உரிமைகள் இன்றும் உள்ளன. நடராசர் திருவீதி உலா வரும்போது எழுந்தருளும் சப்பரமான சிறு தேரைத் தூக்கத் தேவையான மரங்களும், பந்தல்கள் அமைக்கப் பந்தல் கால்களும், மூங்கில்

களும், கயிறுகளும் பாலக்காடு வடசேரி மன்னாடியாருக்குச் சொந்தமான வாளையாறு காட்டிலிருந்துதான் அண்மைக் காலம்வரை பெறப்பட்டன. விழாக்கள் தோறும் அந்நாளில் பெறப்பட்ட மூங்கிலின் எண்ணிக்கை 30. வாளையாறு காட்டில் நிலஅளவு செய்து அளிக்கப்பட்ட 8046 ஏக்கரும், அளக்கப்படாத சுமார் 10000 ஏக்கரும் வடசேரி மன்னாடியாருக்குச் சொந்தமாக முன்பு இருந்தது. பேரூர்க் கோயிலின் மேற்கு வாயில் வரை வடசேரி மன்னாடியாருக்குச் சொந்தமான நிலம் முன்பு இருந்ததாகவும் கூறுகின்றனர். அதற்காகவே அவருக்கு இந்த உரிமைகள் அளிக்கப்பட்டதாகவும் கூறுவர்.

ஒவ்வொரு ஆண்டும் மார்கழித் திருவாதிரையின்போதும் பங்குனி உத்திரத்தின்போதும் சில நாட்களுக்கு முன் பேரூர்க் கோயிலிலிருந்து நிருவாக அலுவலர் பாலக்காடு வடசேரி மன்னாடியார் மாளிகைக்கு அவர்கள் பரம்பரைக் கட்டளை பற்றி நினைவூட்டிக் கடிதம் எழுதுகின்றார். அண்மையில் 1984 இல் நடந்த இவ்விரு விழாக்களுக்கும் இவ்வாறு வடசேரி திருமதி பாருக்குட்டி மன்னாடிச்சியார் அவர்கட்கு எழுதப் பெற்ற கடிதத்தின் நகல் ஒன்றைக் கீழே காணலாம்.[95]

Muthusamy, B.Sc., B.L.,.
Executive Officer,
Sri Patteeswaraswamy
Devasthanam,
Perur, Coimbatore - 10.

Mrs.Parukkutty Mannadisiar,
Vadasseri Eatate,
Pudussery Post,
Palghat - Kerala.

R.C. 29/93,A2, dt. 30-1-84/14-2-84

Sub: Fairs and Festivals - "Panguni Uthiram" Car Festival 1984 - Arulmigu Patteeswaraswamy Devasthanam-Perur, Coimbatore - 10 - Performance of Kattalai - Regarding.

---------

"The Annual Panguni Uthiram Car Festival" of this Devasthanam commences on 8-3-84 and concludes by 17-3-84, with the usual rituals, etc. I request you to be present on the occasion of the festival and especially on the morning 17-3-84, to perform your Kattalai, as usual.

Sd - - - - - - - - - -
Executive Officer.

DESPATCHED
by Post on 14 - 2 - 84.
Sd - - Clerk.

இக்கடிதங்களைப் பெற்றவுடன் வடசேரி மன்னாடி யாரோ அல்லது அவரது உரிமை பெற்ற மாளிகைப் பிரதி நிதியோ முன்தினம் மாலையிலேயே பேரூர் வந்து தங்கள் ''மன்னாடியார் மண்டபக் கட்டளை'' எனப்படும் அவ்விழா வுக்குரிய முறையில் சிறப்பாகக் காரியங்களைச் செய்கின்றனர்; விழாவில் முதல் பிரசாதமும் பெறுகின்றனர்.

முன்பு வாளையாறு காட்டிலிருந்து தேவையான பொ ருள்களை அளித்தவர்கள் இன்று காடு அவர்களுக்குச் சொந்த மாக இல்லாத காரணத்தால் விழாவுக்குரிய தொகையைப் பணமாகக் கொடுத்து விழாவைச் சிறப்பாக நடத்துகின்றனர்.

## தமிழில் ஓலை ஆவணங்கள்

வாளையாறு காடு முழுவதும் வடசேரி மன்னாடியா ருக்குப் பழங்காலத்தில் உரிமையாக இருந்தது என்பதற்கு ஆதாரமாகப் பல ஓலைப் பட்டயங்கள் இன்றும் இருக்கின்றன. வாளையாறு காட்டில் மரங்கள் வெட்டுவோர் மேல் குறிப் பிட்ட வடசேரி மன்னாடியாரிடமே அனுமதி பெற்றிருக் கின்றனர் என்று அந்த ஓலைப் பட்டயங்கள் கூறுகின்றன. அவற்றில் பாலக்காட்டுக் கிழக்கிந்தியக் கம்பெனி முத்திரை களும் உள்ளன. அவ்வோலைகள் தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்க இன்றியமையாச் செய்தியாகும்.

## பேரூர் மடமும் பாலக்காடும்

பேரூரில் மேற்கு வீதியில் ''மேல்மடம்'' என அழைக்கப் படும் மடம் ஒன்றுள்ளது. அதற்கு 'ஞான சிவாச்சாரியார் திருமடம்' என்பது பெயர். 16 தலைமுறையாக அந்த மடம் பேரூரில் உள்ளதாக திரு மகாதேவன் என்பார் நேரில் விசா ரித்தபோது கூறினார்.

அம்மடத்தில் தலைவருக்குத் தவத்திரு. ஞானசிவாச்சாரி யார் என்பது பெயர். அவர்கள் பரம்பரை பரம்பரையாகவே அப்பெயரைப் பெற்று வருகின்றனர்.[96]

அம்மடம் கொங்கு வேளாளர்களில் சாத்தந்தை, குழாயர், ஓதாளன், மாடை, செல்லன், செம்பன், பூசன், மணியன் ஆகிய கூட்டத்தினருக்குக் குலகுரு மடமாக விளங்கு கிறது.

பாலக்காடு, சித்தூர்ப் பகுதியில் வாழும் மன்னாடியார் களும், மூத்தான், தரகன் என்ற அங்குக் குடியேறிய தமிழ் பேசும் கொங்கு வணிகர்களும் பேரூரிலுள்ள இம்மடத்தின்

தலைவர்களுக்குக் காணிக்கை செலுத்தி வருகின்றனர். கொச்சி, கொல்லம், கோழிக்கோடு, பாலக்காடு ஆகிய இடங்களில் இம்மடத்திற்குச் சீடர்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமான பாடலையும் பாடுகின்றனர்.

'கல்விபா லக்காடு மூத்தான் மன்னாடியார்
வெகுசீடர் கைகூப்பியே வணங்க
கனிவுடன் துதிசெய ஆறுகால் பீடமதில்
காந்திமதி நெல்வேலி நாதர்
கடாட்சம் பெற்று இலங்கவே
காசினி எலாம் மதிக்கக் கனவேங்கடேசுர
ஞானசிவாச் சாரியாருக்குக்
கனகமுடி சூட்டினர்களே'

என்பது ஒரு பாடல் பகுதி.

கேரள மாநிலம் சென்று இம்மடத்தின் தலைவர்கள் காணிக்கை வசூல் செய்து வந்தனர். அண்மைக் காலம் வரை இந்த வழக்கம் இருந்து வந்தது என்பதை அம்மடத்தின்உள்ள கணக்கு நூல்களும், படங்களும் நமக்குக் காட்டுகின்றன.

## வடசேரி மன்னாடியாரும் பழனியும்

பழனி கொங்கு நாட்டின் தெற்கு எல்லை. சங்க காலத்தில் வையாவிக் கோப்பெரும் பேகன் என்ற வேளாளர் தலைவன் வாழ்ந்த ஊர். அங்குள்ள முருகன் ஆலயம் கொங்கு நாட்டிலேயே சிறப்பு மிக்கது. கொங்கு நாட்டு வேளாளப் பாளையக்காரர்கட்கும், பட்டக்காரர்கட்கும் அங்குப் பல சத்திரங்கள் இன்றும் உரிமையாக உள்ளன.

பாலக்காட்டைச் சேர்ந்த வடசேரி மன்னாடியாருக்கு அண்மைக் காலம் வரை பழனி அடிவாரத்தில் ஒரு பழமையான சத்திரம் இருந்தது. அந்தச் சத்திரத்திற்கு 'வடசேரிச் சத்திரம்' என்று பெயர். அந்தச் சத்திரத்திற்குக் கதவுகளே கிடையாதாம். எப்பொழுதும் யாரும் தங்குதடையின்றி அந்தச் சத்திரத்திற்குச் செல்லலாம்; தங்கலாம்.

உணவு வேண்டுவோருக்கு உணவும், உணவு சமைத்துக் கொள்ள விரும்புவோருக்குச் சமையலுக்குத் தேவையான பொருள்களும் இலவசமாக அண்மைக்காலம் வரை கிடைத்து வந்ததாம். வடசேரி மன்னாடியாருக்குச் சொந்தமான அந்தச் சத்திரமும், நிலமும் (6 ஏக்கர் - 63 சென்ட்) மிகக் குறைந்த விலைக்கு 1974ஆம் ஆண்டு பழனித் தேவத்தானத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. இப்பொழுது அங்கு நாதசுரக் கல்லூரி இயங்குகிறது.

### வேளாளர்களில் கொம்பன்கள்

கொங்கு நாட்டில் அதிகாரம் செய்பவனையும், தலைமை தாங்குகின்றவனையும் 'கொம்பன்' என்று மக்கள் பேச்சு வழக்கில் கூறுவர். மேலே கண்ட கொங்கம்படை வரலாற்றோடு தொடர்புடைய சித்தூர் சம்பத் மன்னாடியாரையும், பாலக்காடு அருகில் உள்ள வடசேரி மன்னாடியாரையும் இங்குக் குடியேறிய வேளாளர்களில் பெரியவர்கள் என்னும் கருத்தில் இப்பகுதியில் ஒரு பழமொழி வழங்குகிறது. ''சம்பத் வடசேரி கொம்பன் வேளாளர்'' என்பதே அப்பழமொழி. அதாவது சித்தூர் சம்பத் மன்னாடியாரும், வடசேரி மன்னாடியாரும் சிறந்தவர்கள், பெரியவர்கள் என்பது இதன் பொருளாகும்.

### மெக்கென்சி ஆவணங்களில் வடசேரி மன்னாடியார்

தமிழக அரசின் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சேகரிக்கப்பட்ட பல அரிய சுவடிகள் உள்ளன. அவற்றில் ஒரு சுவடியில்

'மலையாளம்
பாலக்காடு தாலூகாவில்
வடச்சேரி மன்னாடி
மாற் என்குறவன் யிடத்து
இருக்கப்பட்ட
கிரந்தவரி நகல்'

என்று தலைப்புக் காணப்படுகிறது.[97] செய்திகள் முழுவதும் தமிழிலேயே எழுதப் பெற்றுள்ளன. அதன் இறுதியில் 'வடசேரி மன்னாடி' என்று தமிழில் கையொப்பமும் காணப்படுகிறது. இந்தச் சுவடி 1809 ஆம் ஆண்டு சூன் 27ஆம் தேதி எழுதப்பெற்றது.

மேற்கண்ட நூலகத்தில் பாலக்காடு பற்றிய மேலும் பல தமிழ் ஆவணங்கள் உள்ளன. அவற்றில் சில:

1. பாலக்காடு தாலூக்கா திருவாலத்தூர் கோயில் சிலா சாசனம்.
2. பாலக்காட்டு கஞ்சஞ்செட்டி சாசனம்.
3. பாலக்காட்டுச்சேரி கோணக்கால் இடத்துக் கொம்பி அச்சன் சாசனம்.
4. பாலக்காட்டுக் கச்சேரி பல வகுப்பினர் வரலாறு.[98]

இந்த ஆவணங்கள் அனைத்திலும் கொங்கு நாட்டுத் தொடர்புகள் பல காணப்படுகின்றன. வணிகம், கோவில் வழிபாடு, நில உரிமை, பாளையக்காரர் தொடர்பு இவைகளில் கொங்கு நாட்டின் பங்கும் செல்வாக்கும் கேரளப் பகுதியில் எவ்வளவு தூரம் காலூன்றி உள்ளது என்பதற்கு இந்த ஆவணங்கள் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள் ஆகும்.

**தமிழில் ஓலைப் பட்டயங்கள்**

பாலக்காடு மாவட்டத்தில் கொங்கு வேளாளர்கள் குடியேற்றம் பற்றிய பல்வேறு ஓலைப்பட்டயங்கள் கிடைத்திருக்கின்றன. அவை வடசேரி மன்னாடியார் மாளிகையிலும், வண்ணாமடை திரு.கிருஷ்ணன் குட்டி நாயர் அவர்கள் வீட்டிலும் கிடைத்தன. வடசேரி மன்னாடியார் இல்லம் சென்ற போது திருமதி.பாருக்குட்டி மன்னாடிச்சியார் தங்கள் வசமிருந்த ஓலைகள் சிலவற்றை அன்புடன் கொடுத்து உதவினர். வண்ணாமடை அருகில் உள்ள மலையாண்டிக் கவுண்டனூர் திரு.முத்துக்கிருட்டிணன் அவர்கள் வழியாக வண்ணாமடை திரு.கிருஷ்ணன்குட்டி நாயர் அவர்களின் ஓலைச்சுவடிகள் சில பெறப்பட்டன. இந்த மூல ஓலைப் பட்டயங்கள் அனைத்தும் இப்போது ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் வைக்கப் பெற்றுள்ளன.

அச்சுவடியில் ஒன்று வடசேரி மன்னாடியார்களைப் 'புதுசேரி தேசத்து வடசேரி எசமானர்' என்று கூறுகிறது. 'பரிதாபி வருடம் மாசி மாதம் 26ஆம் தேதி பாலைக்காடு கொப்பம் யாக்கரை அமுசம் குந்நத்தூரு மேடிலிருக்கும் காசியா பிள்ளை பெண் சாதி மணப்பளி' என்று தமிழிலேயே இச்சுவடிப்பட்டயம் தொடங்குகிறது.

**மலையாள ஓலையில் தமிழ**

வண்ணாமடை ஏட்டில் 'வேளாளர் ராக்கியப்ப கவுண்டர் வெள்ளாளன் வெள்ளப்ப கவுண்டர்' ஆகிய பெயர்கள் அப்பகுதியில் குடியேறிய கொங்கு வேளாளர்கள் பெயராகக் காணப்படுகின்றன. முழுவதும் மலையாள மொழியில் எழுதப்பெற்றிருந்தாலும் வேளாளர் பெயர்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளமை அவர்கள் தமிழ் நாட்டுப் பகுதிக்காரர்கள் என்பதைக் காட்டும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

அப்பகுதியில் மலையாள மொழியில் எழுதப்பட்ட மேலும் சில ஓலைகளில்கூட மருதாசலம் பிள்ளை, வேலப்ப கவுண்டர் இடையே கொடுக்கல் வாங்கல் பற்றிய ஆவணங்களில் மலையாள நாட்டில் குடியேறிய தமிழர்கள் பெயர்கள்

தமிழிலேயே எழுதப்பெற்றுள்ளமையைக் காணுகின்றோம். இந்த ஓலைப் பட்டயங்கள் கொங்கு வேளாளர்களின் மலையாள நாட்டுக் குடியேற்றத்தை நமக்கு உறுதிப்படுத்துகின்றன.

**மன்னர்கட்கு முடிசூடும் கொங்குப் பாளையக்காரர்**

பாலக்காடு, வள்ளுவநாடு, கொல்லங்கோடு போன்ற சேர நாட்டுச் சிற்றரசர்கள் கொங்கு நாட்டுக்கு அருகில் இருப்பவர்கள் மட்டுமல்ல கொங்கு வேளாளரோடு மிக நெருங்கிய தொடர்பும் உடையவர்கள். இவர்களுக்கெல்லாம் முடி சூட்டி வைக்கும் பெருமை கொங்கு நாட்டுப் புரவி பாளையம் ஜெகமண்டலாதிபதி கோப்பண மன்றாடியார் அவர்கட்கும் சமத்தூர் வானவராயர் போன்ற வேறு சில கொங்கு நாட்டுப் பாளையக்காரர்கட்கும் உண்டு.[99]

கொங்கு வேளாளர்களில் அக்கினி குலத்துக் கவுண்டர் களுக்கும் சேர மன்னருக்கு முடிசூட்டும் உரிமை உண்டு என்பது கொங்கு மண்டல சதகப் பாடலால் அறியலாகும் செய்தி யாகும்:

நற்குடி நாற்பத்தெண் ணாயிரம் கோத்திர நாட்டவர்கள்
பொற்கிரீ டந்தனைச் சாற்றவந் தார்புவிக் காவலனாம்
அக்கினி கோத்திரன் புகழ்சேர மான்பெரு மாள்தனக்கு
வைக்கவும் வந்திடும் வேளாளர் வாழ்கொங்கு மண்டலமே[100]

மெக்கென்சியின் ஆவணங்களில் ஒன்று ''மலையாளத்து ராசாக்களுக்கு ஆதீனத்துக்குப் பட்டம் கட்ட வேணுமென் றால் புரவிபாளையம் கோப்பண மன்றாடியார் போய்ப் பட்டம் கட்டி வச்சு வருகிறது'' என்று கூறுகிறது.[101] இந்த ஆவணத்தால் பாலக்காடு வட்டாரக் குறுநில மன்னர்களுக்கும் கொங்கு நாட்டுக்கும் உள்ள தொடர்பு அறியப்பெறுகிறது. தங்கள் இனத்தார் அல்லது தங்கள் நாட்டினர் என்னும் தொடர்பாலேயே இந்த முடிசூட்டும் தொடர்பு உள்ளது எனலாம். பாண்டியர் காலத்தில் புரவிபாளையத்தார் அதி காரம் செய்ததால் அவர்களுக்கும் அந்த உரிமை அளிக்கப் பட்டது.

**கொங்கு பாளையக்காரர்கட்கு பாலக்காட்டில் அடைக்கலம்**

பொள்ளாச்சி சமத்தூர் வானவராயக் கவுண்டர் வழி யினரான முச்சடையாண்டிக் கவுண்டரும், பழைய கோட்டை மரபில் வந்த தம்பாக் கவுண்டர் என்ற சின்னமலைக் கவுண் டரும் கிழக்கிந்தியக் கம்பெனிப் படையினரை எதிர்த்துப் போரிட்டனர். இவர்கள் இருவரும் கொங்கு வேளாளர்குல சுதந்திரப் போராட்ட வீரர்கள்.

கிழக்கிந்தியக் கம்பெனிப் படையினர் இவர்களை அடக்கிப் பிடிக்க முற்பட்டபோது முச்சடையாண்டிக் கவுண்டரும் சின்னமலைக் கவுண்டரும் 'மலையாளம் பிராந்தியத்துக்கு' ஓடிப்போய் அடைக்கலம் பெற்றுப் பின்னர்ப் படையுடன் வந்து கம்பெனிப் படையினரை எதிர்த்துப் போரிட்டதாகவும் மெக்கென்சியின் ஆவணம் ஒன்று கூறுகிறது.[102] பாலக்காட்டுப்பகுதி தங்கள் இனத்தாரான கொங்குவேளாளர் வாழும் பகுதி ஆகையால் கொங்குப் பாளையக்காரர் வழியினர் அங்கு அடைக்கலம் புகுந்தனர். அவர்களின் உதவி பெற்றுப் படையுடன் வந்து வெள்ளையர்களுடன் போரிட்டனர்.

**பெருமைக்குரிய பட்டம் – மன்னாடியார்**

கொங்கு நாட்டில் ''மன்றாடியார்'' என்ற பெயர் சமூகத் தலைவர்களாகப் பாளையக்காரர்கள் நிலையில் உள்ள பட்டக்காரர்கட்கும் அவர்களை ஒத்த கொங்கு வேளாளர் குலத்தலைவர்கட்கும் கொங்கு வேளாளர்களான குறுநில மன்னர்கட்கும் பெயராக விளங்கி வருகிறது. இது முன்னர் விளக்கப்பட்டது. அது மிக உயர்ந்த சிறப்பானதொரு பட்டமாகும். அதுபோலவே கேரளத்திலும் 'மன்னாடியார்' பட்டம் பெற்றவர்கள் கிராமத் தலைவர்களாக, அரசரால் மதிப்புப் பெற்றவர்களாக, நிலச்சுவான்தாரர்களாக ஊராட்சிப் பொறுப்பாளராக மிக உயர்ந்த நிலையில் இருந்தனர். மிக அண்மைக் காலத்திலேயே பன்னெடுங் காலம் பிரிக்கப்படாத அவர்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பிரிக்கப்பட்டன. கேரளத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட பல நிலச் சீர்திருத்தச் சட்டங்களால் மன்னாடியார்கள் நிலமெல்லாம் பறிக்கப்பட்டுப் பலருக்கும் பங்கு போடப்பட்டு இன்று சாதாரணநிலையில் பெரு நிலமற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால் அவர்களின்'' எட்டுக்கட்டு'' மாளிகையும், வரலாற்றுச் சிறப்புள்ள பழம் பொருட்களும் கேரள மன்னாடியார்களின் சிறப்பை, பழமையை, பெருமையைப் பறைசாற்றுகின்றன.

'கொச்சி மாநிலக் கையேடு' தொகுத்த திரு சி.அச்சுத மேனன் அவர்கள் தன் நூலில் மன்னாடியார் என்பதற்கு 'Title of Nobility' என்றே பொருள் கூறுகின்றார்.[103]

கொச்சிப் பழங்குடியினரும் சாதிகளும்' என்ற நூலிலும் "Mannadiyar - This is the **Title of certain aristocratic families** in the Chittur near Palghat" என்றே எழுதப்பெற்றுள்ளது.[104] எனவே கொங்கு நாடு போலவே கேரளத்திலும் மன்னாடியார்

கள் உயர்நிலையில் மிகப் பெருமை பெற்றவர்களாக இருந்துள்ளனர்.

**தாய்வழி - தாயாதிகள்**

கொங்கு வேளாளரில் ஒரே குலம் அதாவது கூட்டத்தைச் சேர்ந்தவர்களைப் பங்காளிகள் அல்லது தாயாதிகள் என்று கூறுகின்றனர். பங்காளிகள் அல்லது தாயாதிகட்குள் கொள் வினை - கொடுப்பினை போன்ற திருமணச் சம்பந்தம் வைத்துக் கொள்வது கிடையாது. அவர்கள் சகோதரர்கள் போன்ற உறவு உடையவர்கள்.

இதே மரபு பாலக்காடு மாவட்ட மன்னாடியார்கள் குடும்பங்களில் பின்பற்றப்படுகிறது. பங்காளிகள் அல்லது தாயாதிகள் என்பதை அவர்கள் ''தாய்வழி'' அல்லது ''தாவழி'' என்று கூறுகின்றனர். எடுத்துக்காட்டாக,

தேங்குறிச்சி புளியங்களத்து மன்னாடியார்
களப்பட்டி எறவமன்னாட்டில் மன்னாடியார்
குழல்மன்னம் குமரஞ்சடையத் மன்னாடியார்

மூவரும் ''தாவழி'' அல்லது சகோதரர்கள் என்று கூறுகின்றனர். இவர்கள் தமக்குள் திருமணச் சம்பந்தம் வைத்துக் கொள்வது கிடையாது. பிற மன்னாடியார் வீடுகளில் தான் சம்பந்தம் செய்து கொள்வர்.

இது எதை நினைவூட்டுகிறது என்றால் கொங்கு நாட்டு வேளாளர்களில் பெருமக்கள் ஆகிய மன்றாடியார் குடும்பங்களில் ஒருவர் மட்டும் கேரளப் பகுதியில் குடியேறவில்லை. பல மன்னாடியார்கள் குடியேறியுள்ளனர் என்பது தெரிய வருகிறது. அதனால்தான் அங்குள்ள மன்னாடியார்களில் பங்காளிகளுடன் மாமன் மைத்துனர்களும் இருக்கக் காணு கின்றோம்.

இன்றும் பாலக்காட்டில் 'தாவழி' முறை பின்பற்றப் படுகிறது. இது மன்னாடியார் குடும்பங்களின் சிறப்பாகும்.

**காணியாட்சி**

கொங்கு வேளாளர்கட்குரிய ஊர்கள், கோயில்கள் இவற்றைக் குறிப்பதற்குக் கொங்கு நாட்டில் காணி, காணி யாட்சி என்ற சொற்கள் இன்றளவும் வழக்கில் பயன்பட்டு வருகின்றன.[105] இதே தமிழ்ச்சொல் பாலக்காடு, சித்தூர்ப் பகுதியிலும் பயன்பட்டு வந்துள்ளது. 28-5-1748 ஆம்

ஆண்டு **F. W.** எல்லிஸ் என்பவர் இச்சொல்லின் பொருள் உணர்ந்து தன் கட்டுரையில் பயன்படுத்தியுள்ளார்,

"......... And it is significant that the Tamil word now used for proprieteship in the soil is **Kaniyatchi** to which word the late Mr. F.W.Ellis in his paper on **Mirasi Rights** assigned a similar derivation"

**கப்பராமாயணம்**

பாலக்காடு மாவட்டம் மாத்தூர், வேளாளர் குடியேற்றத்தில் மிக இன்றியமையாத ஊர்களில் ஒன்று. அங்கு பாட்டத்தில் மன்னாடியார், சேங்கத்து மன்னாடியார் என்னும் இரு கொங்கு வேளாள மன்னாடியார் குடும்பங்கள் உள்ளன.

இவ்வூரில் ''கிருஷ்ணாட்டக்களி'' என்ற விழா ஆண்டு தோறும் நடை பெறுகிறது. வைணவத் தொடர்பான விழாவாக இருக்கும் காரணத்தால் அங்கு இராமன் தொடர்பான காப்பியம் படிக்கப்படுகிறது. இவர்கள் தமிழில் கம்பர் எழுதிய இராமாயணப் பாடல்களையே இன்றளவும் படித்து வருகின்றனர். இன்று தமிழில் எழுதப்பட்ட பாடல்களைப் படிக்க முடியாத காரணத்தால் தமிழ்ப் பாடல்களை மலையாள எழுத்தில் எழுதிப் படித்து வருகின்றனர்.

பாட்டத்தில் மன்னாடியார் வீட்டிலேயே இச்செய்தியை நேரில் கூறினர் தமிழகத் தொடர்பை நமக்கு இது காட்டுகிறது. பாலக்காடு சித்தூர் அருகில் உள்ள நல்லேபிள்ளேயிலும் 14 நாட்கள் 'கம்பராமாயணக்கூத்து' நடைபெற்றதைப் பெரியவர்கள் நினைவூட்டினார்கள். அப்போது அங்கு கம்பர் கதை படிக்கப்பட்டது.

**சோழநாட்டு வேளாள சத்திரியார்**

ப்ல மன்னாடியார் குடும்பங்களில் ஏகோபித்துக் கொங்கு மண்ணிலிருந்து வந்த தங்கள் குடியேற்றத்தையே நினைவு கூர்ந்து கூறினர் என்பதை முன்பு கண்டோம். ஆனால் பாலக்காடு நகரில் குடியேறியுள்ள தேங்குறிச்சி புளியங்களத்து மன்னாடியார் இல்லத்துக்குச்சென்று விசாரித்ததில் வேறொரு வகையில் குடியேற்றத்தின் வரலாற்றைக் கூறினர்.

அங்குள்ள அம்மணி மருவளம்மா என்ற 90 வயதுள்ள பெண்மணியைச் சந்தித்தோம். அவர் கூறியது:

''உழவர்களாக இருந்த நாங்கள் எல்லாம்
கிழக்கே வெகு தூரமிருந்து கேரளத்துக்கு

> வந்தவர்கள். சோழன் ஆட்சிபுரிந்த சோழ நாட்டிலிருந்து இங்கு குடியேறியவர்கள். அங்குக் கிழக்குச் சீமையாகிய தஞ்சாவூர்ச் சீமைதான் எங்கள் பூர்வீகம்''

என்ற செய்தியேயாகும்.

அது மட்டுமின்றி மற்றுமொரு செய்தியையும் கூறினார்கள். நாங்கள் ''வேளாளரில் சத்திரியர்'' என்ற செய்தியையும் கூறினார்கள்.

அவர்கள் கூறிய மிகவும் அரிய செய்திகள் இரண்டும் பின் வருமாறு விளக்கம் பெறலாம்:

(1) கொங்கு நாட்டில் இன்று வாழும் வேளாளர்களில் ஒரு பகுதியினர் சோழ நாட்டிலிருந்து குடியேறியவர்கள் என்ற கருத்தும் உண்டு. எனவே கொங்கு நாட்டிலிருந்து குடியேறிய தேங்குறிச்சி மன்னாடியார் குடும்பத்தினர் கொங்கு நாட்டுக்கும் பூர்வீகமான தங்கள் ஆதி காணியாகிய சோழ நாட்டை இன்னும் நினைவு கூர்கின்றனர் போலும்!

(2) வேளாளரில் சத்திரியர் என்று அவர்கள் கூறுவது அரசர்கட்காகப் போரிட்ட பாளையக்காரர், பட்டக்காரர் வழியினர் நாங்கள் என்ற செய்தியை உள்ளடக்கி உள்ளது என்பதேயாகும்.

**பேரூரில் இறுதிச் சடங்கு**

பாலக்காடு மாவட்ட மன்னாடியார் குடும்பங்களில் பெரியவர்கள் இறந்தால் 14 அல்லது 15ஆம் நாள் அவர்கள் கோவை மாவட்டம் பேரூருக்கு வந்து நொய்யல் ஆற்றங்கரையில்தான் இறுதிச் சடங்கைச் செய்கின்றனர். இன்றளவும் அந்த வழக்கம் அவர்கள் குடும்பங்களில் பின்பற்றப்படுகிறது. கொங்குப் பகுதிதான் தங்களுடைய பூர்வீக மண் என்பதை எண்ணியே இந்தப் பழக்கத்தைக் கைக்கொள்கின்றனர். 'பேரூர் அம்பலத்தில் வழிபாடும் உண்டு' என்று பெருமையுடன் கூறிக்கொள்கின்றனர்.

**தெய்வங்கள்**

கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தில் இன்றும் நாம் காணும் மன்னாடியார்களின் குடியிருப்பாகிய அம்சங்களுக்குச்

சென்றால் சில கோயில்களைக் காணலாம். அங்குக் கேரள மாநிலத்தில் பிற பகுதிகளில் மிகுதியும் காணப் பெறாத,

கருப்பணன்

காளியம்மன்

மாரியம்மன்: களப்பட்டி மாரியம்மன்; பாளையம் மாரியம்மன்

அம்மன்: சித்தூர் அம்மன், சுணங்கி அம்மன், பழனூரம்மன், மணப்புள்ளி அம்மன், காக்கரக்காவு அம்மன்,

முருகன்

என்ற கோயில்களைக் காணலாம். இப்பெயர்களில் நாம் கொங்கு நாட்டின் தாக்கத்தைக் காணுகின்றோம். களப்பட்டி எறவமன்னாட்டில் மன்னாடியார் மாளிகையில் மாரியம்மன் சிலை உள்ளது. நல்லேபள்ளியிலிருந்து ஆண்டுதோறும் தமிழ்ப் பூசாரிகள் வந்து பூசை செய்கின்றனர் என்ற செய்தி கூறப்பட்டது. கொல்லங்கோடு பணிக்கத்து மன்னாடியார் வீட்டில் காங்கேயத்திலிருந்து குடி பெயர்ந்து வந்தபோது தங்களுடன் எடுத்துக்கொண்டு வந்தது என ஒரு கல் வடிவில் ''மாரியாத்தா'' சுவாமியைக் காட்டுகின்றனர். உருண்டை வடிவில் அந்தக் கல் சுவாமி உள்ளது.

வடசேரி மன்னாடியார் மாளிகையில் பிற கேரள மக்களுக்குத் தொடர்பில்லாத ஆறுமுகன் சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன. அவர்கள் பழனித் தொடர்புடையவர்கள் என்பது ஏற்கனவே கூறப்பட்டது.

## கொங்கர் வசூலித்த வரி

களப்பட்டி எறவ மன்னாட்டில் மன்னாடியார் மாளிகையில் ஈ.குமார மன்னாடியார் என்ற 75 வயதுப் பெரியவர் ஒரு செய்தியைக் கூறினார்:

''எங்கள் முன்னோர்கள் கிழக்கே கொங்கு நாட்டுக் காங்கேயத்தில் இருந்து வந்தார்கள். பல ஆண்டுகளுக்கு முன் இதோ இங்கே உள்ள களப்பட்டிச் சத்திரத்தில் வெளியூர்க் காரர்கள் தங்குவார்கள்.

நாங்கள் காங்கேயத்திலிருந்து வந்தவர்கள் ஆகையால் அங்கேயுள்ள எங்கள் காணியாட்சிக்குரிய கோயில் திருப்பணிக்கும், விழாவைக் கொண்டாடுவதற்கும் நாங்களும் பரம்பரை பரம்பரையாக வரி கொடுத்து வந்தோம்.

எனக்கு நன்றாக நினைவு உள்ளது. ஆண்டுக்கு 12 ரூ 50 பைசா வரியை எங்கள் குடும்பத்தினர் இங்கு வந்து வரி வசூலித்த காங்கேயக்காரர்களிடம் கொடுப்பர். கடைசியாக வந்தபோது 3 ஆண்டுகட்காக மொத்தம் 37 ரூ 50 பைசா வரியாக நாங்கள் கொடுத்தோம். அவர்கள் பணம் பெற்றுக் கொண்டதற்கு இரசீதுகூடக் கொடுத்தார்கள். எங்கள் பாகப் பிரிவினைக்குக் கோர்ட்டுக்குப் போனபோது அந்த இரசீதுகள் எல்லாம் போய்விட்டன.

வந்த காங்கேயக்காரர்கள் இதோ இந்தக் களப்பட்டி முன்னர் உள்ள பாழடைந்து கிடக்கும் சத்திரத்தில் தான் தங்கினார்கள்' கேரளாவில் குடியேறிய பின்னரும் கொங்கு நாட்டோடு கொண்டிருந்த தொடர்பை இது விளக்கும்.

## மூத்த புதல்வர்க்குப் பட்டம்

கொங்கு நாட்டுப் பட்டக்காரர்கள், பாளையக்காரர் மரபில் மூத்த மகனுக்கே பட்டக்காரர், பாளையப்பட்டுப் பட்டம் கட்டுவது வழக்கமாக இருக்கும். பாளையத்தின் பரம்பரை உரிமைகளும், பட்டக்காரருக்குரிய பட்டத்துடன் பிற உரிமைப் பொருட்களும் மூத்த புதல்வருக்கே சேரும்.

அதுபோலப் பாலக்காட்டில் உள்ள அனைத்து மன்னாடியார்களின் பரம்பரையில் அண்மைக் காலம் வரை சொத்து முழுவதும் பிரிக்கப்படாமல் இருந்தது. எல்லாக் குடும்பச் செலவுகளையும் மூத்தவரே செய்வதும் வழக்கமாக இருந்தன. அண்மைக் காலத்தில்தான் எல்லா மக்களுக்கும் சொத்து உரிமை பிரிந்தது. இதனை 1933இல் வழக்குத் தொடர்ந்து சொத்து உரிமைகளைப் பெற்றனர். தீர்ப்பு 1949இல் அளிக்கப்பெற்றது.

இதனை முன்பு ''ஏகபோகத் தரவாடு'' என்று அப்பகுதியில் அழைத்தனர்.

## இல்லுறை தெய்வம்

கொங்கு நாட்டு வேளாளப் பெருமக்களாகிய பட்டக்காரர் வீடுகளில் மாளிகையின் உள்ளே இல்லுறைதெய்வங்கள் உண்டு. எடுத்துக்காட்டாகப் பழையகோட்டை அரண்மனையில் சாமுண்டீசுவரி அம்மன் கோயில் (இது குலதெய்வம் ஆனூரம்மன் கோயிலிலிருந்து வேறுபட்டது) அரண்மனை வளாகத்தில் உள்ளது. மைசூர் மன்னர் மரபினர் தங்கள் தெய்வத்தை வழிபடும் உரிமையை அளித்ததால் அக்

கோயில் ஏற்பட்டது என்பர். அதுபோலப் பாலக்காட்டு மன்னாடியார் இல்லங்களிலும் இல்லுறை தெய்வங்கள் உள்ளன. அவைகளை நேரில் கண்ட பல மன்னாடியார் மாளிகைகளில் கண்டோம். கொல்லங்கோடு பணிக்கத்து மன்னாடியார் மாளிகையில் பூசை அறையின் உள்ளே ''காங்கேயம் மாரியாத்தா'' உள்ளது. இது காங்கேயத்தி லிருந்து கொண்டு வரப்பட்டது.

**பெயரின் பெருமை**

பெரும்பாலும் மன்னாடியார் வீட்டுப் பெருமக்கள் தங்கள் பெயருடன் தங்கள் ஊர்ப் பெயரையும், வீட்டுப் பெயரையும் இணைத்தே வைத்துக் கொள்வர். அதனால் அவர்கள் பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்க்கின்றனர் என்பது தெளிவாகிறது. எடுத்துக்காட்டாக,

**T. P.** கிருஷ்ணமூர்த்தி மன்னாடியார் என்ற பெயர் தேங்குறிச்சி புளியங்களத்து கிருஷ்ணமூர்த்தி மன்னாடியார் என்று விரிவடையும்.

**M. P.** இராமநாதன் மன்னாடியார் என்பவர் ஓய்வு பெற்ற ஆசிரியர். அவர் முழுப்பெயர் மாத்தூர் பாட்டத்தில் இராமநாதன் மன்னாடியார் என்பதாகும்.

**K. E.** மன்னாடியார் என்ற பெயர் முழுமையாகும் போது களப்பட்டி எறவமன்னாட்டில் மன்னாடியார் என்று விரிவடையும். இவற்றில்

புளியங்களம்
பாட்டத்தில்
எறவமன்னாட்டில்

என்பன அவர்கள் பரம்பரை வீட்டுப் பெயர்களாகும். கொங்கு வேளாளர்களின் கிராமங்களில் அவர்களின் வீட்டுப் பெயரை,

கிழக்கு வளவு இராமசாமிக் கவுண்டர்
தெற்கு வீட்டுத் தம்பண கவுண்டர்
கொத்துக்கார வீட்டுச் சுப்பண கவுண்டர்
மணியக்காரர் வீட்டு மாரப்ப கவுண்டர்

என சுட்டி அழைக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. இவை இரண்டும் பிரியாத குடும்பக் குழுமுறையைச் சுட்டு வதாகும்.

# வேளாளர் – மன்னாடியார்
# பழக்க வழக்கங்களில் ஒற்றுமைகள்

கொங்கு நாட்டில் வாழும் மக்களில் குறிப்பாகக் கொங்கு வேளாளர்களின் பழக்க வழக்கங்களுக்கும், கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள மன்னாடியார் குடும்பத்துப் பழக்க வழக்கங்களுக்கும் இடையில் பல ஒற்றுமைகள் காணப் படுகின்றன. அவர்களின் பண்பாடுகள், பெயர்கள், சடங் குகள், வழிபாடு ஆகியவைகளில் ஒற்றுமை காணப்படு கின்றன. இவற்றில் புல கேரள மாநிலத்தில் பிறபகுதி-பிற இன மக்களிடையே இல்லாத பழக்கவழக்கங்கள் ஆகும். இவை பாலக்காடு மன்னாடியார்களுக்கும் கொங்கு வேளாளர் கட்கும் உள்ள தொடர்பை நமக்கு வலியுறுத்தும்.

**சடங்குகளில் ஒற்றுமைகள்**

மன்னாடியார் வீட்டுப் பெண்கள் முன்பு கொங்கு நாட்டு வேளாளர்களைப் போலவே 'தாலி' அணிந்து கொள்ளும் அமைப்பைக் கொண்டிருந்தனர் என்று பாலக்காட்டு மாவட்ட மன்னாடியார் மாளிகைகளில் முதியவர்கள் பலர் நினைவு கூர்கின்றனர். இது அடிப்படை ஒற்றுமையாகும்.

கேரளத்து மன்னாடியார் மாளிகைகளில் நடைபெறும் நன்மை தீமைகட்குக் குயவர்கள் சடங்குகளுக்குப் பானைகள் கொடுப்பதும், வண்ணார் மாத்துக் துணிகள் கொடுப்பதும், நாவிதர் சடங்குகள் செய்ய வருவதும் கேரளத்துப் பிற மக்க ளுக்குப் பெரும்பாலும் இல்லாமல் மன்னாடியார் மரபின ருக்கே உரிய தனித்தன்மைகளாகும். கொங்கு வேளாள ரிடையே இவ்வழக்கம் இன்றும் உள்ளது. இவை இன்றும் கொங்கு வேளாளர் நன்மை, தீமைகளில் நாம் காணக் கூடிய சடங்குகளாகும். இறப்புச் செய்தியைப் பாலக்காட்டுப் பகுதியில் ''பாணன்'' அறிவிப்பதும், கொங்கு நாட்டில் 'சக்கிலியர்' அறிவிப்பதும் ஒத்த நிகழ்ச்சியாகும்.

பாலக்காட்டுப் பகுதியில் மன்னாடியார்கள் இல்லத்துத் திருமண வீட்டில் மைத்துனன் மாப்பிள்ளைக்குப் பாதபூசை செய்வது கொங்கு வேளாளரின் திருமணங்களில் மைத்துனர் மாப்பிள்ளையின் 'கைகோர்வை' எனப்படும் முகூர்த்த நேரச் சடங்கோடு ஒத்ததாகக் கொள்ளலாம்.

மன்னாடியார் இல்லங்களில் கருவுற்ற பெண்களுக்குப் 'புளி ஊண்' அளிக்கும் சடங்கு, கொங்கு வேளாளர் இல்லங்களில் கருவுற்ற பெண்களுக்கு 7 அல்லது 9ஆம் மாதம் நடைபெறும் ''கட்டுச் சோற்று விருந்து'' என்பதனோடு ஒத்தது. கட்டுச்சோறு என்றால் கொங்கு வேளாளர் இல்லங்களில் புளிச்சோற்றையே இன்றும் குறிப்பர்.

பெண்கள் பருவம் எய்துதல் என்ற பூப்புநன்னீர்ச் சடங்கில் கொங்கு வேளாளர்கள் இல்லங்களில் தென்னங் கீற்றால் குடிசைகட்டிச் சில நாட்கள் தனியாக அப்பெண்ணை வீட்டுக்கு வெளியே திண்ணை அல்லது வாசலில் வைத்திருப்பர். பாலக்காட்டு மன்னாடியார் இல்லங்களில் இவ்வாறான நிகழ்ச்சியைத் ''திரண்ட கல்யாணம்'' என்று கூறி அப்பெண்ணை 4 நாட்கள் தனியாகத் தங்கச் செய்வர்.

திருமணமும், முதல் பிரசவமும் மன்னாடியார்கள் வீட்டுப் பெண்களுக்குத் தாய் வீட்டில் நடைபெறுவதும் கொங்கு நாட்டை ஒத்த பழக்கமேயாகும்.

ஆண்குழந்தை பிறந்தால் கூவுதலும், பெண் குழந்தை பிறந்தால் ''கிண்ணம் தட்டல்'' என்ற சடங்கு மன்னாடியார் குடும்பங்களில் நடைபெறுவது கொங்கு நாட்டை ஒத்த பழக்கமே. கொங்கு நாட்டில் கிண்ணத்திற்குப் பதில் முன்பு வெண்கல வட்டிலைத் தட்டும் பழக்கம் இருந்தது; கிராமப் புறங்களில் இன்றும் இருந்து வருகிறது.

பெண்கள் கணவன்மார்களை இழந்தால் வெள்ளைப் புடவை உடுத்தி விதவைக் கோலமாக இருப்பதும் மன்னாடியார் மரபிலும் உண்டு. கொங்கு வேளாளர்களிலும் இப் பழக்கமே இன்றும் கட்டாயமாகக் கையாளப்படுகிறது.

கொங்கு வேளாளர் திருமணங்களில் மணப் பந்தலில் பாலைமரத்தின் கிளையைக் கொண்டு வந்து வைத்து முகூர்த் தக்கால் நடுதல் என்னும் சடங்கு நடத்தியே திருமண விழாவைத் தொடங்குகின்றனா. இதே போல் பல்லசேனா போன்ற ஊர்களில் வாழும் மன்னாடியார்களின் கோயில் விழாக்களில் பந்தல் போட்டு அப்பந்தலில் பாலைமரத்தின் கிளையை நட்டு வைத்தே முகூர்த்தக் காலிட்டு விழாவைத் தொடங்குகின்றனர்.

மணப்பெண்ணுக்கு மாமன் முறையுள்ளவர் மன்னாடியார் குடும்பங்களில் நெற்றிச்சுட்டியை அணிவிக்கின்றார். கொங்கு வேளாளர் இல்லங்களில் தாய்மாமன் அல்லது அம்

முறைகாரர் மணப்பெண்ணுக்குத் திருமண முகூர்த்தத்தின் போது நெற்றிப் பட்டம் அணிவதோடு ஒத்த சடங்காகும்.

மன்னாடியார் குடும்பங்கள் சைவ உணவையே உட்கொள்ளுவது கொங்கு நாட்டுப் பெருமக்களாகிய மன்றாடியார்கள் அனைவரும் சைவ உணவே உட்கொள்ளுபவர்களாக இருந்தனர் என்ற பழஞ் சிறப்போடு ஒத்ததாகும்.

கொங்கு வேளாளர்களைச் சைவ வேளாளர் என்று மொஞ்சனூர் ஆவுடைய நாயனார் கோயில் கல்வெட்டுப் போன்றவை குறிப்பிடுவதைக் காணலாம்.

### அரசர் ஆதரவு

கொங்கு நாட்டுப் பாளையக்காரர்கள் தங்கள் பயிர், கால்நடை, மக்களுக்குத் தொல்லை கொடுக்கும் பகைவர்களை அழிக்க அரசர்கள் பாளையக்காரர்கட்கு ''வெட்ட வாளும் கட்டக் கயிறும்'' அளித்ததாகக் கூறுவர். இதே தொடரைப் பாலக்காட்டு மன்னாடியார் குடும்பங்களிலும் தங்கள் பெருமையைக் கூறக் கையாளுகின்றனர். மலையாள மொழிச் சார்பால் அத்தொடர் 'வெட்டான் வாளும் கட்டான் கயிறும்' பகைவர்களை அழிக்க அரசரிடம் பெற்றோம் என்று உருவம் மாறிப் பேச்சு வழக்கில் வழங்கப் பெறுகிறது.

### மூகாம்பிகை வழிபாடு

அரிய சக்தி தெய்வம் மூகாம்பிகை. பாலக்காடு மாவட்டத்தில் களப்பட்டி எறவ மன்னாட்டில் மன்னாடியாருக்குரிய தெய்வமாக மூகாம்பிகை அம்மன் ஆலயம் உள்ளது. பாலக்காட்டு மாவட்டத்தில் குடியேறிய தமிழ் வணிகருடன் தொடர்புடைய சோழ நாட்டுத் திருவிடைமருதூரில் உள்ள மகாலிங்க சுவாமி சிவாலயத்திலும் மூகாம்பிகை அம்மன் கோயில் உள்ளது. பாலக்காட்டில் குடியேறிய தமிழ்ச் செட்டியார்கள் மூகாம்பிகை கோயில் அரிதாக நெடுந்தொலைவில் உள்ள சோழ நாட்டுத் திருவிடைமருதூருக்குத் திருப்பணிகள் செய்வதாகத் திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடு ஒன்று கூறுகிறது. மூகாம்பிகை கோயிலே பாலக்காட்டையும் திருவிடைமருதூரையும் இணைத்திருக்கலாம். மற்றொரு சிறப்புமிக்க மூகாம்பிகை அம்மன் கோயில் கொல்லூரில் உள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. களப்பட்டி மூகாம்பிகை கோயில் பாலக்காடு மன்னாடியார் ஆகிய வேளாளருக்கு மூகாம்பிகை கோயில் வழிபாடு உண்டு என்பதை அறிவுறுத்தும். கொங்கு நாட்டில் சோழ அரசனுக்காகப் பராந்தக சோழன் காலத்தில் கோயில் காரியங்களைக்

கவனத்துக் கொண்ட அலுவலர் காரி நக்கன் என்பவர்.[106] அவர் திருவிடைமருதூர்க்காரர். அவரால் மூகாம்பிகை கோயில் வழிபாட்டுமுறை கொங்கு வேளாளர் குடியேறி வாழும் களப்பட்டிக்குத் திருவிடைமருதூரிலிருந்து சென்றிருக்கலாம். இதனால் பழங்காலத்திலிருந்தே வேளாளர்களுக்கு மூகாம்பிகை அம்மன் வழிபாடு உண்டு என்பது தெரிகிறது.

## 18 குடிகள்

பாலக்காடு மாவட்டத்தில் இன்று வாழ்ந்து வரும் மன்னாடியார்கள் குடியேறிய 8 குடும்பங்கள் 18 ஆகப் பெருகின என்பர். நாங்கள் '18 குடிகள்' உள்ளோம் என்று கூறுகின்றனர். இப்பழக்கம் பண்டைய வேளாளரிடம் காணப்பட்ட 18 குடி வேளாளர் என்ற வழக்கத்தில் ஒன்று.

பண்டைக் காலத்தில் வேளிர்கள்' 18 பிரிவினர் என்று கூறும் வழக்கம் இருந்தது. 18 ஒரு முக்கிய எண்ணாக இருந்தது. 18 மொழி, 18 தானியம், 18 மண்டலம், 18 நாடு, 18 அரசர்கள் என்று கூறும் வழக்கம் முன்பு இருந்தது.

அகத்தியர் வடக்கேயிருந்து தென்திசைக்கு வந்தபோது 18 குடி வேளிர்கள் துவாரகையிலிருந்து அவருடன் தென்னாடு வந்தனர் என்பர். நிலங் கடந்த நெடுமுடியண்ணலோடு இந்த 18 வேளிர்கள் தென்னாடு புகுந்தனர் என்று கூறப் பெறுவது பழங் கதையாகும். இதனைத் தொல்காப்பியப் பாயிர உரை மூலம் அறிகின்றோம்.

இப்படி வந்த வேளிர்கள் தமிழ் நாட்டில் குறுநில மன்னராக விளங்கினர். இவர்கள் சோழ மன்னர்கட்கும் சேர மன்னர்கட்கும் மகட்கொடை வழங்கும் உரிமை படைத்தவர்கள் என்பதை பண்டைய தமிழ் இலக்கண உரை நூல்களும், இலக்கியங்களும் கூறுகின்றன.

தமிழக வேளிர் - வேளாளர்கள் 18 பேர் என்று கூறும் தொன்மை வழக்கத்தைக் கொண்டே பாலக்காடு பகுதியில் குடியேறிய வேளாளர்களும் தாங்கள் 18 பேர் என்று கூறிக் கொள்வது இருவருக்கும் உள்ள பழமையான ஒற்றுமையைக் காட்டும்.

## கொத்துக்காரர்கள் :

கொங்கு நாட்டு வேளாளர்கள் வாழும் ஊர்களில் சில குடும்பங்கள் 'கொத்துக்காரர் வீடு' என இன்றும் அழைக்கப் பெறுகின்றன. கேரள வண்ணாமடை வேளாளரிடையே இன்றும் 'கொத்துக்காரர்' எனச் சிலர் அழைக்கப் பெறுகின்

றனர். அவர்கள் சமுதாயச் சிக்கல்களைத் தீர்த்துவைக்கும் பஞ்சாயத்தார் போல உள்ளனர்.

**ஊர்ப் பெயர்களில் ஒற்றுமை :**

இங்கிலாந்து நாட்டில் யார்க்ஷயர் என்ற பகுதியிலிருந்து குடியேறிய மக்கள் ஏற்படுத்திய ஊரே அமெரிக்க நாட்டு நியூயார்க் என்பர். ஜெருசலம் என்ற ஊரின் நினைவாக அமெரிக்காவில் செலம் (சேலம்) என்ற ஊர் ஒன்று உள்ளது. இதுபோல் பொதுவாக மக்கள் குடியேறிய இடங்களில் தாங்கள் முன்பு வாழ்ந்த இடத்தின் பெயரை வைப்பது ஒரு பழக்கமாக இருந்திருக்கிறது. பட்டுக்கோட்டை, திருநெல் வேலி என்ற ஊர்களை இலங்கையிலும் காணுகின்றோம்.

இந்த வகையில் கொங்கு வேளாளரின் பல ஊர்ப் பெயர்கள் பாலக்காடு மாவட்டத்தில் உள்ளன. மாதிரிக்கு ஒருசிலவற்றைக் கீழை காணலாம்.

| **கொங்குநாடு** | | **பாலக்காடு** |
|---|---|---|
| அயிலூர் | — | அயிலூர் |
| ஆலத்தூர் | — | ஆலத்தூர் |
| கண்ணபுரம் | — | கண்ணபுரம், கண்ண மங்கலம் |
| கொங்கூர் | — | கொங்காடு |
| கொடுவாய் | — | கொடுவாயூர் |
| கொல்லங்கோயில் | — | கொல்லங்கோடு |
| கொற்றனூர் | — | கொற்றமங்கலம் கொத்தமங்கலம் |
| சித்தூர் | — | சித்தூர் |
| சேந்தமங்கலம் | — | செயந்தமங்கலம் |
| தத்தமங்கலம் | — | தத்தமங்கலம் |
| நத்தக்காரியூர் | — | திருக்காரியூர் |
| நாகூர் | — | நாகூர் |
| நீலம்பேரூர் | — | நீலம்பூர் |
| பழையகோட்டை பழையபாளையம் | — | பழையூர் |
| பாப்பிணி | — | பாப்பிணி |
| பாலைக்காடு | — | பாலைக்காடு |
| பேரூர் | — | பேரூர், சிவப்பேரூர் |
| பொன்குலுக்கி | — | பொன்கொலி |
| மணலூர் | — | மணலூர் |
| மாத்தூர் | — | மாத்தூர் |
| வெள்ளாதி | — | வெள்ளாதி |
| வெள்ளோடு | — | வெள்ளோடி |
| வேளுக்குறிச்சி | — | வேற்குரிசி |

## மொழியும் பண்பாடும்

பாலக்காடு மாவட்டம் நல்லேபள்ளி, சித்தூர்ப் பகுதியில் சென்ற நூற்றாண்டின் இறுதியில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கீட்டின் மூலம் சில விபரங்கள் தெரிய வருகின்றன.

அப்பகுதியில் 15% இந்துக்கள் வெளி மாநிலத்தவர்கள் என்று கூறப்படுகிறது. அவர்கள் மலையாள நாகரிகத்துடன் கலக்காமல் தனித்து வாழ்கின்றனர். ஆனால் தம்ழ்மொழி 6.7% மட்டுமே பேசப்படுகிறது. இதிலிருந்து கேரளப் பகுதியில் வாழும் தமிழ் மக்கள், வாழும் நிலத்தால் சூழ்நிலையால் மொழிக் கலப்பு ஏற்பட்டுத் தாய் மொழியை இழந்தும் தங்கள் பூர்வீகப் பண்பாடு பழக்க வழக்கங்களைக் கைவிடாமல் இருந்தனர் என்பது பெறப்படுகிறது. அவர்கள் ‘வெள்ளம்’ என்ற மலையாளச் சொல்லுக்குப் பதிலாக ‘நீர்’ என்ற சொல்லைத் தங்கள் ஆவணங்களில் பயன்படுத்தி உள்ளனர். ‘பகவதி’ என்று பெண் தெய்வப் பெயருக்குப் பதிலாக அம்மன் என்றே பேசியும், எழுதியும் வந்துள்ளனர். வெளுத்தேடன், வெளக்கத்தரன் என்ற சொற்களுக்குப் பதிலாக வண்ணான், அம்பட்டன் என்ற சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. அப்பன், காணியாட்சி, கொசவன் (குழி), வெள்ளாளன் என்ற சொற்களும் அவர்களின் தனித்தன்மையை விளக்கும்

‘கொச்சி மாநிலக் கையேடு’ பின்வருமாறு கூறுகிறது;

> ‘About 15% of the Hindu population of the state belong to castes which are not indigenous to Malabar. They retain most of the habits, customs and useges of the original stock from which they separated when the immigrated into Cochin and it is therefore not necessary to describe them in detail here’[107]

## வேளாளர் குடியேறிய இடங்கள்

பாலக்காடு மாவட்டத்தில் பாலக்காடு, சித்தூர், ஆலத்தூர், கொல்லங்கோடு ஆகிய நான்கு வட்டங்களில்தான் 'மன்னாடியார்' பட்டம் பெற்ற பாளையக்காரர் நிலையில் உள்ள கொங்கு வேளாளப் பெருமக்கள் பெரும்பாலும் மிகுதியாக இன்றும் வாழ்கின்றனர். இந்த நான்கு வட்டங்களைத் தவிரக் கேரளாவின் ஏனைய இடங்களிலும் கொங்கு நாட்டு வேளாளர்கள் சிலர் நிலையாக வாழ்கின்றனர்.

### வைநாடு பகுதியில்

கேரள மாநிலத்தில் கள்ளிக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதி வைநாடு. அப்பகுதியில் பல தமிழ்க் கல்வெட்டுக்கள் இன்றும் உள்ளன. அக்கல்வெட்டுக்களில் அப்பகுதி 'வயல்நாடு' என்றும் 'வீரவயல் நாடு' என்றும் அழைக்கப்படுகிறது. அப்பகுதியில் கவுண்டர் என்னும் பட்டப் பெயருடன் கொங்கு வேளாளர்கள் வாழ்கின்றனர். அவர்கள் பெருந்துறை வட்டம் விசயமங்கலம் பகுதியில் இருந்து பல ஆண்டுகளுக்கு முன்பு குடியேறியவர்கள். அவர்களில் பெரும்பாலோர் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள். ஜினச்சந்திரக் கவுண்டர், சந்திரப் பிரபக் கவுண்டர் என்று பெயர் வைத்துக் கொள்கின்றனர். முன்பு கவுண்டர் பட்டம் பெற்ற வைநாட்டுக் கொங்கு வேளாளர் ஒருவர் பிரஜா சோசலிஸ்ட் எம்.பி. ஆக இருந்தார். அவர்களுக்கு பல ஆண்டுகளுக்கு முன்பு வரை பெரியார் மாவட்டம் விசயமங்கலத்திற்கு வந்து கொண்டிருந்தனர். விசயமங்கலம் பகுதி மக்கள் வைநாட்டுப் பகுதிக்குக் குடிபெயர்ந்த செய்திகள் பலவற்றை வேலம்பாளையம் முதுபெரும் புலவர் வித்துவான் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் நன்கு அறிந்தும், ஆய்ந்தும் பல செய்திகளைத் தொகுத்தனர்.

### கள்ளிக் கோட்டையில்

'கேரள தேச வரலாறு' என்னும் பழஞ்சுவடி ஒன்று சென்னைக் கீழ்த்திசை மொழிகளின் சுவடி நூலகத்தில் உள்ளது.[108] அது மெக்கென்சி தொகுத்த அரிய வரலாற்றுச் சுவடிகளில் ஒன்று. அது கேரள மாநிலத்தில் பண்டைய வரலாற்றுச் செய்திகளை அடக்கிய சிறந்த வரலாற்று நூலாகும். அதில் அறிய வரலாற்றுச் செய்தி ஒன்று கூறப்பெறுகிறது.

சேரமான் பெருமாள் சேர நாட்டை ஆட்சி புரியும்போது கிருஷ்ணராயர் என்பவரின் படையெடுப்புக்கு எதிராகப் போர் புரியப் 'பூந்துர' என்னுமிடத்திலிருந்து மானீச்சன், விக்கிரமன் இருவரையும் அவர்களுக்குப் ''படிப்புச் சொல்லுகிற'' உண்ணிக் குமரன் நம்பியாரையும் சேர நாட்டுக்கு அழைத்துச் சென்ற செய்தி கூறப்படுகிறது.

மானீச்சன், விக்கிரமன் இருவரும் 'ஏறாடிமார்' அல்லது ''ஏர் உழும் உழவர்கள்'' என்று கூறப்படுகின்றனர். 'பூந்துர' மானீச்சனுக்குக் குன்னனக் கோனாத்ரி என்று பட்டம் கொடுத்து கள்ளிக் கோட்டைக்கு அரசர் ஆக்கினர். விக்கிரமனைக் கள்ளிக்கோட்டை இளைய ராஜா ஆக்கி இளங்கூறு நம்பியாதிரி திருமூலப்பாடு என்று பெயரிட்டு இளவரசர் ஆக்கினார். அவர் பந்நியங்கரையிலே இருந்தார்.

கள்ளிக்கோட்டை சாமுரின் அரசர்கள் கொங்கு நாட்டுப் பூந்துறைக்காரர்கள். எனவே அவர்களுக்குப் ''பூந்துறைக் கோன்'' என்ற பட்டமும் உண்டு. 4-2-1980இல் கள்ளிக் கோட்டைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் எழுதிய கடிதம் ஒன்றில் கீழ்வருமாறு குறிக்கின்றார். ''சாமுரின் குடும்பத்தினர் காவிரிப்பள்ளத்தாக்கைச் சேர்ந்த பூந்துறையைச் சேர்ந்தவர்கள். தர்ஸ்டன் பூந்துறை சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தது'' என்று கூறுகின்றார். சேலம் மாவட்டத்தின் திருச்செங்கோடு வட்டத்தில் கீழ்க்கரைப் பூந்துறை நாடு உள்ளது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அனேகமாகக் கேரள வரலாற்றை எழுதும் அனைவரும் கள்ளிக் கோட்டை சாமுரின் அரசர் குடும்பத்துக்கும் கொங்கு நாட்டுப் பூந்துறைக்கும் உள்ள தொடர்புகளைச் சுட்டிக்காட்டி எழுதியுள்ளார்கள். பழைய கொங்கு நாட்டுத் தொடர்பு இவ்வாறு இருக்க அண்மையில் கள்ளிக்கோட்டை அருகில் பூந்துறை என்று ஓரிடத்துக்குப் பெயர் வைத்து இப்போது புதியதாக அழைக்கின்றனர். அப்பெயரும் கொங்குநாட்டுப் பூந்துறையின் நினைவாக ஏற்பட்டதாகலாம். பூந்துறையிலிருந்து சேர அரசன் அழைத்துச் சென்ற மானீச்சன், விக்கிரமன் வரலாற்றையே பூந்துறைப் புராணம் வேறு வடிவில் கூறுகிறது. எப்படியிருப்பினும் கொங்கு நாட்டு ஈரோடு வட்டம் பூந்துறையிலிருந்து மக்கள் கேரள நாடு சென்று ஆட்சிப் பொறுப்பேற்றதையே கேரள தேச வரலாறும், பூந்துறைப் புராணமும் கூறுகிறது. மேழி விளக்கத்தில் கோழிக்கோடு வேளாளர் காணி ஊராகக் குறிக்கப்பட்டதை முன்பே கண்டோம்.

மெக்கென்சியின் ஆவணங்களில் ஒன்று 'பூர்வத்தில் சேர ராசா பூந்துரைப் பட்டணம் வாசத்தராயி றாச்சியாதி பத்தியம் பண்ணிக்கொண்டு வருகுற நாளையில்....'[109] என்று குறிப்பிடும் பகுதி மேற்கண்ட உண்மையைப் புலப் படுத்தும்.

சேரமான் பெருமாள் நாயனார் போன்ற பெருமாள் மரபு அரசர்கள் ஆட்சிபுரிந்த இடமும், சேர நாட்டின் பண் டைய தலைநகராக அமைந்ததும் திருவஞ்சைக்குளம் என்னும் பழம்பதி ஆகும். அது கேரள நாட்டு மேற்குக் கடற்கரையில் உள்ள பெருநகரம் ஆகும். சுந்திரமூர்த்தி நாயனார் அங்கு சென்று பதிகமும் பாடியுள்ளார். அத் தலம் கொடுங்களூர் ஆகும்.

பெரியார் மாவட்டம் ஈரோடு வட்டம் பூந்துறையில் நண்ணாவுடையார் என்ற வேளாண் குலத் தலைவர் மர பினர் வாழ்ந்து வந்தனர். இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

''வேணா டுடையான் வெள்ளோடு உலகுடையான்
ஆனூர்க்குச் சர்க்கரை மன்றாடி - வேணுபுகழ்
நாவேந்து பூந்துறைசை நண்ணா வுடையார்க்கு
மூவேந்தர் சூட்டும் முடி''

என்பது ஒரு பழம் பாடலாகும்.

பூந்துறையைப் பற்றி ஒரு புராண நூல் உண்டு. அந் நூல் நண்ணாவுடையார் மரபைச் சேர்ந்த வேளாண் குலத்து இளைஞன் 'வேலப்ப நயினார்' என்பவர் சேர மன்னனுடன் சேர்ந்து திருவஞ்சைக்களம் சென்றதாகவும், சேர மன்னன் தன் முடியை அந்தப் பூந்துறை வேலப்ப நயினார்க்குச் சூட்டியதாகவும் கூறுகிறது;

''மன்னுசிவ மறையோர்கள் தம்மைக் கூவி
மண்மகள்புத் திரர்எங்கே என்று கேட்க
உன்னுபசி யால்உலந்து நோயால் வாடி
உறுதொண்டை நாட்டினிலே உற்றார் என்றார்
பின்னுநண்ணா உடையரன்றன் மரபில் வந்து
பெயர்பெற்ற வேலப்ப நயினார் என்போன்
குன்றனைய தோளினான் சேரன் தன்னைக்
கூடினான் திருவஞ்சைக் களமே சென்றார்
ஆங்கவற்குந் தன்முடியைச் சூடிப் பின்னர்
அவனியெல்லாம் ஒருகுடைக்கீழ் அரசாய் ஆள ''

இப்பாடல் மூலம் சேர நாட்டுத் திருவஞ்சைக் களத்தில் கொங்கு வேளாளர் குடியேற்றம் பூந்துறையிலிருந்து நடை பெற்றுள்ளது என்பதை அறிகின்றோம். பூந்துறைச் சிவாலயத்தில் அம்மன் சந்நிதி சுற்றுச்சுவரில் இதைக்குறிக்கும் கல்வெட்டைப் பேராசிரியர் க. அரங்கசாமி அவர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

'கேரளோற்பத்தி' என்னும் நூல் கள்ளிக்கோட்டை சாமுரின் மன்னரின் முன்னோர் பெருமாள் அரசர் மெக்கா செல்லும்போது பூந்துரா ஏராடி இளைஞர்களிடம் அரசுப் பொறுப்பை ஒப்படைத்ததாகக் கூறுகிறது. இதனைக் கே.பி.பத்மநாபமேனன், 'கேரள வரலாறு' என்னும் நூலில் கூறுகின்றார்:

> The Keralotpatti simply says that the anscestors of the Zamorin two Erati youths, had rendered meterial help to the Perumal's sailing for Mecca, he had a gift of a narrow strip of land to them with an injunction to conquer an rule. Th Erati brothers came from Punthura near Coimbatore, and there is no reference to any relationship between them and the Perumal.[110]

**வண்ணாமடைப் பகுதி**

பாலக்காடு மாவட்டம் சித்தூர் வட்டம் வண்ணா மடைப் பக்கம் ''மன்னாடியார்'' என்ற குடும்பமே அன்றி பல கொங்கு வேளாளர் குடும்பங்களும் வாழ்கின்றன. அவர்களில் பலர் இன்னும் கொங்கு நாட்டு வேளாளர்களுடன் நேரடித் தொடர்பு வைத்துக் கொண்டுள்ளனர்.

அவர்களில் பலர் பரம்பரையாக ஒரு கதை போலப் பண்டைய வரலாற்றைக் கூறிக்கொண்டுள்ளனர். ''நாங்கள் கொங்கு நாட்டைச் சேர்ந்த வேளாளர்கள். கொங்குப் பாளையக்காரர்கள் காலத்தில் அங்குப் பஞ்சம் வந்ததால் இங்கு வந்து 1500 வள்ளம் பூமியைப் பண்படுத்தி (சுமார் 6000 ஏக்கர்) 'கானல் பெரும் மரம் வெட்டித் தெளிவிச்சு' விவசாயம் செய்து வருகிறோம். எங்களுடன் வேட்டு வர்களும் ஒன்றாக வந்தனர். இப்பகுதியில் இன்னும் கொங்கு வேளாளர்கள் ஆகிய நாங்கள் தமிழே பேசுகின்றோம். மலையாள மக்களுடன் கலப்பு அவ்வளவாக ஏற்படவில்லை. நாங்கள் '' ஊருக் கவுண்டர்'' (பஞ்சாயத்தார் எனவும் கூறுவர்) எனப்படும் கிராமத் தலைவர்களாக உள்ளோம்'' என்கிறார்கள். திருமணத்தில் ''சீருக்காரர்'' சீர் செய்கின்

றார். பொள்ளாச்சிப் பக்கம் கொங்கு வேளாளர்களில் சீர்க்காரர்களே இன்றும் திருமணத்தை முன்னின்று நடத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது (ஏனைய கொங்கு வேளாளர்களில் அருமைக்காரர் போல).

இன்றும் ''கவுண்டன் களம்'' என்று பெயருள்ள நிலப் பகுதி பொள்ளாச்சி வட்டம் சமத்தூர் ஜமீனுக்குரியதாகக் கேரளாவில் உள்ளது. கீழ்வரும் கேரள நாட்டு ஊர்களில் முழுவதும் தமிழ் பேசும் கொங்கு வேளாளக் கவுண்டர்களே இப்போது வாழ்கின்றனர். மலையாண்டிக் கவுண்டனூர், வண்ணாமடை, எடுத்தேன்பதி, மூங்கில் மடை, இராமவர்மபுரம், கருமாண்ட கவுண்டனூர், கொழிஞ்சாம் பாறை, ஆட்டையாம்பதி, உழல்பதி, அஞ்சாம்மைல், மீனாட்சிபுரம், குமாரனூர், குலுக்கப்பாறை, குன்னங்காட்டுப்பதி, குப்பாண்டக் கவுண்டனூர், வடகரைப்பதி, மூலத்தரை என்பவை அவ்வூர்களாகும்.

தமிழ்நாட்டை ஒட்டிக் கேரளாவில் உள்ள பதி, பாறை என முடியும் ஊர்கள் அனைத்தும் கொங்கு வேளாளர் குடியேறி அமைத்த ஊர்களே எனச் சித்தூர்க்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. கோவிந்தன் அவர்கள் கருதுகிறார்கள்.

இன்னும் இவர்கள் கூட்டங்களின் (குலங்கள்) பெயர்களைச் சொல்லிக் கொள்கின்றனர். இவர்கள் பெரியன், சேரன், செல்லன், கண்ணந்தை, ஆந்தை, பயிரன், காடை, பொருளந்தை (முழுக்காதன்), தோடை ஆகிய குலங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

கீரனூர், பாப்பினி, அஞ்சூர், காடையூர், சங்கரண்டாம் பாளையம், கொடுமணல், முருங்கத் தொழுவு போன்ற கொங்கு நாட்டுப் பெரியார் மாவட்ட ஊர்களிலிருந்து குடியேறியதாக இன்னும் நினைவு கூர்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றுகூடச் சிலர் பூர்வீக ஊர்ப் பகுதிகளில் உள்ள கோயில்களுக்குச் சென்று வருகின்றனர். இன்றும் பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம் கொடுமணல் தங்கம்மன் கோவிலுக்குக் கேரளாவிலிருந்து வருவது நிகழ்கிறது. சிலர் அங்கேயே கோயில் கட்டி வழிபாடு செய்து வருகின்றனர்.

வண்ணாமடையில் உள்ள ஒரு பழமையான சுமை தாங்கிக் கல்லில் பின்வரும் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது:

''அங்கு
முத்துக
வுண்டர்
மருமக
ன் சுப்பே
கவுண்
டர் உ
பயம்''.

இவர்கள் வணங்கும் தெய்வங்கள் கருப்பணசாமி, பத்திர காளியம்மன், மாரியம்மன் என்ற பெயரில் கொங்கு நாட்டு அமைப்பிலேயே கோயில் கட்டி வழிபாடு செய்து வருகின்றனர். 'நாட்டுக்கல்' (நடுகல்) எனப்படும் மூத்தோர் நினைவுக் கல்லையும் நட்டுத் திருமணம் போன்ற விசேட காலங்களில் வழிபட்டு வருகின்றனர். இவ்வழிபாடும் கொங்கு நாட்டு வேளாளர் திருமணங்களில் உள்ள வழிபாட்டை நினைவூட்டுகிறது. இன்றும் கொழிஞ்சாம் பாறை அருகே கோரிமேனன் தண்ணீர்ப்பந்தல் என்ற பகுதி நாட்டுக்கல் என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

### கொடைக்கானல் பகுதியில்

கொங்கு நாட்டிலிருந்து மலை நாடான சேர நாட்டுக்குக் கொங்கு வேளாளர்கள் மேற்கு நோக்கிக் குடியேறிய அதே காலத்தில் தெற்கு நோக்கிய குடியேற்றம் ஒன்றும் நடை பெற்றுள்ளது. தெற்கு நோக்கிச் சென்ற அவர்கள் கொடைக்கானல் மலைப் பகுதியில் குடியேறி வேளாண் மையை மேற்கொண்டனர். அவர்கள் தங்களைக் 'குன்னுவர்' என்று அழைத்துக் கொண்டும் ''மன்னாடியார்'' என்ற பட்டம் வைத்துக் கொண்டும் இன்றும் கொடைக் கானல் மலைப் பகுதிகளில் உள்ளனர்.

| | | |
|---|---|---|
| பெரும்பள்ளம் | ஏ. கே. கரியமுத்து | மன்னாடியார் |
| வடகவுஞ்சி | அப்பிச்சி என்ற இராமசாமி | மன்னாடியார் |
| குப்பம்மாள்பட்டி | பி.பி.முத்துச்சாமி | மன்னாடியார் |
| மங்களங்கொம்பு | எம்.பி.முருகேசன் | மன்னாடியார் |

இன்னும் கோமாளி மன்னாடியார், மேப்ப மன்னாடியார், வேலுச்சாமி மன்னாடியார், பழனிச்சாமி மன்னாடியார்,

ராயவேல் மன்னாடியார், ஆண்டிவேல் மன்னாடியார் என்று பெயர் வைத்துக் கொள்கின்றனர். இவர்கள் தங்கள் சங்கத் திற்குக் கேரளப் பகுதியில் உள்ள மன்னாடியார் குடும்பத் தைச் சேர்ந்த சிவசங்கர மன்னாடியார், பல்லசேனா கண்ணன் குட்டி மன்னாடியார் ஆகியவர்களை நியமித்துள்ளது ஒரே பகுதியில் இருந்து குடி பெயர்ந்து வந்தோம் என்ற இத் தொடர்புகளை வலியுறுத்தும். ஒரு இடத்தில் வாழும் இவர்கள் மற்ற இடத்தில் வசிப்பவர்களைப் பண்ணைக்காட்டு உறவின் முறையார், பாச்சலூர் உறவின் முறையார், வடகவுஞ்சி உறவின் முறையார் என்று அழைத்துக் கொள்கின்றனர். கொங்கு நாட்டில் இச்சொல் 'ஒரம்பறை' என்று கூறப் படுகிறது. இவர்கள் தங்கள் சமூகத் தந்தை என்று திரு கே.சி.எம்.மூக்கையா மன்னாடியார் அவர்களைக் கூறு கின்றனர்.

பொன்னர், சங்கர் எனப்படும் கொங்கு வேளாளர் குலத் தலைவர்களின் தந்தை ''குன்றுடையான்'' என்று கூறப்பெறுபவர். குன்றுடையான் எனப்படும் பெயரும், குன்னுவர் எனப்படும் பெயரும் ஒற்றுமை உடைய பெயர் களாகும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். 'கோனாட்டுக் காராளன் குன்றுடையான்' என்பது நாட்டுப் பாடல் பகுதியாகும்.

சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி 'மன்னாடி'' என்ற சொல்லுக்குப் பொருள் கூறுமிடத்துக் கேரள மலை நாட்டுக் கிராமத் தலைவர்களைக் கூறுவதுடன்...பழனிப் பிரதேசத்திலுள்ள ஒரு மலைச்சாதி'' என்ற பொருளையும் தருகிறது.[111]

வேளாளர்கள் பட்டாம்பி, அங்காடிப்புரம் போன்ற பல கேரள நாட்டுப் பகுதிகளிலும் குடியேறியுள்ளனர்.

## மன்றாடியாரோடு குடியேறிய பிற மக்கள்

கொங்கு வேளாள மன்றாடியார்களும் வேளாளர் குலப் பெருமக்களும் பாலக்காட்டுக் கணவாய், போளுவாம் பட்டிக் கணவாய், அட்டப்பாடிப் பள்ளத்தாக்கு வழியாகக் கேரள மாநிலத்தினுள் குடியேறியபோது அவர்களோடு பிற இனத்தார்களும் கொங்கு நாட்டிலிருந்து கேரளப் பகுதிக்குக் குடியேறினர். அவ்வாறு குடியேறியவர்கள் கேரளத்திலேயே நிலையாகத் தங்கிவிட்டனர்.

வேளாண்மையை அடுத்து வணிகம் பெருந்தொழிலாக இருப்பதால் வேளாளருடன் குடியேறியவர்களில் வணிகர்கள் கொங்கு வேளாளரோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்தனர்.

### செட்டியார்கள்

நல்லேபள்ளி சொணங்கி அம்மன் (சொர்ணாங்கி அம்மன்) வழிபாட்டுப் பாடலில் ''64 கடிகைத் தாவளம்'' என்ற தொடர் வருவதைப் பார்க்கின்றோம். தாவளம் என்பது வணிகர் குழுவினரின் குடியிருப்புக்களாகும் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. வேலந்தாவளம், நாவல் தாவளம், மஞ்சப்புளித் தாவளம் என்பன அவ்வாறான வணிகர் குடியிருப்புக்களாகும்.

பாலக்காடு, சித்தூர்ப் பகுதியில் மூத்தான், தரகன் ஆகிய தமிழ் வணிக மக்கள் வாழ்கின்றனர். வணிகமே அவர்களது தொழில். பலர் இன்றும் பாலக்காட்டுப் பகுதியில் நகைக்கடை வைத்துள்ளனர். 'கொச்சி மாநிலக் கையேடு' அவர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது:

> '' 'தரகு' பெற்று வாணிகம் செய்தவர் தரகர் ஆயினர். இவர்கள் தமிழர்கள். பாலக்காட்டுக் கணவாய் வழியாக வந்து கேரளம் - தமிழ் நாட்டிடையே வியாபாரம் செய்பவர்கள். பிற்காலத்தில் இவர்கள் நாயர்களைப் போன்று பழக்க வழக்கங்களை மேற்கொண்டுள்ளனர். கொச்சி அரசுக்குட்பட்ட சித்தூர்ப் பகுதியில் இவர்கள் வாழுகின்றனர். சபரிமலையில் திருவாதிரை விழா

வைக்கூட இவர்கள் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். இவர்கள் கேரள மாநிலத்தில் மாநிலத்திற்குரிய பிறர் பின்பற்றும் மருமக்கள் தாயத்தைப் பின்பற்றாமல் தமிழ் நாட்டைப் போலவே மக்கள் தாயத்தைப் பின்பற்றுகின்றனர். 1881 மக்கள்தொகைக் கணக்குப்படி மலபாரில் மட்டும் (பாலக்காடு அடங்கிய பகுதி) 20985 ''செட்டி'' சாதியினர் இருந்ததாகப் புள்ளி விபரம் கூறுகிறது. பெண்கள் ''செட்டிச்சி'' என்று அழைக்கப் படுகின்றனர்''.

"The Tarakans (literally, brokers) appear to have been Tamil Sudras who settled on this side of the Palghat Gap with a view to act as trade medium between the Malayalam and Tamil countries. They gradually adopted most of the customs and usages of the Nayars, and have in recent years been practically assimilated with them. In this state they are found only in the Chittur Taluk. **They follow Makkattayam.** Their women wear a thick string round their neck, by which they are distinguished from other Nayar women."[112]

எட்கார் தர்ஸ்டன், தன் 'தென்னகச் சாதிகளும் பழங்குடிகளும்' என்னும் நூலில்,

"Chetties of Coimbatore for example who settled in Palghat and Valluvanad within living memory have developed by this time into Nayars"

என்று கூறியுள்ளார்.[113] இங்குக் குடியேறிய செட்டியார்களில் மூத்தான்மார்கள் என்போர் பாலக்காட்டில் ''மூத்தான் தரை'' என்ற இடத்தில் மிகப் பெரும்பான்மையாக இன்றும் வாழுகின்றனர். மலபார் வரலாற்றேட்டிலும் மூத்தான்கள் வெளிமாநிலத்தவர் என்றும் அவர்கள் தமிழ் வைசியர் என்றும் கூறப்படுகிறது. அங்காடிப்புரத்திலும் மூத்தான்கள் உள்ளனர் என்று அந்நூல் குறிப்பிடுகிறது.[114] அவர்கள் சோழ நாட்டில் வாழ்ந்த வைசியர் என்றும் சோழ மன்னன் தங்கள் செட்டியார் குலத்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதை விரும்பவே சோழ மன்னனுக்குத் தங்கள் குலத்துப் பெண்ணைக் கொடுக்க விரும்பாமல் காவிரிப்பூம்பட்டினத்தை எரித்துவிட்டுப் பின் சோழன் சீற்றத்

துக்கு அஞ்சி நாங்கள் இங்கே (பாலக்காட்டுக்கு) குடிவந்து விட்டோம் என்று கூறுகின்றனர். தனவணிகராகிய பன்னிரண்டாம் செட்டியார்களும் இதே கதையைத் தங்களுக்கு உரியதாகக் கூறுகின்றனர்.

**நகரத்தார்**

கேரள மாநிலத்துத் திருவாலத்தூர் பற்றிய மெக்கென்சியின் பழஞ் சுவடி ஒன்றில் அங்குத் திருப்பணி செய்த 102 நகரத்து நகரத்தார் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றில் கருவூர், காங்கேயம், விசயமங்கலம், பழனி, கன்னிவாடி, அந்தியூர், கோயமுத்தூர், ஈரோடு, பவானி, சத்தியமங்கலம் ஆகிய கொங்கு நாட்டு ஊர்களிலிருந்து பாலக்காடு பகுதிக்கு வந்த நகரத்தார் என்னும் வணிகர்கள் குறிப்பிடப் பெறுகின்றனர்.[115]

**பன்னிரண்டாம் செட்டியார்கள்**

பாலக்காடு மாவட்டத்தில் உள்ள எலப்புள்ளி அருகே பாறை என்ற இடத்தில் உள்ள தொன்மையான மாங்கரையம்மன் கோயிலைக் குல தெய்வமாகக் கொண்டவர்கள் பன்னிரண்டாம் செட்டியார்கள். தனவணிகரான இப்பன்னிரண்டாம் செட்டியார்கள் கேரளத்துக்கும் கொங்கு நாட்டுக்கும், சோழ நாட்டுக்கும் இடையே பண்டமாற்று வணிகத்தில் ஈடுபட்டிருந்தவர்கள்.

தமிழ் நாட்டுத் தானிய வகையைக் கேரளாவில் விற்று விட்டு, இச்செட்டியார்களில் பலர் மிளகுப் பொதிகளைக் காளைகள்மீது ஏற்றிக்கொண்டு தமிழ் நாடு வந்தபோது இப்பாறைப் பகுதியில் தங்கினர். ஒரு பெண் தோன்றித் தன் தலைவலிக்குக் கசாயம் வைத்துச் சாப்பிட மிளகு கேட்டாள். மிளகை இலவசமாகக் கொடுக்க விரும்பாத செட்டியார்கள் இது மிளகு அல்ல பயிறு என்று கூறிவிட்டனர். பின் தங்கள் ஊர் வந்து பார்க்கும்போது மிளகுப் பொதிகள் அனைத்தும் பயிறாக மாறியிருக்கக் கண்டனர். பின் அங்குக் தோன்றியது ஒரு பெண் தெய்வம் என்று உணர்ந்து அத்தெய்வத்தை வேண்டினர். பயிறு மிளகாகியது. அடுத்தமுறை மேற்குக் கடற்கரைக்குச் சென்று வரும்போது பாறைப் பகுதியில் அப்பெண்ணிற்குக் கோயில் கட்டினர். அதுவே இன்றைய பாலக்காட்டுப் பாறை மாங்கரையம்மன் ஆகும். விசுவநாதர் கோயிலும் உடன் உள்ளது. இக்கோயிலில் மேற்கண்ட வரலாறு சுதைச் சிற்பமாக வரையப்பட்டுள்ளது.

கி.பி. 1115ஆம் ஆண்டு ஜய வருடம் தை மாதம் 11ஆம் தேதி திங்கட்கிழமை முத்துச் செட்டியார் என்பவர் இக்

கோயிலைக் கட்டியதாகக் கூறுகின்றனர். இன்றும் கொங்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்து 12ஆம் செட்டியார்கள் என்பவர்கள் இக்கேரளப் பகுதிக் கோயிலைத் தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர். இக்கோயிலை இன்றும் இவர்களே நிர்வகித்துத் தமிழ் முறைப்படி வழிபாடியற்றி வருகின்றனர். கோவிலும் தமிழ் நாட்டு அமைப்பிலேயே கட்டப்பெற்றுள்ளது. இங்குள்ள ஒரு தீர்த்தத்திற்கு 'இராமசாமி தீர்த்தம்' என்று பெயர். 1919, 1961 ஆம் ஆண்டுகளில் இக்கோயில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

**வெள்ளாஞ் செட்டியார்கள்**

கொங்கு வேளாளர்களோடு மிகவும் தொடர்பு கொண்டவர்களும், கொங்கு வேளாளர்களின் பல்வேறு பழக்க வழக்கங்களைப் பின்பற்றுபவர்களும் வெள்ளாஞ் செட்டியார்கள் ஆவர்.

இவர்களும் பண்டைய காலம் முதற்கொண்டே தமிழ் நாட்டுக்கும் கேரளாவிற்கும் இடையில் வியாபாரம் செய்து வந்தவர்கள். கி.பி. 1703ஆம் ஆண்டு பாலக்காட்டின் அருகேயுள்ள வெள்ளாதி என்ற ஊரில் வாழ்ந்த வெள்ளாஞ் செட்டியார்களில் காளிச் செட்டியார், சின்னிச் செட்டியார் ஆகிய இருவரும் சோழ நாட்டின் சிறந்த ஒரு தலமான திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயிலுக்கு நெய்த் தோரண விளக்குகள் அமைக்கவும், வழிடாடு செய்யவும் கொடை கொடுத்துள்ளனர். இதுபற்றி அவர்கள் அம்பலவாணத் தம்பிரான் அவர்களுக்கு எழுதித்தந்த செப்பேடு இன்றும் சோழ நாட்டுத் திருவாடுதுறை ஆதீனத்தில் உள்ளது. கேரள தேச வரலாறும் கேரளத்து மக்களில் வெள்ளாஞ் செட்டிகள் என்பவர்களைப் பற்றிக் கூறுகிறது.[116]

'மலபார் வரிசை' என்னும் நூலில் சி.கோபாலன் நாயர் பின்வருமாறு கூறுகின்றார்.

> "Their ancesters hailed from Dharapuram in Coimbatore and were vellaw chetties, who for some reason, not clearly ascertainable, left their country, passed through Sathiamangalam in Coimbatore, through Melpetta in mysore, ponkoli in wynad.... (p.55).

**ஐநூத்தாஞ் செட்டியார்கள்**

தமிழ்க் கல்வெட்டுக்களில் பல நாடுகட்கும் சென்று வணிகம் செய்யும் பல வணிகக் குழுவினர் பெயர்கள் குறிக்கப் பெறுகின்றன. அவர்களில் 'திசையாயிரத்து ஐநூற்றுவர்'

என்பவர் ஒருவர். அம்மரபினர் இன்று ஐநூத்தாஞ் செட்டியார்கள் எனப்படுகின்றனர். அவர்கள் கோவை மாவட்டத்துத் திருப்பூர், அவிநாசி போன்ற இடங்களில் இன்றும் வாழுகின்றனர். பாலக்காட்டுப் பகுதியில் தேனாரி போன்ற இடங்களில் இந்தச் செட்டியார் மரபினருக்குக் கோயில்கள் இருக்கின்றன. ஐநூத்தாஞ் செட்டிகளில் ஒரு பிரிவினரான வேளாஞ் செட்டிகள் கொற்றனூர் (சங்கரண்டாம் பாளையம்) பெரிய நாயகி கோயில் திருப்பணி செய்துள்ளனர்.

## 24 மனை நாயக்கர்

24 மனை நாயக்கர்கள் எனப்படும் மரபினர் தமிழ் நாட்டில் வாழ்கின்றனர். அவர்கள் எருமைக்கார நாயக்கர் எனப்பட்டனர். கால்நடை வணிகத்தில், குறிப்பாக எருமை வணிகத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்த காரணத்தால் அவர்கள் அப்பெயரில் அழைக்கப்பட்டனர் போலும்.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த எருமைக்கார நாயக்கர்கள் கேரள மாநிலத்தில்,

கண்ணனூர்
கள்ளிக்கோட்டை
கொல்லம்
பாலக்காடு

ஆகிய பகுதிகளில் குடியேறி வாழ்ந்து வணிகம் செய்து வந்தனர் என்று திருச்சி மாவட்டம் திருவரங்கம் கல்வெட்டுக் கூறுகிறது.

அவர்கள் காமாட்சியம்மன் வரப்பிரசாதத்தால் பிறந்தவர்கள் என்றும், 'சாந்த குலத்தவர்' என அழைக்கப்பட்டனர் என்றும் அக்கல்வெட்டுக் கூறுகிறது.

கேரளப் பகுதிகளிலிருந்து திருவரங்கம் ''இராமானுஜ கூடத்திற்கு'' அவர்கள் செய்த தர்மத்தைத் தமிழ்நாட்டில் திண்டுக்கல், மதுரைப் பக்கமிருந்த 24 மனை நாயக்கர்கள் கவனித்துச் செய்து வந்தார்கள் என்றும் அக்கல்வெட்டுக் கூறுகிறது.

அவர்கள் கட்டிய 'இராமானுஜ கூடம்' திருவரங்கம் மூங்கிகுத்துத் தெருவில் இருந்ததாம்.[117]

## தட்டார்

கேசரி வர்மா எனப்படும் கோணிக்கால் யெடத்தில் மகாராசன் கல்பாத்தியில் எடுத்த விசுவநாதர் ஆலயத்திற்குத்

தமிழ்நாட்டுத் தட்டார்கள் கொடை கொடுத்தது பற்றியும் ஒரு மெக்கென்சி சுவடிக் கூறுகிறது:

''ராசா செங்கோல் மனுநீதி மொறைமை தவறாத கேசரி வருமா ராசகுல திலகனாகிய கோணிக்கால் யெடத்தில் மகாராசன் பிறிதிஷ்டிச்ச கல்பாத்தி விசுவநாதனுக்கும் விசாலாட்சி அம்மனுக்கும் சபாபதிக்கும் திரிகால பூசை படித்தரம் உள்மோளம் புறமோளம் தேர் திருநாள் முதலாகிய செலவுகளுக்கும் கலச பரிபாலனம் செய்யாறு பாலக்காட்டுச் சேரிப் பேட்டையில் குடியானசங்குதி யெம்பூத்தாரு தேசத்துப் பலரும் பட்டக்காரரும் எட்டு வகுப்பும் கூடி விசுவநாத சுவாமிக்கும் விசாலாட்சி அம்மனுக்கும் சபாபதிக்கும் எழுதிக்கொடுத்தோம் தாம்பூர சாதனப் பட்டயம்ஆயிரத்தலைவர் தட்டாற்பத்தில்மேல்முறித்தட்டார் வடக்காந்தட்டார், முத்துப் பட்டணத்துத் தட்டார் மருங்குன்னில் தட்டார்''

என்பது பட்டயப் பகுதியாகும்.

### சோழ நாட்டு அந்தணர்கள்

கேரள நாட்டுக் கடற்கரையில் பண்டைய தலைநகரான கொடுங்கோளூரின் அருகே திருஅஞ்சைக்களம் என்றதொரு சைவத்தலம் உண்டு. தமிழ் நாட்டிலிருந்து கி. பி. 9ஆம் நூற்றாண்டில் சுந்தரர் அங்குச் சென்று வழிபட்டுத் தேவாரம் பாடியுள்ளார். இன்றுவரை தமிழ் நாட்டுக்குச் சைவர்கள் அதனைச் சிறந்த யாத்திரைத் தலமாகக் கொள்ளுகின்றனர்.

இத்தலத்தைப் பற்றி மெக்கென்சி சுவடியிலிருந்து பிற்காலச் செய்திகள் சில கிடைக்கின்றன.

அந்நியர் படையெடுப்பின் காரணமாக ஏற்பட்ட போரில் இக்கோயிலில் இருந்த இறைவன் விக்கிரகம் உடைந்துவிட்டது. பின்னர் மீண்டும் அத்தலத்தில் சிவபெருமானைப் பிரதிட்டை செய்வதற்காகச்சோழநாட்டுத் தில்லைச் சிதம்பரத்திலிருந்து. முத்து வெளுத்த நம்பியார், கறுத்த நம்பியார் என்ற அந்தணர்கள் இருவர் வந்து மீண்டும் பிரதிட்டை செய்தனர் என்று கூறப்படுகிறது.

பின்னர்ச் சிதம்பரத்திலிருந்து இங்கு வந்த பண்டாரம் ஒருவரால் ஸ்ரீசந்திரசேகரர், நடராசர் என்ற வேறு இரண்டு

விக்கிரகங்கள் கொண்டுவரப்பட்டுப் பிரதிட்டை செய்யப் பட்டன.

இதனால் தமிழ் மக்கள் தொடர்பும், குடியேற்றமும் இவ்வூரில் ஏற்பட்டு இன்றும் வாழ்ந்து வருகின்றனர். சோழ நாட்டு அந்தணர்களும் கொங்கு நாட்டு வழியாகவே கேரளா சென்றிருக்க வேண்டும்.

**கம்மாளர்கள்**

ஆசாரிமார்கள் எனப்படும் தமிழ் நாட்டுக் கம்மாளர்கள் பலர் சித்தூர், பாலக்காட்டுப் பகுதியில் குடியேறினர். அவர்களுள் மரஆசாரி, கல்லாசாரி, மூசாரி, கருமான், தட்டான் தோல்கொல்லன் போன்ற பல பிரிவினர் இருந்தனர். இவர்கள் அனைவரும் மருமக்கள் தாயம் இன்றித் சுமிழ்நாடு போல் மக்கள் தாயத்தைப் பின்பற்றுகிறவர்கள்.[118]

**கொங்கு மலையர்கள்**

கேரளத்தில் பல பகுதிகளில் உள்ள மலைப் பகுதியில் 'மலையர்' எனப்படும் மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர். ஆனால் பாலக்காடு மாவட்டம் சித்தூர் வனப் பகுதியில் வாழும் மலையர்கள் ''கொங்கு மலையர்கள்'' என அழைக்கப் படுகின்றனர். அவர்கள் கோயமுத்தூர் மாவட்டத்திலிருந்து குடியேறியவர்கள். அவர்கள் பேசும் ''மலைமொழி'' தனி மொழியாக இருப்பினும் அது மலையாளத்தைக் காட்டிலும் தமிழோடு நெருக்கமுடையதாக உள்ளது. அவர்கள் கேரளாவைப் போன்று அல்லாமல் மக்கள் தாயத்தைப் பின்பற்று பவர்களாகவே உள்ளனர்:

> "The Malayars of the Chittur forests are called Malasars or Kongu Malayans, and are supposed to have been immigrants from the Coimbatore forests. They speak a patois more akin to Tamil than to Malayalam. All the hill tribes follow Makkattayam.[119]"

**வேளாளர்கள்**

மன்னாடியார்கள் குடும்பங்களே அன்றி இப்பகுதியில் உயர்நிலையில் விவசாயம் செய்யும் வேளாளர்களும் உள்ளனர். தமிழ் பேசும் கொங்கு இனத்தாரான இவர்கள் சித்தூர், பாலக்காடு பகுதியில்தான் பெரும்பாலும் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் சேலம், கோயமுத்தூரிலிருந்து குடியேறியவர்கள். இவர்கள் ''கொங்கு வேளாளர்கள்'' எனப்பட்டனர். கொங்கு நாடு போலவே சித்தூர், பாலக்காடு

பகுதியில் வாழும் வேளாளர்கள் தங்கள் திருமணத்தை அந்தணர் இல்லாமல் நடத்துகின்றனர். இதனைக் கொச்சி மாநிலக் கையேடு பின்வருமாறு கூறுகிறது:

"Vellalas hold the highest position among the Tamil Sudras, and agriculture is their chief occupation. The Cochin Vellalas, who are found mostly in the Chitur Taluk, are immigrants from Coimbatore and Salem, and belong therefore to the Kongu branch of the caste. Brahmans do not officiate at their marriage ceremonies as they do in the case of other divisions of Vellalas. Agriculture is the occupation of most of them, and some are traders as well. **Gounda** is their title, and their pollution period is fifteen days".[120]

1881ஆம் ஆண்டுக் கணக்குப்படித் தமிழ் பேசும் வேளாளர்கள் மட்டும் சித்தூர்ப் பகுதியில் 7525 பேர் இருந்ததாகப் புள்ளிவிபரம் கூறுகிறது:

"**Vellalans:** Tamil cultivators all of whom are to be found mainly in the Palghat, Valluvanad, and wynad Taluks" என்பது இவர்களுக்குக் கூறும் விளக்கமாகும்.

**வேட்டுவர்கள்**

கேரள வண்ணாமடைப் பகுதியில் உள்ள தமிழ்க் குடும்பங்கள் உள்ள ஊர்களில் வேளாளரோடு வேட்டுவர்களும் குடியேறி வாழுகின்றனர். ஒற்றுமையாக ஒரே கோயிலில் வழிபாடு செய்கின்றனர். அவ்வூர்களில் வேட்டுவர்களே கொத்துக்காரர்களாக உள்ளனர்.

**கொங்கு வழியாகச் சோழ நாட்டு வணிகர்கள்**

சோழ நாட்டு வணிகர்களும் கொங்கு நாட்டின் வழியாக சேர நாடு சென்று மிளகு போன்ற மலைநாட்டு விளை பொருள்களைப் பலவகையான விலங்குகளில் ஏற்றிக்கொண்டு மீண்டும் கொங்கு நாட்டு வழியாகவே சோழ நாடு திரும்பியுள்ளனர். பூந்துறைப்புராணம் என்னும் கொங்கு நாட்டு நூல் ஒன்று இதனைப்பற்றிப் பாடுகிறது:

'கடையுகத்தில் சோணாட்டில் வணிகர் கோமான்
கைப்பொருள்கொண்டு உயர்மேற்கில் கடிதில் எய்திப்
படைபயிற்றும் சேரமான் தனது நாட்டில்
பலவிலங்கால் மிளகேற்றிப் பரிவால் எய்தி'

என்பது அந்தப் பாடல் பகுதியாகும்.

**தமிழ்ப் பட்டர்கள்**

பாலக்காட்டுப் பகுதியில் 'பட்டர்கள்' என அழைக்கப்படும் இவர்களைத் 'தமிழ்நாட்டுப் பிராமணர்கள்' என்றே கூறுகின்றனர். இப்பகுதியில் நம்பூதிரிகளைவிட இவர்கள் மிக அதிகமாக உள்ளனர். எல்லா இடங்களிலும் தங்கள் அறிவுக் கூர்மையாலும், கல்வி, பலதுறைத் தொடர்புகளினாலும் மிகவும் மேனிலையில் உள்ளதாகக் ''கொச்சி மாநிலக் கையேடு'' கூறுகிறது. கல்வியால், வல்லமையுடன் உயர்ந்த அரசுப் பணிகளில் அமர்ந்திருந்தனர். இவர்கள் எவ்வளவுதான் தூய்மையானவர்கள், உயர்ந்தவர்கள் என்று காட்டிக் கொண்டாலும் நம்பூதிரி பிராமணர்கள் இவர்களைக் கோயிலுக்குள் அனுமதிப்பதோ, சமய, ஆலயச் சடங்குகளைச் செய்யுமாறு அனுமதிப்பதோ இல்லை. நம்பூதிரி குடும்பத்தினர், தமிழ் அந்தணர்களான பட்டர்கள் சமைக்கும் சாப்பாட்டைக்கூடச் சாப்பிடமாட்டார்களாம். ஏனெனில் இவர்கள் கொங்கு நாட்டிலிருந்து, குடியேறியுள்ளமையேயாகும். தமிழ் அந்தணர்கள் தனித்தனியாக அன்றிப் பலர் கூட்டமாகக் குடியேறிப் பற்பல ஊர்களில் வாழ்கின்றனர். எடுத்துக்காட்டாகப் பழையனூர் என்னும் ஊரில் ஒரு கிராமம் போலவே வாழ்கின்றனர். இதனைக் 'கொச்சி மாநிலக் கையேடு' 'There is a large colony of Tamil Brahmins in the place' என்று கூறுகிறது. வேளாளர்கள் குடியேறியதாலேயே அவர்களுடன் அவர்களுக்காக பெரும்பான்மையான அந்தணர்கள் குடியேறியுள்ளனர்.

பாலக்காட்டுப் பகுதியில் குடியேறியுள்ள இந்தத் தமிழ்ப் பிராமணர்களைத் தமிழர்கள் 'பாலக்காட்டுப் பிராமணர்கள்' என்றே அழைக்கின்றார்கள். ஆனால் கேரளாவில் இவர்களைப் 'பரதேசிகள்' அதாவது பிறநாட்டிலிருந்து குடியேறியவர்கள் என்று அழைக்கின்றனர். இவர்கள் 'சோழிய பிராமணர்' என்றும் அழைக்கப்பட்டனர். இவர்களுக்குத் தமிழ்நாட்டுப் பிராமணர்களைப் போல் பின்குடுமி உண்டு என்றும் கூறப்படுகிறது.

நம்பூதிரி பிராமணர்கள் இத்தமிழ்நாட்டுப் பிராமணர்கட்குக் கொடையாகத் தத்தம் செய்து அளித்த ஊர்தான் பாலக்காட்டு மாவட்டத்தில் உள்ள தத்தமங்கலம் என்ற ஊர். அதற்கேற்ப இன்னும் தமிழ்ப் பிராமணர்களே இங்கு பெரும்[illegible] வாழ்கின்றனர்.

'கேரள விஜயம்' என்ற யாத்திரை வரலாற்று நூலின் ஆசிரியர் பரணீதரன் பின்வருமாறு எழுதுகின்றார்:

> 'முன் காலத்தில் தமிழகத்திலிருந்து கேரளத்துக்குச் சென்ற அந்தணர்களில் பெரும்பாலோர் பாலக்காட்டில் குடியேறினர். அவர்கள் கோவை, திருச்சி, தஞ்சாவூர், தென் ஆர்க்காடு மாவட்டங்களிலிருந்து வந்தவர்கள். பாலக்காடு மாவட்டம் முழுவதிலும் பல கிராமங்களில் இன்னும் அந்தணர் வீதிகளையும் அவர்கள் கட்டிய கோயில்களையும் காண முடியும். கேரள சம்பிரதாயங்களுடன் தமிழகக் கலை, கலாச்சாரப் பண்புகளையும் இணைத்து ஆகம வழிமுறைகளையும், வேத மத நெறிகளையும் பெருமளவு காப்பாற்றி வருகிறார்கள். இம்மாதிரி சுமார் 90 கிராமங்கள் இன்னும் இருந்து வருகின்றன'.

கள்ளிக்கோட்டை அரசர்களான சாமுரின் அரசர் ஐப்பசி மாதம் ரேவதி நாள் முதல் திருவாதிரை வரை ஒரு வாரத்திற்குக் கற்றறிந்த அந்தணர்கட்குக் கொடை அளிக்கும் விழாவாகிய 'ரேவதி பட்டதானம்' தமிழ்நாட்டு அந்தணர்கட்குக் கொடையளிக்கும் விழாவேயாகும். தமிழ் அந்தணர்களே கொடை பெற்றனர். தமிழ் அந்தணர்கள் மிகுதியாகக் கல்பாத்திப் பகுதியில் வாழுகின்றனர். இந்த ரேவதி பட்டதானம் இராமேச்சுவரம் செல்லும் அந்தணனுக்கு அளிக்கப்பட்டதாகக் 'கேரள தேச வரலாறு' கூறுகிறது.[121]

இன்று கேரளாவில் அமைச்சராக உள்ள மாண்புமிகு சுந்தரம் அவர்கள் தமிழைத் தாய்மொழியாக உடைய தமிழ்நாட்டுக் கேரள அந்தணர் ஆவார். திவானாக இருந்த சர்.சி.பி.இராமசாமி அய்யரின் செயலாளராக விளங்கிய சிதம்பர அய்யர் என்பவரும் கேரளத்துத் தமிழ் அந்தணரே.

இந்தியாவிலேயே கேரளத்துத் தமிழ் அந்தணர்களின் கிராமம்போல் தூய்மையான அழகிய கிராமத்தைப் பார்த்ததில்லை என்று புக்கானன் தன் யாத்திரைக் குறிப்பில் எழுதியுள்ளார்.[122]

### சேட்டன்–கைக்கோளர்

தேவாங்கச் செட்டிகளும் (சேட்டன்) கைக்கோளர்களும் பாலக்காட்டுப் பகுதியில் நெசவுத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் கோவையிலிருந்து வந்தவர்கள்

என்றும், தமிழைத் தாய்மொழியாக உடையவர்கள் என்றும் 'கொச்சி மாநிலக் கையேடு' கூறுகிறது. தேவாங்கர்கட்குக் கன்னடம் தாய் மொழியாக இருந்தாலும் கோவைப் பகுதியிலிருந்து வந்து குடியேறியதால் தமிழையே தாய்மொழியாகக் கொண்டனர் போலும்! சிலர் சொந்த நிலம் பெற்று உழவுத் தொழிலையும் மேற்கொள்ளுகின்றனர்.

### தமிழ்க் கிறித்தவர்கள்

பாலக்காடு மாவட்டம் சித்தூர் வட்டம் கொழிஞ்சாம் பாறை போன்ற பகுதிகளில் வாழும் தமிழர்களில் சிலர், கிறித்தவர்களாக மாறினர். அவர்கள் தமிழர்களாக இருந்து மதம் மாறிய காரணத்தால் கோயமுத்தூர் பிஷப்பிற்கு உட்பட்டு வழிபாடு முதலியன செய்தனர்:

"The Christians are recent Tamil converts, and are under the jurisdiction of the Bishop of Coimbatore".[123]

### நாவிதர் வண்ணார்

மலையாள நாயர்களில் உள்ள பல்வேறு பிரிவினர்களில் நாவிதரும், வண்ணாரும் உள்ளனர். அவர்களை இனங்ஙன், வெளக்கத்தரன், வெளுத்தேடன் நாயர் என்று மலையாளத்தில் அழைப்பர். ஆனால் தமிழ் பேசும் தமிழர்களான அம்பட்டர் எனப்படும் நாவிதரும், வண்ணாரும் மன்னாடியார் வாழும் பாலக்காட்டுப் பகுதியில் உள்ளனர். இவர்கள் தமிழர்கள் என்றே லோகன் 'கொச்சி மாநிலக் கையேடு' என்னும் தன் நூலில் குறிக்கின்றார். இவர்களும் கொங்குப் பகுதியிலிருந்து குடியேறியவர்களே.[124]

### மக்கள் தொகைக் கணக்கீட்டு அறிக்கை

1891ஆம் ஆண்டு எடுத்த கேரள மக்கள் தொகைக் கணக்கீட்டு அறிக்கை பின்வருமாறுக் கூறுகிறது:

'The facts seems to be that successive waves of immigration brought from the Tamil country different castes and tribes and these settling down in the country adopted the customs and manners and assumed the caste names of the more respectable of the community that surrounded them. This process of assimilation is going on even yet'.

எனவே கேரளப் பகுதிக்கு மன்றாடியார்கள் எனப்படும் வேளாளத் தலைவர்களாகிய பட்டக்காரர்கள் - உழவுத் தொழில் செய்யும் வேளாளர்கள் ஆகியவர்கள் மட்டும் குடியேறவில்லை; அவர்களுடன் பற்பல சாதியினரும் குடியேறியுள்ளனர் என்பதனை நாம் மேற்கண்ட பல சான்றுகளால் அறிகின்றோம்.

கொங்கு நாட்டுக் குடியேற்றம் பற்றிய பல்வேறு வேளாளர் ஆவணங்களில் நற்குடி 48 ஆயிரமாக வந்த வேளாளர்கள் தங்களுடன் பல்வேறு சமூகத்தாரையும் இணைத்து அழைத்து வந்தவர்களைப் பசுங்குடி 12 ஆயிரம் என்று கூறும். இம்முறையையே பழக்க வழக்கத்தையே கேரளாவில் குடியேறும் போதும் கொங்கு வேளாளர்கள் கைக்கொண்டனர் என்பதையே மேற்கண்ட குறிப்புக்கள் நமக்குக் காட்டுகின்றன.

**மலபார் வரலாற்றேடு**

மலபாரில் 4 சதவீதம் தமிழ் பேசப்படுவதாகவும் கிழக்குக் கடற்கரை வணிகர்களும், தமிழ்ப் பட்டர் எனப்படும் அந்தணர்களும், வைநாடு தோட்டத் தொழிலாளர்களும் கவுண்டர்களும் பிறரும் தமிழ் பேசும் மக்கள் ஆவர் என்ற செய்தி மலபார் வரலாற்றேட்டில் கூறப்படுகிறது. இவர்கள் அட்டபாடிப் பள்ளத்தாக்கின் வழியாகக் கொங்கிலிருந்து சேர நாட்டுப் பகுதிக்குக் குடியேறியவர்கள் என்ற செய்தியும் கூறப்பெறுகிறது:

> 'Tamil is the language of 4 percent, made east coast merchants and Pattar Brahmin in Palghat of estate coolies in the Wynad, and of the Goundan and other inhabitant of the Attapadi Valley'.[195]

இவர்களில் பலர் இன்று மலையாள நாட்டுப் பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல; தங்கள் தாய்மொழி மலையாளம் என்றும் கூறிக் கொள்ளுகின்றனர். வெளியே பழகுமிடங்களில் மலையாள மொழியே பேசுகின்றனர்; ஆனால் இவர்கள் தங்கள் வீடுகளில் தமிழே பேசிவருவதாகவும் குறிப்பாகக் கொச்சி சமஸ்தானப் பகுதியில் வாழும் தமிழ் அந்தணர்களிடம் இப்பழக்கம் மிகுதியாகக் காணப்படுவதாகவும் இந்நூல் கூறுகிறது.

இவர்கள் (தமிழர்கள்) பாலக்காடு, வள்ளுவநாடு, வைநாடு ஆகிய பகுதிகளில் பெரும்பாலும் காணப்படுகின்றனர். இதை,

'The Chief are the Tamil Chetties and Goundans, who Vellalans or Tamil Cultivators all of whom are to be found mainly in the Palghat, Walluvanad, and Wynad Taluks'

என்று கூறுகிறது.[126]

மலபார் வரலாற்றேடு (1908), மலபார்ப் பகுதியில் குடியேறிய தமிழ் மக்களில் சிலரைப் பற்றியும் குறிப்புக்கள் தருகிறது.

சாலியர் (நெசவாளர்கள்)
ஆண்டி
செக்கான்
கைக்கோளன்
கும்பாரன்
வேழம்பன்
பண்டாரம்
கடுப்பட்டன்
குறும்பர்
காடர்
கொங்கு மலையாளன்
பறையன்
பரதேசி
தமிழ் அம்பட்டன்

இவர்கள் பெயரைக் குறிப்பிடும் இந்நூல் இவர்கள் பேசும் மொழி தமிழ் என்றும், பழக்க வழக்கமும், வழிபாட்டு முறையும் அவர்களைக் கொங்கு நாட்டோடு தொடர்பு படுத்திக் கூறுகிறது. இவர்களில் சிலர் சேரமான் பெருமாள் காலத்தில் குடியேறியதாகவும் அந்நூல் கூறுகிறது. இவர்கள் அனைவரும் தமிழ்நாட்டைப்போல் மக்கள் தாய் வழியைப் பின்பற்றுபவர்கள்.

**முதல் குடிகள்**

சித்தூர்ப் பகுதியில் கொங்கு நாட்டுத் தமிழக வேளாளர்கள் குடியேறினர் என்பது பல ஆதாரங்களால் நிரூபிக்கப் படுகிறது. ஆனால் மற்றொரு உண்மையை நாம் மறந்து விட

முடியாது. இப்பகுதியில் கொங்கு வேளாளர்கள் குடியேறுமுன் பெரும்பகுதி காடாகவே இருந்தது. காடாக இருந்த பகுதியை அழித்து நாடாக்கிய இவர்களை இப்பகுதியில் முதற்குடிகள் என்றே கூறவேண்டும்.

இப்பகுதி காடாக இருந்ததை வெட்டிப் பிளந்தனர் என்று 'சித்தூர் நாலுதேசப்பற்று' என்ற மெக்கென்சி சுவடி கூறுகிறது.[127] இச்சுவடிக்கு 'மன்னாடியார் வரலாறு' என்றும் தலைப்புக் காணப்படுகிறது. இச்சுவடியும் தமிழில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது:

> 'வாளையாத்துக்கு மேக்கு சுவர்னகிரிப்பட்டிக்கும் காட்டு மலைக்கும் குருநாதன் கோவிலுக்கும் கிழக்கு தெற்கு மலையாள பர்வதமென்ற தென் மலைக்கு வடக்கு நீலகிரியென்ற வடமலைக்குத் தெற்கு யிந்நால் பாங்குள் பட்டதை வெட்டிப் புளந்து'

என்பது அதன் பகுதியாகும். கானல் பெருமரம் வெட்டித் தெளிவிச்சோம் என்று கூறுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட காடுகள் நம்பூதிரிமார்களுக்கு இருந்தது என்றும் முதலில் அக்காட்டை வாங்கி நாடு உண்டாக்கியவர்கள் மன்னாடியார்கள் என்று 'அய்யாதீட்சிதர் வாக்கு மூலம்' என்ற சுவடி கூறுகிறது:

> 'பனைக்காடாக இருக்கும் பனைமரங்கள் ரொம்பவுண்டு. ஜன்மி முதலாள் மன்னாடி முதலான குடிகள் என்றும், முத்லாள் னம்பூரி மார் கையில் ஜன்மி வாங்கின பேற்களென்றும் சொல்லப்படுகிறது'.[128]

எனவே குடியேறிய மன்னாடியார்களை இப்பகுதியின் பூர்வீகக் குடிகள் - முதன் மக்கள் எனலாம். மேற்கண்ட இரண்டு சுவடிகளும் சென்னையிலுள்ள தமிழ் நாடு அரசின் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ளன.

# மன்னாடியார் குடும்பத் தனித் தகுதிகள்

கேரள மாநிலம் பாலக்காடு பகுதியில் வாழும் மன்னாடியார் குடும்பத்தில் பிற கேரள மக்களுக்கில்லாத பற்பல தனித் தன்மைகள் உள்ளன.

'எட்டுக் கட்டு வீடுகள்' எனப்படும் பெரிய மன்னாடியார் மாளிகைகளின் உள் கடைசிப் பகுதியில் குலதெய்வம் வழிபடு கடவுளாக இருக்கும். கொங்கு நாட்டு மன்றாடியார் குடும்பங்கள் பலவற்றிலும் இவ்வாறு இல்லுறை குலதெய்வங்கள் இருக்கின்றன. பழைய கோட்டையில் மைசூர் மன்னர் அளித்த சாமுண்டீசுவரி தெய்வம் உள்ளது. இது முன்னரும் விளக்கப்பட்டுள்ளது.

கேரளப் பகுதியில் முன்பு மன்னாடியார் வாழ்ந்த பகுதிகளில் அம்மரபினருக்கு மட்டுமே சொந்தமாக ஏராளமான நிலங்கள் இருந்தன. அவர்கள் தவிர மற்றவர்கள் அரசருக்குச் சொந்தமான நிலங்களையே உழுது பயிரிடுதல் வேண்டும். இது கொங்கு நாட்டு மன்றாடியார், பட்டக்காரர்கள் பெரிய நிலக்கிழாராக இருந்த செயல்களை நமக்கு நினைவூட்டுகிறது.

பாலக்காட்டு மன்னாடியார் மாளிகைகளிலும், அவர்கள் பகுதியில் உள்ள வேளாளர்கள் வாழ்ந்த இல்லங்களிலும் தமிழ்நாட்டு அந்தணர்களின் இல்லங்களிலும் மட்டுமே கொங்குநாடு போலச் சிறு ஓடுகள் வீட்டின் கூறையில் வேயப்பட்டிருக்கும் என்று இன்றும் கூறுகின்றனர்.

கொடுங்கலூர்ச் சிவாலயம் தல யாத்திரை மேற்கொண்டு செல்லும் தமிழ்நாட்டவர்கள் கொல்லங்கோடு சென்று அங்குள்ள 'பணிக்கத்' மன்னாடியார் இல்லம் சென்று வணங்கிச் செல்வர் என்பது அண்மைக்காலம் வரை நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். கொடுங்கலூர் தமிழ் நாட்டோடு தொடர்புடையது என்பதை முன்பு கண்டோம்.

மன்னாடியார்கள் கேரளத்தில் அண்மைக்காலம் வரையில் கிராமத் தலைவர்களாக, கிராம அதிகாரிகளாக இருந்தனர். கொங்கு நாட்டிலும் மன்றாடியார்களும், பட்டக்காரர்களும் சமூகத் தலைவர்களாக - ஊர், நாட்டுத் தலைவர்

களாக, நீதி செலுத்தும் குறுநில மன்னர்களாக இருந்துள்ளனர். கேரள மன்னாடியார்கள் ஊராளிகள் என்று அழைக்கப்பெற்றமை இதனை வலியுறுத்தும்.

கொல்லங்கோட்டில் உள்ள அரசர் மாளிகைகட்கு அப்பகுதியில் வாழும் பிற மக்கள் முக்கியமான நாட்களில் மரியாதை செலுத்தச் செல்வர். ஆனால் அவ்வாறு மரியாதை செலுத்த கொல்லங்கோடு பணிக்கத் மன்னாடியார்கள் போன்றவர்கள் செல்லுவதில்லை. அதனால் அரசர்கள் மன்னாடியார் குடும்பங்களைத் தங்களுக்குச் சமமான குடும்பங்களாகவும், பெருமக்களாகவும் எண்ணினர் என்பது தெரிகிறது. கொங்கு நாட்டு மன்றாடியார்களும் பிற வேளாளர்களைப் போல் இல்லாமல் சிற்றரசர்கள் போல் வாழ்ந்தது வரலாற்றில் நாம் கண்ட செய்திகளாகும்.

சித்தூரில் கொங்கம்படை விழா ஏற்பாடுகளிலும், பிற ஊர் விசேடங்களிலும் வருகை புரிகின்ற எல்லா மக்களையும் வந்தாயிற்றா? அல்லது வந்தார்களா? என்று சாதாரணமாகக் கேட்பர். ஆனால் சித்தூர் சம்பத் மன்னாடியார் அவர்கள் குடும்பத்தை மட்டும் 'எழுந்தருளினார்களா?' என்று கேட்பர். இது மன்னாடியார் குடும்பத்துக்கு உள்ள தனித்தன்மையையும் பெருமையையும் நமக்குக் காட்டுகிறது.

மன்னாடியார் வீட்டுப் பெண்கள் தமிழ்நாட்டுப் பழக்க வழக்கப்படி மஞ்சள் பூசிக் குளிப்பது உண்டு. இது பாலக்காட்டில் பிற நாயர் வீட்டுப் பெண்கள் கையாளாத ஒரு வழக்கமாகும். மாத்தூர்ப் பகுதியில் 'தமிழ்நாட்டு வேளாளர்போல் மஞ்சள் பூசிக் குளிக்கும் மன்னாடியார் குடும்பங்களைத் தமிழ்நாட்டுக்கு அனுப்ப வேண்டும்' என்று விளையாட்டாக இன்றும் கூறுவது உண்டு.

# வெள்ளாள அப்பன் நாடு

அப்பன் அல்லது அப்பா என்று தந்தையாரை மட்டுமல்ல மூத்த, இளைய சகோதரர்களை அழைக்கும் வழக்கம் கொங்கு நாட்டில் உண்டு. பெரிய அப்பன், சின்ன அப்பன் என்று அவர்கள் கூறப்பெறுவர்.

மன்னாடியார் மரபினரை 'மன்னாட்டப்பன்' என்று அழைப்பர். இதனை திரு லோகன் அவர்களின் கல்வெட்டுக்கள், பட்டயங்கள் நூலின் சொல்லடைவு நமக்கு மிகத் தெளிவாகக் காட்டுகிறது. இச்சொல் மன்னாடியார் வீட்டு அப்பன் என்பதன் சுருக்கமேயாகும்.

## வெள்ளப்ப நாடு

வேளாளர்களை, வெள்ளாளர் என அழைக்கும் பழக்கமும் உண்டு. வெள்ளத்தை ஆள்பவர் என்பது அதன் பொருள். வெள்ளாள அப்பன் என்ற பெயருடைய கொங்கு நாட்டு வேளாளர்கள் குடியேறிய பகுதியை வெள்ளாள அப்பன் நாடு என அழைத்தனர். வெள்ளாள அப்பன் நாடு என்பதே வெள்ளப்ப நாடு என மருவி விட்டது. கேரள மாநிலம் பாலக்காட்டுப் பகுதிக்கே முன்பு அவ்வாறு பெயர் வழங்கப்பெற்றது.

மலபாரில் 'மகள் பிள்ளை' என அழைக்கப்பட்ட இசுலாமியச் சகோதரர்கள் பெயர் 'மாப்பிள்ளை' என மாறியதை நோக்குக.

கடத்தூர்ச் சிவன் கோயிலில் 'வெள்ளப்ப நாட்டுப் பாலைக்காட்டுச் சேரி' என வருவதை முன்னர் கண்டோம்.

சேலம் சுகவனேசுவரர் கோயில் கல்வெட்டிலும் (வீர பாண்டியனின் 24ஆம் ஆண்டுக் கல்வெட்டு) 'வெள்ளப்ப நாட்டுச் சந்திரன்கோன்' கொடை அளித்தமை கூறப்படுகிறது.

பாலக்காடு மாவட்டம் சித்தூர் வண்ணாமடைப் பகுதியில் குடியேறிய வேளாளர்களின் ஓலைப் பட்டயங்களில் குறிக்கப்பட்ட பல கொங்கு வேளாளக் கவுண்டர் பெயர்களில் ஒரு பெயர் 'வெள்ளாளன் வெள்ளப்ப கவுண்டர்' என்பதாகும்.

கடத்தூர்ச் சிவாலயத் தூண் கல்வெட்டொன்றில்,

1. ‘ஸ்வஸ்திஸ்ரீ வீர
2. சோழதேவற்
3. கு யாண்டு ப
4. த்தொன்பதா
5. வது படைவள
6. வன் வெள்ளப்
7. ப நாட்டுக் கும
8. ரன் குமரன் இ
9. த்தூண் இட்
10. டேந்’

என்ற தொடர் காணப்படுகிறது.

எனவே வள்ளுவநாடு வெள்ளப்ப நாடே என்பதும், கொங்கு வெள்ளாளர்கள் குடியேறிய பகுதிக்கே இப்பெயரிடப் பெற்றது என்பதும் மேற்கூறிய சான்றுகளால் உறுதிப்படுகிறது. அங்கு வாழ்ந்தவர்களாகிய கொங்கு வேளாளர்கள் தங்களின் பூர்வீக இடமாகிய கொங்கு நாட்டுப் பகுதிக்கு வந்து ஆலயத் திருப்பணிகள் செய்தபோது தங்களை வெள்ளப்ப நாட்டினர் என்றும் அழைத்துக் கொண்டனர் என்பதையும் அறிகின்றோம்.

**வள்ளுவ நாடு**

கொங்கு நாட்டு வேளாளர்களில் பட்டக்காரர், பாளையக்காரர் போன்றவர்கள் பாலக்காட்டுக்கும் அதன்அப்பாலும் குடியேறினர்.

அதனால் அப்பகுதி ‘வெள்ளாள அப்பன் நாடு’ வெள்ளாளப்ப நாடு -வெள்ளப்ப நாடு என்று பெயர் பெற்றது என்பதை முன்பு கண்டோம். பின்னர் அப்பகுதி வள்ளப நாடு - வள்ளுவநாடு என்று மாறிற்று. வள்ளப நாட்டுத் தலைவர்கள் ‘வல்லபன்’ என்று பெயர் பெற்றனர். கேரளத் தனிப்பாடல்களில் இன்று ‘வள்ளுவநாடு’ என வழங்கும் பகுதி வெள்ளப்ப நாடு என்றும் வழங்கப்படுவதாகக் கள்ளிக்கோட்டைப் பல்கலைக் கழக வரலாற்றுத் துணைப் பேராசிரியர் டாக்டர் எம்.ஆர்.ராகவ வாரியார் அவர்கள் கூறினார்.

கடத்தூரில் கிடைத்த கொங்குச் சோழர் காலத்துக் கல்வெட்டில் பாலக்காட்டுப் பகுதி 'வெள்ளப்ப நாட்டுப் பாலைக்காட்டுச்சேரி' என்று குறிக்கப்படுகிறது.

இதனால் இப்பகுதி தமிழகக் கொங்கு வேளாளர்கள் குடியேற்றப்பகுதி என்பதும், அப்பகுதித் தலைவர்கள் கொங்கு வேளாளத் தலைவர்களே என்பதும் பெறப்பட்டது.

பேராசிரியர் கு.அருணாசலக் கவுண்டர் அவர்கள் நல்லேபள்ளி அங்கராத்து குடும்பத்தின் முன்னோர். அதாவது அங்கராத் சங்குண்ணி வலிய மன்னாடியார் தந்தை கிருஷ்ண மேனன் 'வள்ளுவநாட்டு மாங்கட மன்னர்' வழியினர் என்று தம் கள ஆய்வில் கண்டறிந்து கூறியுள்ளார்கள். எனவே நல்லேபள்ளி அங்கராத்து இல்லத்தினர் வள்ளுவ நாட்டினருடன் தொடர்பு உடையவர்கள் என்பதால் அவர்களும் கொங்கு வேளாளர்களே என்பது பெறப்படுகிறது.

மேலே கண்ட குறிப்புக்களின் மூலம் வள்ளுவ நாட்டுப் பகுதியினர்களுக்கும், கொங்கு நாட்டு வேளாளர்கட்கும் உள்ள குடியேற்றத் தொடர்புக்குரிய ஆதாரங்களை நாம் காணுகின்றோம்.

**வள்ளுவ நாட்டார் தமிழகத் திருப்பணி**

சேர நாட்டு வள்ளுவ நாட்டில் கொங்கு வேளாளர்கள் குடியேறியது போலவே வள்ளுவ நாட்டுப் பகுதியிலிருந்து தமிழ் நாடு வந்த மக்களும் தமிழ் நாட்டின் பல பகுதிக்கு வந்து ஆலயத் திருப்பணிகள் பல செய்திருக்கின்றார்கள். இது முன்னரே விளக்கப்பட்டது.

கி.பி. பத்தாம் நூற்றாண்டிலேயே சோழ மன்னன் உத்தமசோழன் காலத்தில் மலைநாட்டு வள்ளுவநாட்டு இரவி மங்கலம் என்ற ஊரைச் சேர்ந்த மலையாள ஸ்ரீதரன் குமரன் என்பவன் திருச்சி மாவட்டத் திருவரங்கம் கோயிலுக்குக் கற்பூர விளக்கைக் கொடையாக அளித்துள்ளான். 71 கழஞ்சை மூலப்பொருளாக வைத்து வரும் வட்டியைக் கொண்டு பீமசேனி என்னும் கற்பூர விளக்கை ஏற்படுத்தியதாகத் திருவரங்கம் கல்வெட்டுக் கூறுகிறது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ உத்தம சோழரான கோப்பரகேசரி
2. பன்மர்க்கு யாண்டு 15 ஆவது திருவரங்கத்து பெரு
3. மானடிகளுக்கு மலைநாட்டு வள்ளுவநாட்டு இரவிம
4. ங்கலத்து மலையாளன் ஸ்ரீதரன் குமரன் நிசதம் உரி
5. ய் நறுநெய் யட்டி பீமசேநி கற்பூரம் அஞ்சு கரை

6. இட்டு சந்திராதித்தவல் எரிப்பதாக வைத்த கற்
7. பூரத் திருவிளக்கு ஒன்றினுக்கு வைத்தபொன் செ
8. ம்மை 71 கழஞ்சு இப்பொன் எழுபத்தொரு கழஞ்சின்
9. பலிசையால் செலுத்திவிப்போமாநோம் ஸ்ரீரங்
10. கத்து சபையோம் இது ஸ்ரீ வைஷ்ணவ
11. இரட்சை—

என்பது அக்கல்வெட்டாகும்.[129]

**மாங்கட மன்னர் மரபு**

கள்ளிக்கோட்டை சாமுரின் மன்னர் பரம்பரை, கொங்கு நாட்டுப் பூந்துறை மானீச்சன் என்பவர் பரம்பரை என்றும் அவர் தம்பி விக்கிரமன் கள்ளிக்கோட்டை இளைய அரசர் மரபு இளங்கூறு நம்பியாதிரி மூலப்பாடு என்பதும் வரலாற்று உண்மை; இதனை முன்னரே கண்டோம்.

பூந்துறை மானீச்சன், விக்கிரமன் ஆகிய கொங்கு வேளாளப் பூந்துறைக் கோன் இருவருக்கும் பள்ளிக்கூடத்தில் பாடம் கற்றுக் கொடுத்தவர் 'உண்ணிக் குமரன் நம்பியார்'. எனவே உண்ணிக்குமரன் நம்பியாரும் தமிழ் நாட்டவர் என்பது பூந்துறையிலிருந்து மானீச்சன் விக்கிரமனுடன் சென்றதால் பெறப்படுகிறது. இவர்கள் மரபினர் பிற்காலத்தும் குமரன், குமாரசாமி என்று பெயர் வைத்துக் கொண்டனர்.

சேரமான் பெருமாள் மானீச்சன், விக்கிரமனுக்கு அரசு பதவி கொடுக்கும்போது உண்ணிக்குமரன் நம்பியாருக்கு 'மாங்காட்டு ராச்ச மேனவன்' என்ற பட்டம் கொடுத்தான். இதனைக் 'கேரள தேச வரலாறு' கீழ்வருமாறு கூறுகிறது.

> ''கன்னியாகுமரி முதல் கோகர்ணம் வரைக்கும் கன்னெற்றி புதுப்பட்டணம் வரைக்கும் என்னுடைய ராச்சியம்தான். அதையெல்லாம் ஆண்டு பரிபாலனம் பண்ணுங்கோள் என்று சுவர்ணதீபம் வைத்து, சுவர்ண சங்கத்தில் நீரும், ஆனைக்கோலுக்கு மூன்று கோல்வழி ராச்சியமும் கொக்கோழிக் கோட் கள்ளிக் காடும் பள்ளிமாறாடியும் கத்தியும் நீரும் கொடுத்தார் சேரமான் பெருமாள் என்கிற ராசா. அவர்கள் பின்னையும் இறந்து போயும் கொண்ணும் ராச்சியம் அடங்கி

> வாழுங்கோள் என்று சொன்னார். அந்த நீரைகுக நிரம்பி வாங்கினார் மானீச்சன் விக்கிரவன் ராசா அவர்கள். நிரம்பி வழிந்த நீரைக் கையிலே வாங்கி முன்னே குடித்தான் தொடுவக் களத்திலே உணிக்குமரன் நம்பியார். அப்போ உணிக்குமரன் நம்பியாருக்கு 'மாங்காட்டு ராச்சமேனவன்' என்று சேரமான் பெருமாள் பேர் கொடுத்தார்''.[130]

வள்ளுவ நாட்டு மாங்கட மன்னர் மரபுக்கும் மாங்காட்டு ராச்சமேனவன் என்ற பட்டத்திற்கும் தொடர்பு இருக்கலாம். இருவரும் கொங்கு வேளாளர்களே என்பது குடியேற்றச் சான்றுகளால் விளங்குகிறது.

**அங்கராத்து மண்ணாடியார்**

கேரள மாநிலம் பாலக்காடு அருகே உள்ள நல்லேபள்ளி அங்கராத்து மன்னாடியார் மாளிகையில் இன்று உள்ள பெருமக்கள் தங்கள் பெயருடன் 'மன்னாடி நாயர்' என்ற பட்டப் பெயர்களைப் புனைந்து கொள்கின்றனர். இந்தப் பெயரில் நாயர் என்பது மிகவும் பிற்காலத்தில் அக்குடும்பத்தினர் புனைந்து கொண்ட பட்டப் பெயராகும். நாயர் என்ற பட்டம் அவர்கட்கு இல்லை.

கொச்சி அரசில் 18, 19ஆம் நூற்றாண்டுகளுக்குரிய பல பட்டயங்களும், செப்பேடுகளும் கிடைத்துள்ளன. அந்த பட்டயங்கள் அனைத்திலும் அங்கராத்து மரபினர் 'மன்னாடியார்' என்று மட்டும் குறிக்கப் படுகின்றனர். 'நல்லேபள்ளி அங்கராத்து சங்குண்ணி வலிய மன்னாடியார்' என்றே அவர்கள் குறிக்கப் படுகின்றனர்.

மன்னாடியார் என்பது தமிழ்நாட்டு மன்றாடியார் மரபின் பட்டம் ஆகையால் அப்படியொரு தனிப்பெயர்-தனி மரபு கேரளச் சாதியாகக் குறிக்கப் பெறவில்லை. கேரள அரசு கெசட்டில் சாதிபற்றிய 'மன்னாடியார்' என்ற பெயர் இல்லை. அதனால்தான் இப்பொழுது பலர் நாயர் என்ற பெயரை இணைத்துக் கொள்கின்றனர். அங்காரத்துக் குடும்பத்தினர் 'மன்னாடி நாயர்' என்று பட்டம் அதனால்தான் புனைந்து கொண்டனர். அல்லது அவர்களது தலைமையைக் குறிக்கு முகத்தான் நாயகன் - நாயகர் என்று வழங்கப்பெற்று பெயர் காலப்போக்கில் நாயர் என்று மாறியிருக்கலாம்.

பாலக்காடு வணிகர்கள் 'மன்னாடி' என்று மட்டும் பெயர் புனைந்தவர்கள். பாலக்காடு கொங்கு வேளாளர்

(തമ്പിമാർ) by giving the abovesaid market value (പെറുവത്തം) obtained as water property (നീർമുതൽ) the Nīr Aṭṭippēr (നീർഅട്ടിപ്പേർ) of the abovesaid lands with their upper and lower produce (മേൽഫലവും കീഴ്ഫലവും) and Kuḻi (കുഴി) and the three Kuḻi paṛambas together with two Cheṛumars (വള്ളിയാൻ). Witnesses hereof are Vaḍavannūr Veḷḷāḷars (വടവന്നൂർവെള്ളാളർ) and Kiḻillatt Anantiravars (കിഴില്ലാത്ത അനന്തിരവർ). Written in the hands of the vendor (കൊണ്ടോൻ).

*Note.*—Translated from a copy received from the Nallōpaḷḷi Ankarātta Valiya Mannāḍiyar of Cochin State.

## No. 38.

*Baliyōlakaraṇam* (ബലിയോലകരണം, corruption of വിലയോലകരണം = sale-deed), executed in the solar month (ഞായർ) of Makaram of the year 925.[1] Kāliyatt Vīṭṭil Kunyan Nambi and heirs (തമ്പിമാര) having received (വാങ്ങി) the current market[2] value (അന്നപെറും പൊൻകാണം വില) sold (വിലകൊടുത്താർ) the Kurikkalōtt Pālakkal Kōliyatt Putiyavīttilē Vaḷappa (വളപ്പ = paṛamba) in Cheṛukunnatt village (ഊര = village) Pālakkal Mittalēvīṭṭil Kammāran Otēnan having paid (കൊടുത്ത) the current market[3] value (അന്നപെറും പൊൻകാണം വില). purchased (വിലകൊണ്ടോൻ) (the same). The boundaries of this paṛamba (പറമ്പ) are, east as far as the Canal (തോട), south as far as the Chettire Kārānma Kandam[3] (കണ്ടം = field), west as far as the eastern wall (മതിൽ) of Kāliyatt Mittalē house, and north as far as the Bhagavati Ammēre Kandam[3] (കണ്ടം = field). Kāliyatt Vīṭṭil Kunyan Nambi and heirs having received the current market value sold[4] the lands (നിലം) and produce (ഫലം = fruit), including (അടക്കി) the hidden treasure (വെപ്പി) and the vessel in which it is secured (ചെപ്പ) comprised within the said four boundaries. Pālakkal Mittalēvīṭṭil Kammāran Otēnan purchased[5] (the same) by paying the current market value. The witness (താച്ചി corruption of സാക്ഷി) who knows this (transaction) is Kuppādakkal Kaṇṇan Kammāran and the witness who knows the house (?) [കുടിഅറി യുന്താച്ചി (?)] is Vellyodan Chindan Kōran. With the knowledge of these, written in the hand of Talavil Nārāyaṇan Ṣankaran.

*Note.*—Translated from a copy received from the District Munsif of Kavai, Chiṛakkal Tāluk. The original is in Tamil (*Kōleḻuttu*) characters.

---

நல்லே பள்ளி அங்கராத் வலிய மன்னாடியாரின் செப்பேட்டில் சாட்சிக் கையொப்பமிட்டுள்ள 'வடவனூர் வேளாளர்கள்' பற்றிய செப்பேடு. இதுவும் வில்லியம்ஸ் லோகனின் செப்பேட்டுத் தொகுதியுள் உள்ளது. செப்பேட்டின் காலம் 1748. அச்சிட்ட ஆண்டு 1887.

Rāman Mānchu. The object of this market value is that Vārikkāt Rāman and heirs have given with water as Aṭṭippēr his (Rāman's) property (തൊറ) the field [3] (കണ്ടം) sowing 10 paṛas (and situated) above the Ambāttō field by the side (ചാരെ) of the hill (മല) and below the field belonging to the Ayam house, together with its adjoining hillock or margin (കര) and upper and lower produce (മേൽഫലവുംകീഴ്ഫലവും). Thus baving paid the said market value the abovesaid land (നിലം) which is above the Ambāt field by the side of the hill and below the field belonging to Ayam house, and sowing 10 paṛas, together with its adjoining hillock or margin and the upper and lower produce has been taken with water as Aṭṭippēr by Ambāt Mānchu and heirs (തമ്പിമാർ). Thus the witnesses who know this (transaction) are Ilamulē Chennan Rāman and Chennāḻikkote Chātta Rāman. Written by Kuttikāt Itti Korappen.

*Note.*—Translated from a copy received from the Nallēpaḻḻi Ankarātta Valiya Mannādiyar of Cochin State.

## No. 37.

*Aṭṭippettōlakaraṇam* (അട്ടിപ്പെറൊലകരണം), executed at Nallaypaḻḻi Mannatt [3] (മന്നത്ത) in Angavēṇāt (അങ്കവെണാട്ടു) (?) Kaḍavūr (കടവൂർ) (?) Kayariyaḍath (കയരിയടത്ത) (?) in the solar month (ഞായർ) of Tulām 924 [4] Makara Vyāḻam. Karutta Mannāṭṭil Iravi Itarachan and heirs (തമ്പിമാർ) received from (the hands of) Tottatt Malayan Itti Chāttar the current market value (പെരുവത്തം). The object of receiving the market value is that Karuttamannāṭṭil Iravi Itarachan and heirs have given by pouring water as Nīrmutal (നീർമുതൽ = water property) the Nīr Aṭṭippēr (നീർഅട്ടിപ്പെർ) of his (Itarachan's) land (തൊറ) [5] situated on the south of the Kaḷapaṛamba (കളപറമ്പ) and Pūḷa (പൂള = silk-cotton tree) which are above the embankment (ചിറ) lying below that (land) demised on Kāṇam [6] (കാണംചാർത്തിയ) by them (Itarachan and heirs) at Kottamangalam (കൊററമങ്ങലം) and (situated) on the north of the Koḷachira (കൊളച്ചിറ = big tank); the plots (കണ്ടം) included within these (limits) sowing 70 paṛas and Kuḻi (കുഴി = an excavated ground) and the three Kuḻi paṛambas (കുഴിപറമ്പ) with their upper and lower produce (മേൽഫലവും കീഴ്ഫലവും) together with Atiyān Valli Chāttanmār (അടിയാൻവള്ളിചാത്തന്മാർ = slave Cheṛumars) Kaṇṇan's son Karuttapulli and Rangayan. Thus Tōdatt Malayan Itti Chāttan and heirs

---

நல்லே பள்ளியில் உள்ள 'அங்க. வேணாட்' பற்றிக் குறிப்பிடும் செப்பேட்டின் மொழி பெயர்ப்பு. இது 'அங்கராத்-வேணாடு உடையார்' என்பதன் சுருக்கமாகும். இது 1887ல் வில்லியம்ஸ் லோகன் அவர்களால் அச்சிடப்பெற்றது.

மரபினர் 'மன்னாடியார்' என்ற சிறப்பு மரியாதைப் பெயர் புனைந்தவர்கள். பாலக்காட்டு மூத்தான், தரகன் 'மன்னாடிகள்' தங்களைப் போல மக்கள் தொகைக் கணக் கெடுப்பின் போது, 'மன்றாடியார்' என்று குறிக்குமாறு மிகவும் வேண்டினர். இதனால் மன்னாடியார்கள் ஆகிய கொங்கு வேளாளர்களும் மன்னாடி பட்டம் உடைய மூத்தான் தரகன் எனப்படும் தமிழ் பேசும் வணிகர்களுக்கும் தொடர் புள்ளது பெறப்படுகிறது.

**பல்வேறு ஒப்பந்தங்களும் அங்கராத்து மன்னாடியாரும்**

"A Collection of Treaties, Engagements and other papers of importance relating to British affairs in Malabar"

என்று நூல் ஒன்றை லோகன் என்பவர் தொகுத்துள்ளார். அதில் பல்வேறு செப்பேட்டுப் பட்டயங்கள், அரிய கையெழுத்துச் சுவடிகள், ஓலைச் சுவடிகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பலவற்றில் 'பட்டயம்' என்ற தமிழ்ச் சொல்லே பயின்று வருகிறது.

அவற்றில் பல நல்லேபள்ளி அங்கராத் வலிய மன்னாடி யார் வசமிருந்து பெறப்பட்டு மொழிபெயர்க்கப்பட்ட பட்ட யங்கள். எண்கள் 18, 19, 24, 25, 34, 36, 37, 41, 45; முதலியன. தொகுக்கப்பட்ட பட்டயங்களில் தமிழ் மரபுகள் பல பின்பற்றப்பட்டுள்ளதோடு சில தமிழிலும்(கோலெழுத்து என்று அங்குக் குறிக்கப்படுகிறது) உள்ளதாக எழுதப் பெற்றுள்ளது.

வெள்ளோடு, காடையூர், பழையூர் (பழையக் கோட்டை) போன்ற ஊர்களின் தொடர்புப் பெயர்கள் அப்பட்டயங் களில் சுட்டப்படுகின்றன. மேற்குறித்த ஊர்கள் பெரியார் மாவட்டத்தில் உள்ளன. இவை கொங்கு வேளாளத் தலைவர் கள் வாழும் தொன்மையான ஊர்களாகும்.

அப்பட்டயங்களில் ஈஸ்வர பட்டர், எல்லப்ப பட்டர், தோப்பு பட்டர், அவர் மகள் சிப்பி அம்மையார் ஆகியோர் குறிக்கப் பெறுகின்றனர். தோப்பு பட்டர் 'பரதேசி' என் றழைக்கப்படுகின்றார். பிற நாட்டினர் என்பது அதன் பொருள். அதனால் அவர் தமிழ் நாட்டு அந்தணர் என்பது பெறப்படுகிறது. பிற பட்டர்களும் தமிழர்களே! சித் தூரைப் போலவே நல்லே பள்ளியிலும் மிகுதியான தமிழ் அந் தணர் வாழுகின்றனர். **Like Chittur it is a centre of the Tamil Brahmins**[181] என்று 'கொச்சி மாநிலக் கையேடு', கூறுகிறது.

ஒரு பட்டயம் நல்லேபள்ளி அங்கராத்து வலிய மன்னாடியார் ஆகிய இவர்களை 'வெள்ளாங்கூறு' என்றே அழைக்கிறது. இப் பூர்வீகப் பெயரை எல்லா மன்னாடியார் குடும்பங்களும் இன்று உரிமையாக்கிக் கொள்ளுகின்றனர் என்பது நேரில் பேட்டி கண்டபோது அறிந்த செய்தியாகும்.

**நாடு**

கொங்கு நாட்டு வேளாளர்கள் தங்கள் காணியாட்சிக்கும் சமூக அமைப்புக்கும் 'நாடு' என்ற பெயர் வைத்து அழைக்கும் வழக்கத்தைக் கைக் கொண்டு பண்டைக் காலம் முதற்கொண்டு வாழுகின்றவர்கள். இதனை,

பூந்துறை நாடு (மேல்கரை, கீழ்க்கரை)
காங்கேய நாடு
அரைய நாடு
குறுப்பு நாடு

என்ற பெயர்களில் அறிகின்றோம். மலபார்ப் பட்டயங்களில் நல்லேபள்ளி, சித்தூர் ஆகியவை 'கீழ்ப்பழயூர் நாடு' என்றும், தத்தமங்கலம் பகுதி 'பழயூர் நாடு' என்றும் குறிக்கப்படுவதைக் காணுகின்றோம். இந்த நாடுகள் என்பன அரசியல் பிரிவுகள் அல்ல; வேளாளர்களின் சமுதாயப் பிரிவுகளே அல்லது வேளாண் குடியிருப்புக்களின் தொகுதிகளே என்று டாக்டர் எ.சுப்பராயலு அவர்கள் கருதுகின்றார்.[132]

டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் எழுதிய குறிப்புக்களில் 'தத்தமங்கலம்' என்பது கொங்கு வேளாளர் குடியேறிய ஊராகக் குறிப்பிடப் பெறுவது குறிப்பிடத்தக்கது.[133] இத் தத்தமங்கலம் இன்றும் நல்லேபள்ளி மன்னாடியார் குடும்பத்துடன் தொடர்பு கொண்ட ஊராகும். தத்தமாக (கொடையாக) அளிக்கப்பட்ட ஊரே தத்தமங்கலம் ஆகும்.

நல்லேபள்ளிப் பட்டயங்களில் பயின்று வரும் பல சொற்களில் 'நீர் முதல்', 'நீர் அத்திப்பேர்' என்ற இடங்களில் நீர் என்ற தூய தமிழ்ச் சொல் பயின்று வருவதைக் காணுகின்றோம். இவைகள் தமிழ்ப் பெயர்களேயாகும். அங்கராத்து மன்னாடியார் பற்றிய பட்டயம் ஒன்றில் 'வடவனூர் வேளாளர்கள்' சாட்சிக் கையொப்பமிட்டிருக்கின்றனர். இதன்மூலம் கேரள மாநில வடவனூர், நல்லேபள்ளித் தொடர்பையும், வடவனூரில் வேளாளர்கள் இருந்தனர் என்பதையும் நாம் நன்கு அறிகிறோம்.

## மேனன் – பட்டப் பெயர்

கேரள நாட்டில் 'மேனன்' அல்லது 'மேனோன்' என்று பட்டம் பெற்றவர்கள் பலர் இருந்திருக்கின்றனர். பெரும் பாலான மேனன்கள் முன்பு அளிக்கப்பட்ட பட்டப் பெயர் களையே இன்று தம் பெயருடன் இணைத்துக் கொண் டுள்ளனர்.[134]

இப்போது கேரள நாயர்மார்களில் பல பிரிவினர் 'மேனன்' என்ற பெயரைத் தங்கள் இயற்பெயருக்குப் பின்னர்ச் சேர்த்துக் கொள்ளுகின்றனர். கே.பி.எஸ். மேனன் என்பது போலப் பலர் பெயர் வழங்கப்படுகின்றன. ஆனால் இப்பெயர் பற்றிப் பலர் ஆய்ந்து தங்கள் முடிவினைத் தெரி வித்திருக்கின்றனர். அனைவரும் ஒருமுகமாகக் கேரளாவில் வழங்கும் மேனன் என்பது சாதிப் பெயர் அல்ல; பட்டப் பெயரே என்று கூறுகின்றனர்.

கேனாத், இளையாத், அங்கராத் போன்ற பாலக்காட்டு மன்னாடியார்கள் குடும்பத்தினருக்கு 'மேனன்' என்ற பட்டப் பெயர் உண்டு.

'தென்னிந்தியச் சாதிகளும் பழங்குடிகளும்' என்ற நூலில் எட்கார் தர்ஸ்டன் கள்ளிக்கோட்டை சாமூரின் அரசர் தன் அலுவலர்கட்கும், எழுத்தர்கட்கும் அளித்த பட்டப்பெயர் 'மேனன்' என்று கூறுகின்றார்.[135]

'மலபார் சட்டமும் சமூகப் பழக்கமும்' என்ற நூலில் விஜ்ரம் என்ற அறிஞரும் மேற்கண்ட இதே கருத்தைக் கூறி யுள்ளார்.

1901ஆம் ஆண்டு வெளியிடப்பெற்ற திருவாங்கூர் சென்சஸ் ரிப்போர்ட்டில் 'மேலானவன்' 'மேனன்' (A Superior Person) என்ற சொல்லே 'மேனன்' எனக் காலப்போக்கில் மாறியது என்றும், பல பெருங் குடும்பத் தாருக்குக் கொச்சி அரசரால் இப்பட்டம் வழங்கப் பெற்றது என்றும் குறிக்கப்பெற்றுள்ளது. மலபார்ப் பகுதியிலும் ஒவ்வொரு அம்சத்திலும், அல்லது கிராமத் திலும் எழுத்தர் அல்லது கணக்கருக்கு 'மேனன்' பட்டம் அளிக்கப் பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

மெக்கென்சி ஆவணங்களில் தறக்கல் எறவ மேனவன், இராம மேனவன் என்று குறிக்கப்பெற்றுள்ள பெயர்களைக் காணுகின்றோம்.[136]

சென்னை எழும்பூர் அருங்காட்சியக மலரில் (1901) திரு எப்ஃ பேசட் அவர்களும் 'மேனன்' அளிக்கப்பட்ட பட்டம்தான் என்பதைக் கூறி 1895ஆம் ஆண்டு அவ்வாறு ஒருவருக்கு 'மேனன்' என்ற பட்டம் அளிக்கப்பட்டதைத்தான் நேரில் பார்த்த விபரத்தையும் விளக்கமாகக் கூறுகின்றார்.[137]

'கொச்சி மாநிலக் கையேடு' என்ற நூலில் கொச்சி திவானின் செயலாளராக இருந்த கொச்சி மக்கள் தொகை அளவீட்டு இயக்குநர் திரு.சி. அச்சுதமேனன் அவர்களும் 'மேனன்' பட்டப் பெயரே என்பதைப் பல்லாற்றானும் உறுதிப்படுத்துகின்றார். 'MENAN IS THE TITLE'[138] என்பது அவர் கூற்று.

1891ஆம் ஆண்டு கேரள மாநில மக்கள் தொகைக் கணக்கு அறிக்கையில் எச்.ஏ.ஸ்டுவர்ட் அவர்கள் 'மேனவன் அல்லது மேனன் மேன்மக்கள் பட்டப்பெயரே' என்பார்.[139] The Title Menavan or Menon means a superior person and is derived from **mel**-above, and **avan**-he வில்லியம் லோகன் என்பார் எழுதிய மலபார் வரலாற்றேட்டிலும் இதே கருத்தைக் காணுகின்றோம்.[140] அவருடைய 'மலபார் ஆவணத் தொகுப்பு' நூலிலும் இதே பொருளையே நாம் காணுகின்றோம்.[141]

'மேல் + அவன்' - மேலானவன் என்ற தூய தமிழ்ச் சொல்லே மேனவன் - மேனன் என மருவியது என்பதைக் கேரள ஆய்வாளர்கள் அனைவரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். மேலும் ஒரு விரிவான விளக்கம்:

**MENAVAN OR MENON:**

From Dravidian MEL (above) and
Dravidian **AVAN** (he)

Is the accountant or register, and answers to Karnam and Kanakkapilla (conicapoly). The appellation is generally, if not always, confined to an accountant of the castes of Nayar.

**Note:** The accountants of Amsams (parishes) are now styled Menons.[142]

திரு எல்.ஏ.அனந்த கிருஷ்ணன் அவர்களின் 'கொச்சி-சாதியும் பழங்குடிகளும்' நூலில் வேளாளரோடு தொடர்புடையவர்களே 'மேனன்' என்ற பட்டப் பெயரை வைத்துக் கொண்டனர் என்று கூறுகின்றார். அதில் மேனன் பற்றிக் கீழ்வருமாறு எழுதியுள்ளார்.

**MENON:** The Nayars of this class are according to current traditions connected with the **"64 families of Vellalas"**[143]

எனவே மேற்கண்ட எல்லாக் கூற்றுக்களின் மூலமும் நாம் பொதுவாக அறிவது மேனன் என்பது தனியாக எந்தச் சாதியையும் குறிப்பது அன்று. மேனன் என்பது பட்டப் பெயரே என்பதும், அவர்கள் 64 குடும்ப வேளாளரோடு தொடர்புடையவர்களே என்பதும் ஆகும்.[144] முன்பு அரசர்கள் வழங்கிய மேனன் என்ற பட்டப் பெயரைப் பின்னாளில் பலர் தங்கள் மக்களுக்குப் பெருமையாக மதிப்புக் கருதி வைத்தனர். அச்சொல் மேலானவன் - மேனவன் - மேனன் என மாறிவந்த தமிழ்ப் பெயர் என்பதும் மேற்கண்ட சான்றுகளால் தெரியவருகிறது.

# அங்கராத்து மன்னாடியாரும் – வேணாடு உடையாரும்

பாலக்காடு மாவட்டம், சித்தூர் வட்டத்தில், சித்தூர் அருகே நல்லேபள்ளி என்ற ஊர் உள்ளது. அவ்வூரில் சோண்டத்து மன்னாடியார் அங்கராத்து மன்னாடியார் என்ற இரண்டு கொங்கு வேளாளப் பெருமக்களின் பூர்வீக இல்லங்கள் உள்ளன.

**தமிழ் ஆவணங்கள்: நாலு தேசமும் நல்லயம்பள்ளியும்**

சென்னையில் தமிழக அரசு சுவடி நூலகத்தில் உள்ள மெக்கென்சி தமிழ் ஆவணங்களில் 'சித்தூர் நாட்டு வரலாறு' என்பது ஒன்று. இதற்கு 'மன்னாடியார் வரலாறு' என்ற தமிழ்த்தலைப்பும் உள்ளது. தமிழில் உள்ள அச்சுவடி கீழ்வருமாறு கூறுகிறது:

''நடப்புள்ள குடி புஷ்டியான நாலு
தேசமென்று சொல்லப்படுகிறது
நாலு தேசத்திலுங் கூடித்
தத்தமங்கலம் தேசம்.........
சித்தூர் தேசம் செம்படவச்சேரி இரண்டு
மன்னாடியார்கள்
நல்லயம்பள்ளி தேசம் சொண்டத்து மன்னாடி
நரிக்கோட்டு கிருஷ்ண மேனவனும் ரெண்டு
தேசவாழியும்
பட்டாஞ்சேரி தேசம் குன்னத்து மாட்டு
இராம மேனவன் பூக்கோட்டு மன்னாடியார்
இவர்களை 'நாலு தேசவாழி' என்று கூறுவது வழக்கம்''[145]

'திருவாங்கூர் பட்டமார் கிராம வரலாறு' என்ற மெக்கென்சிச் சுவடியிலும் இந்நான்கு தேசங்களும் கீழ்க்கண்டவாறு குறிக்கப் பெறுகின்றன.[146] கொச்சிச் சீர்மை என்னும் பகுதியில்,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சித்தூர் | கிராமம் | 2 | வீதி | 4 | வீடு | 63 |
| தத்தமங்கலம் | கிராமம் | 3 | வீதி | 6 | வீடு | 110 |
| நல்லயம்பள்ளி | கிராமம் | 1 | வீதி | 1 | வீடு | 40 |
| பட்டாஞ்சேரி | கிராமம் | 1 | வீதி | 1 | வீடு | 6 |

என்ற குறிப்புக் காணப்படுகிறது. இச்சுவடிகளில் நாலு தேசமும் அவற்றில் ஒன்றாக நல்லயம்பள்ளியும் குறிக்கப் பெறுவதைக் காணலாம். இக்கிராமங்களும் வீதிகளும் தமிழ் அந்தணர்களான 'பரதேசி' பட்டர்களின் குடியிருப்புக்க ளாகும். கடைசி எண்ணிக்கை குடும்பங்களைக் குறிக்கும். நல்லம்பள்ளியில் மட்டும் 40 தமிழ் அந்தணக் குடும்பத்தினர் இருந்திருக்கின்றனர்.

தமிழ் பேசும் வேளாளர்களும், தமிழ் பேசும் அந்தணர் களும் வாழும் பகுதி என்று மேற்குறித்த ஆவணங்கள் குறிக் கும் நாலு தேசங்களிலும் மன்னாடியார் எனப்படும் கொங்கு வேளாண் மக்களின் வழியினர் வாழ்வது குறிப்பிடத்தக்க தாகும். நல்லேபள்ளியும் (நல்லயம்பள்ளி) அதில் ஒன்று.

நாலு தேசத்தில் அங்கராத்துக் குடும்பத்தினரும் ஒருவர். அவர்கள் நாட்டுத் தலைவர்களாகக் கூறப்பெற்றுள்ளனர். இத்தமிழ் ஆவணங்கள் நல்லேபள்ளியின் தமிழ்த் தொடர்பை வலியுறுத்தும் சான்றுகளாகும்.

### தமிழ்க் கல்வெட்டுகள்

நல்லேபள்ளியில் உள்ள அங்கராத்து மன்னாடியார் மாளி கையின் மேற்கு எல்லையில் அக்குடும்பத்தாரின் உணவுக் கொடையை விளக்கும் பூர்வீகமான உணவுச் சாலை ஒன்று இன்று தொல் பழமையுடன் உள்ளது. தொன்மையான பல பெரிய அளவிலான கல் செக்குகளும், கல் அம்மிகளும், கொப் பறைகளும் அங்கு உள்ளன. வழிப்போக்கர்களும், இரவலர் களும், சமய யாத்திரிகர்களும் அங்கு உணவுப் பொருள்கள் பெற்றுச் சமையல் செய்து சாப்பிட்டதற்கான தடயங்கள் இன்றும் மாறாமல் அப்படியே உள்ளன. இப்பொழுது உணவுச் சாலை பயன்பாட்டில் இல்லை.

அங்குள்ள அம்மிக்கல் ஒன்றில் 'அங்க.எ' என்று தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. 'அங்க' என்பது 'அங்கராத்து' என் பதன் குடும்பப் பெயர்ச் சுருக்கம் ஆகும். 'எ' என்பது தமிழ் எண் 7 ஆகும். செக்கு ஒன்றில் தமிழ் எண்ணில் 1016 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது. அந்த எண்ணைக் கேரளா வில் வழக்கத்தில் உள்ள கொல்லம் ஆண்டாகக் கொண்டால் (1016 + 824) நேரான கி.பி. 1840 ஆண்டு ஆகிறது. அதன் எழுத்தமைதியால் அந்தக் காலத்தைச் சேர்ந்ததாகத்தான் கொள்ள முடிகிறது.

எனவே 19ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை அங்கராத்து மன்னாடியார் மாளிகையில் அந்த அறச்சாலையான தர்மச்சத்திரம் மிகச் சிறப்பாக இயங்கியுள்ளது. பலர் உணவுக் கொடை பெற்றுள்ளனர் என்பதை இதம் மூலம் நன்கு அறிகின்றோம். இந்த இரண்டு கல்வெட்டுக்களும் நல்லேபள்ளி அங்கராத்து மன்னாடியார்களின் தமிழ் நாட்டுத் தொடர்பை நமக்குக் கூறுகின்றன.

இதேபோலக் கொல்லங்கோடு பணிக்கத்து மன்னாடியாருக்குச் சொந்தமாக இருந்து இன்று ஊர்ப் பொதுவாக உள்ள சிவன் கோயிலில் தெற்குப் பக்கம் 14 என்ற தமிழ் எண் பொறிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**அங்கு வேணாடு உடையார்**

இன்று அங்கராத்து மாளிகையில் உள்ள மன்னாடியார் மரபினர் தங்கள் பெயருக்குப் பின்னர் இன்று 'மன்னாடி நாயர்' என்ற பட்டப் பெயரைச் சூட்டிக் கொள்கின்றனர். ஆனால் சுமார் 150 ஆண்டுகட்கு முற்பட்ட ஆவணங்களிலும் செப்பேடுகளில் 'நல்லேபள்ளி அங்கராத்து வலிய மன்னாடியார்' என்றே தமிழில் எழுதப் பெற்றிருப்பதைக் காணுகின்றோம். மன்னாடியார் என்ற பெயரையே மன்னாடி நாயர் என்று பிற்காலத்தில் அவர்கள் மாற்றிக் கொண்டனர். மன்னாடியார் என்ற சாதிப் பெயர் கேரளாவில் வேறு எங்கும் இல்லாததால் நாயர்களில் உயர்ந்தவர்களும் வேளாண்மையோடு தொடர்புடைய கிரியத்தில் நாயர் எனத் தங்களைக் குறிக்குமாறு வேண்டி இப்பெயர் பெற்றனராம்.

**அங்கராத் – அங்கு வேணாடு உடையார்**

'அங்கராத்து' என்ற பெயர் எப்படி ஏற்பட்டது என்பதைக் காண வேண்டும். கி.பி. 1748 ஆம் ஆண்டு எழுதப் பெற்ற பழைய ஆவணம் ஒன்றில் நல்லேபள்ளி அங்கராத்து வலிய மன்னாடியார் அவர்களின் மரபினர் பெயர் 'அங்க வேணாட்' என்று காணப்படுகிறது.[147] இது மிகமிக முக்கியமான குறிப்பாகும். வேணாட் (வேணாடு) என்ற சொல் வருவது ஆய்வுக்குரியது.

கொங்கு வேளாளர்களில் மிகத் தொன்மையான மூத்த குடிகளில் ஒன்று 'வேணாடு உடையார் குடியாகும். அவர்கள் சங்கரண்டாம் பாளையம் பட்டக்காரரின் வழியினர் ஆவர்.

இவர்களின் பட்டயம், இவர்கள் கொங்கு நாட்டில் குடியேறிய வேளாளர்களில் 8000 கோத்திரத்திற்கும் தலைவர்கள் என்று கூறும் வேளாளர்களுக்குத் தலைமை தாங்கி வந்தவர்கள்.

அவர்கள் குடியேற்றப்பகுதிதான் வேளாளர் நாடு வேள் நாடு வேணாடு எனப்பட்டது. அவ்வேணாட்டின் உரிமை யாளர்கள் வேணாடு உடையார்கள் எனப்பட்டனர். ஒரு பழம்பாடல்,

'வேணாடு உடையான் வெள்ளோடு உலகுடையான்
ஆனூர்க்குச் சர்க்கரைமன் நாடி - வேணுபுகழ்
நாவேந்து பூந்துறைசை நண்ணா வுடையார்க்கு
மூவேந்தர் சூட்டும் முடி'

என்று கூறுகிறது.

இந்த வேணாடு உடையாரின் மரபைச் சேர்ந்தவர்கள் தான் அங்கராத்து மன்னாடியார் குடும்பத்தினர். அதனால் தான் அவர்கள் கொங்கு நாட்டில் (அங்கு) வேணாடு உடை யாராக இருந்தனர் என்பதைக் குறிக்கவே அங்க வேணாட் என்று அவர்கள் பட்டயம் குறிக்கிறது. அங்கராத் என்ற குடும்பப் பெயரும் அங்க (ராத்) வேணாடு என்ற பெயரி லிருந்து தோன்றியதேயாகும்.

**வலிய மன்னாடியார் – பெரிய குலத்தார்**

கொங்கு வேளாளர்களில் இவ்வேணாடு உடையார்கள் பெரிய குலத்தைச் சேர்ந்தவர்கள். இக்குலம் வேணாட்டுப் பெரிய குலத்தார், பெரிய கோத்திரத்தார், பெரிய வீட்டார் பெரியன் கூட்டத்தார், பெரியன் குலம் எனப் பல்வேறு பெருமை என்ற அடைமொழி கொடுத்துக் கூறப்படும். எனவே இவர்களின் முன்னோர் ஒருவர் 'பெரியான்' என்றே அழைக்கப்பட்டனர்.[148]

இவர்களின் பட்டயங்களும்,

'நாற்பத்தெண்ணாயிரம் கோத்திரத்துப் பெரியகோத்திரம்
'24 கோட்டத்துக்கும் பெரியவீடு'
'கொங்கு 24 நாட்டுக்கும் வேணாடர் பெரிய
வீட்டுக்காரனாக இருந்தபடியினாலே'

என்று கூறும்.[149]

வேணாடர்களின் மெய்கீர்த்தியும்,

'நற்குடி நாற்பத்தெண் ணாயிரமாம்
நளினமிகு சோழதிசை எழுபத் தொன்பதின்
நாடர்க்கு முதல் வீடனாம்'

என்று புகழும்.[150]

வேணாடர் ஆட்சி புரிந்த தென்கரை நாட்டை முதல் நாடு என்று தனிப்பாடல் கூறும்.

'செழுவளமை நாலாறு நாட்டுக்குள் முதலான
தென்கரைசை நாடு தானே'

என்பது அப்பாடல் பகுதி.

எனவே கொங்கு வேளாளர்களில் பெரிய குலத்தார்கள்,

பெரியவர்கள்
மூத்தவர்கள்
தலைமையானவர்கள்
சிறப்பு மிக்கவர்கள்

என்று அழைக்கப்பட்டனர். இச்சிறப்பு கொங்கு வேளாளர்களில் வேறு எவருக்கும் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. பெரியண்ண வேணாடுடையார் என்பது இம்மரபில் தோன்றிய ஒருவர் பெயராகும்.

எனவே இப்பெரிய குலத்தாரின் வழிவந்த நல்லேபள்ளி அங்கராத்து மன்னாடியார் மரபினர் 'வலிய மன்னாடியார்' என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றார்கள் என்பது தெளிவு. அவர்கள் தாயாதிகளும் வலிய என்னும் அடை மொழி பெற்றனர். இன்றுள்ள வேணாடர் குலத்துப் பெரியவர்கள் தங்கள் பெயருடன் மன்னாடியார் என்ற பட்டப் பெயரைச் சேர்த்துக் கொள்வதில்லை. ஆனால் வேணாடர்கட்கு மன்றாடியார் பட்டம் உண்டு என்று அவர்கள் மெய்க்கீர்த்திக் கூறுகிறது.

'மாவலியர்முடி பொடிறுபட விடறு
விதாரண குமார ரத்தின வேணாட! மன்றாடி'

என்பது அவர்கள் மெய்க்கீர்த்திப் பகுதியாகும். பெரிய மன்னாடியே - வலிய மன்னாடி ஆனார்.[151]

**பேரூர் முதன்மை**

அங்கராத் மன்னாடியார் குடும்பத்தினர், பேரூரைத் தலைமைத் தலமாகக் கருதுகின்றனர். வழிபாடும் இறுதிச் சடங்குகளும் பேரூரில் செய்கின்றனர்.

அதுபோலவே கொங்கு வேளாளர்களில் பெரிய குலத்தார்களும் பேரூருக்கு வரலாற்று முறையில் முதன்மையளிக்கின்றனர். கொங்கு நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் ஏழு. அவை, கரூர், வெஞ்சமாங்கூடல், கொடுமுடி, அவிநாசி, பவானி, திருச்செங்கோடு, திருமுருகன் பூண்டி என்பன. கொங்கு நாட்டினர் நாள்தோறும் இத்தலங்களை வழிபட்டு வந்தனர் என்பது,

'ஆதி கருவூர் அணிவெஞ்சை மாக்கறைசை
நீதி அவிநாசி நீள்நணா - மேதினியின்
தஞ்சமாம் செங்குன்றூர் தண்முருகன் பூண்டிதமை
நெஞ்சமே நித்தம் நினை'

என்ற வெண்பா மூலம் தெரிகிறது.

வேணாடுடையார் வமிசாவளி கொங்கேழு தேவர் சபைக்கு விபரம் என்ற பகுதியில்,

| | |
|---|---|
| கரூரு | - பசுபதீசுவரசுவாமி |
| வெஞ்சமாங்கூடல் | - விகுர்தீசுவரசுவாமி |
| கொடுமுடி | - மகுடேசுவரசுவாமி |
| அவினாசி | - அவினாசிலிங்கர் |
| பவானிகூடல் | - நண்ணாவுடையார் சுவாமி |
| பேரூரு | - பட்டீசுவரசுவாமி |
| திருமுருகன்பூண்டி | - முருகனாத சுவாமி |

என்று கொங்கு ஏழு தலங்களை வரிசையாகக் கூறும். வேணாடுடையார் வமிசாவளியில் மிகவும் முக்கியமான மாற்றம் ஒன்றைக் காணலாம். இந்த மாற்றம் வேறு எவரும் செய்யாதது. திருச்செங்கோட்டை நீக்கி விட்டு பதிலாகக் கொங்கேழு தலத்தில் பேரூரைச் சேர்த்திருப்பதும், அங்கராத் மன்னாடியார்கள் பேரூருக்கு முதன்மை கொடுப்பதும் ஆகும். இன்றும் வடசேரிமன்னாடியாருக்குப் பேரூரில் முதல் மரியாதை நடைபெறுவது மேற்படி தொடர்புகளை வலியுறுத்தும் சான்றுகளாகும்.

### சேர அரசனும் பெரிய குலத்தாரும்

ஆய்வாளர் திரு டி.எம். காளியப்பா அவர்கள் ஒரு கருத்தினைக் கூறுகிறார்கள். ''சோழமன்னன் கரிகாலனோடு தொடர்புடையவர், இரும்பிடர்த் தலையார் என்னும் பெரியவர். அவர் கொங்கு வேளாளர்களில் பெரிய குலத்தைச் சேர்ந்தவர். அவர் பெயர் 'பிடர்த்தலைப் பெரியான்' என்றே அழைக்கப்பெறும். அவர் மரபினர் வாழ்ந்த ஊர் பிற்காலத்தில் பிடர்த்தலை, இரும்பிடர்ப்பட்டி, பிடாவூர் என்று பெயர் பெற்றன.

கொங்கு வேளாளரில் பெரிய குலத்தைச் சேர்ந்த பிடர்ந் தலைப் பெரியான் சேர மன்னன் ஆட்டன் அத்திக்கு அமைச் சராக விளங்கினார்'' என்று திரு டி.எம். காளியப்பா அவர்கள் ஆய்ந்து நிறுவியுள்ளார்கள்.

ஆட்டன் அத்தி சோழன் மகள் ஆதிமந்தியை மணந்தவன் என்பதும்,கொங்கு நாட்டுக்குப் பலமுறை வந்தவன் என்பதும், பவானி கூடுதுறையில் நடைபெற்ற நீர்விளையாட்டில்தான் காவிரியாற்றில் மூழ்கி இறந்தான் என்பதும் வரலாற்றுச் செய்தியாகும்.

எனவே பிற்காலத்தில் பெரிய குலத்தார்கள் கேரளப் பகுதிக்குக் குடியேறி முதன்மை பெற இந்தப் பழமையான வரலாற்றுத் தொடர்பும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும்.

கேரளத்து மன்னாடியார்கள் வணிகர் தொடர்பையும் தங்களுடன் வணிகர் வந்ததையும் கூறுகின்றனர். தென்கரை நாட்டுக்கும் வணிகர்கட்கும் தோடர்பு உண்டு.

### தென்கரை நாட்டு வேளாளர்களும் கேரளத் தொடர்பும்

கொங்கு வேளாளர்களில் பெரியகுலத்தார்கள் தலைமை பெற்று வாழும் நாடு தென்கரை நாடு. இந்த நாடும் இதன் தலைவர்களான பெரிய குலத்து வேணாடு உடையார்களும், செட்டியார்கள் எனப்படும் வணிகர்களுக்கு உரிமை கொடுத்து தங்கள் நாட்டின் 12 ஊர்களிலும் குடியேறச் செய்து சம உரிமை கொடுத்து வாழ்வித்தவர்கள். 'செட்டி வேணாடர்' என்று புகழப்பட்ட அவர்கள் தங்கள் வேளாளர்களில் ஒரு பிரிவினரையே வணிகர்கள் ஆக்கினர் என்ற கருத்தும் ஒன் றுண்டு. இவர்களைக் கொடுமணல் பட்டயம் 'கொங்கச்

செட்டிகள்' என்று கூறும். இவர்களைக் கொங்கு மண்டல சதகம் 'வைசிய காராளர்' என்று கூறும்.

''பார்புவி தன்னில் அளகா புரியும் படைத்தவர்கள்
காரண மார்கொங்கு மண்டலத் தார்உயர் காவிரியில்
ஏருறு வானும் பசும்பை எழுபதும் ஏற்றவர்கள்
வாரிவை சியரும் காராளர் வாழ்கொங்கு மண்டலமே''

என்பது கொங்கு மண்டல சதகப் பாடலாகும்.[152]

காராளர் - வேளாளர் ஆவர். இவர்களே கேரளத்துடன் தொடர்பு கொண்டு மிளகு முதலிய பொருள்களைப் பெற்று வாணிபம் செய்தவர்கள். கீழ் வரும் பாடலால் அதனை நாம் அறியலாம்:

'கொற்றவர்கள் பவனிமுன் மெட்டுமென மகிமைக்
கொடும்பலி கொடுத்தநாடு
கொங்குமண் டலத்திலுயர் முப்பேரு வரிசையும்
கொண்டாட வந்தநாடு
வெற்றிபுனை பொன்னூஞ்சல் பூந்தேரு வரிசையும்
மிகவிருது பெற்றநாடு
மிளகுபயி றாகவும் குடதிசையெல் லாம்பொருளை
விளங்கஅருள் பெற்றநாடு
கற்றவர்கள் உரைசெயும் யிளையநா யகமதுரைக்
கவிதைமழை பெய்யுநாடு
கனகமது விளைவான பொன்னூதி வெற்பிலுயர்
காரணர் உறைந்தநாடு
செற்றலர் குறும்பினை அடக்கியே மனுநீதிச்
செங்கோல் புரக்குநாடு
செழுவளமை நாலாறு நாட்டுக்குள் முதலான
தென்கரைசை நாடுதானே'

என்பது தென்கரை நாட்டுப் பாடலாகும். இதில் பெரிய குலத்து வேணாடருக்குரிய தென்கரை நாட்டினர் 'குடதிசை யெல்லாம் பொருள் கொண்டு சென்று விற்றவர்' என்று கேரள நாட்டுத் தொடர்பு குறிப்பிடப்பட்டிருப்பது முக்கிய மான குறிப்பாகும்.

**வேணாடர் ஊதியூரும் கேரளத் தொடர்பும்**

கொங்கு வேளாள வேணாடரின் காணி உரிமையான தென்கரை நாட்டின் தலைமைத்தலம் ஊதியூர் ஆகும். ஊதியூர் சங்கரண்டாம் பாளையத்துக்கு மிக அண்மையில் உள்ள மலைத்தலமாகும்.

இந்த ஊதியூரில் நடந்த ஒரு வரலாற்றுச் செய்தியைக் கொங்கு மண்டல சதகம் கூறுகிறது. ஒரு மலையாளத்து வேந்தன் பல கொங்கு நாட்டுத் தலங்களை வணங்கினான். ஊதியூருக்கு வந்து வணங்க அவரை அங்கேயே தங்கியிருக்கும்படி உமாதேவி தடுத்து ஆட்கொண்டாள். அதன்படி அக்கேரள வேந்தனும் அங்கேயே தங்கினார். அவர்தான் கொங்குச் சித்தர் எனும் கொங்கணச் சித்தர். இதோ அதனை விளக்கும் பாடல்:

'ஆரூரி லோர்மலை யாளத்து வேந்துவந்து ஆலயத்து
ஊரூர் புகுந்துதன் ஊருக்குப் போகையில் ஊதிநகர்ச்
சீரூரும் தென்கரை நாட்டில் இருக்கத் திருமலைமேல்
வாரூர் உமைதடுத் தாள்வது வும்கொங்கு மண்டலமே![153]

**வேணாடர் கொற்றனூரில் மிளகு வணிகம்**

மிளகு பயிறான செய்தியை ஏற்கனவே கண்டோம். கொங்கு வேளாளப் பெரிய குலத்து வேணாடர் வழிபடு தெய்வம், கொற்றனூர் அப்பிரமேய ஈசுவரன் கோயில். அவ்வூர் ஆலயப்பணி செய்தவர்களும், அக்கோயில் உரிமையாளர்களும் வேணாடர் மரபினரே! அக்கோவிலிலும் மிளகு பயிறான அற்புதம் நடைபெற்றதாகக் கொங்கு மண்டல சதகம் கூறும்.

நானிலம் தன்னை வனநாதர் சேர்வை நளினமலர்க்
கானல் மிளகைப் பயிறாக்கி யேகங்கை மேற்கழைத்துத்
தேனின் வணிகர் பயிறை மிளகாய்த் திரும்பவைத்து
வானவர் கொற்றையில் அப்பிரர் வாழ்கொங்கு மண்டலமே

என்பது சதகப் பாடலாகும்.[154]

**கேரளமும் கொற்றனூரும்**

கேரள நாட்டு வணிகர்களும், யாத்திரிகர்களும், அரசனும் ஊதியூருக்கும் கொற்றனூருக்கும் அடிக்கடி வருவது கொற்றனூர்க் காணியாளர் வேணாடரின் கேரளத் தொடர்

பினாலேயாகும். மேலே காட்டப்பட்ட வாலசுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல சதகப் பாடலில்

'வானவர் கொற்றை'

என்று கொற்றனூர் குறிக்கப்படுவது கேரளர் தொடர்பை வலியுறுத்தும். வானவர் என்ற சொல் சேரரைக் குறிக்கும்.

**காடையூர் மன்றாடியார் பாண்டியத் தொடர்பு உடையவர்கள்**

கொங்கு வேளாளரில் பொருள்தந்த குலத்துக் காடையூர் மன்றாடியார், பாண்டியனால் முடி சூட்டப் பெற்றவர்.

'கொற்றவனும் இனியசுந் தரவீர பாண்டியன்
தொங்குதா ராபுரத்தில்
கூறும்ஐம் பத்தாறு தேசத்தில் உள்ளவர்கள்
கொங்கில்உள்ள துரைகள் அறிய
வெற்றிபுனை காங்கேய மன்றாடியென் றபிடேகம்
மேவிமணி முடிகள்பெற்றான்'

என்பது பழம்பாடல். இது முதலிக்காமிண்டன் முடிசூட்டுப் பாடல் பகுதியாகும்.[156]

'வீர பாண்டியன் காடையூர் காங்கேய மன்றாடியாருக்குச் சிறப்புச் செய்தான்' என்று 'கம்பர் வாக்கியம்' கூறும்.

''சீருலவும் மதுரையில் சொக்கேசர் மீனாட்சி
செயலருள் கிருபை அதனால்
சிங்காச னாதிபதி அதிவீர பாண்டியன்
செங்கோல் செலுத்தும் அந்நாள்
சீரான காங்கயநன் னாட்டில் கீர்த்திபெறு
செயகொங்கு மன்றாடியார்''

என்பது அப்பாடல் பகுதியாகும்.[157]

காங்கேய மன்றாடியார் மைந்தர் முதலிக் காங்கேயன் பாண்டியர் படைத்தலைவனாக விளங்கினார்.[158] சொக்கர் மதுரை மீனாட்சி தெருவில் பாண்டியருக்கு முடிசூட்டியதாகக் குறிப்பு வருகிறது.[159] பாண்டியர்கள் பொருள்தந்த குலத்துக் காங்கேய மன்றாடியாரைத் தங்கள் மைந்தர் என்றே உரிமை கொடுத்து அழைத்தனர்.[160] இன்றும் மதுரைத் தொடர்புடைய மீனாட்சி சுந்தரேசுவரக் குருக்களே பரம்பரை பரம்பரையாக அப்பெயர் தரித்துக் காடையூர் காங்கேய மன்றாடியாருக்குக் குருக்களாக உள்ளனர். கேரளத்துத்

தொடர்பைவிட அவர்கள் பாண்டிய நாட்டுத் தொடர்பையே அதிகம் உடையவர்கள் என்பது விளங்கும்.

**வணிகரும் வேணாடரும்**

பாலக்காட்டுப் பகுதியில் உள்ள வேளாளர்கள் வணிக நோக்கத்திற்காகவும் கேரளப் பகுதிக்குச் சென்றுள்ளனர். பொதிமாடு மேல் வணிகப் பொருட்களை ஏற்றிக் கொண்டு மலைப்பகுதிக்குப் பொருள் கொண்டு சென்றுள்ளனர். மலைப் பகுதியில் விளையும் மிளகை, பொதிகளில் ஏற்றிக் கொண்டு கொங்கு நாடு வழியாகச் சோழ நாட்டுக்குச் சென்றுள்ளனர். கொங்கம் படை வரலாற்றில் இவ்வணிகத் தொடர்பு மிகவும் தெளிவாகக் கூறப்படுகிறது.

கொங்கு வேளாளர்களில் பெரிய குலத்தார்களும் அவர்களின் குலத்தலைவர் வேணாடுடையாரும் வணிகர்களோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். ஐநூறு குல வணிகரைச் சோழனுக்குச் சார்பாக இருக்கச் செய்து 'செட்டி வேணாடுடையார்' என்று சிறப்புப் பட்டப்பெயர் பெற்றவர்கள் என்று தனிப்பாடல் கூறுகிறது. கனமான செட்டிமார் அறுபத்துநான்கு தாவளம் நல்லேபள்ளியில் இருந்ததாக அங்கு பாடப்படும் பாடலில் குறிப்பு வருகிறது. தாவளமும் சந்தையும் ஒன்றே.[161]

எனவே கேரளப் பகுதியில் குடியேறி வணிகம் செய்த வேளாளர்கள் 'மூத்தான்' 'தரகன்' என்ற பெயரில் பாலக்காட்டுப் பகுதியில் செட்டியார்களாக மாறி விட்டனர். வணிகர்களாகிய இவர்களும் மன்னாடிப் பட்டம் கொண்டிருப்பது இவர்கள் தொடர்பைக் காட்டும். அப்பகுதியில் மன்னாடியார்களும் முன்பு வாணிகம் செய்துள்ளனர். ஆகவே கேரள மன்னாடியாரில் ஒரு பகுதியினர் செட்டி வேணாவுடைய மன்றாடி எனப்படும் கொங்கு வேளாளர்களின் வழி வந்தவர்கள் என்பது இயல்பே. இதோ அவர்கள் செட்டி

வேணாவுடையார் பட்டம் பெற்றமைக்குச் சான்றான ஒரு பாடல் :

எண்ணரிய கலியுக சகாத்தமது எண்ணூத்தி
எட்டானதற்கு மேலே
எழில்பெற்ற செயவருடம் இனியவை காசியும்
மேன்மைபதின் மூன்றுதேதி
நண்ணுதனி வாரமும் அமரபட் சத்துடன்
நலம்பெறும் சஷ்ட்டி நாளில்
நளினமிகும் பூராட சுபநாம யோகமும்
நாடுபவ கரணமதிலே
மன்னவர் மதிக்குமக் குலோத்துங்க சோழனிட
மந்திரித் தலைவரானோம்
வளமைபெறும் காவிரிப் பூம்பட்டினம் தன்னேயே
மகிமையொடு திறை கொண்டிடும்
தன்மைபெறும் ஐநூறு குலவணிகர் தன்னையே
தனதுவச மாய்ச்செய்ததால்
தரணிபுகழ் செட்டிவே ணாடுடை யான்என்றே
தான்மௌலி சூட்டினார்களே.

## காங்கேய நாட்டுக் காணியும் வணிகர்களும்

காங்கேய நாட்டுக்குரிய காணி ஊர்கள் 12. இந்தப் பன்னிரண்டு ஊர்களில் கண்ணபுரம், பரஞ்சேர்வழி, வள்ளி நகர், பார்ப்பதி ஆகிய நான்கு ஊர்களில் 'செட்டிகள்' காணி உரிமை படைத்தவர்களாகக் கூறப்பெறுகின்றனர். இவர்கள் 'கொங்கச் செட்டிகள்' என்று பெயர் பெற்றுக் கொங்கு வேளாளர்களிலிருந்து முன்னொரு காலத்தில் பிரிந்தவர்களே. அவர்களுடன் தொடர்பு கொண்ட பெருங்குடியர் குலத்தை அதிகப் பெருங்குடியன் என்று காணிப்பாடல் கூறும்.

பாலக்காட்டுமன்னாடியார்கள்,காங்கேயத்தைத் தாங்கள் குடியேறிய பகுதியில் முக்கியமாகக் கருதுவதால், கொங்கச் செட்டிகளாகிய வேளாளர்களின் பிரிவினருக்கும் பாலக்காடு மன்னாடியார்களுக்கும் தொடர்பு இருக்க நியாயம் உண்டு. பாண்டிய நாட்டில் கி.பி.13ஆம் நூற்றாண்டில் பிரான்மலையில் நடைபெற்ற மிகப்பெரிய சந்தைக்குத் தென் கரை நாட்டிலிருந்தும், காங்கேய நாட்டிலிருந்தும் வணிகர்கள் சென்றனர் என்று பிரான்மலை மங்கைநாதர் கோயில் கல் வெட்டுக் கூறுகிறது.[162]

**தென் கரை நாட்டுக் காணியாளரில் வணிகர்கள்**

தென்கரை நாட்டுத் தலைவர்களாக விளங்கிய பெரிய குலத்து வேணாடு உடைய மன்றாடியார் மரபினரே பாலக்காடு மாவட்டம் சித்தூர் வட்டம் நல்லேபள்ளி அங்கராத்து அங்கவேணாட் சங்குண்ணி வலிய மன்னாடியார் மரபின் முன்னோர் என்பது முன்பு தெளிவான செய்தியாகும். அவர்களுடன் இணைந்து வந்த வணிகர்கள் பாலக்காடு மூத்தான் தரகன் மரபினர் என்று முன்பு கண்டோம்.

தென்கரை நாட்டு முதல் காணியாளர்கள் பெரிய குலத்தார்கள் போலவே செட்டிகள் எனப்படும் வணிகர்களும் தென்கரை நாட்டின் காணியாளர்கள் என்பது காணிப்பாடல்களால் அறியப்படும் செய்தியாகும். இதோ அக்காணிப் பாடல்:

'சீர்பரவு சதுரகிரி உத்தண்ட வேலரைத்
தெய்வானை வள்ளிஉமையைச்

சிந்தையில் மிகுந்துதவு தென்கரைசை நாட்டினில்
சிறந்திடும் கொற்றைநகரார்

சீரான காவுலுவன் குழாயனும் பெரியகுலன்
செழித்திடும் ஆந்தைசேரன்

செயமுலவு செம்பூதன் செட்டியுடன் தேங்குபுகழ்
மூலநகர் மூலகுலத்தார்

சேரிலான் பூசனும் திறமான தொட்டியன்
செட்டியும் உடனே

திகழ்பரவு குறிச்சிநகர் குறிச்சியான் ஆந்தையும்
சீர்வசிகர் செட்டியுடனே

தார்பரவு இளம்பிள்ளைக் காடைகுல தீரனே
தனதான செட்டியுடனே

தமிழ்பரவுங் கோமங்கை யூரினில்
தழைத்துவளர் ஆந்தைகுலனே

சவுபாக்கிய வேந்தனே செட்டியைக் கூறியே
தனதுவீ ராட்சிநகரில்
தழைத்திடும் பெரியகுலனே

சவுபாக்கிய செட்டியைக் காவிலிய னைக்கூறும்
தமியன்விண் ணப்பதுகேள்

கார்பரவு தூரைநகர் ஆந்தைகுல தீரனே
கனமான அந்துவகுலனே

காண்டிப மயிலகுல செட்டியும் வேட்டுவன்
கதிர்பரவு எதிரநகர் ஆந்தையும் செட்டியைக்

கவிகொண்ட பிரமநகரைக்
காவுலுவன் தோட்டியன்

கதித்திடும் செட்டியுடனே

பார்பரவு நீலநகர் செட்டியுடன் ஈஞ்சனும்
பண்பான சேககுலனே

பகர்கின்ற சோழியன் ஊதிநகர் செம்பூதன்
பண்பான செட்டியுடனே

பண்பான கொளுமைநகர் ஆந்தைகுல செட்டியைப்
பண்புடன் தழைக்கநன்றாய்

பரிபூர்ணத் தயவு வைத்தாய் இப்புவியில்
பனிரண்டு மிகவாழ்கவே.

வேளாளர்கட்குப் 'பூவைசியர்' என்ற பட்டம் இருப்பதும், இன்றும் கொங்கு வேளாளர்கள் சிலர் செட்டியாக் கவுண்டர் எனப் பெயர் வைத்துக்கொள்வதும், வேளாளர்களே முழுவதும் உள்ள ஊர்களுக்குக்கூடச் செட்டிபாளையம் என்று பெயர் வழங்குவதும் மேற்கண்ட வணிகத் தொடர்புகளை வலியுறுத்தும்.

**கொற்றனூர் முதன்மை பெரிய குலத்தாரும் வணிகரும்**

சங்கரண்டாம் பாளையம் பட்டக்காரர்களின் தொன்மையான காணியுரிமை கொண்ட தலைமைத்தலம் கொற்றனூர். அக்கொற்றனூரின் உரிமைக்காணிக்குக்கூடப் பெரிய குலத்தாருடன் செட்டியார்களும் இணைந்து உரிமை பெற்றுள்ளனர். இதனை,

'காவல் குழாயன் கதித்த பெரியகுலன்
ஆவல்பெரு ஆந்தை அதிசேரன் — பூவைமதன்
செம்பூத்தஞ் செட்டியொடு தென்கொற்ற நகர் மேவு
யின்புத்தி யேழுமுதன் மை'

என்ற காணிப்பாடல் மூலம் அறியலாம்.

மேற்கண்ட சான்றுகளால் கொங்கு வேளாளர்களில் பெரிய குலத்து வேணாடு உடையாருக்கும் வணிகர்களுக்கும் உள்ள நெருக்கமான தொடர்பை நாம் அறியலாம். கொற்ற னூர்ச் சிவலாயத்தில் பெரிய நாயகி அம்மன் சந்நிதியைத் திருப்பணி செய்தவர்கள் தாயம்பாளையம் அயினூறு குல கோத்திரம் வேளாண் செட்டிகள் ஆவர்.

**காங்கேயத்தில் முதன்மை பெருங்குடியர்**

பாலக்காடு மாவட்டத்தில் குடியேறிய வேளாளர்கள் தங்கள் குடியேற்றத்தின் நினைவுகூர்ந்து முதலாவதாகக் கூறும் ஊர் காங்கேயம்.

இச்சிறப்புமிகு காங்கேயத்தின் காணியாளர்கள் பெரிய குலத்தாருடன் தொடர்புடைய பெருங்குடியர்,[163] செங் கண்ணன், தூரன், பதுமன், வாணி, சாத்தந்தை, பதரி ஆகிய கொங்கு வேளாளர்களின் கூட்டத்தார் ஆவர். இவர் களில் முதன்மைக் காணி உடையவர்கள் பெருங்குடியர் குலத் தினரே. இதனைக் காணிப் பாடல் நமக்குக் கூறுகிறது :

'பெருங்குடி வேந்தன் செங்கண்ணன் தூரன்நிற்
பேர்பதுமன்
விரும்பிய வாணி சாத்தந்தை பதரி
விரைகுடிலூர்
அரும்பணி நாதர் அகத்தீச ரும்அகி
லாண்டவனும்
கருங்குழல் மாது பகவதி வாழ்கின்ற
காங்கயமே'

என்பது அப்பாடலாகும். இப்பாடலில் முதன் காணியாளர் களாகப் பெருங்குடியர் கூறப்பெற்றிருப்பது காண்க.

**எடுத்து வந்த அம்மன்களில் ஒன்று நல்லேபள்ளியில்**

கொங்கு நாட்டுக் காங்கயம் பகுதியிலிருந்து மன்னாடி யார்கள் ஆகிய கொங்கு வேளாளர்கள் சித்தூர்ப் பகுதிக்குப் பழங்காலத்தில் குடியேறும்போது மூன்று அம்மன் சுவாமி களைத் தங்களுடன் எடுத்துக்கொண்டு வந்தார்கள் என்று கூறப்படுகிறது. அவைகளை வரிசையாக வந்த வழியில் ஆங்காங்கு மூன்று இடங்களில் பிரதிட்டை செய்தார்கள். அந்த அம்மன் சுவாமிகளை இன்றும் மன்னாடியார் குடும்பத்

தினரும் பிற தமிழர்களும் வழிபட்டு வருகின்றனர். அவை முறையே

காக்கரக்காவு அம்மன்

சொணங்கி அம்மன்

சித்தூர் அம்மன்

என்பவைகளாகும்.

முதல் அம்மனாகிய காக்கரக்காவு அம்மனைக் கொழிஞ்சாம் பாறை அருகேயுள்ள ஆற்றின் வடகரையில் பிரதிட்டை செய்தனர். இன்றும் அந்த அம்மன் கோயிலுக்குத் தமிழ் பேசும் வேளாளர், செட்டியார் ஆகியோரே கூட்டமாகச் சென்று வழிபட்டு வருகின்றனர். பொங்கல் முதலியன படைத்துக் கூட்டமாக வந்து விழாக் கொண்டாடுகின்றனர்.

இரண்டாவது அம்மனாகிய சொணங்கி அம்மன் கோயில் நல்லேபள்ளியில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. சொர்ணாங்கி அம்மன் என்ற சொல்லின் மரூஉ மொழியே சொணங்கி அம்மன் என்பதாகும். சொர்ணம் என்றால் 'பொன்' என்று பொருள்படும். கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டின் பற்பல இடங்களில் பொன் காளியம்மன் என்ற பெயரில் கோயில்கள் கட்டி இன்றும் வழிபட்டு வருகின்றனர். அந்தப் பொன் காளியம்மன் என்ற பெயரின் மரூஉ வடிவே சொணங்கியம்மன் கோயிலாகும். இந்த சொணங்கி அம்மன் கோயில் நல்லேபள்ளி மன்னாடியார் குடும்பத் திருப்பணி பெற்று விளங்கும் கோயில். மன்னாடியார் பெயர் பொறித்த கல்வெட்டுக்கள் அங்கு முன் மண்டபத்தின் வடபுறம் உள்ளன.

மூன்றாவது அம்மனைச் சித்தூரில் சித்தூர் அம்மன் என்ற பெயரில் பிரதிட்டை செய்து வழிபட்டு வருகின்றனர். சித்தூர் சம்பத் மன்னாடியார் குடும்பத்தினரும் அங்குள்ள பிற தமிழ் மக்களும் இக்கோயில் திருப்பணிகள் பல செய்திருக்கின்றனர். கொங்கம் படை வரலாற்றுடனும் சித்தூர் அம்மன் தொடர்பு கூறப்படுகிறது. அண்மைக்காலத்தில் சிலரால் பகவதி என அழைக்கப்பெற்றாலும் பண்டைய ஆவணங்கள் அம்மன் என்றே கூறுகிறது.

கொங்கு நாட்டு வேளாளர்கள் இவ்வாறு குடியேற்றம் அல்லது குடிப்பெயர்வின்போது தங்களின் குலதெய்வத்தை எடுத்துக்கொண்டு செல்வது பண்டைக்காலத்து இயல்பு. இதனைக் 'கன்னிவாடிக் கண்ணர்' பட்டயத்தின் மூலமாக

அறிகின்றோம். கேரளத்துப் பகவதி என்று பெயர் பெறாமல் தமிழக மரபிற்கு ஏற்ப 'அம்மன்' என்று பெயர் பெற்றிருப்பதும், இன்றுவரை அப்பெயர் மாறாதிருப்பதும் இவற்றின் கொங்கு நாட்டுத் தொடர்பை வலியுறுத்தும். கொங்கு வேளாளரில் சாத்தந்தை காலிங்கராயன் வரலாற்றிலும் அம்மனின் இடப்பெயர்ச்சி கூறப்படுகிறது.

**கூத்துக்கு எழுந்தருளும் தமிழர்கள்**

பாலக்காடு மாவட்டத்தில் கொங்கு வேளாளர்களாகிய மன்னாடியார் குடும்பங்கள் வாழும் பல்வேறு பகுதிகளில் உள்ள கோயில்கள் தமிழ் நாட்டு அமைப்பில், தமிழ் நாட்டுப் பெயரில் அமைந்துள்ளன என்பதை முன்பே கண்டோம்.

அங்கு விழாக்களில் ஆடி நடிக்கப் பெறும் கூத்துக்கள் தமிழ்நாட்டின் தொடர்பையும், அவற்றில் படிக்கப் பெறும் பாடல்கள் தமிழக நாட்டுப் பாடல் அமைப்பையும் நன்கு காட்டுகின்றன. இந்த நிகழ்ச்சிகள் இன்றும் நடைபெறுகின்றன.

அங்கரா்த்து மன்னாடியார் வாழும் நல்லேபள்ளியிலும் அந்த மாதிரியான கூத்துக்கள் பல நடைபெறுகின்றன. நல்லேபள்ளியில் அக்கூத்து நடைபெறும் காலங்களில் பல கம்பராமாயணப் பாடல்கள் படிக்கப் பெற்றன என்பதை அங்குள்ளவர்கள் கூறுகின்றார்கள்.

பிற இடங்களைப் போலவே நல்லேபள்ளியில் நடிக்கப் பெறும் கூத்திலும் கொங்கு நாட்டுத் தமிழர்கள் குடியேற்றத் தொடர்பான பல்வேறு கருத்துக்கள் அமைந்துள்ளன. நல்லேபள்ளிக் கூத்துக்கு 63 தமிழர்கள் வரவேண்டும் என்றும் கணக்குக் கூறுகிறார்கள். இன்று காலமாறுபாட்டால் அங்கு தமிழர்கள் எவரும் வராவிட்டாலும் 63 தமிழர்கள் வந்து விட்டார்கள் என விழாவில் கூறுகின்றனர். இதன் மூலம் பழங்காலத்தில் அக்கூத்தின்போது தமிழர்கள் பலர் வந்திருக்கின்றனர் என்பதை உணர்கின்றோம்.

இதைவிட இன்றியமையாத செய்தி ஒன்றுண்டு. 63 தமிழர்கள் வந்தபின் அதாவது அவர்கள் கூறும் கூற்றுப்படி 63 தமிழர்கள் 'எழுந்தருளியபின்' நல்லேபள்ளி சோண்டத் மன்னாடியார் 64ஆம் தமிழராக 'விழாவுக்கு எழுந்தருளுகின்றார்' உடனே விழாத் தொடங்குகிறது. இது கொங்கு வேளாளர் ஊஞ்சல் பாட்டில் வரும் 'சங்கமெனும் 64 வேளாளர்' என்ற தொடரை நினைவூட்டும்.

நல்லேபள்ளி, சித்தூர் விழாவுக்கு வரும் பிறரை வந்தார்கள் என்றும், தமிழர்களை எழுந்தருளுகிறார்கள் என்றும் கூறுவது தமிழர்களின் சிறப்பையும், இன்றியமை யாமையையும் அத்தெய்வங்களுக்கும், இவ்விழாக்களுக்கும் உள்ள தொடர்பையும் காட்டுகிறது. இக்கூத்து நிகழ்ச்சி தமிழர் தொடர்பையும் கேரளப் பகுதிக் குடியேற்றத்தையும் நமக்குத் தெளிவாக விளக்குகிறது.

**வள்ளுவநாட்டு அரசர் மரபும் அங்கராத்தும்**

வெள்ளாளர் குடியேறி அமைத்த வெள்ளப்பநாடு, வள்ளுவநாடு என்று முன்பு கண்டோம். கி.பி.10 ஆம் நூற்றாண்டில் வெள்ளப்ப நாட்டு அரசு தோற்றுவிக்கப் பட்டது. இராசசேகரன் என்பவர் இந்த அரசைத் தோற்று வித்தார். 18ஆம் நூற்றாண்டில் வள்ளுவ நாட்டை ஆண்ட ஸ்ரீவல்லபன் ராமவர்ம வலிய ராஜா என்பவர் இராசசேகரன் மகன் 'வலபன்' (வல்லபன்) மரபில் தோன்றியவர் ஆவார். இவர் மாங்கட மன்னர் என்றும் அழைக்கப்பட்டார். இம் மரபினர் அங்காடிப்புரம் என்னும் தலத்தில் மாளிகை அமைத்து அரசு புரிந்து வந்தனர்.

இவர்கள் சேரமான் பெருமாளின் அழைப்பின் பேரில் மானீச்சன், விக்கிரமன் முதலியோர் சேரநாட்டுக் கள்ளிக்கோட்டை சென்றபோது உடன்சென்றோர் வேளாளர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கொங்கு வேளா ளரில் பெரிய குலத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் 'வலிய ராசா' என்ற பட்டத்தைப் பெற்றனர். இப்பெயர்த் தொடர்பு முன்பே விளக்கப்பட்டுள்ளது.

ஐதர், திப்பு கலவரத்தின்பின் கிழக்கிந்தியக் கம்பெனி யின் இடைவிடாத கொடுமையின் காரணமாக வள்ளுவநாட்டு இராமவர்ம வலிய ராஜாவின் குடும்பம் ஆட்சிப் பொறுப்பைச் சரியாக நடத்த இயலாமல் சிதறியது. அவருடைய மனைவி இலக்குமி அம்மாள் தன் குமாரர்களான கிருஷ்ணமேனன், இராமன் மேனன் ஆகியோருடன் அங்காடிப் புரத்திலிருந்து புறப்பட்டுப் பாலக்காடு பறளியை அடுத்த நரிக்கோடு என்னும் இடத்திற்குச் சென்று விட்டனர். நல்லேபள்ளி அங்காரத் மன்னாடியார் மாளிகையின் ஒரு பிரிவுதான் நரிக்கோடு. 'நரிக்கோடு என்கின்ற அங்கராத்து' என்று கூறும் மரபும் உண்டு. அதாவது அங்கராத்து இல்லத்தினரும் நரிக்கோட்டில் காணிஉடைய அங்காடிப்புரம் வள்ளுவ நாட்டு அரசர் மரபி னரும் ஒரே தாய்வழியைச் சேர்ந்தவர்கள். கொங்கு நாட்டு

வழக்கப்படிப் பங்காளிகள் என்பது இதன்மூலம் உறுதிப்படுகிறது. மாங்கட மன்னரின் நிலபுலங்கள் பல நரிக்கோட்டுப் பகுதியில் இருந்தன. இங்கிருந்த இட்டிராரிச்ச மன்னாடியார் தூண்டுதலால் கொச்சி அரசுக்குச் செலுத்த வேண்டிய பாக்கியை செலுத்திக் கிருஷ்ணமேனன் அங்கராத்து மன்னாடியார் மாளிகைக்கு உரியவரானார். அதனாலேயே மெக்கென்சிக் குறிப்பில் அங்கராத்து மாளிகைக்கு உரியவர் 'நரிக்கோடு கிருஷ்ணமேனன்' என்று கூறப்பட்டுள்ளது.

அங்கராத்து மன்னாடியார் வீட்டுக்கு உரியவரான கிருஷ்ணமேனன் பரியாரம் என்ற வீட்டுச் சிம்மு அம்மா அவர்களை மணந்தார். அங்கராத்து கிருஷ்ண மேனனுக்கு 5 ஆண்களும் 5 பெண்களும் பிறந்தனர்.

ஆண்கள் : ராவுண்ணி வலிய மன்னாடியார்
கோவிந்தன் உண்ணி மன்னாடியார்
கிட்டுண்ணி மன்னாடியார்
சங்குண்ணி வலிய மன்னாடியார்
நாராயணன் உண்ணி மன்னாடியார்

பெண்கள்: இலக்குமி நேத்தியார்
பாரு நேத்தியார்
நாணி நேத்தியார்
இக்கு நேத்தியார்
அம்மணி நேத்தியார்

அங்கராத்து வீட்டைச் சேர்ந்த பெண்கள் அம்மா என்று அழைக்கப் பெறாமல் 'நேத்தியார்' என்று அழைக்கப் பட்டனர். இது 'நாச்சியார்' என்ற தூய தமிழ்ச் சொல்லின் திரிபாகும். மொழியியலார் கருத்துப்படி த்த்>ச்ச் என்ற இரண்டும் மயங்கி வரும். வைத்தான் - வைச்சான் என்பது காண்க.

இப்பதின்மரில் நான்காவதாகக் குறிக்கப் பெற்ற சங்குண்ணி வலிய மன்னாடியார், கல்வி கேள்வியில் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கி எல்லோராலும் போற்றிப் புகழ்ந்து பாராட்டப்பெற்றவர். இவர் பிறந்தது 1832ஆம் ஆண்டு. 1915இல் மறைந்தார். அவ்வட்டாரத்தில் உள்ள மக்களாலும் உறவினர்களாலும் பெரியவராகவும், தலைவராகவும் மதிக்கப்பட்டார். உற்றாரும் உறவினரும் நண்பர்

களும் அறிஞர்களும் எப்பொழுதும் அவரைச் சூழ்ந்து இருந்தனர். மிகப்பெரிய அறிஞராகத் திகழ்ந்தார். தன் 83ஆம் வயது வரை கொச்சி சமத்தானத்தில் நீதிபதி என்ற பதவிக்குச் சமமான 'சிரஸ்தார்' என்ற மதிப்புமிக்க பெரிய பதவி வகித்து வந்தார். அதனால் சங்குண்ணி வலிய மன்னாடியாரை அனைவரும் 'சிரஸ்தார் மன்னாடியார்' என்றே அன்புடன் அழைத்தனர். Head of the Revenue and Criminal Justice என்ற ஆங்கிலப் பெயரால் அவர் அழைக்கப்பட்டார்.

அங்கராத்து சங்குண்ணி வலிய மன்னாடியார் ஒற்றைப் பாலம் மேனக்கத் இல்லத்தில் இலட்சுமி அம்மாள் என்பவரை மணம் செய்து கொண்டார்.

அங்கராத்து சங்குண்ணி வலிய மன்னாடியார் திருமணம் செய்து கொண்டபோது மேனக்கத் இல்லம் ஒத்தப் பாலத்தின் தென்மேற்கில் 'தோட்டக்கரை' என்னும் இடத்தில் வாழ்ந்தது. குறிஞ்சியும் முல்லையும் மருதமும் கலந்த அழகான அந்தத் தோட்டக்கரை இல்லத்தை விட்டு ஒத்தப்பாலம் ஊருக்குள் 'நியூ மேனக்கத்' என்று பெயர் வைத்துக் கொண்டுள்ள இல்லத்தில் இப்போது அக்குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர். மேனக்கத் இல்லத்தாரும் வேளாளர்களே என்பது பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர் கருத்தாகும்.

'நியூ மேனக்கத்' இல்லத்தில் இன்றும் மிக வயோதிக நிலையில் வாழும் 'மேனக்கத் கல்யாணிக்குட்டி அம்மாள்' அவர்கள் நல்லேபள்ளி அங்கராத்து மன்னாடியார் இல்லத்துக்கும், தங்கள் மேனக்கத் வீட்டுக்கும் இருந்த திருமணத் தொடர்பினை நன்கு நினைவுகூர்ந்து பல செய்திகளைக் கூறினார்.

ஒத்தப்பாலத்தில் சந்தித்து விசாரித்தபோது அவ்வூர் குஞ்சன்நாயர் சுவாமிகளும், ஒத்தப்பாலம் பலப்புரம் கறுத்த இடத்து இராமன்குட்டி நாயர் அவர்களும் மேனக்கத் நல்லே பள்ளி அங்கராத்துத் திருமணத் தொடர்பைக் கூறினர்.

அங்கராத்து சங்குண்ணி வலிய மன்னாடியார் அவர்கட்கும் ஒத்தப்பாலம் மேனக்கத் இலட்சுமிஅம்மாள் அவர்களுக்கும் மூத்த மகனாகப் பிறந்தவரே கோபால மேனன் அவர்கள். கோபால மேனன் பிறந்தது 1884ஆம் ஆண்டு.

கோபாலமேனன் அவர்கள் இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிக் கொடுங்கலூரில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். தலைமை ஆசிரியராகப்

பணியாற்றிய போதுதான் 'வடவனூர் வேளாளர்கள்' என்று அங்கராத்துச் செப்பேடுகளில் புகழப் பெற்றவர்களும், ஏற்கனவே நல்லேபள்ளி அங்கராத்து மன்னாடியார் இல்லத்துடன் நெருங்கிய தொடர்பும் உறவும் கொண்டவர்களுமான வடவனூர் மருதூர் இல்லத்துச் சத்தியபாமா அவர்களைத் திருமணம் செய்து கொண்டார். நீர்வளமிக்க நிலங்களையும் வணிகத்தையும் மருதூர் இல்லத்தினர் மிகுதியாகப் பெற்று வளமான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

கோபால மேனன் சத்தியபாமா தம்பதியருக்கு ***17 - 1 - 1917***இல் பிறந்தவரே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள்.

கொங்கு வேளாளரில் தென்கரை நாட்டுச் சங்கரண்டாம்பாளையம் பெரிய குலத்து வேணாடு உடையார் மரபினரான தந்தை வழியிலும், வடவனூர் வேளாளர் மரபினரான தாய் வழியிலும் தோன்றிய கொங்கு வேளாளர் குலத்துச் செம்மலாக, வேளிர்குல வேந்தராக உள்ள நம் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொங்கு நாட்டுக் குடும்பத்தில் தோன்றிய தமிழரே என்பது மேற்கண்ட விரிவான வரலாற்று ஆய்வு கூறும் உண்மையாகும். இது மறுக்க இயலாத அடிப்படைச் சான்றுகள் பலவற்றால் நாம் கொள்ளும் முடிவாகும்.

**பூர்வீகத்தில் தமிழரே**

மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழுவால் எழுதப்பட்டு லேனா தமிழ்வாணன் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட 'புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்.' என்னும் நூலில் (பக் 6)கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது :

> 'அவரது முன்னோர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்த கோவை மாவட்டத்திலுள்ள காங்கேயம் பகுதியில் வாழ்ந்துவரும் மன்றாடியார்கள் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும், பிழைப்பை நாடிக் கேரளத்திலுள்ள மருதூரில் குடியேறியவர்கள் என்றும் அப்போது மேனன் என்று அழைக்கப்பட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.
>
> ஆக, பிறப்பால் இன்றைய முதல்வர் எம். ஜி ஆர். இலங்கையைச் சேர்ந்தவர் என்றாலும், மலையாளி எனக் கருதப்பட்டாலும் பூர்விகத்தில் தமிழரே!'

**வைணவ சமயத் தொடர்பு**

மாண்புமிகு தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள், அவர்தம் தமையனார் திருமிகு எம்.ஜி.சக்கரபாணி ஆகியோர் பெயர்கள் வைணவப் பெயர்கள். இவர்கள் தந்தை திருமிகு. கோபாலமேனன். இவர்களின் பாட்டனார் சங்குண்ணி வலிய மன்னாடியார். பாட்டியின் பெயர் இலட்சுமி. தந்தை குடும்பத்தோடு உறவுடைய வட வனூர் மருதூர் இல்லத்தில் தோன்றிய தாயின் பெயர் சத்தியபாமா. கோபாலமேனன் அவர்களின் தந்தை அங்கராத்து சங்குண்ணி வலிய மன்னாடியார் பெயரிலும் திரு மாலின் சங்கு இடம் பெற்றுள்ளது. இவர்கள் முன்னோர் களான அங்காடிப்புரம் வள்ளுவக் கோனாதிரி அரசர் மரபு வைணவத் திருக்கோயிலின் காவலராக விளங்கியுள்ளார்கள். அதனாலேயே பலர் வைணவப் பெயர்களை மரபில் பரம்பரை பரம்பரையாகக் கொண்டிருந்தனர்.

பாரதப்புழையின் வடகரையில் மலைப்புரத்தில் திரூருக்கு அருகேயுள்ள திருமால் தலம் ‘திருநாவாய்.’ திருமங்கையாழ் வாரால் மங்களாசாசனம் பெற்ற தமிழ்த் திருத்தலம். 108 வைணவத் திருத்தலங்களில் 96ஆம் எண்ணாகக் குறிக்கப் பெறுவது.

அங்கு 12 ஆண்டுகட்கு ஒருமுறை கொண்டாடப்பெறும் மகாமகத் திருவிழாவைக் கொண்டாடி ‘ரட்சா புருஷர்’ என்று போற்றப்பெறும் பெருமைக்குரியவர்களாக நல்லேபள்ளி அங்கராத்து மன்னாடியார் பங்காளிகளான அங்காடிப்புரம் வள்ளுவக் கோணாதிரி அரசர் பரம்பரையினர் விளங்கினர். எனவே அம்மரபில் வந்தவர்கட்கு,

ராமவர்மர்
கிருஷ்ணமேனன்
இராமன்
சங்குண்ணி
இலட்சுமி அம்மாள்
கோபாலமேனன்
சக்கரபாணி
இராமச்சந்திரன்

என்ற பெயர்களில் வைணவத்தாக்கம் இருப்பதன் கார ணத்தை நாம் அறியமுடிகிறது. நல்லேபள்ளி அங்கராத்துக்

குடும்பத்தின் தொன்மைச் சிறப்புமிக்க பட்டத்து யானைக்குக்கூட 'இராமச்சந்திரன்' என்ற பெயர் சூட்டப் பெற்றிருந்தது. நல்லேபள்ளி அங்கராத்து மன்னாடியார் மாளிகையினுள் இருக்கும் பெருமாள் கோயிலுக்குப் 'பாரி ஜாதபுரம் மகாவிஷ்ணு ஸ்ரீ கிருஷ்ணர் சேத்திரம்' என்று பெயர். திருவாதிரை விழாவில் அங்கு முன்பு கம்பராமா யணம் தமிழில் படிக்கப்பட்டது. கிருஷ்ணாட்டக்களி என்ற சிறப்புமிக்க கூத்து நடத்தப்பட்டது. இதன் மூலம் இம்மரபு வைணவ மரபையே பெரும்பாலும் பின்பற்றி வந்தது என்பது உறுதிப்படுகிறது.

### பல்வேறு தொடர்புகள்

கொங்கு வேளாளர்களில் சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர்கள் பெரிய குலத்தைச் சேர்ந்தவர்கள். அவர் களுக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பூர்வீக முன்னோர் குடும்பமான நல்லேபள்ளி அங்க ராத்து மன்னாடியார் அவர்களுக்கும் பல வழிகளில் ஒற்றுமை யும் தொடர்பும் உள்ளன. இவைகளின் அடிப்படையிலேயே நாம், நல்லேபள்ளி அங்கராத்து மன்னாடியார் கொங்கு வேளாளர்களில் பெரிய குலத்தைச் சேர்ந்தவர்களே என்றும் வேணாடு உடையார் மரபினரே என்றும் கொள்ளுகின்றோம். இச்சான்றுகளையும் தொடர்புகளையும் பின்வரும் ஒப்புமைப் பட்டியல் மூலமும் நாம் சுருக்கமாக, தெளிவாகக் காணலாம்.

| | **பெரியகுலத்து வேணாடு உடையாருக்கு உரியவை** | **நல்லேபள்ளி அங்கராத்து மன்னாடியாருக்கு உரியவை** |
|---|---|---|
| 1. | வேணாடு உடையார் பட்டம் | வேணாட் பட்டம் (பட்டயம்) |
| 2. | பெரிய குலத்தார் | வலிய என்னும் அடைமொழி |
| 3. | வேணாட மன்றாடி பட்டம் (மெய்க்கீர்த்தி) | வேணாட் மன்னாடி பட்டம் (செப்பேடு) |
| 4. | பூந்துறை முதல்காணி (காணிப்பாடல்) ('பூந்துறையில் ஆண்ட புடாரன் வேணாடுடையார்' என்பது மெக்கென்சி ஆவணப்பகுதி)[164] | முன்னோர் பூந்துறையிலிருந்து அழைத்து வரப் பட்டவர்கள் (கேரள தேச வரலாறும், கேரளோற்பத்தியும் கூறும்) |

| | | |
|---|---|---|
| 5. | காங்கேயம் காணி | காங்கேயத்திலிருந்து குடியேற்றம் |
| 6. | சங்கரண்டாம்பாளையம் | சங்குப்பாளையம் தொடர்புடைய ஊர் (கொங்கம்படை வரலாறு) |
| 7. | செட்டிவேணாடுடையான் பட்டம் (வணிகரோடு தொடர்பு) | வணிகரோடு தொடர்பு உடையவர்கள் தங்களுடன் வணிகரை அழைத்து வந்தவர்கள் (மூத்தான், தரகன் மன்னாடி) |
| 8. | வேளாளர்களில் தலைவர் (வேணாடுடையார் வம்சாவளி) | மன்னாடியார்களில் 'தேச வாழி' என்னும் தலைமை (மெக்கென்சி ஆவணம்) |
| 9. | சங்கமெனும் 64 பெருங் குடியர் (ஊஞ்சல் பாட்டு) | வேளாளர் 64 பேருடன் மன்னாடியார் தொடர்பு |
| 10. | மதுக்கரைச் செல்வி தெய்வம், மதுக்கரை எல்லை | மதுக்கரை எல்லை வழியாகச் சென்றவர்கள். மதுக்கரை ஊர் உண்டாக்கல். |
| 11. | பொன்காளியம்மன் தெய்வம் | சொர்ணாங்கி அம்மன் தெய்வம் (சொர்ணம்-பொன்) காளப்பட்டி-காளிப்பட்டி என்ற ஊர் |
| 12. | பாலை அம்மன் | பாலைக்காடு ஊர் |
| 13. | கொற்றனூர்க்காணி | கொற்றமங்கலம் உரிமை |
| 14. | அரசரிடம் வெட்டவாளும் கட்டக் கயிறும் பெற்றவர் | அரசரிடம் வெட்டான் வாளும் கட்டான் கயிறும் பெற்றவர்கள் |
| 15. | கம்பரால் புகழப்பட்டவர்கள் | நல்லேபள்ளியில் கம்பராமாயணம் படிக்கப் படும் |
| 16. | பொன் ஊஞ்சல் உரியது | பொன் மண்டபம் உரியது |
| 17. | பெரிய நாச்சி அம்மன் குலதெய்வம், பெண்கள் பெயர் | வலியம்மாள் பெண்கள் பெயர் |

| | | |
|---|---|---|
| 18. | நாச்சி | நேத்தி(யார்) |
| 19. | அஞ்சா நல்லூர், பொம்ம நல்லூர் உரியது | நல்லேபள்ளி உரியது |
| 20. | 'இருளுரைத்த காண்டா வனம் வெட்டி நாடு கண்டவர்கள்' (மெக்கென்சி ஆவணம்)[165] | 'கானல் பெருமரம் வெட்டித் தெளிவிச்சவர்கள்' (ஓலைப்பட்டயம்) |
| 21. | வைணவத் தொடர்பு கருப்பராய சுவாமி | வைணவத் தொடர்பு ஸ்ரீ கிருஷ்ணர் |
| 22. | பிள்ளை வேணாடர் பெயர் | பிள்ளி நகர்ப் பெயர் (பிள்ளே என்றும் அழைக்கப்படும்) |
| 23. | பேரூர் முதன்மை கொங்கு ஏழு தலத்தில் பேரூரை ஒன்றாகக் கூறும் புதுமை | பேரூர் முதன்மை |
| 24. | கங்கா குலத் தலைவர் | கங்கா குல தீரர் |

இந்த ஒப்புமைகள் இருவரும் வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே; ஒரே கால்வழியினரே; நெருக்கமான தொடர்பும் உறவும் உடைய ஒரே குடும்பத்தினரே என்ற பேருண்மையைப் புலப்படுத்துகின்றன.



மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களின் பாட்டனார்
நல்லேபள்ளி அங்கராத்து சங்குண்ணி வலிய மன்னாடியார்.

# மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் குடிவழி

வள்ளுவநாடு வள்ளுவக் கோனாதிரி மாங்கட மன்னர்

வல்லபராமவர்ம வலியராசா—நரிக்கோடு கசாவு லட்சுமியம்மா
(1773-1855)

- கிருஷ்ணமேனன் (1800 - 1855)
  (ம) சிம்மு அம்மாள்
  - அங்கராத்து சங்குண்ணி
    வலிய மன்னாடியார் (1832 - 1915)
    (ம) மேனக்கத் இலட்சுமி அம்மாள்
    (ம) புத்தூர் வள்ளோலி குஞ்ஞி இலக்குமியம்மா
    - கோபாலமேனன் (1884 - 1920)
      (ம) வடவனூர் மருதூர் இல்லம்
      சத்தியபாமா அம்மாள்
      - கமலாட்சி
      - எம்.ஜி. சக்கரபாணி அவர்கள்
      - சுபத்ரா
      - பால கிருஷ்ணன்
      - மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்
    - இராவுண்ணி மேனன்
    - ஜானகி அம்மா
    - வள்ளோலி சங்குண்ணி பணிக்கர்
- இராமன்மேனன்

## சமூகப் பெரியவர்கள் கருத்து

கொங்கு வேளாளர்கள் கேரள மாநிலத்துப் பாலக் காட்டுப் பகுதியில் குடியேறினர் என்பது வரலாற்று ஆதாரங் கள் மூலம் தெளிவாக நிறுவப்பட்ட உண்மையாகும். பாலக் காடு மாவட்ட மன்னாடியார்கள் குடும்பங்கள் அனைத்தும் தொன்மையான கொங்கு வேளாளர் குடும்பங்களே என்பது அவர்கள் பண்பாடு பழக்கவழக்கத்தாலும் வரலாற்றுச் சான்றுகளாலும் உறுதிப்படுகிறது.

பாலக்காட்டு மன்னாடியார்கள் குடும்பங்களில் ஒன்றான நல்லேபள்ளி அங்கராத் மன்னாடியார் குடும்பம் கொங்கு வேளாளர்களில் பெரிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் அவர்கள் வேணாடுடையார் வழிவந்தவர்கள் என்பதும் விரிவாக முன்பு விளக்கப்பட்டது.

நல்லேபள்ளி அங்கராத்து சங்குண்ணி வலிய மன்னாடி யாரின் மூத்த மகன் கோபாலமேனன். கோபாலமேனன் சத்தியபாமா தம்பதியரின் இளையமகன் மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்கள்.

இச்செய்தி குறித்து கேரள, தமிழகத்தில் வாழும் மூத்த சமூகப் பெரியவர்கள் கருத்துக்களைக் காணலாம்.

### அங்கராத் நாராயணன் உண்ணி மன்னாடி நாயர் அவர்கள்

பாலக்காடு மாவட்டம் சித்தூர் வட்டம் கொழிஞ்சாம் பாறை அருகே நாட்டுக்கல் என்னும் இடத்தில் கடந்த 45 ஆண்டுகளாக வாழ்ந்து வரும் பெரியவர் திருமிகு நல்லேபள்ளி அங்கராத் நாராயணன் உண்ணி மன்னாடி நாயர் அவர்கள். அவருக்கு இப்போது வயது 81. இன்று அங்கராத் குடும் பத்தில் வாழும் பெரியவர் அவர்தான்.

இவர் இன்றும் பெரிய விவசாயி. கொழிஞ்சாம் பாறைப் பகுதியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வருபவர். அப்பகுதி வேளாளர்கட்கு உதவ முதன் முதலில் அவ்வட்டாரத்தில் 54 ஆண்டுகட்கு முன்பு தனிப்பட்ட வங்கியைத் தொடங்கியவர். அந்த வங்கிக்கு 'அங்கராத் வங்கி' என்றே பெயர்.

உணவு ஆலோசனைக் குழு, நில அடமான வங்கி, நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கிராமக் கோர்ட்டு, மில் உரிமையாளர் சங்கம், ஊராட்சி மன்றம், பால் வழங்கு கூட்டுறவுச் சங்கம், சர்க்கரை ஆலைத் தொழிலாளர் சங்கம் ஆகிய பல்வேறு அமைப்புக்களுக்குத் தலைவராகப் பல்லாண்டுகள் பணி புரிந்துள்ளார்.

கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருச்சூர் நாயர் வங்கி ஆகியவற்றின் இயக்குநராகவும் பணிபுரிந்துள்ளார். கொழிஞ்சாம்பாறையில் உள்ள அரசினர் பொதுக் கட்டிடங்கள்அனைத்துக்கும் இலவசமாகச் சுமார் 20 ஏக்கருக்கு மேல் நன்கொடையாகக் கொடுத்துள்ளார். முன்பு இவருக்கு 3000 ஏக்கர் நிலம் இருந்தது. கேரள நிலச்சீர்திருத்த சட்டத்தால் பெரும்பான்மையான நிலம் இப்போது இல்லை.

கொழிஞ்சாம்பாறை நாட்டுக்கல் 'பங்களாவில்' வாழும் இவரது வாழ்வே கொழிஞ்சாம்பாறையின் வளர்ச்சி வரலாறு எனலாம். 'கோரிமேனன் தண்ணீர்ப்பந்தல்' என்ற இடம் நாட்டுக்கல் - கொழிஞ்சாம்பாறை- நகரமாக உருவாக இவரது தாராள மனப்பான்மையும் கொடையுமே முதற்காரணம். இன்றும் ஏழைகட்கும், இரவலர்கட்கும், சமய யாத்திரிகர்களுக்கும் மிகவும் உதவி வருகின்றார். இவரிடம் உரையாடிய போது கீழ்க்கண்டவாறு கூறினார்:

'என் இளமைக்காலத்தில் கொங்கு நாட்டு மன்றாடியார்கள் வீடுகளில் நடைபெறும் திருமண நிகழ்ச்சிகளுக்கு எங்கள் வீட்டுக்கு அழைப்பு வரும். எங்கள் வீட்டில் என்னை அனுப்புவார்கள். பழைய கோட்டை, சமத்தூர், ஊத்துக்குளி, காடையூர், சங்கரண்டாம்பாளையம், காங்கேயம் போன்ற எல்லா ஜமீன்தார்,கொங்கு வேளாள மன்றாடியார் மாளிகைகட்கும் நான் சென்றுள்ளேன். எங்களுக்கு அங்கு நல்ல வரவேற்பு இருக்கும்.

எங்களுக்கு உழவுக்கு, வண்டிகளில் பூட்ட எருதுகள் வேண்டுமென்றால் பழையகோட்டைக்குக் காகிதம் கொடுத்தனுப்புவோம். உடனே காளைகள் வரும். எவ்வளவு தேவையோ அவ்வளவு வரும். எங்கள் அங்கராத்துப் பெயரைச் சொல்லியே பலர் பழையகோட்டையிலிருந்து காளைகள் வாங்கிவந்துள்ளனர்.

எம்.ஜி.ஆர். யாரோ என்று நீங்கள் எண்ண வேண்டாம். அவர் எங்கள் வீட்டுப் பிள்ளை. எங்கள் அங்கராத் வம்சத்தில் பிறந்தவர். இதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம். இதை நானே கூடியவிரைவில் சென்னை சென்று எம்.ஜி.ஆரை நேரில் சந்தித்துக் கூறப் போகின்றேன். நீங்கள் எம்.ஜி.ஆரைப் பார்க்கும் போது நான் இப்படிக் கூறியதாகவும் நான் நேரில் அவரிடம் வருவதாகவும் கூறுங்கள்'

மேலே கண்ட செய்திகளை உள்ள பூர்வமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் ஆர்வத்துடன் அங்கராத்து நாராயணன் உண்ணி மன்னாடி நாயர் கூறினார்கள். இதே செய்தியை இவர் தம்பி அங்கராத் சிறிய நாராயணன் உண்ணி மன்னாடி நாயரும் இவர் மகன் அரிமா.ஏ.சுபாஷ் சந்திரனும் கூறுகிறார்கள்.

**பழையகோட்டைப் பட்டக்காரர் நல்ல சேனாபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்கள்**

கொங்கு நாட்டில் கொங்கு வேளாளர் சமுதாயத் தலைவராகவும், அமைப்பின் பெருந்தலைவராகவும் விளங்கி வருபவர்கள் பழையகோட்டைப் பட்டக்காரர் திருமிகு நல்ல சேனாபதிச் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார் அவர்கள். 15.3.1962 முதல் 5.3.1967 வரை பெருந்தலைவர் கு.காமராசர், எம்.பக்தவத்சலம் ஆகியோர் முதலமைச்சராக விளங்கியபோது தமிழக அமைச்சரவையில் அமைச்சராக வீற்றிருந்து நாடும் ஏடும் போற்ற நல்லாட்சி புரிந்தவர்கள். கொங்கு வேளாண் சமுதாயம் இவரை இன்று சமுதாயத் தலைவராக ஏற்று அதற்குரிய மதிப்பும் மரியாதையும் செலுத்தி வருகிறது. வேளாண் சமூக நற்பண்புகளின் உறைவிடமாக அவர்கள் விளங்கி வருகிறார்கள்.

7.12.1962ல் மருதமலையில் திரையுலகச் சிற்பி தேவர் அவர்கள் தம் செலவில் மின்விளக்குகள் அமைத்தார்கள். அவ்விழாவில் அன்று தமிழக அமைச்சராக விளங்கிய பழையகோட்டைப் பட்டக்காரர் அவர்களும், அன்று திரையுலகில் முன்னணியில் இருந்த எம்.ஜி.ஆர். அவர்களும் கலந்து கொண்டார்கள். அவ்விழாவில் பேசிய பழையகோட்டைப் பட்டக்காரர் அவர்கள்,

'நான் மன்றாடியார் மரபில் வந்தவன்; எம்.ஜி.ஆர். அவர்கள் பாலக்காட்டு மன்னாடியார்

மரபில் வந்தவர். மன்னாடியார் - மன்றாடியார் இருவரும் ஒரே மரபுதான். கேரளத்து மன்னா டியார்கள் கொங்கு வேளாள மன்றாடியார் வழி யில் வந்தவர்களே. எனவே அம்மரபில் வந்த எம்.ஜி.ஆர் அவர்களும் கொங்கு வேளாளரே'

என்று கூற அதைப் புன்முறுவலுடன் ஏற்றுக் கொண்டார்கள் எம்.ஜி.ஆர். அவர்கள்.

பின்னர் சமயம் நேரும்பொழுதெல்லாம் பழையகோட் டைப் பட்டக்காரர் அவர்கள் மேற்கண்ட தொடர்பு குறித்து விசாரித்துப் பல செய்திகளை அறிந்தார்கள். 1982இல் பேரூர் மேலவீதி ஞான சிவாச்சாரியார் திருமடத்துக்கு இந்நூலா சிரியரை அனுப்பிவைத்தவர்கள் பழைய கோட்டைப் பட்டக் காரர் அவர்களே. பழையகோட்டைப் பட்டக்காரர் அவர் கள் இது குறித்துக் கீழ்வரும் அரிய வரலாற்றுச் செய்திகளைக் கூறுகிறார்கள்:

'மூன்று தலைமுறைக்கு முன் வரையிலும் காங்கேயப் பகுதிக் கோயில்களுக்குப் பாலக்காட்டு மன்னாடியார்கள் வந்து போய்க்கொண்டு இருந் தார்கள். இது எங்கள் அரண்மனையில் சொல்லக் கேள்வி.

சுமார் 50 ஆண்டுகட்கு முன் நல்லேபள்ளி அங்கராத்து குடும்பத்தைச் சேர்ந்த ஏ.எஸ். மன் னாடி நாயர் சென்னை மாநில அறநிலையத்துறை யில் உயர் அலுவலராக இருந்தார். அவர் பழைய கோட்டையில் முகாமிட்டுத் தங்குவார். அவர்கள் தங்களை வேளாளர் மரபினர் என்றும் கொங்கு வேளாளரோடு தொடர்புடையவர்கள் என்றும் கூறிக்கொண்டு என் தந்தையாரிடம் பெருமை யுடன் உரையாடுவார். இதை நானே நன்கு அறிவேன்.

பேரூர் ஞானசிவாச்சாரியார் மடத்திற்கும் கேரள மன்னாடியார் குடும்பங்களுக்கும் தொடர்பு உண்டு. அங்கு சென்று விசாரிக்குமாறு புலவர் செ.இராசுவையும், கு.அருணாசலக் கவுண்டரை யும் நான்தான் அனுப்பி வைத்தேன்.

அங்கராத், சம்பத் மன்றாடியார்கள் குடும்பங்கள் வேளாள கோத்திரத்தார் என்று பாலக்காட்டுப் பகுதியில் குடியேறியிருப்பது தெரிய வந்தது. இவர்களும் காங்கேயம் பகுதியில் இருந்து குடிபோனவர்கள்தாம் என்பதும் என் விசாரணையில் புலப்பட்டது.

காடையூர் காங்கேய மன்றாடியார் வீட்டுச் சமையல்காரர் சின்னப்பனுக்கு வயது 80 ஆகிறது. அவர் முக்கியமான தகவல் ஒன்றைக் கூறினார். காடையூர் பட்டக்காரர் பாலக்காட்டுப்பக்கம் தம் பரிவாரத்துடன் போவதுண்டு என்றும், போகும் போதெல்லாம் சமையலுக்குத் தன்னையும் உடன் அழைத்துப் போவார் என்றும், அங்கே அங்கராத், சோண்டத் முதலிய மன்னாடியார்கள் காடையூர்ப் பட்டக்காரருக்குப் பாதபூசை செய்து காணிக்கை வழங்குவது உண்டு என்றும், அவர் சொன்னது எனக்குப் பெரு வியப்பாக இருந்தது. இவற்றால் இந்த மன்னாடியார்கள் காங்கயத்தில் இருந்து போனவர்கள் என்பதும் அவர்கள் கொங்கு வேளாளர் மரபைச் சேர்ந்தவர்கள் ஆகலாம் என்றும் தெரிய வருகிறது'.

கேரள மன்னாடியார்கள் மாளிகைகளில் இதுபற்றி விசாரித்தபோது 'நாங்கள் மாமன் மைத்துனன்மார்கட்குத்தான் பாதபூசை செய்வோமேயொழிய எங்கள் தாயாதிகளுக்குப் பாதபூசை செய்யமாட்டோம்; எங்கள் வழக்கமில்லை' என்று கூறினார்கள். எனவே காடையூர் மன்றாடியார் மரபுப் பொருளந்தை குலத்தினர் பாலக்காடு பகுதிக்குக் குடிபெயர்ந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அங்கராத் மன்னாடியார்களாக இருக்க முடியாது என்பது பெறப்படுகிறது. அவர்கள் கொங்கு வேளாளர்களில் பெரிய குலம் என்று ஏற்கனவே நிறுவப்பட்டது.

**சங்கரண்டாம்பாளையம் குமார ரத்தின வேணாடுடையார்**

கொங்கு வேளாளர் நாற்பத்தெண்ணாயிரம் கோத்திரத்துக்குப் பெரிய கோத்திரம், கொங்கு 24 நாட்டுக்கும் பெரிய வீட்டுக்காரர் சங்கரண்டாம்பாளையம் வேணாடுடை

யார் மரபினர் என்பது கொங்கு இன வரலாறும் செப்பேடு பட்டயமும் கல்வெட்டுக்களும் கூறும் உண்மையாகும்.

இம்மரபில் பரம்பரைப் பண்பின் உறைவிடமாக, புலவர்களை இன்றும் வரவேற்று உபசரிக்கும் பெருவள்ளலாக, முன்னவர் புகழை எல்லாம் தம்புகழ் ஆக்கி வாழ்வாங்கு வாழும் உத்தமர் திருமிகு குமார ரத்தின வேணாடுடையார் அவர்கள். பெயருக்கு ஏற்றவாறு பெரிய குலத் தலைவர். அவர்கள் கீழ்வருமாறு கூறினார்கள்:

> 'எம்.ஜி.ஆர். கொங்கு வேளாளர் தான். அவரது உடற்கூறு அடையாளங்களை வைத்துப் பார்க்கும்போது அவர் கொங்கு வேளாளர் மரபில் வந்தவராகக் கூறத் தோன்றுகிறது'.

நமக்குக் கிடைக்கும் வரலாற்றுச் சான்றுகளைத் தொகுத்து நுட்பமாக ஆராயும்பொழுது நல்லேபள்ளி அங்கராத் மன்னாடியார் குடும்பம் கொங்கு வேளாளர்களில் பெரிய குலத் தொடர்பு உடையவர்களாகவே உள்ளனர். அதன்படி சங்கரண்டாம்பாளையம் வேணாடுடையாரும் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களும் ஒரே குலத்தைச் சேர்ந்த பங்காளிகள் ஆகின்றனர்.

**பிற பட்டக்காரர் தொடர்பு**

பாலக்காடு, இடைமருதூர், கோயமுத்தூர்ச் செப்பேடுகள் 'எட்டுவகைப் பட்டக்காரர்' கேரளப் பகுதியில் உள்ளனர் என்று கூறுகிறது. இது, 'மன்னாடியார் 8 பேர்கள் முதலில் குடியேறினோம்' என்பதனோடு ஒத்து வருகிறது.

குறுப்பு நாட்டுப் பட்டயம், கொங்குப் புலவர் பட்டயம் ஆகியவற்றின்மூலம் பயிரன் குலத்துச் சர்க்கரை மன்றாடியார் அவர்களும், பொருளந்தை குலத்துக் காடையூர் காங்கேய மன்றாடியார் அவர்களும், செங்கண்ண குலத்துப் பல்லவராயர் அவர்களும், தென்கரைநாடு பெரிய குலம் வேணாடுடையார் அவர்களும் இணைந்து ஒன்றாகச் செய்த அறச் செயல்கள் பற்றி விளக்குகின்றன.

ஒருவருக்கு முடி சூட்டும்போது பிற பட்டக்காரர்கள் வந்து வாழ்த்துவதும், வாழ்த்துப் பெறுவதும் பண்டைய மரபு. பழையகோட்டை, காடையூர், காங்கேயம் பட்டக்காரர்கள் திருமணத் தொடர்பாலும் பெரிய குலத்தாருக்கு மாமன் மைத்துனர் ஆகின்றனர்.

# கொங்கு நாட்டுத் தொடர்பை ஆர்வத்துடன் விளக்கிக் கூறிய கேரள மன்னாடியார் குடும்பத்துப் பெருமக்கள்

1. தேங்குரிசி புளியங்களத்து ஜனார்த்தன மன்னாடியார்
2. தேங்குரிசி புளியங்களத்து கண்டப்ப மன்னாடியார்
3. பள்ளஞ்சாத்தனூர் கண்டங்கண்டத்து கொச்சி கிருஷ்ண மன்னாடியார்
4. பல்லசேனா கே. கண்ணன்குட்டி மன்னாடியார்
5. வேங்கோடி கேனாத் கோவிந்த மன்னாடியார்
6. மாத்தூர் பாட்டத்தில் இராமநாதன் மன்னாடியார்
7. பாலக்காடு குன்னத்தூர் மேடு கே.ஈ. இராமநாதன் மன்னாடியார்
8. புளியங்களத்து இளையாத் வாசுதேவ மன்னாடியார்
9. மாத்தூர் பாட்டத்தில் கோபாலன் குட்டி மன்னாடியார்
10. கண்ணாடி பிரபாகர மன்னாடியார்
11. பாலக்காடு இராமநாதபுரம் டாக்டர் ஈ.கே. தாஸ்
12. நல்லேபள்ளி சோண்டத்து மாளிகை மேலாளர் தனஞ் செயமேனன்
13. கொல்லங்கோடு பணிக்கத் சிவசங்கர மன்னாடியார்
14. களப்பட்டி இறவமன்னாட்டில் குமார மன்னாடியார்
15. சித்தூர் சம்பத் பி.பாலகிருஷ்ண மன்னாடியார்
16. பாலக்காடு சந்திரநகர் சி.என்.மன்னாடியார்
17. பாலக்காடு சந்திரநகர் சி.ஜே.மன்னாடியார்
18. பாலக்காடு புளியங்களத் பி.எஸ்.மன்னாடியார்
19. நல்லேபள்ளி அங்கராத்து சி.என்.யு.மன்னாடியார்
20. நல்லேபள்ளி சோண்டத் இரவிராமன் உண்ணி வலிய மன்னாடியார்

21. வடசேரி இட்டுச்சாத்தர வலிய மன்னாடியார் மனைவியார்

22. பள்ளஞ்சாத்தனூர் நாஞ்சாத் மன்னாடியார்

23. குழல்மன்னம் குமரன்சடையத் மன்னாடியார்

24. நாட்டுக்கல் அங்கராத்து நாராயணன் உண்ணி மன்னாடி நாயர்

25. நாட்டுக்கல் அரிமா ஏ.சுபாஷ் சந்திரன்

முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவார்கள்.

# தமிழக முதல்வர்
# டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்

**தந்தையார் கோபாலமேனன் அவர்கள்**

வடவனூர் வேளாளர்களான மருதூர் இல்லத்தில் சத்திய பாமா அவர்களை மணந்து கொண்ட கொங்கு வேளாளர் வழியினரான நல்லேபள்ளி சங்குண்ணி வலிய மன்னாடியார் மகன் கோபாலமேனன் தன் கல்வித் திறத்தாலும், ஒழுக்கத் தாலும் சமூகத்திற்கு உழைக்க வேண்டும் என்ற பொதுநல எண்ணத்தாலும், தாம் பணியில் இருந்த தலைமையாசிரியர் பதவியை விட்டு நீதிபதியாகப் பதவி ஏற்றார்.

குடும்ப வழக்கொன்றில் பங்காளிகள் சொத்து விவகா ரத்தில் நியாயத்திற்காகவும் நேர்மைக்காகவும் தீர்ப்பளித் தமையால் சிலரது பகையைப் பெற்றார். நிலத்தகராறு ஒன்றில் சரியான நேர்மையான தீர்ப்பளித்தமையாலும் சிலர் கோபாலமேனன் மீது பொறாமை கொண்டனர்.

ஒருமுறை கள்ளிக்கோட்டையில் தவறு செய்த உயர்ந்த பிறப்பினர் என்று எண்ணம் கொண்ட நம்பூதிரி பிராமணர் ஒருவரைக் கோபாலமேனன் அவர்கள் கண்டிக்க நேர்ந்தது. பெண்கள் இருக்கும் பகுதியில் நம்பூதிரி பிராமணர் ஒருவர் தன் வேட்டியைத் தேவைக்கு அதிகமாக மடித்துக் கட்டிக் கொண்டு விகாரமாகச் சென்றதால் கண்டித்து அறிவுரை கூறியும் ஏற்காத நிலையில் அந்த நம்பூதிரி பிராமணரைக் கோபாலமேனன் செம்மையாக உதைத்துவிட்டாராம்.

இதனால் நம்பூதிரி பிராமணர்களும், கோபாலமேனன் தீர்ப்பால் பாதிக்கப்பட்ட சில உறவினர்களும் கோபால மேனன்மீது வேண்டாத வீண் பழிகள் சிலவற்றைப் பொய் யாகக் கட்டியுரைத்து அவப்பெயரை உண்டாக்கினர்.

இதனால் மனமுடைந்த கோபாலமேனன் நல்லேபள்ளி சென்று தன் நெருங்கிய உறவினர்களிடம் விபரம் கூறிவிட்டு துறவுக்கோலம் பூண்டு தமிழ்நாட்டில் சிதம்பரம் போன்ற

புண்ணியத் தலங்கள் சிலவற்றைக் காணச் சென்றாராம். தெரிந்த ஆட்களை அனுப்பி அன்னை சத்தியபாமா அவரைக் கண்டுபிடித்து அழைத்துக் கொண்டார்.

**அன்னையார் சத்தியபாமா அவர்கள்**

பாரதப் பண்பாட்டிலும், பக்தியிலும், இதிகாச புராணக் கதைகளிலும் ஆழ்ந்த அறிவும் அளவற்ற பற்றும் கொண்டவர்கள் அன்னை சத்தியபாமா அவர்கள். ஏழையர்க்கு இரங்கல், சொன்ன சொல்லைக் காப்பாற்றுதல், தன் குடும்பப் பெருமையைக் காத்தல் ஆகியவற்றில் பலரும் போற்றும் வண்ணம் பெண் குலத்தின் பொன் விளக்காக வாழ்ந்தார்கள். தன் குழந்தைகள்மீது பாசத்தைச் செலுத்தி அன்பு காட்டி அருள் ஊட்டி வளர்த்தார்கள். நற்றாய் என நல்லோர் போற்றும் அளவுக்கு வறுமையிலும் செம்மையுடையவர்களாகக் குடும்பம் நடத்தி வந்தனர்

**இலங்கையில்**

அன்னையார் சத்தியபாமா தன் கணவர் கோபால மேனன் அவர்களுடனும், தன் உறவினர் சிலருடனும் இலங்கைப்பயணம் மேற்கொண்டு கண்டியில் சிலகாலம் வாழ்ந்து வந்தார்கள். அங்குக் கோபாலமேனன் நீதிபதியாகப் பணியாற்றினார்; ஆசிரியராகவும் பணி புரிந்தார்கள். கண்டியில் ஒருதெருவுக்குக் கோபாலமேனன் அவர்கள் பெயரைப் பொது மக்கள் சூட்டும் அளவுக்குப் பலரும் போற்ற அங்கு வாழ்ந்தார் கோபாலமேனன் அவர்கள்.

**பிறப்பு**

கோபாலமேனன் அவர்கட்கும் சத்தியபாமா அவர்கட்கும் இலங்கையில் கண்டியில் **17 - 1 - 1917** அன்று சுவாதி நட்சத்திரத்தில் எம்.ஜி.ஆர். அவர்கள் பிறந்தார்கள்.

எம்.ஜி.ஆர். அவர்கட்கு 2½ வயதாகும்போது மீண்டும் தாயகம் திரும்பிய பெற்றோர் நெருங்கிய உறவினர்கள் ஆதரிக்காத நிலையில் ஒத்தப்பாலத்தில் மேக்கப் மேன் பீதாம்பரம் அவர்கள் இல்லத்தில் வாழும்போது தந்தையார் கோபாலமேனன் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்தார்கள். மாளிகை போன்ற சொந்தவீடு, தோட்டம், மரக்கடை, விவசாய நிலம் ஆகியவை மிகுதியாக இருந்த வடவனூர் வேளாளர் ஆகிய மருதூர் இல்லமும் அவைகளில் பெரும் பகுதியைக் காலப்போக்கில் இழந்திருந்தது.

**கும்பகோணத்தில்**

சோழவள நாட்டில் தன் உறவினர் சிலர் ஏற்கனவே குடியேறியிருந்த கும்பகோணம் நகரில் சத்தியபாமா தன் குழந்தைகளுடன் குடி புகுந்தனர். கும்பகோணத்திலுள்ள ஆனையடிப்பள்ளி என்னுமிடத்தில் எம்.ஜி.ஆர். அவர்கள் இளமையில் ஆரம்பக்கல்வி பயின்றார்கள்.

கும்பகோணத்தில் வேலு நாயர் அவர்கள் அன்னை சத்தியபாமா அவர்களின் குடும்பத்துக்குப் பாதுகாப்பாக இருந்தார். எம்.ஜி.ஆர். அவர்களின் மாமா பின்பாட்டு நாராயண நாயர் அவர்களும் குடும்பத்துக்கு உதவியாக இருந்து வந்தார்கள்.

கும்பகோணத்தில் காவிரித்தாயின் மடியில் வளர்ந்த எம்.ஜி.ஆர். இளமையில் காவிரியில் நீந்தி விளையாடினார். கும்பகோணம் காவிரிக் கரைக்குச் செல்லும் வழியிலிருந்த மாரியம்மன் கோவில் மீது எம்.ஜி.ஆர் அவர்கட்குச் சிறிய வயதிலேயே மிகவும் ஈடுபாடு இருந்தது. அடிக்கடி அக் கோவிலுக்குச் சென்று அன்னை சக்தியை வணங்குவார்.

**இளமை**

துணிவும் நேர்மையும் தெய்வ பக்தியும் வாய்மையும் ஆகிய நற்பண்புகளுக்கெல்லாம் உறைவிடமாகிய அன்னை சத்தியபாமா அவர்களின் அரவணைப்பில் பல புராண இதிகாச நீதிக்கதைகளைக் கேட்டு எம். ஜி. ஆர். வளர்ந்து வந்தார். அக்கதைகளைக் கேட்டுத் தன்னை அர்ச்சுனன், அபிமன்யு, இராமர், தருமர் போன்ற புராண நாயகர்கள் போலக் கற்பனை செய்து கொள்வார்.

சிறுவயதில் அநீதியைக் கண்டால் கொதிக்கும் குணம் படைத்திருந்தார். கும்பகோணத்தில் 3ஆம் வகுப்புப் படிக்கும்போது ஏழை மாணவர்க்கும், அரிசனமாணவர்க்கும் அனுதாபத்துடன் இரக்கப்பட்டுச் செய்த உதவிகள் பல. வகுப்பின் மாணவர் தலைவராக விளங்கினார். பள்ளி நாடகங்களில் நடித்தார்.

**குடும்பம்**

மூத்த இரண்டு சகோதரர்கள், மூத்த இரண்டு சகோதரிகள் ஆகியோருக்கு இளையவரான கடைக்குட்டியாக ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தவர் மருதூர் கோபாலமேனன் இராமச்சந்திரன் அவர்கள்.



மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்களின் முதல் மனைவியார் பார்கவி என்ற தங்கமணி அவர்களுக்குப்பின் இரண்டாம் துணைவியாராக எம்.ஜி.ஆர். அவர்களின் இல்வாழ்க்கைத் துணைநலமாக அமைந்து இல்லறத்தை நல்லறம் ஆக்கிய குழல் மந்நம் அம்முக்குட்டி என்ற சதானந்தவதி அவர்கள். இருவரும் வேளிர் வழியினர்.

பாலக்காட்டைச் சேர்ந்த பார்க்கவி என்ற தங்கமணியை எம்.ஜி.ஆர். அவர்கள் மணந்து கொண்டார்கள். அவர்கள் மறைந்து விடவே குழல்மந்நம் என்ற ஊரைச் சேர்ந்த அம்முக் குட்டி என்ற சதானந்தவதி அவர்களை இரண்டாம் திரு மணம் செய்து கொண்டார்கள். அவர்களும் 25 - 2 - 1962 ஆம் ஆண்டு மறைந்துவிடவே எம்.ஜி.ஆர். அவர்கள் தன்னுடன் சில படங்களில் நடித்தவரான வி.என்.ஜானகி அவர்களை மணம் செய்து கொண்டார்கள். வள்ளுவர் கூறும் வாழ்க்கைத் துணைநலமாக அவர்கள் திகழுகின்றார் கள். இலட்சோப இலட்சம் தொண்டர்களால் அன்புடன் அண்ணியார் என அழைக்கப்படுகிறார்கள்.

இளவயதிலிருந்தே தன் அண்ணன் எம்.ஜி.சக்கரபாணி அவர்களிடம் மிகவும் அன்பு கொண்டு அவர் அறிவுரைப்படி நடந்து வந்தார்கள்.

எம்.ஜி.ஆர். அவர்கள் தன் தாய் அன்னை சத்தியபாமா அவர்கள்மீது எல்லையற்ற பாசம் கொண்டவர்கள். பிறந்த மண்ணைவிட்டு வெளியேறியும் மக்களைக் காத்துப் போற்றிப் பாதுகாத்து ஆளாக்கி வளர்த்த அன்னை சத்தியபாமா அவர் களை எம்.ஜி.ஆர். அவர்கள் நாள்தோறும் நினைவில் நிறுத்திப்பாசத்துடன் போற்றி வருவது யாவரும் அறிந்ததே. அன்னையார் சத்தியபாமா அவர்கள் 1952இல் அமர ரானார்கள்.

**நாடகத் துறையில்**

பள்ளிப்பருவத்திலேயே நாடகத்தில் நடித்த எம்.ஜி.ஆர் அவர்கள், தன்னுடைய ஏழாம் வயதில் 1924இல் கும்ப கோணம், 'மதுரை ஸ்ரீ ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் நாடக நடிகராகச் சேர்ந்தார். அதன் உரிமையாளர்எம்.எஸ் சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் மிகச் சிறந்த பண்பாளர்.

பின் எம்.கே.இராதா அவர்களின் தந்தை கந்தசாமி முதலியார் அவர்களின் நாடகக் கம்பெனியிலும், உறையூர் மொய்தீன் நாடகக் கம்பெனிலும் நடிகராக இருந்தார்.

காளி என். இரத்தினம், எஸ்.ஜி.கிட்டப்பா, பி.யு. சின்னப்பா போன்றவர்கள் எம்.ஜி.ஆர். அவர்கள்மீது பாசமும் பிரியமும் கொண்டு ஆதரித்து வந்தனர். பக்கிரிசாமிப்பிள்ளை போன்றோர் தாய் போன்ற பரிவுடன் இருந்தனர். நடன ஆசிரியர் ஸ்ரீராமுலுவிடம் நடனமும் பயின்றார்கள்.

எம்.ஜி.ஆர் நாடக மன்றம் அமைத்து நாடகக் கலைக்கு அரும் பெரும் தொண்டுகள் செய்தார். எம்.ஜி.ஆர் அவர்கள் கடல் கடந்து மலேசியா, இலங்கை போன்ற நாடுகளிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும் நாடகக் கலையின் பொருட்டுச் சென்று வந்தார்கள்.

**பல்கலைப் பயிற்சி**


எம்.ஜி.ஆர். அவர்கள் மாஸ்டர் விட்டல் அவர்களைத் தன் மானசீகக் குருவாகக் கொண்டு எஸ்.ஆர் சாண்டோ அவர்களிடம் குத்துச்சண்டை, குஸ்தி, சிலம்பம், குதிரை யேற்றம், கத்திச்சண்டை ஆகிய பல்வேறு விளையாட்டுக் கலைகளை மிகச் சிறப்பாகவும் பார்த்தோர் பாராட்டிப் புகழும்வண்ணம் கற்று அக்கலைகளில் தேர்ந்தார்கள். இக் கலைகள் அவருக்குப் புகழ் பல சேர்த்ததுடன், நல்ல உடல் கட்டும் அமையக் காரணமாக இருந்தது. நந்தாராம் பயில் வானைப் பார்த்துத் தன் உடலை நன்கு காத்தார்கள்.

**தேசிய ஆர்வம்**

நாடகத்துறையில் நடிக்கும்போது இந்திய நாட்டுத் தந்தை அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் விடுதலை இயக் கத்தின் ஒரு பகுதியான கதர் இயக்கத்தின் மீது எம்.ஜி.ஆர். அவர்கள் தீவிரமாக அக்கறை காட்டினார்கள். கதர் உற் பத்திப் பெருக்கம், உபயோகம் பற்றி அறிவதிலும். அகிம்சை பற்றிப் பேசுவதிலும், காங்கிரஸ் இயக்கச் செய்திகளைக் கேட் பதிலும், இராட்டை சுற்றுவதிலும், வெள்ளையனே வெளி யேறு, வரிகொடா இயக்கம், உப்புச் சத்தியாக்கிரகம் போன்ற இயக்கங்களைப் பற்றியும் ஆர்வமுடனும் அக்கறை யோடும் கவனித்து வந்தார்கள். தாழ்த்தப்பட்டோர் மீது கருணை கொண்டு பலருக்கு உதவினார்கள்.

'வெள்ளையனிடம் பேரம் பேசாமல் போராடி விடுதலை பெற வேண்டும்' என்று வீரக்குரல் எழுப்பிய நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தார் எம்.ஜி.ஆர். அவர்கள்.

விடுதலைப் போராட்டம் பற்றிய செய்திகளை நண்பர் களுடன் விவாதிப்பதிலும், தேசிய உணர்ச்சியை வளர்ப்ப திலும், அந்நிய மோகத்தை நீக்க உதவுவதிலும் எம்.ஜி.ஆர் அவர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள். இதன் விளைவே கடும் எதிர்ப்பையும், ஆபத்தையும் பொருட்படுத்



தாமல் 'கதர்பக்தி' இயக்கத்தில் நடித்ததும், கதர் ஆடை உடுத்தித் தேசீயவாதியாகத் திகழ்ந்ததும் ஆகும். வெள்ளையர் ஆதிக்கம் மேலோங்கியிருந்த அக்காலத்தில் கதர் உடுத்தியதும் 'கதர்பக்தி' என்ற நாடகத்தில் நடித்ததும் இவருடைய சுதந்திரப் பற்றையும் அஞ்சாமையையும் காட்டுகிறது.

### சினிமாத் துறையில்

எம்.ஜி.ஆர். அவர்கள் தன் 19ஆம் வயதில் 1936ஆம் ஆண்டு தன் திரைப்பட வாழ்க்கையை முதலில் தொடங்கினார். 1978 வரை சுமார் 43 ஆண்டுகளில் 136 திரைப்படங்களில் நடித்தார்கள். அவர் நடித்த படங்களில் பல, இந்திய அரசு, தமிழக அரசு, இரசிகர் அமைப்புக்கள், பத்திரிகைகளின் பரிசுகள் பெற்றன.

### இலக்கிய ஆர்வம்

நாடக நடிகராக இருந்தபோது 'மணிக்கொடி' இலக்கிய வட்டம் பற்றியும் அவ்வட்ட இலக்கிய வளர்ச்சி குறித்தும் செய்திகள் அறிவதிலும், அவைகளைப்பற்றி விவாதிப்பதிலும் மிகமிக ஆர்வம் கொண்டிருந்தார்கள் எம்.ஜி.ஆர் அவர்கள்.

எம்.பி.மணி அவர்கள் மூலமாக மணிக்கொடி பற்றிய செய்திகளை நன்கு அறிந்திருந்தார்கள். இலக்கிய இதழ்களையும், வெளியீடுகளையும் ஊன்றிப் படித்து வந்தார்கள்.

பல கவிஞர்களை எம்.ஜி.ஆர் அவர்கள் ஆதரித்தார்கள். இப்போதும் பலரை ஆதரித்து வருகிறார்கள்; இன்றும் பலரை ஊக்குவித்து வருகிறார்கள்.

பின்னாளில் 'நடிகன் குரல்', 'சமநீதி' போன்ற கலை, இலக்கிய, சமுதாய, அரசியல் இதழ்களை எம்.ஜி.ஆர் அவர்கள் இலக்கிய மணம் கமழும் வகையில் தீந்தமிழில் நடத்தியதற்கு அவருக்கு இருக்கும் தமிழ் இலக்கிய ஆர்வமே மிகச்சிறந்த காரணம் ஆகும்.

### பகைமைக்கும் அருளும் நன்னெஞ்சு

12 - 1 - 1967ஆம் ஆண்டு நடிகவேள் எம்.ஆர்.இராதா, எம்.ஜி.ஆர் அவர்களைச் சுட்டுவிட்டுத் தானும் தற்கொலை செய்து கொள்ளத் தன்னையே சுட்டுக் கொண்டார்.

சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்க் கப்பட்ட எம்.ஜி.ஆர் அவர்கள் தன்னையே எல்லோரும் கவனித்துக் கொண்டு அக்கறை காட்டுவதைக் கண்டதும் மனம் பொறுக்காமல் ''எல்லோரும் இங்கேயே இருக்கிறீர் களே இராதா அண்ணன் அங்குத் தனியாக இருக்கிறாரே; அவரை யாரும் கவனிக்கவில்லையா? அங்கு சென்று அவரையும் கவனியுங்கள்'' என்று மிகவும் அவசரத்தோடும் அக்கறையோடும் அன்போடும் கேட்டுக் கொண்டார்கள்.

**சங்கம் கண்ட சான்றோன்**

1959ஆம் ஆண்டு அமரர் இயக்குநர் கே.சுப்பிரமணியம் அவர்கள் தமிழ் நடிகர் சங்கம் அமைக்க முற்பட்டார். எம்.ஜி.ஆர். அவர்களின் பெரு முயற்சியால் அது 'தென் னிந்திய நடிகர் சங்கம்' என விரிவாக அமைக்கப்பட்டது. அதன் தலைவராக எம்.ஜி.ஆர் அவர்கள் திகழ்ந்தார்கள்.

**அரசியல் பாதை**

இளமையில் காங்கிரஸ் இயக்கப் பற்றுக் கொண்டவராக விளங்கிய எம்.ஜி.ஆர் அவர்கள் கலைவாணர் என்.எஸ். கிருட்டிணன், டி.வி.நாராயணசாமி ஆகியோர் தொடர் பாலும், அண்ணா அவர்களின் எண்ணத்திலும், எழுத்திலும், பேச்சிலும், சீர்திருத்த நோக்கத்திலும் ஈர்க்கப்பட்டுத் திராவிட இயக்கப் பற்று உடையவரானார்.

'மடியில் ஒரு கனி விழுந்தது. அதை எடுத்து என் இதயத்தில் வைத்துக் கொண்டேன்' என்று அண்ணா அவர் கள் எம்.ஜி.ஆர் அவர்களைப்பற்றிக் கூறியதன் மூலம் எம்.ஜி.ஆர் அவர்களின் சிறப்பை நாம் நன்கு உணரலாம்.

மேலவை உறுப்பினராக, சட்டமன்ற உறுப்பினராக, சிறுசேமிப்பு இயக்கத் தலைவராக எம்.ஜி.ஆர் அவர்கள் சிறப்புடன் பலரும் பாராட்டும் வண்ணம் மிகத்திறமை யுடன் பணியாற்றினார்கள். திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளராக அனைவரும் போற்றும் வகையில் பணி புரிந் தார்கள். தேர்தல் காலங்களிலும், மாநாட்டு நிகழ்ச்சி களிலும் பம்பரம்போல் சுழன்று தீவிரப் பணிபுரிவார்கள்.

16 - 10 - 1973 முதல் அண்ணா அவர்களின் கொள்கை களில் ஈர்க்கப்பட்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கண்டார் எம்.ஜி.ஆர் அவர்கள்; பின்னர் அனைத்திந்திய

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் சூட்டப்பட்டது.

*30 - 6 - 1977* முதல் தமிழக முதல்வர் பொறுப்பை ஏற்று நாடு போற்றும் நல்லாட்சி புரிந்து வருகிறார்கள். இப்போது மூன்றாவது முறையாக முதல்வர் பொறுப்பினை ஏற்றுள்ளார்கள்.

**கொடை வள்ளல்**

எம்.ஜி.ஆர் அவர்களால் உதவிகள் பெற்ற தமிழக அரசியல்வாதிகள் பற்பலர்.

கவிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் பலர் இவரிடம் உதவிகள் பெற்றுள்ளனர்.

இவரால் படித்து முன்னேறிய மாணவருடைய பட்டியல் நீளமானவை.

இவரால் உதவி பெற்று எழுந்து நிற்கும் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவ மனைகள், அறநிலையங்கள், ஆலயங்கள் கணக்கற்றவை.

புயல், வெள்ளம், விபத்துப் போன்ற இயற்கையின் சீற்றக்காலத்தில் எம்.ஜி.ஆர் அவர்கள் கொடைக் கரங்கள் நீளும்; துயர் துடைக்கும்.

மறைந்த திரைப்படக் கலைஞர்கள் குடும்பத்தை ஆதரித்து, அவர்கள் மக்கட் செல்வங்களுக்குத் திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்து அதன் மூலம் அவர்களின் இல்லங்களில் விளக்கேற்றி வைத்தவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

நொடித்துப்போன பல கலையுலகத்தினருக்கு அவ்வப்போது பல்வேறு வழிகளில் உதவிகள் செய்து வருபவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

ரிக்ஷாக்காரன் திரைப்பட வெற்றி விழாவின்போது சென்னையில் உள்ள சுமார் *6000* ரிக்ஷாக்காரர்கட்கு மழைக் கோட்டுக்கள் அளித்து அவர்கள் உள்ளத்தில் நீங்காத இடம் பெற்றவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

*1982*இல் வெளிவந்த பேசும்படம் என்ற சினிமா இதழில் நடிகர் சிவக்குமார், 'பிறருக்குத் தெரிவிக்காமல் அறிவிக்காமல் எம்.ஜி.ஆர் அவர்கள் கொடையாக அளித்த தொகை கோடிக்கு மேலிருக்கும்' என்ற கருத்தைக் கூறியுள்ளார்.

**பட்டங்கள்**

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தங்கள் இதய தெய்வமாக எம்.ஜி.ஆர். அவர்களைப் போற்றி வருகின்றனர். 10-7-1972இல் இந்திய அரசின் கலைக்குழுவில் இடம்பெற்று எம்.ஜி.ஆர்.அவர்கள் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய கீழை நாடுகளுக்கெல்லாம் சென்றனர். படப்பிடிப்பின் பொருட்டும் பல்வேறு வெளிநாடுகட்குச் சென்றுள்ளார்.

சிங்கப்பூரில் 'கலை வேந்தன்' என்ற பட்டத்தை எம்.ஜி.ஆர். அவர்கட்கு அளித்தனர். இலங்கையில் 'நிருத்திய சக்கரவர்த்தி' என்ற பட்டம் பெற்றார். மக்கள் திலகம், புரட்சி நடிகர், புரட்சித் தலைவர் என்றெல்லாம் பட்டங்கள் பல பெற்றுப் புகழ்பெற்ற எம்.ஜி.ஆர் அவர்கட்கு நாகர்கோயிலில் 'மக்கள் நடிகர்' என்ற பட்டம் வழங்கப்பட்டது. காரைக்குடியில் 'மக்கள் கலைஞர்' என்ற பட்டத்தையும், கரூரில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களால், பொன்மனச் செம்மல் என்ற பட்டத்தையும் எம்.ஜி.ஆர் அவர்கள் பெற்றார்கள்.

தமிழ் நாட்டளவிலும், இந்திய அளவிலும் பல்வேறு ஆண்டுகளில் சிறந்த நடிகராக இயக்குநராகப் பட்டம் பெற்ற எம்.ஜி.ஆர் அவர்கள் 1971இல் ரிக்ஷாக்காரன் படத்தில் சிறப்புற நடித்தமைக்காக இந்திய அளவில் 'பாரத்' விருது பெற்றார்.

இரசிகர் மன்றங்களும், பத்திரிகைகளும், பல்வேறு அமைப்புக்களும் பாராட்டிப் பட்டங்களும், பரிசுகளும் பல அளித்தன. மதுரையில் அளிக்கப்பட்ட தங்க வாள் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய அரசு அளித்த பத்மஸ்ரீ பட்டத்தையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அளிக்க முன்வந்த டாக்டர் பட்டத்தையும் ஏற்க மறுத்துவிட்டார்.

பின்னர் இடைவிடாத வற்புறுத்தலின் காரணமாக அமெரிக்கநாட்டு அரிசோனாப் பல்கலைக் கழகமும், சென்னைப் பல்கலைக் கழகமும் டாக்டர் பட்டமளிக்க அவைகளை ஏற்றுக் கொண்டார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகமும் டாக்டர் பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தியது.

**வாழையடி வாழையாக**

பாலக்காட்டுக் கொங்கு வேளாளர்களாகிய மன்னாடியார்கள் குடும்பங்களில் தோன்றிய பலர் சென்ற நூற்றாண்

டிலும், இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும், இன்றும் தமிழ் நாட்டில் உயர் அலுவலர்களாக இருந்திருக்கின்றனர்; இருக்கின்றனர்.

அறநிலைய ஆட்சித்துறை அலுவலர்களாக,

மருத்துவத்துறை நிபுணர்களாக,

கணக்கியல், அளவையியல் வல்லுநர்களாக,

வங்கித்துறை, அரசு நிர்வாகத்துறை மேதைகளாகப் பலர் சிறப்புற்று விளங்கி வந்திருக்கின்றனர்.

அழகுக்கு அழகு செய்வது போல் வாழையடி வாழை யாக வரும் தொன்மைச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் மிக்க அங்கராத்து சங்குண்ணி வலிய மன்னாடியார் பரம்பரை அழகுபெற, தமிழக முதல்வராக மும்முறை பதவி ஏற்றுப் பெருமையூட்டுபவர்கள் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள்!

## பல்லாண்டு வாழ்க

இடையில் உடல்நலக் குறைவு ஏற்பட்டுச் சென்னை அப்போலோ மருத்துவ மனையிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் மருத்துவம் பார்க்கப் பெற்று மருத்துவ உலகமே கண்டு வியக்கும் வண்ணம் உடல் நலம் பெற்றுப் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கூறியதுபோல் முன்னைவிட இளமையாகப் பணிபுரிந்து வருகின்றார்கள். இவருடைய ஒழுக்கமும் கட்டுப்பாடும் உள்ள உறுதியுமே நோயை எதிர்த்து வென்றது!

இவர் உடல்நலக் குறைவாக இருந்தபோது தமிழக மக்கள் ஒருமுகமாகக் கோடான கோடிபேர் கோயில்களிலும், தேவாலயங்களிலும், பள்ளிவாசல்களிலும் அவர்கள் நலத்துக்காகச் செய்த வழிபாட்டினால் தமிழக மக்கள் இவர்மீது கொண்டுள்ள ஆழ்ந்த பற்றை உலகம் அறிந்தது.

மறுபிறவி எடுத்த இவர்கள் நோய் நொடியில்லாமல் வாழ்க! நூற்றாண்டுக் காலம் வாழ்க!

கொங்கு வேளாளர் வாழி! குவலயம் போற்ற வாழி!!

வேளிர் குலத்தோய் வாழி! வேந்தரே வாழி வாழி!!

## அடிக்குறிப்புக்கள்

1. தண்டியலங்காரம், நூற்பா 75, பக்கம் 156.

'நறவேந்து நங்கை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியான் அல்லன் - துறையின்
விலங்காமை நின்ற வியன்தமிழ்நாடு ஐந்தின்
குலங்காவல் கொண்டொழுகும் கோ'

என்ற இம்மேற்கோள் பாடலில் வஞ்சியான் (சேரன்) ஐந்து தமிழ் நாட்டையும் காவல் புரிபவன் என்று கூறும் நயம் காண்க.

2. திருமந்திரம், எண். 1646.

3. புறநானூறு 373:8.

'கொங்கு புறம் பெற்ற கொற்ற வேந்தே'

இப்பாடலில் கொங்கு நாட்டைச் சோழர் வென்று ஆட்சி புரிந்தமை கூறப்படுகிறது.

4. நற்றிணை. 10:6-8.

'கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட்டு யானைப் போஒர் கிழவன்
பழையன்'

போஓர் - திருப்பூர் (திருபோஓர்) என்ற கருத்தும் உண்டு.

குறுந்தொகை. 393:6 'ஒளிறு வாள் கொங்கர்'
பதிற்றுப்பத்து 22:15. 'ஆகெழு கொங்கர் நாடு'
அகநானூறு. 79:5 - 7; 253:4 368:16 - 18.

'கொங்கர் படுமணி ஆயம்
நீர்க்கு நிமிர்ந்து செல்லும் சேதா'

'வாடாப் பூவின் கொங்கர் ஓட்டி'

'கொங்கர் மணிஅரை யாத்து
மறுகின் ஆடும் உள்ளி விழவு'

இந்த உள்ளி விழா கருவூரில் கொண்டாடப் பெற்றதாக இறையனார் களவியல் கூறும்.

புறநானூறு. 130:5,6. 'கொங்கர் குடகடல் ஓட்டிய ஞான்றை'

5. அத்தி, அதியமான், ஆய், ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன், ஏற்றை, ஓரி, கங்கன், கட்டி, கடியநெடு வேட்டுவன், குமணன், கொடுமுடி, கொண்கானங்கிழான், தாமான் தோன்றிக் கோன், நன்னன், பழையன், புன்றுறை, பேகன், விச்சிக்கோ ஆகியோர் சங்க காலக் கொங்குக் குறுநில மன்னர்கள்.

6. பதிற்றுப்பத்து. 22:15; 77:10,11,

'ஆகெழு கொங்கர் நாடு'
'கொங்கர் ஆபரந் தன்ன'

அகநானூறு. 79:5,6,

'கொங்கர் படுமணி ஆயம்'

7. அகநானூறு. 79:1 - 5,

'தோட்பதன் அமைத்த கருங்கை ஆடவர்
கணைபொறி பிறப்ப நூறி வினைப்படர்ந்து
கல்லுறுத்து இயற்றிய வல்உவர்ப் படுவில்
பார்உடை மருங்கில் ஊறல் மண்டிய
வன்புலம்'

8. பதிற்றுப்பத்து 22:12 - 15.

'பொன்செய் கணிச்சி திண்பிணி உடைத்துச்
சிரறுசில ஊறிய நீர்வாய்ப் பத்தர்
கயிறுகுறு முகவை மூயினம் மொய்க்கும்
ஆகெழு கொங்கர் நாடு'

9. குறிப்பு 7 ஐக் காண்க.

10. அகநானூறு. 253:4,

'வாடாப்பூவின் கொங்கர்'

புறநானூறு. 373:7,8,

'மைந்தர் ஆடிய மயங்குபெரும் தானை
கொங்கு புறம் பெற்ற கொற்றவேந்தே'

11. பதிற்றுப்பத்து 67:1 - 4; 74:5,

'கொடுமணம்பட்ட...... நன்கலம்'

'கொடுமணம்பட்ட வினைமான் நன்கலம்'

கால்நடைகள் மேய்ப்போருக்கும், ஏர் உழவின் போதும், மழை பெய்யும் போதும் மணிக்கற்கள் கிடைக்கும் எனவும் பதிற்றுப்பத்துக் கூறுகிறது.
சங்க இலக்கியங்களில் 'மணிகள்' என்ற பி.எல். சாமியின் நூலைக் காண்க. பக்.10.

12. சிலப்பதிகாரம், உரைபெறு கட்டுரை, 39:159.

13. சீவரமங்கலச் செப்பேடு, பெருந்தொகை. 890.

'குடகொங்கத்து அடல்மன்னனைக்
கொல்களிற்றொடும் கொண்டுபோந்து
கொடியணிமணி நெடுமாடக்
கூடன்மதில் அகத்துவைத்தும்'

சுந்தரர், 'மீகொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூர்' (கோயில் பதிகம்)

14. கழறிற்றறிவார் புராணம். 141, 164.
சுந்தரர் மூன்று முறை கொங்கு நாட்டின் வழியாகப் பயணம் செய்துள்ளார். விரிவான செய்திகட்குக் கோவைக் கிழாரின், 'சுந்தரரும் கொங்கு நாடும்' என்ற நூலைக் காண்க.

15. சிலப்பதிகாரம். 30:159.

16. பக்கம். 17 - 20.

17. புலவர் குழந்தை, 'கொங்கு நாடு' பக்.85.

18. டாக்டர் மா. இராசமாணிக்கனார், 'இலக்கிய வரலாறு' பக். 56.

'ஸதிய புதோ அதியந் நெடுமாந் அஞ்சி ஈத்த பாளி' என்பது ஜம்பைக் கல்வெட்டு. அதியமான் (அதியர்மகன்) சதிய புத்திரர் > ஸதிய புதோ.

19. பக்கம். 77 - 86.

20. கொடுமுடி ச.சண்முகம், 'ஆய்வுக் களஞ்சியம்', குறும்பொறைக் கோமான், பக்.19.

21. Iravatham Mahadevan, 'Corpus of the Tamil-Brahmi inscriptions,' pp. 9-10.

22. பதிற்றுப்பத்து. 22,32, பதிகம் 8,88; சிலப்பதிகாரம்: 25:153 - 4.

23. புறநானூறு. 100:3.

24. வட ஆர்க்காடு மாவட்டம் திருமலைக் கல்வெட்டு.

25. புறநானூறு 50ஆம் பாடல் அடிக்குறிப்பு.

26. புறநானூறு. 5ஆம் பாடல் அடிக்குறிப்பு.(கருவூர் ஏறிய)

27. கோ ரவி கோதை, கோக்கண்டன் ரவி, வீர கேரளன், அமரபுயங்கள், வீரநாராயணன் ஆகியோரின் கல்வெட்டுக்கள்.

28. A.R.E 150 of 1910; A.R.E 133 of 1909.

29. S.I.I. Vol. V. 241; A.R.E 565 of 1893.

30. புலவர் குழந்தை, 'கொங்கு நாடு', பக். 542.

31. டி.கே.சக்திதேவி, 'கொங்கு வேளாளர் வரலாறு' காண்க.

32. சேரமான் பெருமாள் என்னும் அரசர், பக். 54.

33. K.S. Vaidyanathan, 'The Ancient Geography of the Kongu Country,' p. 218.

34. S.I.I. Vol. IV. 142; A.R.E 44 of 1888.
மலைமண்டலம், கொல்லிமலை என்ற கருத்தும் உண்டு.

35. கோவை, தமிழக அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறைப் பதிவு அலுவலர் இரா. பூங்குன்றன் படி எடுத்தவை.

36. சேந்தன் திவாகரம், மக்கள் பெயர்த்தொகுதி 21.

37. திருப்புகழ், (நாதவிந்து) 104; கிருபானந்தவாரியார் பதிப்பு.

38. நாட்டுப்படலம், எண் 2.

39. டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார், 'சேரன் வஞ்சி' பக்.145. வஞ்சி - மேற்குக் கடற்கரை நகரம் என்பதை ஆசிரியர் நிறுவுகின்றார்.

40. சிலப்பதிகாரம். 27:64; 197, 227; 2:217; சேரர் நாடும் இதனால் குடமலை நாடு என்று பெயர் பெறும்.

41. மேலது. 25:113,114
தன் நாடாகிய சேர நாட்டுக்குள் வந்த காரணத்தால் கண்ணகியைப் பத்தினிக் கடவுளாக வணங்க வேண்டும் என வேண்மான் கூறுகின்றாள்.

42. புறநானூறு. 62. திருப்போர்ப்புறம் - திருப்பூர்.

43. மேலது, 74. கழுமலம் - கொழுமம்.

44. மேலது, 65.

45. மேலது, 36 பாடல் குறிப்பு.

46. சிலப்பதிகாரம். 25:152 - 155.

47. தேனோலை 22 - 1976; பக். 10 - 11. இப்பெருவழி பற்றிய கல்வெட்டை இந்நூலாசிரியரும், இரா. பூங்குன்றன் அவர்களும் கண்டு பிடித்தனர்.

48. A.R.E 338 of 1909.

49. A.R.E 139 of 1909.

50. A.R.E 194 oi 1927.

51. நூலாசிரியர் கண்டுபிடித்த நடுகல். பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட இராசேந்திரன் காலத்தில் ஊராளி வேட்டுவன் அழகன் காளிக்கு எடுத்த நடுகல். இன்றும் வழிபாட்டில் உள்ளது.

52. பொறியாளர் கொடுமுடி ச.சண்முகம் கண்டுபிடித்த கல்வெட்டு. இராசராசன் 1000ஆவது முடிசூட்டுவிழாக் கருத்தரங்கு - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

53. கலைமகள் கலைக்கூடம் பக். 187.

54. செங்களம், கழுமலம், போர்ப்புறம், வாகைப் பறந்தலை போன்ற இடங்கள்.

55. டாக்டர் எ.சுப்பராயலு, தமிழ் பல்கலைக் கழகப் புதன்வட்ட ஆய்வரங்கக் கட்டுரை, 'கொடுமணல் அகழ்வாய்வும் சங்க இலக்கியமும்', 27.11.1985.

56. The Ancient Geography of the Kongu Country, p. 237.

57. கொங்கு மண்டல சதகம். 45.

58. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் 85,92; கழறிற்றறிவார் புராணம் 141,164; வெள்ளானைச் சருக்கம். 15.

59. கோரவி கோதையின் ஈரோட்டுக் கல்வெட்டில் சிவன் கோயிலுக்குச் சேரர் அரசியல் தலைவன் விக்கிரம சோயரயன் தன் மகனுக்குப் பெயர் வைத்து அவன் பேருடைச் சிறப்புக்கு நிலம் வழங்குகின்றான். கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் உள்ள கல்வெட்டில் வஞ்சிவேள் தாழியான தென்னவன் பேரரையன் ஈரோட்டுக் கொல்லம் பாளையத்தில் தன் பெயரில் தாழி ஏரி வெட்டிய செய்தி கூறப்படுகிறது. புலவர் செ.இராசுவின் 'கலைமகள் கலைக்கூடம்' பிற்சேர்க்கைக் காண்க. (பக். 199). விழிஞத்தரையன், கொடுங்கோளூரான் போன்ற பெயர்களைத் தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்களில் காணுகின்றோம். 'வஞ்சி வேள்' கரூர் நடுக்கல்லில் காணும் பெயர்.

60. நேரில் சென்று அறிந்தவை; மயிலை சீனி. வேங்கடசாமி. 'சமணமும் தமிழும்',

61. வேளாளர் காணிப்பாடல்கள் காண்க.

62. S.I.I. IV. 142; A.R.E 44 of 1888.

63. இது புதுடில்லியில் தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மாளிகை இருப்பது போலக் கொள்ளலாம். இம்மாளிகைச் செய்தியைச் சிலப்பதிகாரத்தால் அறிகின்றோம்.

64. சேந்தன் திவாகரம் - மக்கள் பெயர்த்தொகுதி. 21; பிங்கல நிகண்டு-பெயர்ப் பிரிவு 17.

65. ஓதாளர் குறவஞ்சி, பக்கம். 104, வரி 1-29.

66. நா.மார்க்சிய காந்தி, பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி II பக். *81;* டி. *3036;*

வேணாவுடையார், வேணு ஒடையார் என்று இம்மரபினர் கூறப்பட்டாலும் வேணாடுடையார் என்பதே திருத்தமான சரியான வடிவமாகும். இதன் சரியான வடிவத்தை டி.கே. சக்தி தேவியின் 'கொங்கு வேளாளர்' வரலாற்றிலும், வீயாரெம் எழுதிய 'கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்' என்னும் நூலிலும் காணலாம். முதல் நாடான பூந்துறை நாட்டின் பழைய காணியாளர்கள் இவர்கள்.

67. மேற்படி, தொகுதி. II பக். *112'* வானவராயர் மரபினர் நரையனூர் நாட்டுக் கீரனூரிலிருந்து பொள்ளாச்சி சமத்தூர்ப் பகுதிக் குடியேறியவர்கள்.

68. க. குழந்தைவேலன், பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி. *1* பக். *59,* டி.*3044.*
பெரியார் மாவட்டத்துப் பெருந்துறை வட்டம் வெள்ளோட்டைச் சேர்ந்த இவர்கள் ஆனைமலை பொள்ளாச்சிப் பகுதியில் குடியேறி வாழ்கின்றனர். காலிங்கராயன் கால்வாயை 700 ஆண்டுகட்கு முன்பு வெட்டியவர்கள் இம்மரபினர்.

69. அ.இராசேந்திரன், 'பாளையப்பட்டுக்களின் வம்சாவளி,' தொகுதி IV பக். *56,* டி. *2835,*

இம்மரபினருக்கு உத்தமக்காமிண்டன், சர்க்கரை போன்ற பட்டப் பெயர்கள் உண்டு.

70. 'பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி I. 2965.

சோழனால் சிறப்பிக்கப்பட்டவர்கள். வேளாளர்கள் நாற்பத்தெண்ணாயிரம் குடியினர். அதனால் வேளாளர் பலர் நாற்பத்தெண்ணாயிரவன் என்று பெயர் வைத்துக் கொண்டனர். வேளாளருடன் வந்தவர்கள் பசுங்குடி பன்னீராயிரவர். அவர்கள் வேளாண்மையோடு தொடர்புடைய பிற இனமக்கள் ஆவர்.
'நாலாறு நாடது நாற்பத்தென் ணாயிரம் நற்கொங்கு
சேர் பாலான கங்கைதன் வங்கிசத்தோர்'
என்பார் கொங்கு மண்டல சதக ஆசிரியர் வாலசுந்தரக் கவிஞர் (எண். 5).

71. மேலது, தொகுதி I. டி. 3038

72. மேழிவிளக்கம், பக்கம் 13, வரி 7 - 8.

73. மேலது, பக்கம். 40, வரி 9 - 10.

74. பெரும்புலவர் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் மேழிவிளக்கத்தின் அடிக்குறிப்பு.

75. டி.கே. சக்திதேவி, 'கொங்கு வேளாளர் வரலாறு', பக். 116.

76. மூலனூர் வஞ்சியம்மன் கோயில் குடமுழுக்கு விழா மலர்; 'கொங்கு' மாத இதழ், ஆசிரியர் கோவை செழியன், 1985 நவம்பர் இதழ், புலவர் செ.இராசு வின் கட்டுரைகள். தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் புலவர் ப.வெ.நாகராசன் பதிப்பித்துள்ள செழிய தரையன் பிள்ளைத் தமிழிலும் இக்கருத்து கூறப்படு கிறது.

77. இரா.பூங்குன்றன் அவர்கள் படி எடுத்த கல்வெட்டு.

78. பொன்னர் சங்கர் வரலாறு, பக். 139.

79. வீயாரெம், கொங்கு நாட்டுக் கவுண்டர்கள், பக்.274.

80. Castes and Tribes of Southern India, p. 292.

81. மேலது - பக். 274,

82. கோவைக்கிழார், கொங்கு நாட்டு வரலாறு, பக்.259.

83. புலவர் குழந்தை, கொங்கு நாடு, பக். 542.

84. தடுத்தாட்கொண்ட புராணம். எண். 48.

85. பேராசிரியர் கு.அருணாசலக் கவுண்டர், 'பழைய கோட்டைப் பட்டக்காரர் நாட்டுப் பாடலும் பூர்வ பட்டயமும்'.

86. பாப் பகுந்த திருவிளையாடல். எண் 11.

87. சுரபி - கால்நடைப்பண்ணை; காலி - கால்நடைகள்.

88. பதிற்றுப்பத்து. 22,77; அகநானூறு. 79.

89. பக்கம். 3128.

90. சாத்தந்தை கூட்டத்தார் காணிப்பாடல், ஈரோடு கலைமகள் அருங்காட்சியக ஏட்டுச்சுவடி.

91. பழையகோட்டைப் பட்டக்காரர் நாட்டுப் பாடல்கள், பக். 26.

92. சோழன் பூர்வ பட்டயம், பக்கம். 104.

93. Lexicon, p. 3129.

94. கொங்கு வேளாளரில் பெருங்குடியர் கூட்டத்து முதல் வன் ஒருவன் 'குன்றுடையான்' என்று அழைக்கப் பட்டான். 'கோனாட்டுக் காராளன் குன்றுடை யான் தன்மகனே' என்பது பொன்னர் சங்கர் கதைப் பாடல் அடிகளாகும்.

95. வடசேரிக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் தந்துதவிய பேரூர்க் கோவில் நிருவாக அலுவலர் அவர்கட்கு நன்றி. 84ஆம் ஆண்டுப் பேரூர் விழாவுக்கு வந்த வடசேரிப் பிரதிநிதியைப் பார்த்து உரை யாடும் வாய்ப்பும் நூலாசிரியருக்குக் கிடைத்தது.

96. கோவை, கொங்கு நாட்டுக்கலை அறிவியல் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் கல்யாணசுந்தரம் அவர்களுடன் இம்மடத்துக்குச் சென்றபோது தேவையான குறிப் புக்கள் கூறினர்.

97. மெக்கன்சி சுவடி எண். டி. 3129.

98. மேற்படி எண். ஆர். 402.

99. 'கொங்கு வேளாளர் வரலாறு', பக்கம். 189.

100. வாலசுந்தரக் கவிராயர், கொங்கு மண்டல சதகம், பாடல் எண். 49. சேரர்களும் அக்கினி கோத்திரம் என்பது குறிப்பிடத்தக்கது.

101. மெக்கன்சி சுவடி எண். டி. 2964.

102. மெக்கன்சி சுவடி எண். டி. 3040.

103. Cochin State Manual, p. 202, 411.

104. The Cochin Tribes and Castes, II p. 20.

105. காணி, காணி ஆட்சி என்பன கொங்கு வேளாளர்கள் இடையே இன்றளவும் பயன்பாட்டில் இருந்து வரும் ஒரு சொல்லாகும். கோயில், நாடு இவைகளின் வழி பாட்டு உரிமை, வாழிட உரிமை ஆகியவைகளை இச் சொல் குறிக்கும். 'காணி நிலம் வேண்டும்' என்றார் பாரதியார்.

106. S.I.I. XXIII 258; A.R.E 258 of 1907.

107. Cochin State Manual, p. 206.

108. 1960இல் அச்சிட்டுள்ளனர். எண். டி. 3301; ஆர்.401.

109. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி. II, பக். 1. டி. 2964.

110. History of Kerala, p. 467.

111. பேரகராதி, பக். 3129.

112. The Cochin State Manual, p. 202.

113. Castes and Tribes of Southern India.

114. Malabar Gezetteer, I, p. 118.

115. மெக்கென்சி சுவடி எண். ஆர். 402.

116. கேரள தேச வரலாறு, பக்கம். 8

117. S.I.I. Vol. XXIV No. 644; A.R.E 443 of 1954-55.

118. The Cochin State Manual, p. 203.

119. மேலது. பக்கம், 205,206.

120. மேலது. பக்கம், 207,208.

121. History of Kerala, p.26.

122. Malabar Gazetteer, p. 468.

123. The Cochin State Manual, p. 368.

124. மேலது. பக்கம். 202.

125. Malabar Gazetteer, p. 91.

126. மேலது. பக்கம். 138.

127. மெக்கென்சி சுவடி. எண். டி. 3441.

128. மேலது, எண். 3442.

129. S.I.I. Vol. XXIV No. 12; A.R.E 65 of 1938-39. வள்ளுவ நாடும் வெள்ளப்ப நாடும் ஒன்றே.

130. கேரள தேச வரலாறு, பக்கம். 13.

131. The Cochin State Manual, p. 369.

132. ஆய்வுத்தேன், பக்கம். 46.

133. தேனோலை.

134. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் தந்தையார் பெயர் திரு கோபால மேனன். எனவே மேனன் என்ற பெயர் பற்றி இங்கு விரிவாக ஆராயப்படுகிறது.

135. Castes and Tribes of Southern India, p. 61.

136. மெக்கென்சி சுவடி எண். டி. 3129, 3441.

137. Vol. III, p. 3.

138. The Cochin State Manual, p. 202.

139. Census report 1891, p. 296.

140. Malabar Gezetteer, p. 133

141. A Collections of Treaties, Engagements and other papers of importance relating to British affairs in Malabar.

142. மேலது, p. ccv (Glossary with notes Etc.)

143. The Tribes and castes of Cochin Vol II, p. 15.

144. கொங்கு நாட்டுப் பெருங்குடி வேளாளர்களின் குல தெய்வத்து ஊஞ்சல் பாட்டில் 'சங்கமெனும் 64 வேளாளர்கள்' கூறப்படுகின்றனர்.

145. மெக்கென்சி ஆவணங்கள் எண். டி. 3441.

146. மேலது, எண். டி. 3462.

147. A Collection of Treaties, Engagements and other papers of importance relating to British affairs in Malabar.

148. கொங்கு வேளாளர் வரலாறு, பக்கம். 54.

149. பாளையப்பட்டுக்களின் வமிசாவளி, தொகுதி II எண் டி. 3036.

150. கொங்கு வேளாளர் வரலாறு, 53.

151. மேலது, பக்கம். 60.

152. வாலசுந்தரக் கவிராயர், கொங்கு மண்டல சதகம் பாடல். எண். 50.

153. மேலது, பாடல். எண். 40.

154. வேணாடர்களுக்குரிய ஊதியூர்மலை என்பது கீழ் வரும் வாலசுந்தரக் கவிராயர் கொங்கு மண்டல சதகப் பாடலால் அறியப்பெறும் செய்தியாகும்.

'காணாச் சுனையும் கருநொச்சி மாமலர் கற்றவளை
கோணாத் திருவடி சித்தர் குகையும் குரா நிழலும்
வேணாடன் போற்றவும் பொன்மான்கலையை விழஎறிந்து
வாணாளு மீளத் துதிப்பதன் றோகொங்கு மண்டலமே'(46)

155. மேலது, பாடல். எண். 45.

156. வாலசுந்தரக் கவிராயர், கொங்கு மண்டல சதகம். பெரும்புலவர் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் குறிப்பு. பக்கம். 33.

157. கம்பர் வாக்கியம், மேற்கண்ட சதகம், பக்கம். 32

158. மேற்கண்ட சதகம், பக்கம். 33.

159. மேற்கண்ட சதகம். பாடல். 60.

'வெள்ளைநல் யானைத் துதிக்கையினாற்புகழ் மீனவன்தன்
தெள்ளிய சொக்கர் மதுரைமீ னாட்சி தெருவினிலே
கள்ளனரு சோலை மலைவாழ் அழகரும் காங்கயற்கு
வள்ளல் கடக முடிசூட்டு வார்கொங்கு மண்டலமே'

160. மேற்கண்ட சதகம், பாடல். 59.

பாங்குறு சொக்கர் மதுரைமீ னாட்சிதென் பாண்டியன்தன்
காங்கய மன்றாடி மைந்தன்என் றேநற் கடகமுடி
ஓங்கிய காடை களுமூட்டி வென்றவள் உத்தமிதான்
மாங்குயில் பங்கயச் செல்வியும் வாழ்கொங்கு மண்டலமே

161. Kenneth R. Hall, Trade and state Craft in the age of the Colas p. 145

162. S.I.I. Vol. VIII

163. அ. எழுமாத்தூர்ப் பனங்காடை,சாகாடை, காடர். கூட்டம் மூன்றும் ஒரே கூட்டமாக இருந்தது என்பர். பின் வேறு வேறு கூட்டங்களாக மாறின.

ஆ. பொருள்தந்த கூட்டம், பேரிழந்தான்கூட்டம்-முழுக்காதன் கூட்டம் மூன்றும் ஒன்றே.

இ. பூச்சந்தை, சாத்தந்தை பங்காளிகள் என்பர்.

ஈ. விலையன் கூட்டம், வெளியன் கூட்டம் இரண்டும் ஒன்றே.

உ. கண்ணண், செங்கண்ணன், கண்ணந்தை போன்ற கூட்டங்களுக்கும் முன்பு ஒற்றுமை இருந்தது.

ஊ. அதேபோலப் பெரிய கூட்டம், பெருங்குடியன் கூட்டம் இரண்டும் தொடர்புடைய ஒரே கூட்டமாக முன்பு இருந்தது. இது பற்றிய விரிவான விளக்கங்களுக்கு கோவை டாக்டர் க. கிருட்டிணசாமி அவர்கள் எழுதிய 'கொங்கு வேளாளர்கள் சமுதாய ஆய்வுக் கட்டுரைகள் என்னும் நூல் காண்க. (ஈரோடு கொங்குக் கலைக்குழு '1983' இல் வெளியிட்ட நூல்.)

164. மெக்கென்சி ஆவணம் எண். டி. 3036.

165. மேலது, ஆவணம் எண். டி. 3036.

## ஆய்வுக்குத் துணை செய்த நூல்கள்


**இலக்கியங்கள்**

| | |
|---|---|
| பதிற்றுப்பத்து | - உ.வே.சா. பதிப்பு |
| புறநானூறு | ,, |
| சிலப்பதிகாரம் | ,, |
| திருமந்திரம் | - தருமபுரம் பதிப்பு |
| கம்பராமாயணம் | - ராஜம் பதிப்பு |
| அகநானூறு | ,, |
| பெரியபுராணம் | - காசிமடத்துப் பதிப்பு |
| திருவிளையாடல் புராணம் | |
| பேரூர்ப் புராணம் | |
| பூந்துறைப் புராணம் | - காளியண்ணக் கவிராயர் |
| கொங்கு மண்டல சதகம் | - கார்மேகக் கவிஞர் |
| கொங்கு மண்டல சதகம் | - வாலசுந்தரக் கவிஞர் |
| மேழி விளக்கம் | - வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் பதிப்பு |
| பெருந்தொகை | - மு.ராகவையங்கார் பதிப்பு |
| திருப்புகழ் | |
| பழையகோட்டைப் பட்டக்காரர் நாட்டுப் பாடல் | - கு. அருணாசலக் கவுண்டர் |
| காணிப்பாடல்கள் | - ஈரோடு கலைமகள் ஏடுகள் |
| அலகுமலைக் குறவஞ்சி | - க. பழனிச்சாமிப் புலவர் பதிப்பு |
| காளியம்மன் ஊஞ்சல் பாட்டு | - வேட்டம்பாடி பழனிசாமி பதிப்பு |
| தனிப்பாடல்கள் | - நூலாசிரியர் தொகுத்தவை. |

**இலக்கணம் அகராதி நிகண்டுகள்**


தண்டியலங்காரம்

சேந்தன் திவாகரம்

தமிழ்ப் பேரகராதி

சப்த சாராவளி (மலையாள அகராதி) திவாகர நிகண்டு


**ஆய்வு நூல்கள்**


கேரள விஜயம் - பரணீதரன்
அ. இராசேந்திரன் மொழிபெயர்த்த 'கொங்கம் படை' கையெழுத்துப் பிரதி.

கட்டுரை மணிகள் - மு.இராகவையங்கார்

கொங்கு நாட்டு வரலாறு - சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், பேரூர் தமிழ்க் கல்லூரி, 1972.

கொங்குநாடு, அ.மு.குழந்தை, ஈரோடு வேலா பதிப் பகம், 1968.

பொது வாழ்வில் எனது அனுபவங்கள், கே.சி. சுப்பையா பெருந்துறை கே.சி.எஸ்.பதிப்பகம், 1980.

கொங்கு வேளாளர் சமுதாய ஆய்வுக் கட்டுரைகள், டாக்டர் க.கிருஷ்ணசாமி, ஈரோடு கொங்குக் கலைக் குழு, 1983.

பொன்னர் சங்கர் வரலாறு, அ.பழனிசாமி, வேட்டம் பாடி, 1984.

ஆய்வுத்தேன், ச.பிரகதம், கொங்குப் பதிப்பகம், சென்னை, 1973.

சங்க இலக்கியத்தில் சில செய்திகள், மயிலை சீனி. வேங்கடசாமி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1967.

கொங்கு நாட்டுக் கவுண்டர்கள், வீயாரெம், லோட்டஸ் பப்ளிஷிங் கம்பெனி, திருச்சி, 1977.

கொங்கு வேளாளர் வரலாறு, டி.கே.சக்திதேவி, பட்டக் காரர் நிலையம், சென்னை, 1978.

கொங்குச் சீமைக் காணியாளர்கள், கு.சேதுராமன், 1983.

கொங்கு வேளாளர் புராண வரலாறு, எஸ்.ஏ.ஆர். சின்னுசாமிக் கவுண்டர், சின்னியம்பாளையம், 1963

தமிழக முதல்வர்கள், லேனா தமிழ்வாணன், மணிமேகலைப் பிரசுரம், 1983.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., லேனா தமிழ்வாணன், மேலது 1983.

சேரன் வஞ்சி, டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார், எடுகேஷனல் பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை, 1956.

கலைமகள் கலைக்கூடம், புலவர் செ.இராசு, சென்னை அசோகன் பதிப்பகம், 1981.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். வித்துவான் வே. லட்சுமணன், வானதி பதிப்பகம், சென்னை 17, 1985

**இதழ்கள், மலர்கள்**

குன்னுவன் குரல்

ஆனந்தவிகடன்

கொங்கு

தேனோலை

மூலனூர் வஞ்சியம்மன் கோயில் விழாமலர், 1982.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், 1981.

**கல்வெட்டு, செப்பேடு, பட்டயங்கள்**

சோழன் பூர்வ பட்டயம்

பழையகோட்டைப் பட்டக்காரர் பூர்வ பட்டயம்

பாளையப்பட்டுக்களின் வமிசாவளிகள்

பொருளந்தை குலப்பட்டயம்

பிடாரியூர்ப் பட்டயம்

நாடுகளின் விவரப்பட்டயம்

கேரள தேச வரலாறு

கேரளோற்பத்தி

மெக்கென்சி சுவடிகள்

கடத்தூர்க் கல்வெட்டுக்கள்

வேணாடுடையார் வமிசாவளி

தமிழ்ப் பல்கலைக் கழகச் செப்பேடுகள்

ஈரோடு கலைமகள் கல்வி நிலையப் பட்டயங்கள்

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள் 4,7,13,23,24

தென்னிந்தியக் கோவில் கல்வெட்டுக்கள் - தொகுதி III

**ஆங்கில நூல்கள்**

Castes and Tribes of Cochin, L.A. Ananthakrishna Ayyar.

Cochin state Manual, C. Achutha Menon, Cochin Govt. Press, 1911.

A Collection of treaties, engagements and other paper of importance relating to British affairs in Malabar, William Logan.

Castes and Tribes of Southern India, E. Thurston, Govt. Press, Madras, 1909.

A Manual of the Malabar Dt., William Logan.

Malabar Law and customs, Wigram.

Mediaeval Kerala, P.K.S. Raja, Annamalai University, 1953.

A short history of Kerala, K.V. Krishna Ayyar, Pai & Co., Ernakulam, 1966.

Malabar Gezetteer, C.A.Innes, 1908.

History of Kerala, K.P. Padmanaba Menon, Asian Educational Services, New Delhi, 1982.

Malabar Series, C. Gopalan Nair, Higginbatham, 1914.

Madras Museum Bulletin, Vol. III, 1901.

Sencess Reports, Madras, Cochin, 1891, 1901.

Mirasi Papers, Ellis.

A Collection of Treaties, Engagements & Sunnuds V, C.U. Aitchison, 1864.

The Ancient Geography of the Kongu country, K.S. Vaidyanathan, Erode Kalaimagal Kalvi Nilayam, 1983.

# பின்னிணைப்பு



திரு. எம்.ஜி. சக்கரபாணி—மீனாட்சியம்மா தம்பதியினர்.

**இணைப்பு I**

## பெரியவர் திருமிகு எம்.ஜி. சக்கரபாணி அவர்கள் கருத்து

தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்களின் கலை, அரசியல் உலகில் 'பெரியவர்' என்று மிகவும் மரியாதையுடன் அழைக்கப்படுபவர் அவரது அண்ணன் திருமிகு. எம்.ஜி.சக்கரபாணி அவர்கள்.

அவ்வை சண்முகம் வீதியில் 'தாய் வீடு' என்னும் மாளிகையில் இன்று வாழ்ந்து வருகின்றார்கள். அவரைச் சந்திக்கச் சென்றபோது மிகவும் அன்புடன் வரவேற்று உபசரித்து ஆய்வுக் குறிப்புக்களைப் பார்த்துப் பாராட்டினார்கள். நல்ல ஆதாரங்களோடு இப்படிப் பிறர் எழுதவில்லை என்று ஊக்கமூட்டினார்கள். அவர்களுடன் அவரது இளைய மகன் திரு.விஜயகுமார் அவர்களும் உடனிருந்து வரலாற்று நூலைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

பூசை அறையில் இருந்த தந்தையார் படத்தைக் காட்டியும், அல்ஜீப்ரா கணித நூலில் M. Gopalan என்று தந்தையார் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டுள்ள விபரத்தை எல்லாம் ஆர்வத்துடன் கூறினார்கள்.

தம்பியுடன் ஒன்றாகக் கலைத்துறையில் ஈடுபட்ட அந்நாட்களை எண்ணி எண்ணி எங்களிடம் இறும்பூது எய்தி விளக்கினார்கள். முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களின் கலையுலக வாழ்விலும், வளர்ச்சியிலும் பெரும்பங்கு கொண்ட அவர்கள் அதுபற்றி வினவும்போது அமைதியாக அடக்கத்துடன் கூறிய பதில் வியப்பில் ஆழ்த்தியது.

தாயார் சத்தியபாமா அன்னையார் 'சகோதரர்கள் இருவரும் இணைபிரியாது வாழவேண்டும்' என்று வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப இன்றும் சகோதர பாசத்துடன் இருவரும் வாழ்ந்து வருகிறார்கள்.

கடந்த 30 ஆண்டுகளாக இருவரிடமும் நெருங்கிப் பழகிய வித்துவான் வே.லட்சுமணன் பின்வருமாறு தன் நூலில் எழுதியுள்ளார்:

''எந்தவொரு முக்கியப் பணியிலும் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் திரு. எம்.ஜி.சக்கரபாணி அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டபின்பே முடிவுக்கு வருவது வழக்கம். அண்ணன் - தம்பி என்ற சொற்றொடருக்கு நல்லிலக்கணமாக இருக்கிறார்கள் இச்சகோதரர்கள்.

திரு.சக்கரபாணி அவர்கள் தேர்ந்த கலைஞர் மட்டுமல்ல; முதிர்ந்த உலக அனுபவம் உடையவர். ஆராய்ச்சியில் வல்லவர். கூர்மையான மதி நுட்பம் படைத்தவர். தொழில் துறையில் வருங்கால நிலையை முன்னதாகவே வகுத்துணரும் ஆற்றல் மிக்கவர்; தனது தம்பியிடம் எல்லையற்ற அன்பும் பாசமும் உடையவர்''.

வித்துவான் வே.லட்சுமணன் கூறிய கூற்றுக்கள் முற்றிலும் உண்மை என்பதை உரையாடிய ஒருசில மணி நேரத்தில் நன்கு உணர முடிந்தது. அவரிடம் உரையாடியபோது கீழ் வரும் செய்திகளைக் கூறினார்கள்.

'என் தந்தை திரு.கோபாலன் அவர்கள் சட்டத்துறையிலும், ஆசிரியத்துறையிலும் மிகவும் தேர்ந்த நிபுணராக விளங்கினார். பத்திரிகைகளில் 'தேவை' விளம்பரம் பார்த்துப் பல ஊர்களுக்கு விண்ணப்பித்துப் பல ஊர்களில் சென்று பணிகள் புரிந்துள்ளார். அவ்வாறு பல ஊர்களைச் சுற்றிப் பார்ப்பதில் என் தந்தையாருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. 'உங்கள் அப்பாவுடன் பல ஊர்கள் அலைந்து சுற்றியுள்ளேன்' என்று என் தாயாரும் கூறுவார்கள்.

இந்த முறையில் தான் எங்கள் தந்தையார் கண்டி சென்றதும். கண்டியில் தான் எம்.ஜி.ஆர் பிறந்தார். பின் கேரளா வந்துதான் தந்தை காலமானார். தந்தை இறந்த பின்னர் தான் நாங்கள் தமிழ்நாடு வந்து நிரந்தரமாகத் தங்கி விட்டோம்.

நாடகம் நடிக்கும் பொருட்டுக் கேரளாவில் பல ஊர்களுக்குப் போயுள்ளோம். என் தந்தை இறந்தது எனக்கு நன்கு நினைவில் உள்ளது.

சிறிது நோய்வாய்ப்பட்டிருந்தார். ஒரு நாள் மாலை நேரம். வேலைக்காரனிடம் அவரே மருந்தின் பெயரை எழுதிக் கடைக்கு அனுப்பினார். வேலைக்காரன் மருந்துவாங்கச் சென்றதும் சிறிது தூரம் நடந்தார். தன்னால் முடியவில்லை என்று கூறி வீட்டுக்குள் வந்து கட்டிலில் படுக்காமல் கீழே போட்டிருந்த மெத்தையில் படுத்தார்.

மூன்று முறை நாராயணா நாராயணா நாராயணா என்று ஒலித்தார். நான்காம் முறை நாராயணா என்னும் மந்திரம் வாயில் இருக்கும்போதே அவர் உயிர் பிரிந்தது. அவர் தீவிர வைணவ பக்தர்.

எனக்கு முதலில் 'நீலகண்டன்' என்று பெயர் வைத்துவிட்டார்கள். இவ்வாறு சிவன் பெயரை வைத்ததால் இரண்டு நாட்கள் எவரிடமும் பேசமல் இருந்தார். பின் அருகில் உள்ள விஷ்ணு கோவிலுக்கு எடுத்துச் சென்று அன்னப்பிரசன்னம் செய்து 'சக்கரபாணி' என்ற வைணவப் பெயர் எனக்கு மாற்றி வைக்கப்பட்டது. மாந்தானம் என்ற ஊரில் நான் பிறந்தேன்.

எங்கள் தந்தைக்கு மூன்று மனைவிமார்கள். மூத்த மனைவியை விவாகரத்து செய்துவிட்டார். இரண்டாவது மனைவிக்கு இரண்டு ஆண் மக்கள். அவர்களில் மூத்தவர் பெயர் நாராயண மேனன். அவர்கள் இருவரையும் எங்கள் தாயார் சத்திய பாமா அவர்கள் தான் வளர்த்தார்கள். நாங்கள் சிறுவயதிலேயே தமிழ்நாட்டுக்கு வந்து விட்டதால் கேரளத் தொடர்புகள் மிகுதியாக நினைவில்லை. எங்கள் தாயார் பல விபரங்களைக் கூறியுள்ளார்கள்.

எனக்கு இரண்டு மனைவியர். மூத்த மனைவி தங்கம்மா திருமணத்தின்போதுதான் நான் முதலில் பாலக்காடு அருகே சேகரிபுரம் சென்றேன். மூத்த மனைவி 1942இல் காலமானார். மூத்த மனைவிக்கு ஆறு குழந்தைகள் பிறந்தன. இப்போது மணி என்ற சத்தியபாமாவும், இராமமூர்த்தியும் உள்ளனர். சத்தியபாமா பம்பாயில் உள்ளார். இராமமூர்த்தி படத்தயாரிப்பாளராக உள்ளார்.

என் இரண்டாம் மனைவி மீனாட்சியம்மா. பாலக்காடு கொடுந்தரப்பள்ளியைச் சேர்ந்தவர். மீனாட்சியம்மா எட்டுக் குழந்தைகளுக்குத் தாய். ஆவார். பிரபாகரன் (வழக்கறிஞர்) சந்திரன் (படத்தயாரிப்பாளர்) சுகுமாரன் (கலைத்துறை) லீலாவதி (எம்.ஜி.ஆருக்கு சிறுநீரகம் வழங்கியவர்) விஜயலட்சுமி, இராசேந்திரன் (மதுரை வங்கி) பால சூரியன் (விளம்பரத் துறை) விஜய குமார் (கரூர் வைசியா வங்கி) ஆகியோர் என் மக்கட் செல்வங்கள்.

நான், தாயாரின் ஊரான வடவனூர் சென்றுள்ளேன். அங்கு கிணற்றுடன் ஒரு இடம் வாங்கி, அதற்குச் 'சத்திய விலாசம்' என்று பெயரிட்டுள்ளோம். கோவைப் பகுதியிலிருந்து செல்லும் மக்கள் பஸ்ஸை அங்கு நிறுத்தி வணங்கிச் செல்லுகிறார்கள்.

நன்கு நினைவுள்ளது; ஒரு நாள் மாலை நல்லேபள்ளி சென்றுள்ளேன். எங்கள் தாத்தா அங்கராத்து சங்குண்ணி வலிய மன்னாடியார். எங்கள் பூர்வீகம் கொங்கு நாடு! நாங்கள் வேளாளர்கள் என்று பெரியவர்கள் என்னிடம் கூறினார்கள்!!''.

**இணைப்பு II**

# கொங்கு வேளாளர் தொன்மையும் சிறப்பும்

சேர சோழ பாண்டிய நாட்டுக்குரியவர்கள் சேரர், சோழர், பாண்டியர் என்று பெயர்பெற்றதைப் போலக் கொங்கு நாட்டுக்குரியவர்கள் கொங்கர் - கொங்கு வேளாளர் என்று பெயர் பெற்றனர்.

இவர்கள் வேள், வேளிர், வேளாண் குலத்தினர் என்றும் அழைக்கப்பட்டனர். தொன்மைச் சிறப்புமிக்க உழவுத் தொழிலை மேற்கொண்டு காவிரி, அமராவதி, நொய்யல் பவானி ஆற்றங்கரையில் உயர்நாகரிகமுடன் தொன்று தொட்டு வாழ்ந்து வருபவர்கள்.

இவர்கள் 'கங்கா குலம்' சார்ந்தவர் என்று கூறப்பெறு கின்றனர். அகநானூற்றில் 'கங்கன்' என்ற கொங்கு வள்ளல் ஒருவன் பேசப்படுகின்றான். கொங்கு நாட்டை ஒட்டிய பகுதி 'கங்கமண்டலம்' என்று அழைக்கப்பட்டது. சங்க காலத்தை அடுத்தும் ஒரு கங்க மரபு கொங்கு நாட்டுப் பகுதியை ஆண்டது. வேளாளர்கள் இவர்களோடு தொடர்பு கொண்டிருக்கலாம். டாக்டர் மு.ஆரோக்கியசாமி அவர்கள் கூறுவது போல் வேளாளர்கள் கங்கைக் கரையிலிருந்து வந்த வர்களாக இருக்க முடியாது.

பிற்கால ஆவணங்கள் கூறுவது போலத் தொண்டை, சோழநாட்டு வேளாளர் சிலர் கொங்குப் பகுதியில் குடியேறி யிருப்பினும் அவர்கள் சோழியர், தொண்டையர் என்று தனித் தன்மையான பெயர்பெற்றே இன்றும் வாழ்கின்றனர்.

கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டின் நிலையான தொன்மைக் குடிகள் என்பது அண்மைக்கால ஆய்வுகள் காட்டும் உண்மையாகும்.

ஆந்தை, அந்துவன், பண்ணை, கீரன், வண்ணக்கன், கண்ணன், செங்கண்ணன், பூதன், பூச்சந்தை, சாத்தந்தை, கீரந்தை, கொற்றந்தை, ஈஞ்சன், பூந்தை என்பன சங்க காலப் பெயர்களாகும். இப்பெயர்களில் வேளாளர் குலங்கள் இருப்பது அவர்களின் தொன்மையைக் காட்டும்.

சாத்தந்தை, பூந்தை, கொற்றந்தை போன்ற கொங்கு வேளாளர் குலப்பெயர்களுக்குப் புணர்ச்சி விதிகள் தொல் காப்பியத்திலேதான் காணப்படுகிறது என்பதை முன்பு கண்டோம்.

கொங்கு நாட்டின் தொல்லியல் ஆய்வுகள் கொங்கு வேளாளரின் தொன்மையையும், அவர்தம் உழவுத் தொழிலின் தொன்மைச் சிறப்பையும் காட்டுகிறது.

சுமார் 2000 ஆண்டுகட்கு முன்னரே கொங்கு நாடு உரோமானியருடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது சிறப்புமிக்க வரலாற்றுச் செய்தியாகும்.

காங்கேய நாட்டுப் படியூர்ப் பகுதியிலிருந்து உயர்ந்த வெண்படிக வைரக் கற்களும், பச்சை, நீலக்கற்களும் (பெரில், அக்குவா மெரினா) மேனாட்டுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன. உரோமானியர் சுடுமண் பொம்மைகளும், அவர் கள் பானை ஓடுகளும், காசுகளும் கொங்கு நாட்டில் மிகுதி யாகக் கிடைக்கின்றன.

கொங்கு வேளாளர்கள் சுமார் 1300 ஆண்டுகட்கு முன்னரே நாடுகள் பிரித்து, ஊர்கள் உண்டாக்கி, ஊர் அவை கள் ஏற்படுத்திச் சிறப்பான தலசுய ஆட்சி முறையினைப் படைத்து வாழ்ந்தனர். இதனை இலக்கியங்களும், கல் வெட்டுக்களும், செப்பேடுகளும் மெய்ப்பிக்கின்றன.

சமூகக் கட்டுப்பாடும், உழைப்பும், நேர்மையும், உண்மையும், வீரமும், கொடையும், விருந்தோம்பலும் கொண்டு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையில் கொங்கு வேளாளர் சமுதாயம் வாழ்ந்து வருகிறது.

கொங்குஇளங்கோசர் போன்றோர் முடியுடை மூவேந் தருக்குச் சமமாக வாழ்ந்தனர்.

கடையெழு வள்ளல்களில் பேகனும், அதிகமானும், ஓரியும், காரியும், ஆயும், பிற எண்ணற்ற குறுநில மன்னர் களும் வாழ்ந்த நாடு கொங்குநாடு; தமிழ்ப் புலவருக்குத் தன் னையே ஈந்த குமணன் வாழ்ந்த நாடு! மூவேந்தருக்கும் மகட் கொடை அளிக்கும் உரிமையுடன் இவர்கள் பெருவாழ்வு வாழ்ந்ததை இலக்கியங்கள் காட்டுகின்றன.


கொங்கு வேளாளர்கள் தமிழ்ச்சங்கம் நிறுவியும், புலவர்களை ஆதரித்தும், அடைக்கலம் தந்தும், புலவர்கட்கு அடிமையாகியும் தமிழை வளர்ப்பதையே வாழ்வின் முதல் நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தனர்.

கண்ணர் குலப் பொப்பண்ண காங்கேயன் அளித்த சோற்றுச் செறுக்கே சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதுவித்தது என்பார் அடியார்க்கு நல்லார்.

கொங்கு வேளிர்குலத் தலைவர்களாகிய பாளையக்காரர்களும் பட்டக்காரர்களும், அவர்தம் மனைவிமாரும் அவர்தம் சிறாரும், சிறுமியரும் புலமைச் செல்வர்கட்கு அளித்த கொடை எண்ணற்றவை.

பல்லவராயர் குலத்துச் சிறுவன் தன் பொன் நடை வண்டியைப் புலவருக்கு ஈந்தான். சம்பந்தச் சர்க்கரை மன்றாடியார் தன் மனைவியின் பொன்தாலியையே புலவர்க்கு அளித்தார். புலவர்கள் சிலர் செய்த மிகையான செயல்களைக் கண்டும் சினம் கொள்ளாமல் வாரி வாரி வழங்கினர். இப்படித் தொண்ணூற்றாறு சிறப்புக்களைக் கொங்கு வேளாளர் பெற்று வாழ்ந்தனர்.

கொடையும் விருந்தோம்பலுமே கொங்கு வேளாளர் குலத்தின் சிறப்புத் தன்மைகள். இச் சிறப்புத் தன்மைகளைத் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மிகுதியும் பெற்று வரையாது வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்து வருகிறார்கள் என்பது தமிழ்கூறும் நல்லுலகம் அறிந்த செய்தியாகும். ஆம்! வேளிர் சிறப்புக்கள் அனைத்தும் வேளிர் குல வேந்தர்மரபினரான மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்களிடம் பெரிதும் குடிகொண்டுள்ளது.



தொடர்புடைய இடங்கள்
கர்நாடகம்
கேரளம்
தமிழ்நாடு
அரபிக் கடல்
இந்தியப் பெருங்கடல்



மாத்தூர் நாராயணன் குட்டி

RECEIVED
ஜன 1985

எறவமன்னாட்டில் குமார மன்னாடியார்







பாலக்காடு இர்ாமநாதன் மன்னாடியார்

RECEIVED
சன 1985
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY


தேங்குரிசி நாராயணன் குட்டி மன்னாடியார்





களப்பட்டி கிருஷ்ணன் குட்டி மன்னாடியார

கேனாத் பொன்னுமணி மேனன்







கொல்லங்கோடு பணிக்கத் மன்னாடியார்

சன 1985

பல்லசேனா கண்ணன் குட்டி மன்னாடியார்







களப்பட்டி சத்தியநாத மன்னாடியார்

சன 1985

களப்பட்டி கோவிந்தன் குட்டி மன்னாடியார்






புளியங்களத் ஜனார்த்தன மன்னாடியார்

OFFICE OF THE CURATOR
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY
சன. 1985

பாலக்காடு டாக்டர் தாஸ்






[illegible]ணாடி பிரபாகர மன்னாடியார்

1985

சேங்கத் லட்சுமிகுட்டி அம்மா





எறவமன்னாட்டில் சி.எம். மன்னாடியார்

OFFICE OF THE CURATOR
RECEIVED
6 ஜ 1985
GOVT ORIENTAL MANUSCRIPTS LIBRARY

குழல்மன்னம் பாலமீனாட்சி மருவளம்மா





புளியங்களத் அம்மணி மருவளம்மா

வடசேரி பாருக்குட்டி மன்னாடிச்சியார்






நல்லேபள்ளி சோண்டத் மாளிகை

OFFICE OF THE CURATOR
RECEIVED
1985
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

வடசேரி மன்னாடியார் மாளிகை






சித்தூர் சம்பத் மாளிகை

OFFICE OF THE CURATOR
RECEIVED
1985
ORIENTAL MANUSCRIPTS LIBRARY

வடவனூர் மருதூர் மாளிகை






தேங்குரிசி மாளிகை

1985

பல்லசேனா நாஞ்சாத் மாளிகை






களப்பட்டி எறவமன்னாட்டில் மாளிகை

புளியங்களத் மன்னாடியார் மாளிகை






வடசேரிச் சத்திரம்—பழனி

களப்பட்டி மூகாம்பிகை கோவில்





வடசேரியார்—பேரூர் மரியாதை பெறல்

1985





மன்னாடியார் மாளிகை
ஆறுமுகன் சிற்பம்



நல்லேபள்ளி அங்கராத் மாளிகை

அங்கராத் மாளிகை மகளிர் பகுதி






அங்கராத் ஸ்ரீகிருஷ்ணர் கோவில்

அங்கராத் சங்குண்ணி வலியமன்னாடியார்
(நடுவில் அமர்ந்திருப்பவர்)






'இராமச்சந்திரன்' அங்கராத் யானை

GOVT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
1985

அங்கராத்து உற்சவம்







அங்கராத் நாராயணன் உண்ணி மன்னாடி நாயர்

ஜன 1985

பாலைக்காடு — தமிழ்ச்சுவடி







மலையாளச் சுவடியில் தமிழ்—மருதாசலம்

RECEIVED

மலையாளச் சுவடியில் தமிழ்–வேல்ப்ப கவுண்டன் ருசு






'வெள்ளாளன் கிருஷி ராக்கியாக்கவுண்டன்—மலையாளச்சுவடி

1985


கிருஷி தொழில் வேலப்பகவுண்டன் மகன்—மலையாளச் சுவடி





பாலைக்காட்டுச்சேரி வெள்ளாஞ்செட்டிகள் தமிழ்ச்செப்பேடு


'ஜன்மி முதலாள் மன்னாடி' மெக்கென்சி ஆவணம்




மன்னாடிமார் வரலாறு—மெக்கென்சி ஆவணம்



நல்லயம்பள்ளி—மெக்கென்சி ஆவணம்



பூந்துறைக்கோன்—மெக்கென்சி ஆவணம்



...ICE OF THE CURATOR
RECEIVED
1985
...MADRAS-5
... ORIENTAL MANUSCRIPTS LIBRARY

வடசேரி மன்னாடி—மெக்கென்சி ஆவணம்.

